Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு: 28-01-2013 Issued: 28-01-2013

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, மே 14, 2012—தொகுதி 33—எண் 1**

**Monday, the 14th May, 2012—Volume 33—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009**

விலை ரூ. **3.00** **[Price Rs. 3.00**

**14–5–2012**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-x |
| Governor and Council of Ministers | xi-xv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii-xx |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi-xxxi |
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-46 |
| **2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—** | |
| (அ) தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 விழுக்காடு இருக்கைகளை அரசே நிரப்பி பயிற்சிக் கட்டணத்தைச் செலுத்துவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை | 46-48 |
| (ஆ) அங்கன்வாடி மையங்களில் சமையல் எரிவாயு வசதி, மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நவீன தையல் இயந்திரங்கள் வழங்குவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை | 49-50 |
| (இ) தொழில் முதலீட்டை ஈர்க்க ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை | 51-53 |
| (ஈ) இராமேஸ்வரம், இந்திய கடலோரக் காவல் படை கப்பல் மோதி மரணமுற்ற மீனவர் குடும்பத்திற்கு நிவாரணம் குறித்த முதலமைச்சரின் அறிக்கை | 53-55 |

| | பக்கங்கள் |
|---|---|
| **3. தொழிற்பயிற்சி மேம்பாடு, அங்கன்வாடிகள் நவீனமயமாக்கல், புதிய தொழில் முதலீடுகள், மரணமுற்ற மீனவர் குடும்பத்திற்கு நிவாரணம் முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி—** | 55-78 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 55-57 |
| திரு. உ. தனியரசு | 58-59 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 59-61 |
| *முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 61-63 |
| திரு. ஆ. நாராயணன் | 63-65 |
| திருமதி எஸ். விஜயதரணி | 65-66 |
| திரு. சு. குணசேகரன் | 67-69 |
| திரு. அ. சவுந்தரராசன் | 69-70 |
| திரு. அ. கணேஷ்குமார் | 70-71 |
| *மாண்புமிகு திருமதி பா. வளர்மதி | 71-72 |
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 72-73 |
| மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ் | 73 |
| *மாண்புமிகு திரு. கே.ஏ.ஜெயபால் | 73-74 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) பதிவு (தமிழ்நாடு திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2012 | 78-79 |
| (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 | 79-80 |
| (இ) தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டமுன்வடிவு, 2012 | 80 |





| | பக்கங்கள் |
|---|---|
| **5. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 54-வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) (ஆ) கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் துறை | 81-222 |
| மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால் | 81,94, 97-103, 106-109, 123-126, 128, 138-143, 145-146, 148, 150-151, 195-221 |
| *மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன் | 87,95,130-132, 164, 175-195 |
| திருமதி ர. சுபா | 86,92,95-105 |
| மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 99 |
| மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 102 |
| திரு. ப. டில்லி பாபு | 82,88,105 |
| திருமதி எஸ். விஜயதரணி | 85,93, 106-107,173 |
| திரு. க. பாலகிருஷ்ணன் | 107-108 |
| திரு. ர.ம. பாபு முருகவேல் | 84,94,108-109 |
| *திரு. தங்க. தமிழ்ச்செல்வன் | 109-117 |
| *மாண்புமிகு கே.பி. முனுசாமி | 116-117,119, 143-144,171 |
| திரு. கே. தங்கவேல் | 117, 120, 122-123, 125-131,133 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்**–*தொடர்ச்சி* | |
| *திரு. வி.சி. சந்திரகுமார்* | 120 |
| *மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* | 118,121-122, 124,168 |
| *மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்* | 120 |
| **திரு. க. கோபால்சாமி* | 133-137 |
| *திரு. டி. இராமச்சந்திரன்* | 137-142, 144-147 |
| *திரு. சு. குணசேகரன்* | 143 |
| *திரு. ஜே.ஜி. பிரின்ஸ்* | 87,89, 147-152 |
| *திரு. ஆ. ராமசாமி* | 152-155 |
| **திரு. ஆ.க. அரங்கநாதன்* | 155-162 |
| *திரு. க. பாண்டியராஜன்* | 87, 162-171, 173-175 |
| **மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்* | 165-166 |
| *மாண்புமிகு திரு. பி. தங்கமணி* | 166, 168-172 |
| *திரு. அ. சவுந்தரராசன்* | 84, 93, 172 |
| *மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்* | 172-174 |
| *திரு. எம். ஆறுமுகம்* | 83, 88, 175 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 223-224 |


******

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043, வைகாசி 1

## 2012 மே 14, திங்கட்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு"

குற்றம் இல்லாதவராய், பிறருக்கு எந்தத் தீங்கும் செய்யாதவராய், தன்குடி உயர்வதற்காக எப்பொழுதும் உழைத்து வாழ்பவரை உலகத்தார் சொந்தமாய் எண்ணிச் சூழ்ந்து மகிழ்வார்கள்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள் வினா வரிசை எண் 253, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**253—**

### குடிநீர்த் திட்டம்

***7053—திரு. க. தினகரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் பில்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்த அரசு முன்வருமா?

[2012 மே 14

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள் மற்றும் 965 ஊரகக் குடியிருப்புகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை ரூ.224.92 கோடிக்கு நிறுவவும், ஆண்டொன்றுக்கு ரூ.10.00 கோடி செலவில் பராமரிக்கவும் அரசால் நிருவாக ஒப்புதலும், ரூ.206.60 கோடிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கக்கூடிய 12 இலட்சத்து 30 ஆயிரம் நபர்களுக்கு தினசரி 125 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டு, இத்திட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ஜனவரி 2014–க்குள் மேற்படி பணிகளை முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இந்தக் கூட்டத் தொடரில் 250–வது மூலக் கேள்வி கேட்கும் சிறப்பான வாய்ப்பைப் பெற்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், அதற்கான பதில் அளிக்கும் சிறப்பைப் பெற்றவர் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.*

**திரு. க. தினகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலே பில்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் பல்லடத்திலே அந்தத் திட்டம் நிறுவப்படவிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது சரியான பதிலா என்று எனக்குப் புரியவில்லை. அதை மீண்டும் விளக்க வேண்டும். நான் கேட்டது, சூலூர் தொகுதிக்கு. மற்ற பகுதியிலே உள்ள எல்லோருக்குமே போதிய அளவிற்குத் தண்ணீர் இருக்கிறது; தண்ணீர்ப் பிரச்சினை கிடையாது. எனவே, மேற்படி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்தும்பொழுது, அந்தப் பகுதியிலே அனைத்து மக்களுக்கும் தண்ணீர் விநியோகம் சீராகச் சென்றடையும். அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதை எப்படி என்று விளக்கவும்.*



2012 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய கருணையால் இந்த அவையில் மூன்றாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆசியோடு அமைச்சர் பொறுப்பை ஏற்று, இங்கே கேள்விகளுக்கு பதில் சொல்லக்கூடிய நல்ல வாய்ப்பினை நல்கிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களை வணங்கி, என்னுடைய பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவி அம்மாவின் வாயிலாக, இந்த நல்ல வாய்ப்பினை நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து நான் பதில் கூற விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறிய பதில் புரியவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். இந்த 2 மாவட்டங்களை உள்ளடக்கிய பல்லடம் நகராட்சி மற்றும் 23 பேரூராட்சிகள், 965 குடியிருப்புகளில், சூலூர் பகுதியும் வந்து சேரும். ஏற்கெனவே குடிநீர் இருக்கின்ற பகுதிகளாக இருந்தாலும், அந்தக் குடிநீர் போதிய அளவில் இல்லாத காரணத்தினால்தான் இப்படி புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. அதன் அடிப்படையில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு, இப்பொழுது ஒப்பந்தக்காரர்கள் முடிவு செய்யப்பட்டு, பணியைத் துவக்கி இருக்கிறார்கள். வருகின்ற 2014 ஆம் ஆண்டு இந்தப் பணி முடிகின்ற நேரத்தில், உங்கள் பகுதிக்குத் தேவையான, நிறைவான குடிநீர் கிடைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.*

**திரு. க. தினகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் அத்தியாவசியமான குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்கும் வகையில் நடவடிக்கை எடுத்த அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் பில்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்தும் அடிப்படையில் கோவை மாநகரத்தோடு புதிதாக சேர்க்கப்பட்டிருக்கக்கூடிய குறிச்சி, குனியமுத்தூர் போன்ற பகுதிகளுக்கும் பில்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதியில்தான் ஆழியாறு நீர்த்தேக்கத்தினுடைய நீராதாரத்திலிருந்து 8 மில்லியன் லிட்டர் தண்ணீர் இப்போது வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விகளுக்கு இந்தப் பதில் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். கடந்த 2011–2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு ஆய்வறிக்கை கேட்டார்கள். அந்த ஆய்வறிக்கைகள் பெறப்பட்டு அந்த 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் இந்த நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அதற்காக ரூ.1,521 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதே போல இந்த நிதியாண்டிலும் 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இப்போது எல்லாப் பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைத்துக்கொண்டிருக்கிறது என்றாலும், அந்தத் தண்ணீர் போதவில்லை என்ற காரணத்தினால், நிறைவான தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதற்காக, ஏற்கெனவே தண்ணீர் கிடைக்கக் கூடிய பகுதிகளுக்குக் கூடுதலான தண்ணீர் கொடுப்பதற்காகத்தான் இது போன்ற புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் 2006 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. அப்போதே செட்டிநாயக்கன்பட்டி, வேகம்பூர் பகுதியில் கட்டி முடிக்கப்பட வேண்டிய இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்படாமல் இருந்துகொண்டிருக்கின்றன. அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், அந்தப் பணி நிறைவேறவில்லை. எதிர்கால குடிநீர்த் தேவையையும், வேகம்பூரில் இருக்கக்கூடிய முஸ்லிம் பெண்களினுடைய சிரமங்களையும் கணக்கில்கொண்டு, விரைவில் அந்தப் பணி நிறைவேற்றப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை மனுவாகக்கூட கொடுத்திருக்கிறார்கள். அந்த இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அந்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அதற்கு ஒப்பந்தக்காரர்கள் வராத காரணத்தினால், அது நிலுவையில் உள்ளது. மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. மேற்படி பணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முடிவு செய்யப்பட்டதும் உடனடியாக இந்தப் பணி துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், எனது திருத்துறைப்பூண்டி தொகுதிக்குட்பட்ட கோட்டூர் ஒன்றியம், பெருகவாழ்ந்தான், சித்தமல்லி, செறுகளத்தூர், நொச்சியூர் ஊராட்சிகளுக்கு பெரியகோட்டை குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வழங்கப்பட்டது. அத்திட்டம் கைவிடப்பட்டு, கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த்

[2012 மே 14

திட்டத்தோடு திட்டம் நீட்டிக்கப்பட்டு, தண்ணீர் வழங்கப்பட்டது. தற்சமயம், அந்தத் தண்ணீரும் போதிய அளவில் கிடைக்காததால், மிகப் பெரிய சிரமத்திற்கு ஆட்பட்டு வருகிறார்கள். ஆகவே, இதனை கவனத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாற்றுத் திட்டம்மூலம் குடிநீர் கிடைத்திட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதற்காகத்தான் இந்தப் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன். பல மாவட்டங்களில் ஏற்கெனவே இது போன்ற குடிதண்ணீர்த் திட்டங்களை நிறைவுபடுத்தி, செயல்படுத்திக் கொண்டிருந்தாலும், அங்கே மக்கள் பெருக்கத்தின் காரணமாக அவர்களுக்குப் போதிய குடிதண்ணீர் கிடைக்காதபட்சத்தில், புதிய முயற்சியில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை உருவாக்கி, அந்தத் திட்டத்தின் வாயிலாக அந்தப் பகுதிகளுக்குக் கூடுதலான தண்ணீர் கிடைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது கடந்த நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்பாட்டிற்கு வரவிருக்கின்றன. அந்தத் திட்டங்களின்கீழ் இந்தப் பகுதிகள் வருமா என்று நான் பார்க்கின்றேன். அப்படி வரவில்லையென்று சொன்னால், இந்த நிதியாண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்பேரில் கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், திருப்பூர், இது போன்ற ஆறு மாவட்டங்களில் ஆறு கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் தங்களுடைய பகுதி வருகின்றபட்சத்தில் அது நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாநகராட்சிக்காக ஊராட்சிக் கோட்டையிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கையிலே அரசு ஈடுபட்டுள்ளது.



2012 மே 14]

ஊராட்சிக்கோட்டையிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டத்திற்கு பதிலாக, ஈரோடு மாநகராட்சி மக்கள் எதிர்பார்ப்பதுபோல் மேட்டூரிலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்கான கருத்துரு ஏதேனும் அரசிடம் உள்ளதா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மேட்டூர் பகுதியிலிருந்து தமிழ்நாட்டினுடைய பல்வேறு பகுதிகளுக்குக் குடிநீர் கொண்டு செல்வதற்கான செயல் திட்டங்களைத் தீட்டி, அங்கே கிணறுகள் தோண்டப்பட்டு, அங்கிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டுவந்து கொடுக்கப்படுகின்றது. மேலும், அந்தப் பகுதியிலிருந்து வேலூருக்குக்கூட தண்ணீர் கொண்டு செல்லக்கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம், வர இருக்கிறது. மற்ற பகுதிகளிலேயும் குடிநீர் எடுப்பதற்குரிய வாய்ப்பு இருக்கின்ற பட்சத்தில், அந்தப் பகுதியிலிருந்து ஈரோடு மாநகராட்சிக்கும் குடிநீர் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–10*

*ஏனென்று சொன்னால், ஒரே இடத்திலிருந்து தமிழ்நாட்டின் மொத்தப் பகுதிக்கும் குடிநீர் எடுத்துச் செல்வது சாத்தியமாக இருக்காது என்ற காரணத்தினால் கொள்ளிடம் ஆற்றங்கரையிலிருந்தும், தஞ்சாவூர், மதுரை போன்ற மற்ற பகுதிகளிலிருந்தும் குடிநீர் எடுக்கிறார்கள். மேட்டூர் பகுதியிலிருந்து தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், முடிந்தால் சென்னை போன்ற பகுதிகளுக்கும் தண்ணீர் எடுக்கலாம். எனவே, அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு குடிநீர்த் திட்டங்களை ஆய்வு செய்து, அந்தப் பகுதிகளுக்கு குடிநீர் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

[2012 மே 14

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் பெண்ணாகரம் பேரூராட்சி சேர்க்கப்படவில்லை. பெண்ணாகரத்திற்கு வந்துகொண்டிருந்த சின்னாற்று நீர் முற்றாக வற்றிவிட்டது. ஆகவே, பெண்ணாகரம் பேரூராட்சிக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியிலேயிருந்துதான் வருகிறது. அங்குதான் ஆரம்பமே ஆகிறது. நீர்த்தேக்கத் தொட்டிகள் பெண்ணாகரம் அருகிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையைப் பரிசீலனை செய்து, நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் நகரையொட்டி பூண்டி ஏரி உள்ளது. அந்த ஏரியிலே கிருஷ்ணா நதி நீர் தேக்கப்பட்டு சென்னை மக்களுக்கும் குடிநீர் வழங்கப்படுகிறது. புழலேரி மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு திறந்தவழிக் கால்வாய்மூலம் தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. திருவள்ளூர் நகரத்திலும், திருவள்ளூர் நகரத்தையொட்டியுள்ள மணவாள நகர் போன்ற பகுதிகளிலும் ஏற்கெனவே 2 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அந்த மக்களுக்கு வெள்ளியூரிலிருக்கும் ஆழ்குழாய்க் கிணறுகளிலிருந்து தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. மின்சாரத் தட்டுப்பாடு மற்றும் சில, பல காரணங்களினாலே வாரத்திற்கு ஒரு முறைதான் திருவள்ளூர் நகர மக்களுக்கும், அந்த நகரத்தையொட்டியுள்ள மக்களுக்கும் குடிநீர் கிடைக்கிறது. ஒரு உண்மையை இந்த அவையிலே நான் சொல்ல



2012 மே 14]

விரும்புகிறேன். பூண்டி ஏரி அமைப்பதற்கும், திறந்தவழிக் கால்வாய் அமைப்பதற்கும் நிலம் கொடுத்த மக்கள் திருவள்ளூர் நகரத்திலும், அதையொட்டியும் இருக்கிறார்கள். பூண்டி ஏரியிலே இருக்கின்ற குடிநீரை திருவள்ளூர் நகர மக்களுக்கும் அதனைச் சுற்றியுள்ள கிராம மக்களுக்கும் வழங்கிட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்பொழுதுமே விசுவாசம் உள்ள மக்களை விசுவாசத்தோடு பாதுகாக்கக்கூடிய தலைவராகத் (மேசையைத் தட்டும் ஒலி) திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதனடிப்படையிலே சென்னை மாநகருக்குத் தண்ணீர் கொடுப்பதற்குரிய வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த திருவள்ளூர் நகர மக்களுடைய தாகம் தீர்க்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிச்சயமாக, உறுதியாக நடவடிக்கை எடுத்து நிறைவான குடிதண்ணீர் வழங்குவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதியில் வடுகபட்டி பேரூராட்சி, மேல்மங்கலம், ஜெயமங்கலம், பொம்மிநாயக்கன்பட்டி, எரிமலைநாயக்கன்பட்டி போன்ற ஊராட்சிகளில் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இப்பகுதியிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய வைகை அணைப் பகுதியில் உறை கிணறு அமைத்து இந்தப் பகுதிக்குக் கூட்டுக் குடிநீர் திட்டத்தைக் கொண்டுவந்தால் இந்தப் பகுதி மக்களைப் பாதுகாப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா, அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2012 மே 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தப் பகுதிகளுக்கு ஆழ்குழாய்க் கிணறுகளின்மூலம் தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தண்ணீர் போதவில்லை என்ற காரணத்தினால் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கிக் கொடுக்க முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதனால்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு நிதியாண்டும் எங்கெங்கெல்லாம் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிற குடிநீர் போதவில்லையோ, குறைவாகக் கொடுக்கப்படுகிறதோ அங்கெல்லாம் கூடுதலான தண்ணீர் கொடுக்கவேண்டும் என்பதற்காக புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை ஆய்வு செய்து அறிவித்ததோடு மட்டுமல்லாமல், அவற்றை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். 2011–2012–ல் அறிவிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட 8 கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்காக இந்த நிதி ஆண்டில், 2012–2013–ல் ரூ.1,527.63 கோடியை ஒதுக்கி அந்தப் பணிகளை எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிதி ஆண்டில் 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். அதனடிப்படையிலே வருங்காலங்களில் அப்பகுதியின் தண்ணீர் தேவையைப்பொறுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.*

**திரு. க. கோபால்சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய காவல் தெய்வம், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், விருதுநகர் மாவட்டத்திற்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக, 597 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, அனைத்து நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளுக்குத் தண்ணீர் வழங்குவதற்கு ஆணையிட்டு, அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே, ராஜபாளையம் நகராட்சிப் பகுதி மட்டும் சேர்க்கப்படவில்லை. அதற்குக் கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியினுடைய செயல்பாடுதான் காரணம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது புதிய தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக, புளியங்குடி, சங்கரன்கோவில் நகராட்சிப் பகுதிகளுக்கு ஆய்வுகள் மேற்கொள்வதற்கு இந்த நிதியாண்டிலே உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதிலே, ராஜபாளையம் நகராட்சிப் பகுதியையும் சேர்ப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.*



2012 மே 14]

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் சிந்தனையால் கொண்டுவரப்பட்ட திட்டம். கடந்தகால ஆட்சியிலே அதைச் செயல்படுத்தாமல் விட்டுவிட்டார்கள் என்று சொல்வது வேறுவிதமாக வருகிறது. ராஜபாளையத்திற்குப் போதிய தண்ணீர் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அப்படி குறைவான தண்ணீர் கிடைக்கும்பட்சத்தில், ராஜபாளையம் நகராட்சியையும் மேற்படி திட்டத்தில் இணைப்பதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 254, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

254—

### பொறியியல் கல்லூரி

***5060—திரு. கு.வ. மார்க்கண்டேயன்:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விளாத்திகுளம் தொகுதி, எட்டையபுரத்தில் மகளிர் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 மே 14

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, எட்டையபுரத்தில் மகளிர் பொறியியல் கல்லூரி துவக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லி பட்டணமே திகைத்து நிற்கும் தங்கத் தமிழ் பெட்டகம், மாட்சிமை பொருந்திய புரட்சித் தலைவி தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

"மங்கையராய் பிறப்பதற்கே – நல்ல
மாதவம் செய்திடல் வேண்டுமம்மா"

என்று சொன்ன மகாகவி பாரதி பிறந்த ஊர் விளாத்திகுளம் தொகுதி, எட்டையபுரம் ஆகும். பாரதியினுடைய வார்த்தைகளை மெய்ப்பிக்கும் வகையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாதரசியாய் தமிழகத்தை ஆட்சி செய்துகொண்டிருக்கிறார்கள்.

1983–வது வருடம் புரட்சித் தலைவர் அவர்கள், பாரதி பிறந்திட்ட மண்ணில் மகளிருக்கான தொழில்நுட்பக் கல்லூரியை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்திலே 26 ஏக்கர் நிலம் அரசு கையகப்படுத்தி இருக்கின்றது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்லாட்சியில், பெண்களுக்காகத் தனியாக ஒரு பொறியியல் கல்லூரியை எட்டையபுரத்தில் அமைத்துக் கொடுத்தால் பாரதியினுடைய கனவை மெய்ப்பிப்பதற்கு மிகப் பெரிய ஒரு வாய்ப்பாக அமையுமென்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமாய்க் கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசும்போது தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, எட்டையபுரத்தில் ஒரு மகளிர்



2012 மே 14]

பொறியியல் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். தற்போது தமிழகத்தைப் பொறுத்தவரையில், பெண்களுக்கென தனியாக எந்தவொரு பொறியியல் கல்லூரியும் இல்லை. காரணம் என்னவென்று சொன்னால், தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண்கள்மீது அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிற காரணத்தினால், பெண்களின் முன்னேற்றம் ஆண்களுக்கு நிகராக வளரக்கூடிய வாய்ப்பு இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனடிப்படையில், இன்றைக்கு அவர்கள் சொல்லியிருக்கின்ற மாவட்டத்தில், திருநெல்வேலி அண்ணா தொழில்நுட்ப உறுப்புப் பொறியியல் கல்லூரியாக அங்கு ஒரு கல்லூரி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்தக் கல்லூரியில் கட்டணம் இல்லாமல் படிக்கக்கூடிய, குறைந்த கட்டணத்தில் படிக்கக்கூடிய ஒரு வாய்ப்பாக, 360 இடங்கள் அங்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டு 249 மாணவர்கள் மட்டும் சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே, போதிய அளவில் அங்கே மாணவர்கள் குறைந்த கட்டணத்தில், அரசு சலுகை பெறும் கட்டணத்தில் படிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், புதிதாக ஒரு கல்லூரியை அங்கே தொடங்குவதற்கு வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள். துணைக் கேள்வி கேட்க மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் அனுமதி கோரியிருக்கிறார்கள். ஆகவே, மற்ற உறுப்பினர்களுக்கு நீங்கள் உதவி செய்யும் வகையில், உங்களுடைய கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதி, பீடி சுற்றும் தொழில் அதிகமாக நடைபெறும் தொகுதி. இந்தப் பகுதியில் இதுவரை அரசுக் கல்லூரி எதுவும் இல்லை. ஆகவே, இந்தப் பகுதியிலிருந்து அரசுக் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால், சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருநெல்வேலி அரசுக் கல்லூரிக்குதான் செல்ல வேண்டும். ஆகவே, ஆலங்குளம் பகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2012 மே 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி பொறியியல் கல்லூரி தொடங்குவது பற்றியது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆர்வத்தின் காரணமாக, அவருடைய தொகுதியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆட்சி அமைந்த 10 மாதங்களுக்குள்ளாக, தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு, 22 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில், இந்த ஆண்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சேருவதற்கு அதிகமான மாணவர்கள் முன்வருவார்களேயானால் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

**திரு. சு. மாதேஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட எனது தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரியோ அல்லது கலை மற்றும் அறிவியல் கல்லூரியோ எதுவும் இல்லை. எனவே, எனது தொகுதியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் ஓர் அரசு பொறியியல் கல்லூரியும், ஓர் அரசு கலைக் கல்லூரியும் இருக்கின்றன.



2012 மே 14]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது தொகுதிக்கு அரசு பொறியியல் அல்லது கலைக் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

மக்கள்தொகையில் இந்திய அளவில் தமிழ்நாடு ஏழாவது இடத்தில் இருக்கின்றது. மக்கள்தொகையில் ஏழாவது இடத்தில் இருந்தாலும்கூட, பொறியியல் கல்லூரியைப் பொறுத்தவரையில், அதிகப்படியான பொறியியல் கல்லூரிகளைக்கொண்ட மாநிலங்களில், தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆந்திர மாநிலம் 600 பொறியியல் கல்லூரிகளைக் கொண்டிருக்கின்றது. தமிழகத்தில் 528 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு அதிகப்படியான பொறியியல் கல்லூரிகள் தமிழகத்தில் இருப்பது மட்டுமல்ல, அதிக எண்ணிக்கையில் பொறியியல் பட்டதாரிகளை உருவாக்குகிற மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் உருவாகக்கூடிய பொறியியல் பட்டதாரிகளில் கிட்டத்தட்ட 25 சதவீதம் பேர் தமிழ்நாட்டில் உருவாகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. புத்திசந்திரன் அவர்கள்.

**திரு. புத்திசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில், மற்ற மாவட்டங்களிலிருந்தும், ஏன் மற்ற மாநிலங்களிலிருந்தும்கூட எனது தொகுதியான ஊட்டிக்கு மாணவர்கள் வந்து படிக்கிறார்கள். ஆனால், உயர் கல்வியைப் பொறுத்தவரையில், நீலகிரி மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டங்களுக்கு மாணவர்கள் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், நீலகிரி மாவட்டம், ஊட்டியில் அரசு மகளிர் பொறியியல் கல்லூரி தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 மே 14

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில், நீலகிரி மாவட்டத்தில் அதிகமான பள்ளிகள் இருக்கின்றன. அங்கு ஒரு கல்லூரி அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பொதுவாக மலைப் பிரதேசங்களில் பொறியியல் கல்லூரி தொடங்க வேண்டுமென்று சொன்னால், 10 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. மலைப் பிரதேசங்களில் வனக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் இருக்கின்ற காரணத்தாலும், ஒட்டுமொத்தமாக 10 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருப்பதாலும், பொறியியல் கல்லூரி தொடங்குவதற்கு வாய்ப்பு இல்லை. அதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு மூன்று அரசு பொறியியல் கல்லூரிகளைத் தமிழகத்திற்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

**திரு. மு. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான முதுகுளத்தூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அந்தத் தொகுதி, அரசுக் கல்லூரிகள் இல்லாத தொகுதியாக இதுவரை இருந்துகொண்டிருக்கிறது. அந்தத் தொகுதி மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஒரு பொறியியல் கல்லூரியோ அல்லது கலைக் கல்லூரியோ அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகன், நிலம் வைத்திருக்கிறீர்களா? மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில், அவருடைய தொகுதிக்கு அரசு சார்பாக ஒரு பொறியியல் கல்லூரியோ அல்லது ஒரு கலைக் கல்லூரியோ அமைத்து கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.



2012 மே 14]

தற்பொழுது நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது தொகுதி வரையறை செய்யப்பட்டு மாற்றியமைத்த காரணத்தால், சில கல்லூரிகள் ஒரு தொகுதியிலிருந்து மற்ற தொகுதிக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒரு தொகுதிக்கு ஒரு கல்லூரி என்ற வரைமுறை கிடையாது. எந்தெந்த இடங்களில் கல்லூரி தேவையோ, எங்கெங்கெல்லாம் வறுமைக்கோட்டிற்குக்கீழே இருக்கக்கூடிய மக்கள் அல்லது தொலைதூரம் சென்று கல்வி பெறும் நிலையில் இருக்கக்கூடிய மக்கள் இருக்கிறார்களோ அவர்களை மனதில் கொண்டுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம் போன்று இதுவரை அரசுக் கல்லூரிகள் தொடங்கப்படாத இடங்களைத் தேர்வு செய்து இந்த ஆண்டு 22 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மூன்று அரசு பொறியியல் கல்லூரிகள்—தஞ்சாவூரில் ஒரு பொறியியல் கல்லூரியும், தருமபுரி மாவட்டத்தில் ஒரு பொறியியல் கல்லூரியும் மற்றும் தேனி மாவட்டத்தில் ஒரு பொறியியல் கல்லூரியும் ஆட்சி அமைந்த பத்து மாதங்களுக்குள்ளாகவே மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

*முற்பகல் 10–25*

மேலும், இன்றைய தேவையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த ஆண்டு பொறியியல் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடாக 1,54,260 இடங்கள் இருந்தன. அந்த அரசு ஒதுக்கீட்டில் 1,10,166 இடங்கள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு சுமார் 44,135 அரசு ஒதுக்கீட்டு இடங்கள் காலியாக இருந்தன. இப்படிப்பட்ட சூழ்நிலையில், Single Window System மூலமாக அரசு ஒதுக்கீடாக வருகிற மாணவர்களைப் பொறுத்தவரையில் 71.39 சதவிகிதம் மாணவர்கள் மட்டுமே சேர்க்கை பெற்றார்கள். 28.61 சதவிகிதம் மாணவர்கள் கடந்த ஆண்டு சேராமல் அந்த இடங்கள் காலியாக இருந்தன. இதை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் படிக்க வசதியற்ற மாணவர்களும் பொறியியல் கல்லூரிகளில் சேரவேண்டும் என்ற நோக்கத்தோடுதான், ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்குக் கட்டணச் சலுகையை வழங்கியிருக்கிறார்கள். மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகையை மாண்புமிகு

[2012 மே 14

முதல்வர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், நெசவாளர்களின் குடும்பத்தைச் சார்ந்த மாணவ, மாணவிகளுக்கு இந்த ஆண்டு கல்விக் கட்டணச் சலுகைகளையெல்லாம் வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிற இந்த நல்ல அற்புதமான திட்டங்கள் மூலமாக கடந்த ஆண்டைப்போல அல்லாமல் இந்த ஆண்டு அரசு ஒதுக்கீட்டிற்கான இடங்கள் நிச்சயமாக நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

**திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புத்தூரில் அரசு சீனிவாச சுப்புராய தொழில்நுட்பக் கல்லூரி இயங்கி வருகிறது. அங்கே பொறியியல் கல்லூரி கட்டுவதற்குப் போதுமான இடவசதி உள்ளது. எனவே, அங்கு ஒரு பொறியியல் கல்லூரி அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அந்த மாவட்டத்தில் ஏற்கெனவே அரசு உறுப்பு பொறியியல் கல்லூரி ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தற்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களும் இந்த ஆண்டு மேலும் மூன்று பொறியியல் கல்லூரிகளைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு மாணவர்கள் அதில் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி மாணவர்கள் சேர்ந்து படிக்கும் எண்ணிக்கை அதிகரிக்கும்போது இதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.



2012 மே 14]

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியில் ஓர் அரசு பொறியியல் கல்லூரி அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதியிலுள்ள ஏழையெளிய மாணவர்கள் Engineers ஆக வாய்ப்பு இருக்கும். அங்கே விவசாயத்தையே நம்பியிருக்கும் அந்த ஏழையெளிய மாணவர்கள் +2 படித்துவிட்டு வெகுதூரம் சென்று படிக்க வாய்ப்பு இல்லாததால், அவர்கள் மேற்படிப்பு படிக்க இயலாத நிலையில் இருந்து வருகிறார்கள். எனவே, ஏழையெளிய மாணவர்கள் Engineering படிப்பதற்கு மேலூர் தொகுதியிலே ஒரு பொறியியல் கல்லூரியை அமைத்துக் கொடுக்க அரசு முன்வந்தால் அதற்குத் தேவையான இடத்தை நான் அந்தப் பகுதி பொதுமக்களின் சார்பாக வாங்கித் தர தயாராக இருக்கிறேன். ஆகையால் மேலூர் தொகுதியிலுள்ள ஏழையெளிய மாணவர்கள் படிப்பதற்கு ஏதுவாக ஒரு பொறியியல் கல்லூரியை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 528 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றில் 6 கல்லூரிகள் அரசு பொறியியல் கல்லூரிகளாக ஏற்கெனவே நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் மேலும் 3 கல்லூரிகளை வழங்கி, இன்றைக்கு அரசு பொறியியல் கல்லூரிகள் 9 செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதைப்போல, பக்கத்து மாவட்டமான தேனியில், போடிநாயக்கனூரில் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு பொறியியல் கல்லூரியைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். ஆக, இதற்கு முன்பெல்லாம் மாணவர்கள் படிக்க சற்று தொலைதூரம் சென்று படித்து வந்தனர். அவர்கள் மாவட்டத்திற்குப் பக்கத்திலேயே ஒரு அரசு கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது. அதில் அந்த மாணவர்கள் சேர்ந்து கல்வி பெறவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

[2012 மே 14

**திரு. வி.எஸ். இராஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது செய்யூர் சட்டமன்றத் தொகுதி முற்றிலும் புதிதாக உருவாக்கப்பட்ட தொகுதி. மிகவும் பின்தங்கிய பகுதியான அந்தப் பகுதியில் மீனவ மக்கள் அதிகம் வாழ்கிறார்கள். அந்தப் பகுதியிலேயிருந்து ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கோ, பொறியியல் கல்லூரிக்கோ செல்வது என்றால், 75 கிலோ மீட்டர் சென்றுதான் படிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பின்தங்கிய பகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அல்லது ஒரு தொழில்நுட்பக் கல்லூரியை உருவாக்கித் தந்தால் இந்தப் பகுதி மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். அதேபோல, 80 கிலோ மீட்டர் சென்று படிப்பது என்பது மாணவர்களுக்கு மிகவும் கடினமாக இருக்கிறது. இதனால் மாணவர்கள் கல்லூரிக்குச் செல்வதற்குக் கஷ்டப்படுகிறார்கள். எனவே, மாணவர்களின் கஷ்டத்தைப் போக்கும் வகையிலே மாண்புமிகு அம்மாவின் அரசு இந்தப் பகுதிக்கு ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியையோ அல்லது ஒரு தொழில்நுட்பக் கல்லூரியையோ அமைத்துத் தர முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற காஞ்சிபுரம் மாவட்டத்தில் அதிகமாக 81 தனியார் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. 2 அரசு பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே, தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் single window system–த்தின் மூலமாக குறைந்தக் கட்டணத்தில் மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்குக்கூட வாய்ப்பிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், ஒரு பொறியியல் கல்லூரி துவங்க வேண்டுமென்றால், அதற்கு 10 ஏக்கர் நிலம் தேவைப்படுவதோடு, தொடரா செலவினமாக 100 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. தொடரும் செலவினமாக 33 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த ஆண்டு மூன்று பொறியியல் கல்லூரிகளைத் திறந்திருக்கிறார்கள். அதற்கு 300 கோடி ரூபாய் தேவைப்படுகிறது.



2012 மே 14]

ஆகவே, வருகிற கால கட்டங்களில், single window system மூலமாக மேற்படி கல்லூரிகளில் மாணவர்கள் சேர்வதற்கு வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிலை வரும்போது, மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறபொழுது, விண்ணப்பங்கள் அதிகமாக வருகிறபொழுது, அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 255, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

255—

## நியாய விலைக் கடை

***2906—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, யூ.புரம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதி, யூ.புரம் தாய்க் கடையில் மொத்தம் 682 குடும்ப அட்டைகள் உள்ளன. மலைப் பிரதேச பகுதியான யூ.புரத்தில் அரசாணையின்படி நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில், யூ.புரம் பகுதிநேர நியாய விலைக் கடை 30–4–2012 அன்று மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, 243 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகின்றது என்பதனை இந்த அவைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 மே 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், இருக்கையில் இல்லை.*

*வினா வரிசை எண் 256, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

256—

**பாசன வாய்க்கால்**

***849—திரு. இரா. குமரகுரு:**

*மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உளுந்தூர்பேட்டை தொகுதி, சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து உளுந்தூர்பேட்டைக்கு பாசன வாய்க்கால் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*உளுந்தூர்பேட்டை தொகுதி, சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து உளுந்தூர்பேட்டை பாசனத்திற்கு பாசன வாய்க்கால் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கான தல ஆய்வு செய்து, தொழில்நுட்ப ரீதியாக வாய்க்காலின் தரைமட்ட அளவு மற்றும் பாசன நிலங்களின் மட்ட அளவுகள் ஆகியவற்றை ஆய்வு செய்து, பாசன வாய்க்கால் அமைக்க சாத்தியக்கூறு உள்ளதா என்பது குறித்து ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பிறகு, உளுந்தூர்பேட்டை பாசனத்திற்கு பாசன வாய்க்கால் அமைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

**திரு. இரா. குமரகுரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் நலனுக்காக வேளாண்மைத் துறையில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி, உழவர் பெருவிழா கண்ட, உலகம் போற்றும் எங்கள் குலதெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*



2012 மே 14]

*விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி எந்தவொரு தொழிலும் இல்லாத மிகவும் பின்தங்கிய பகுதி. இப்பகுதியில் வாழும் மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். விவசாயத்திற்குத் தேவையான நீர்வரத்துக்கான ஏரிகளில் பருவமழைக் காலங்களைத் தவிர, மற்ற காலங்களில் ஏரிக்கு நீர்வரத்து இல்லாத காரணத்தினால், விவசாய நிலங்களெல்லாம் மானாவாரி நிலங்களாக மாறிவருகின்றன. எனவே, சாத்தனூர் அணையிலிருந்து நீர் சாத்தனூர் வலதுபுற பாசன வாய்க்கால் வழியாக* Pick up *அணைக்கு வருகிறது.* Pick up *அணையிலிருந்து சங்கராபுரம் வட்டம், அத்தியூர் வரை வரும் அந்த வாய்க்காலை நீட்டிப்புச் செய்து மரூர், ஏந்தல், வெங்கலம், ரிஷிவந்தியம் வழியாக உளுந்தூர்பேட்டை தொகுதிவரை கொண்டு வந்தால், அந்தப் பகுதியில் இருக்கின்ற, கிட்டத்தட்ட 100 கிராமங்களுக்கும் மேற்பட்ட விவசாயிகள் அதனால் பயன்பெறுவதுடன் சுமார் 10,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*எனவே, விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மேற்கண்ட இடத்தை ஆய்வு செய்து, நடவடிக்கை மேற்கொள்ளும் என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி அவர்கள்.*

**திரு. மு. பரஞ்ஜோதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய பாசன வாய்க்கால்களில் ஆகாயத் தாமரைச் செடிகளை அகற்றுவதற்குரிய ஓர் உன்னதமான திட்டத்தை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்தத் திட்டம் தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய விவசாயிகளின் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. அந்தவகையில், திருச்சி மாவட்டத்தில் இருக்கக்கூடிய, உய்யக்கொண்டான் வாய்க்காலில் ஆகாயத் தாமரைச் செடிகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.*

[2012 மே 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பரஞ்ஜோதி, இது பாசன வாய்க்கால் அமைப்பது பற்றிய கேள்வி. நீங்கள் மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் கேட்கிறீர்கள்.* Please sit down. *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய ஆகாயத் தாமரைச் செடிகளை அகற்ற வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன்படி இப்பொழுது, மாதிரி சோதனைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் முடிந்தவுடன், மாண்புமிகு சில உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு, நான் ஏற்கெனவே பலமுறை சொல்லியிருக்கின்றேன்; மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக இருந்தால் துணைக் கேள்வியை அனுமதிக்கலாம். மாண்புமிகு அமைச்சரிடத்திலும் அதற்கான பதில் இருக்கும். இப்போது மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாதது. இருந்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதிலைச் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.*

**டாக்டர் ச. துரையப்பா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் செண்பகவல்லி அணை அமைந்துள்ளது. பெருந்தலைவர் காமராசர் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு, பின்னர் இத்திட்டம் கைவிடப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், கேரள முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, செண்பகவல்லி அணையில் தடுப்புச் சுவர் உடைப்பைச் சரிப்படுத்தவும், மேற்கு நோக்கிப் பாயும் தண்ணீரைத் தேக்கிடவும் திட்டமிடப்பட்டு, நிதியுதவி அளிக்க முடிவு செய்யப்பட்டு, அதில் பாதிப் பணம் கேரள அரசிடம் செலுத்தப்பட்டது. அந்த நிலையில் டெண்டர் எடுக்க யாரும் முன்வராத காரணத்தால், அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் போன்ற மாவட்டங்கள் இதனால் பயன்பெறுகின்றன. எந்தவொரு பிரச்சினையானாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றால், உடனடியாகத் தீர்வு ஏற்படும் என்பது உலக மக்களின் நம்பிக்கை.*



2012 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா, தடுப்புச் சுவர் கட்டவேண்டும்; அதுதானே உங்களுடைய கேள்வி?*

**டாக்டர் ச. துரையப்பா:** *ஆமாம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

**திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது நாங்குநேரி தொகுதியில் உள்ள பெரியகுளம் மிகவும் முக்கியமான குளமாகும். இக்குளத்தின் வரத்துக் கால்வாயில் ஒரு தடுப்பணை கட்டினால், மழைக் காலங்களில் 42 சிறிய குளங்கள் நிரம்பிட வழிவகுக்கும்; இதனால் இப்பகுதியில் நீர் மட்டம் உயரவும், பாசனப் பகுதிகள் பெருகவும் வாய்ப்புள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அங்கே தடுப்பணை கட்டுவதற்கு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, போதிய நீர் வரத்து இருப்பின், அங்கே தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2012 மே 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள்.

**திரு. என்.எஸ்.என். நடராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி, எனது காங்கேயம் தொகுதிக்குட்பட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, வட்டமலை அணை தூர் வாரப்படுமா என்று தங்கள் வாயிலாக பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த வட்டமலை அணைக்கு அருகிலே இருக்கின்ற மரங்களையெல்லாம் வெட்டுகின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பணி முடிந்தவுடனே, தூர் வாருகின்ற பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, காமேஸ்வரம் கிராமத்திற்கு அருகில், கீரனேரி என்கிற மிகப் பெரிய ஏரி உள்ளது. இந்த ஏரியைத் தூர் வாரி, செப்பனிட்டு, பராமரிப்பு செய்து, மழை நீரைத் தேக்கினால், சுமார் 1,500 ஏக்கரில் நெல் விவசாயம் செய்வதற்கு, பாசனத்திற்குப் பயன்படுத்த முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஏரியைத் தூர் வாரி, செப்பனிட்டுத் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு நன்மை பயக்கின்ற திட்டங்கள் எதுவாக இருந்தாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அதை நிறைவேற்றித் தரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருக்கோவிலூர் தொகுதியிலே, திருக்கோவிலூர் அணைக்கட்டு, எல்லிஸ் அணைக்கட்டு என இரண்டு அணைக்கட்டுகள் இருக்கின்றன. திருக்கோவிலூர் அணைக்கட்டிலேயிருந்து, திருக்கோவிலூர் தொகுதி, விக்கிரவாண்டி தொகுதி, விழுப்புரம் தொகுதி வழியாகச் செல்கின்ற பம்பை வாய்க்கால் தூர் வாரப்படாமல் இருக்கின்றது. அது தூர் வாரப்பட்டால் அதன் வாயிலாக 3 ஆயிரம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதேபோன்று, எல்லிஸ் அணைக்கட்டு வழியாக 5 வாய்க்கால்கள் செல்கின்றன. அவை தூர் வாரப்பட்டால் அதன் வாயிலாக 7,590 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறுவதற்கு ஏதுவாக இருக்கின்றது. மேற்படி வாய்க்கால்கள் தூர் வாரப்படாமல் இருக்கின்றன. அவை தூர் வாரப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, போதிய நிதியிருப்பின் இந்த ஆண்டு தூர் வாரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.

**திரு. துரை. மணிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புள்ளம்பாடி பிரதான வாய்க்கால், திருச்சி மாவட்டம், முக்கொம்பு மேலணையில் உள்ள அய்யாறு என்னும் இடத்திலிருந்து, 1956 ஆம் ஆண்டு திட்டம் தீட்டப்பட்டு, 1959 ஆம் ஆண்டு விவசாயிகளுக்குப் பாசனத்திற்காக ஒப்படைக்கப்பட்டது. 56 மைல் நீளமுள்ள இந்த வாய்க்காலில், 2004 ஆம் ஆண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 24 மைல்கள் மட்டும் தூர் வாரப்பட்டது. அதற்குப் பிறகு வந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்கள், அந்த வாய்க்கால்களைத் தூர் வாருவது பற்றி கண்டுகொள்ளவில்லை.

[2012 மே 14

*முற்பகல் 10–40*

தற்பொழுது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் குறைந்து வரும் நீர்நிலைகளைக் கருத்திற்கொண்டு, வாய்க்கால் வழி •பாசனம் எல்லாம் மாறி வயல்வெளிப் பாசனமாக இருக்கின்ற இந்தக் சூழ்நிலையில் 56 மைல் நீளம் கொண்ட அந்தப் புள்ளம்பாடி வாய்காலையும் அதன் கிளை வாய்க்கால்களையும் தூர் வாரிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியில் இருக்கக்கூடிய கண்டமங்கலம், ஒண்ணுபுரம், குன்னத்தூர், சேவூர், அகராபாளையம், இரும்பேடு போன்ற பகுதிகளிலே 17 ஏரிகளுக்கு நீர் ஆதாரமாக இருக்கக்கூடிய, செண்பகத்தோப்பு அணையிலிருந்து, கமண்டல நாகநதி வழியாக வரக்கூடிய, வரத்துக் கால்வாய் புதர் மண்டித் தூர் வாரப்படாமல் இருக்கின்றது. எனவே, இந்த நிதியாண்டில் அதைத் தூர் வாரி, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய 17 ஏரிகளின் நீர் ஆதாரத்தைப் பெருக்கித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின் இந்த ஆண்டு நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள்.

**திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் வறட்சியான மாவட்டம். ஆனால், அந்த மாவட்டத்தில் நிறைய ஆறுகள் இருக்கின்றன. குறிப்பாக, ஆலங்குடி தொகுதியில் அம்புலி ஆறு இருக்கிறது. ஆனால், அங்கு பெய்யக்கூடிய மழை நீர் எல்லாம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு, புதுக்கோட்டையில் இடைத்தேர்தல் நடைபெறவிருப்பதால், புதுக்கோட்டை தவிர்த்து வேறு ஏதாவது இருந்தால் கேட்கவும். ஏனென்றால், அது code of conduct–ல் வரும்.

**திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெறக்கூடிய இந்த வேளையில், நூறு ஆண்டுகளுக்குரிய சாதனைகளை மக்களுக்கு அள்ளி, அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், விக்கிரமங்கலத்திலிருந்து கொக்குளம், கின்னிமங்கலம், புளியங்குளம் வழியாக மரவங்குளம் வரை வரக்கூடிய திருமங்கலம் கால்வாயினைத் தூர் வாரிச் செப்பனிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை இந்த நிதியாண்டில் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

[2012 மே 14

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரத்தில் இராமக்காள் ஏரியிலிருந்து மதிகோண்பாளையம் விவசாய நிலத்திற்குப் பாசனத்திற்கு செல்லக்கூடிய கால்வாய் மிகவும் பழுதடைந்துள்ளது. அதைச் சீர்செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தருமபுரி நகரில் 6—வது வார்டு, 7—வது வார்டு, 9—வது வார்டு வழியாக ஒரு வெட்டுக் கால்வாய் செல்கிறது. அது, இராமக்காள் ஏரிக்கு செல்லக்கூடிய பெரிய கால்வாய். அந்தக் கால்வாயைத் தூர் வாரித் தர வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின் அது நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

**திரு. சு. ரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட சம்பத்ராயன்பேட்டை கொண்டத்திலிருந்து தக்கோலம் பெரிய ஏரிக்குச் செல்லும் 12 கி.மீ. தூரமுள்ள பாசனக் கால்வாயைச் சீரமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின், நிதிநிலைக்கு ஏற்ப இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற அந்தத் துணைக் கேள்விகளுக்கெல்லாம் உறுதிமொழிகளை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கவலை கொண்டுள்ளார்கள். (சிரிப்பு)



2012 மே 14]

முற்பகல் 10—45

வினா வரிசை எண் 257, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

257—

## ஆராய்ச்சி மையம்

***1251—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியில் கோழிப் பண்ணை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்லடம் தொகுதியில் கோழிப்பண்ணை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். மானியக் கோரிக்கையிலே நான் அறிவிப்புகளை வாசிக்கும்போது, தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் கோவை, திருப்பூர் மற்றும் பல்லடம் பகுதிகளிலுள்ள கோழிப் பண்ணைகளை மையப்படுத்தி, மேலும் ஒரு கோழி ஆராய்ச்சி நிலையத்தைப் பல்லடம் பகுதியில் 2 கோடியே, 63 இலட்சம் ரூபாய் செலவில், நடப்பாண்டில் தோற்றுவிக்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்று மூன்றாவது அறிவிப்பாக நான் தெரிவித்திருக்கிறேன் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

**திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு, பல்லடம் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும், நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். பல்லடம் பகுதியில் அதிகப்படியாக இயங்கிக்கொண்டிருக்கின்ற விசைத்தறித் தொழிலுக்கும், மிகப் பெரிய சலுகையாக 1994 ஆம் ஆண்டு 9.2 கோடி ரூபாயும், 2002 ஆம் ஆண்டு 11.2 கோடி ரூபாயும், 2005 ஆம் ஆண்டு 30.3 கோடி ரூபாயும், 2012 ஆம் ஆண்டு 59.69 கோடி ரூபாயும் மானியமாக வழங்கி, கொங்கு மண்டலமே வியக்கத்தக்க வகையில், சிந்திக்க வைத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை மனதாரப் பாராட்டி, வாழ்த்தி, வணங்கி அமர்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 258, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

258—

### பயணியர் விடுதி

***3513—திரு. ஏ.கே.டி. ராஜா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தொகுதி, திருப்பரங்குன்றத்தில் பயணியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்திலுள்ள முருகக் கடவுளின் அறுபடை வீடுகளில் திருப்பரங்குன்றம் ஒன்றாம் படை வீடாகும். இத்திருத்தலத்திற்கு, உள்ளூர் மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும் ஆன்மிக சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகை தருகின்றனர் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.





அந்த ஆன்மிகச் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக திருப்பரங்குன்றத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்தில் மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகே உணவு விடுதியுடன்கூடிய 43 அறைகள் கொண்ட தங்கும் விடுதியும் மற்றும் திருப்பரங்குன்றத்திலிருந்து 14 கிலோ மீட்டர் தூரத்தில் மதுரை மாநகரில் அழகர்கோவில் சாலையில் 50 அறைகள் கொண்ட மற்றொரு உணவு விடுதியுடன்கூடிய தங்கும் விடுதியும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதோடு, திருப்பரங்குன்றத்திலிருந்து, 5 கிலோ மீட்டர் தொலைவில் எல்லிஸ் நகர் பகுதியில் அறநிலையத் துறையும் மற்றும் சுற்றுலாத் துறையும் இணைந்து 84.90 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் தங்கும் விடுதி கட்டி முடிக்கப்பட்டு, விரைவில் அது பயன்பாட்டிற்கு வர இருக்கின்றது. எனவே, திருப்பரங்குன்றத்திற்கு என்று, அங்கே தனியாக பயணியர் தங்கும் விடுதி அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை இம்மான்றத்தில் தங்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்கள் கவனத்திற்கு, மாண்புமிகு அமைச்சர்கள் உடுக்குறியிட்ட வினாக்களுக்கான விடைகளுக்கு ஒப்புதல் அளித்த பின்பு, இச்செயலகத்திற்கு அவ்விடைகள் வருகின்றன. அந்த விடைகளின் அடிப்படையில் இங்கே கேள்விகள் எடுக்கப்படுகின்றன. விடைகளில் ஏதேனும் திருத்தமிருந்தால், அந்தத் திருத்தம் குறித்து இச்செயலகத்திற்குத் தெரிவிக்க வேண்டும். எனவே வருங்காலங்களில் மாண்புமிகு அமைச்சர்கள் இதைக் கடைப்பிடிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள்.

**திரு. ஏ.கே.டி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொல்லிவிட்டார்கள் அறுபடை வீடுகளில் முதல் படை வீடு என்று அவர்களும் தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை கோயில்களுக்கும், இப்போது பட்ஜெட் கூட்டத்தில் வாரி வழங்கியுள்ளார். ஆனால், அறுபடை வீடுகளில், முதல் படை வீடு திருப்பரங்குன்றம். அங்கு ஒரு பயணியர் விடுதியைச் சுற்றுலாத் துறை அமைச்சர் அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

[2012 மே 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் வாரி வழங்கியதாகச் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் அத்தனையும் வாரி வழங்கியிருக்கின்றார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10–50*

*இது மட்டுமல்ல, அத்தனைத் திட்டங்களையும் வாரி வழங்கக்கூடியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் என்பதை தெரிவித்துக்கொண்டு, அறுபடை வீடுகளில் முதல் படை வீடு திருப்பரங்குன்றம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அத்திருத்தலத்திற்கு சுற்றுச்சூழல் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ரூ. 3.87 இலட்சம் மதிப்பில் கடந்த மைனாரிட்டி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், அந்தப் பணிகள் நடைபெறாமல் இருந்தன. தற்பொழுது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே அந்தப் பணிகள் மிக விரைவாக முடுக்கி விடப்பட்டு, தற்போது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணைப்படி, அங்கு நிலம் சீரமைத்தல், திறந்தவெளி அரங்கம் அமைத்தல், சுற்றுச்சூழல் பூங்காவைச் சுற்றி மேம்பாடு செய்தல், சுற்றுச்சூழல் பூங்காவைச் சுற்றி ஜெனரேட்டர் அறை அமைத்தல், கழிப்பிட வசதிகள், இருக்கை வசதிகள், குழந்தைகள் விளையாட்டுச் சாதனங்கள், உயர்கம்ப மின் விளக்குகள், வரவேற்பு அலங்கார வளைவுகள் அமைப்பது போன்ற பணிகள் மிக வேகமாக நடைபெற்று மிக விரைவிலேயே பயன்பாட்டிற்கு வர இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிக அருகிலேயே, மதுரையிலேயே 3 இடங்களில் சுற்றுலாத் துறை சார்பாக தங்கும் விடுதி இருக்கக்கூடிய காரணத்தினால் தற்போது பயணிகள் விடுதியை அங்கே கட்டுவதற்கு சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன்படி அங்கே ஆய்வு செய்து, தேவையிருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் செய்து தரப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2012 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

**திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், தீர்த்தமலை தீர்த்தகிரீஸ்வரர் கோயில் 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த கோயிலாகும். பெங்களூரு, மைசூர், ஓசூர் ஆகிய இடங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்லக்கூடிய அந்தப் பகுதிக்கு இந்தத் துறையின் சார்பாக பயணிகள் தங்குவதற்கான ஒரு விடுதியைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குப் பாத்தியமான, சொந்தமான தங்கும் விடுதி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து, ஆய்வு செய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட குழித்துறை அணைமுகம் பயணியர் விடுதி பழுதடைந்துள்ளது. அவற்றை மறுசீரமைப்பு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழித்துறையில் உள்ள அந்தப் பயணியர் விடுதி சுற்றுலாத் துறைக்குப் பாத்தியமானது அல்ல. அது பொதுப் பணித் துறை அல்லது நெடுஞ்சாலைத் துறைக்குப் பாத்தியமானதாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்தப் பயணியர் விடுதியை*

[2012 மே 14

சீரமைப்பு செய்வதற்கு சுற்றுலாத் துறை சார்பாக நிதி ஒதுக்கீடு செய்ய வாய்ப்பு இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 259, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

259—

## பேருந்து பணிமனை

**5478—திரு. பொன். ராஜா:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொன்னேரி அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனையை மாநகரப் போக்குவரத்துக் கழக பணிமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் சார்பில் பொன்னேரி பணிமனை 5.46 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வருகிறது. பொன்னேரி பணிமனையில் இயக்கப்படுகின்ற 56 பேருந்துகளில் 38 பேருந்துகள் மாநகரப் போக்குவரத்துக் கழக எல்லைக்குள் இயக்கப்படுவதால் அப்பேருந்துகளை மாநகரப் போக்குவரத்துக் கழகம் எடுத்து இயக்கும் வகையில் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பணிமனை ஒன்றும், பொன்னேரியிலிருந்து கிராமங்களுக்குச் செல்லும் பேருந்துகளைப் பராமரிக்க அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் சார்பில் ஒரு பணிமனையும் செயல்பட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*



2012 மே 14]

**திரு. பொன். ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதனை படைப்பதில் சரித்திரம் படைத்த தாய், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு அம்மா அரசுக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள்.*

**திரு. ஆர். சின்னசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைச் சொல்லி, எனது சட்டமன்றத் தொகுதியில் சுங்கம்–1, சுங்கம்–2 என்ற இரண்டு பணிமனைகள் இருக்கின்றன. அங்கே அதிகமாகப் பேருந்துகள் வந்து நிற்கிற காரணத்தாலே இடையூறு ஏற்படுகிறது. ஒண்டிப்புதூர் பணிமனை–1 என்று ஒரு பணிமனையும் இருக்கின்றது. அங்கே இட வசதியும் இருக்கின்றது. ஆகவே, சுங்கம்–1, சுங்கம்–2 ஆகிய பணிமனைகளை மூன்றாகப் பிரித்து ஒண்டிப்புதூரில் புதிதாக ஒரு பணிமனையைக் கட்டிக் கொடுத்தால் பேருந்துகளை தாராளமாக நிறுத்தி வைக்க முடியும். எனவே, அங்கு ஒரு புதிய பணிமனையைக் கட்டித் தருவாரா என்பதைத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் சார்பில் சுங்கம்–1 பணிமனையில் 107 பேருந்துகளும், சுங்கம்–2 பணிமனையில் 121 பேருந்துகளும் பராமரிக்கப்பட்டு, இயக்கப்பட்டு வருகின்றன. ஒண்டிப்புதூர் பணிமனையில் 114 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. பராமரிப்பு வசதியை மேம்படுத்த சுங்கம்–1, 2 ஆகிய இரண்டு பணிமனைகளையும் பிரித்து, மூன்றாவதாகப் புதிய பணிமனை ஒன்றைத் துவங்க மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு வருகின்றது. புதிய இடம் கிடைக்கப்பெற்ற பின்பு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

**திரு. டி. சுரேஷ்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது செங்கம் தொகுதியில் பல ஆண்டுகளாக அரசுப் பேருந்துகள் சாலையோரங்களில் நின்று கொண்டிருக்கின்றன. எனவே, எனது தொகுதிக்கு ஒரு பணிமனை அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளை போக்குவரத்துக் கழக பணிமனைகளில் பராமரிக்கின்றபோது அங்கே நிறுத்திப் பராமரிப்பதற்கு போதிய இடவசதி இல்லாதபட்சத்தில், அந்தப் பேருந்துகளுக்கு புதிய பணிமனைகள் அமைக்கப்பட வேண்டுமென்பதற்காக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த ஒரே ஆண்டுக் காலத்தில் 2011–2012 ஆம் ஆண்டு 10 புதிய போக்குவரத்துக் கழகப் பணிமனைகள் அமைப்பதற்கும், 2012–2013 ஆம் ஆண்டு 36 புதிய போக்குவரத்துக் கழகப் பணிமனைகள் அமைப்பதற்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தம் 46 போக்குவரத்துக் கழக பணிமனைகள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதன்படி துறையின்சார்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று துறையின் சார்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகரப் போக்குவரத்துக் கழகம் இயங்குகிற சென்னையில் மட்டும்தான் பஸ் நிலையங்களைப் போக்குவரத்துக் கழகமே உருவாக்கி பராமரிக்கிற ஏற்பாடு இருக்கிறது. பெரம்பூர் தொகுதிக்குள்ளே மகாகவி பாரதியார் நகரையொட்டி முல்லை நகரிலும், கவியரசு கண்ணதாசன் நகரிலும் இரண்டு பஸ் நிலையங்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட அவை அரை பணிமனைகளைப்போல என்றுகூட சொல்லலாம். ஆனால், கடந்த 5 ஆண்டுகளிலே முழுக்க முழுக்க பராமரிப்பற்று, கவனிப்பில்லாமல் மேலே இருக்கிற ஷீட் உடைந்து, சுற்றுச் சுவர்கள் பழுதுபட்டு, புதர் மண்டி, மக்கள் உள்ளே சென்று கழிவறையாகப் பயன்படுத்துகிற அளவுக்கு மோசமாக இருக்கின்றன. ஆகவே, மேற்படி பஸ் நிலையங்கள் இரண்டையும் பராமரிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பாக இயக்கப்படுகின்ற பேருந்துகளுக்குப் புதிய பணிமனைகள் அமைக்கப்பட வேண்டுமென்று 2012–2013 ஆம் ஆண்டு 4 புதிய போக்குவரத்துக் கழக பணிமனைகள் அமைப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதேபோல, ஏற்கெனவே பழுதடைந்து பராமரிக்கப்படாமல் நிலுவையிலிருந்த போக்குவரத்துக் கழகத்தினுடைய பணிமனைகளையும், பேருந்து நிலையங்களையும் பராமரிப்பதற்குக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, துறையின் சார்பாக திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. விரைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன அந்தப் பகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று பணிமனை தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 260, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

260—

## ஹெலிகாப்டர் தளம்

***12882—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

*மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குளச்சல் தொகுதி, கடலோரப் பகுதிகளில் மீனவர்களைப் பாதுகாக்க ஹெலிகாப்டர் தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 மே 14

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கடலில் மீன்பிடிப்பில் ஈடுபட்டிருக்கும்போது கடல் சீற்றம் மற்றும் கடுமையான காற்றின் காரணமாக படகு விபத்துக்குள்ளாகி மீனவர்கள் காணாமல் போகும் நிகழ்வுகளில், காணாமல் போன மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை கடலோரக் காவல் படை மற்றும் கடற்படை வசமுள்ள ஹெலிகாப்டர்கள்மூலம் அவர்களது கட்டுப்பாட்டிலுள்ள ஹெலிகாப்டர் தளத்தினைப் பயன்படுத்தி, வான்வழித் தேடுதல் பணியும், கப்பல்கள், படகுகள்மூலம் கடல்வழி தேடுதல் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணி அவர்களது தலையாய பணி என்பதாலும், கடல் மற்றும் வான்வழித் தேடுதல் தொடர்பான அனைத்து சாதனங்களும் அவர்களது கட்டுப்பாட்டில் உள்ளதாலும் தேடுதல் பணி கடற்படை, இந்திய கடலோரக் காவல் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, குளச்சல் பகுதியில் மட்டுமல்ல, தமிழகத்தில், கடலோரப் பகுதிகளில் எங்கும் ஹெலிகாப்டர் தளம் அமைக்கும் பணி தற்போது பரிசீலனையில் இல்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் தொகுதியில் ஆழ்கடலில் மீன் பிடிக்கக்கூடிய திறமையான மீனவர்கள் உள்ளனர். அங்கு ஆண்டு ஒன்றுக்கு 25,000 டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இரண்டு மீன்பிடித் துறைமுகப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. எனவே, சுமார் 15,000–க்கு அதிகமான மீனவ சகோதரர்கள் விசைப் படகுகள்,* fibre *படகுகள் மற்றும் வல்லங்கள் மூலமாக ஆழ்கடலில் மீன் பிடிக்கும்போது இயற்கைப் பேரிடர்களால் அவர்களுக்கோ அல்லது படகுகளுக்கோ பாதிப்பு ஏற்பட்டால் அவர்களைப் பாதுகாப்பாகக் கரை சேர்ப்பதற்கு உயிர்காப்பு நடவடிக்கையாக ஹெலிகாப்டர் பயன்படுத்தும் விதத்தில் ஹெலிகாப்டர் தளம் குளச்சல் டச்சுப் போர் நினைவுச் சின்னம் அமைந்துள்ள இடத்திலே அமைக்க வேண்டுகின்றேன். இதை மறுபரிசீலனை செய்ய மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்பதைக் கேட்பதோடு, உயிர்காப்பு நடவடிக்கைக்காக அதிவிரைவு விசைப் படகு, நவீன தகவல் தொடர்பு மையம் குளச்சலில் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.*



2012 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13 மற்றும் 14–11–2011 ஆகிய தேதிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் நடத்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில், காணாமல் போகும் மீனவர்களைக் காப்பாற்றுவதற்காகவும், ஹெலிகாப்டர் தேவைப்படும் நிகழ்வுகளில் வாடகைக்கு அமர்த்திக்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு அறிவிப்பும் வெளியிடப்பட்டது. மேலும், வான்வழித் தேடுதல் தொடர்பான சாதனங்களில் ஒன்றான ஹெலிகாப்டர் இந்தியக் கடலோரக் காவல் படை மற்றும் இந்தியக் கப்பற்படையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறே கடலில் காணாமல் போகும் மீனவர்களைக் காப்பாற்றுவதற்காக தேவை ஏற்படும்போது நிகழ்வுகளின் அடிப்படையில் ஹெலிகாப்டர்களைக் கூடுதலாக வாடகைக்கு அமர்த்தும் வாய்ப்புகள் குறித்தும், சட்ட விதிமுறைகள் குறித்தும் தெளிவுபடுத்திட, இந்தியக் கடலோரக் காவல் படையின் அறிக்கை கோரப்பட்டுள்ளது.*

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** *எனவே, இந்தியக் கடலோரக் காவல் படையின் அறிக்கை பெறப்பட்டவுடன் வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 261, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2012 மே 14

261—

## விளையாட்டரங்கம்

*6250—**திரு. கே. தங்கவேல்:**

*மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்பூர் மாவட்டத்தில் விளையாட்டரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*திருப்பூர் மாவட்டத்தில் விளையாட்டரங்கம், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் அமைத்திட அக்கல்லூரி முதல்வரும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டு செயல்படுத்த 15–12–2011–ல் ஆணை வெளியிடப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

**திரு. கே. தங்கவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. ஆனால் அதேசமயத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்னும் ஏற்படவில்லை என்றும், அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கல்வித் துறையின் சார்பாக மாணவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். அதற்கு அடுத்துதான் விளையாட்டுத் துறைக்கு என்ற ஷரத்து இருக்கிற காரணத்தினால் அந்த ஒப்பந்தம் தாமதமாகிறது. எனவே, உடனடியாகத் தலையிட்டு, அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமல்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று தாங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*



2012 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விளையாட்டு அரங்கம் தொடங்கப்படவேண்டும் என்று கேட்டிருக்கிறார். திருப்பூரைப் பொறுத்தவரையில் அது புது மாவட்டம். அங்கே விளையாட்டரங்கம் உடனடியாகத் தொடங்குவதற்கு இடம் தேர்வு செய்கின்ற நிலையில் அங்கு சரியான இடம் கிடைக்கவில்லை. அதன் அடிப்படையில்தான் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் விளையாட்டரங்கம் தொடங்குவதற்கு அந்த மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெற்று இப்போது நடைபெற்றிருக்கிறது. அதன் அடிப்படையில்தான் இப்போது விளையாட்டு ஆணையம், ரூ.50 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது. அங்கு மாணவர்களுக்கு முதலிடம் கொடுப்பது மட்டுமல்ல, இடம் இப்போது திருப்பூரில் கிடைக்கவில்லை. அதன் அடிப்படையில்தான் இன்றைக்கு சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் தொடங்கப்பட்டிருக்கிறதேயொழிய வேறு ஒன்றும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருப்பூரில் சரியான முறையில் இடம் தேர்வு செய்து தெரிவிப்பாரேயானால் அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு திறந்தவெளி விளையாட்டு அரங்கம், உள் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் ஆகியவற்றை விளையாட்டுத் துறையின் சார்பாக உருவாக்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் கொள்கையாகும். அதன் அடிப்படையில் திருப்பூர் புது மாவட்டம் என்கிற காரணத்தால், பணி தொடங்குகிறபோது திருப்பூரில் போதுமான இடம் கிடைக்கவில்லை. உடனடியாகத் தொடங்கப்படவேண்டும் என்று அம்மா அவர்கள் ஆணையிட்டதால் சிக்கண்ணா அரசு கல்லூரி வளாகத்தில் விளையாட்டு அரங்கம் அமைத்திட அக்கல்லூரி முதல்வரும், விளையாட்டு ஆணையரும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டு அது செயல்படுத்தப்பட்டு இன்றைக்கு ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உடனடியாக இந்தப் பணியைத் தொடங்க இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*அதுமட்டுமல்ல, மாவட்டப் பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்க இடம் வழங்குமாறு அல்லது சிக்கண்ணா அரசு கல்லூரியிலேயே அமைக்க பரிந்துரை செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. உரிய கருத்துரு பெறப்பட்டவுடன் அரசின் நிதிநிலைமையைக் கருத்திற்கொண்டு திருப்பூர் மாவட்டத்திற்கான மாவட்ட விளையாட்டு வளாகம் உடனடியாக அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 262, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

262—

**விடுதி**

*__5526—திரு. ஆர். சீனிவாசன்:__*

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆற்காடு தொகுதி, வாழப்பந்தல் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் மாணவர், மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக முதல்வராகப் பதவியேற்ற பின், இந்த 12 மாத குறுகிய காலத்திற்குள் 56 விடுதிகளை இங்கே அமைப்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) ஆணையிட்டு பெரிய ஒரு வரலாற்றுச் சாதனை படைத்துவிட்டார்கள். அதிலும் முந்தைய ஆட்சியில் ஒவ்வொரு விடுதியிலும், 50 மாணவர்கள் அல்லது மாணவியர்களைச் சேர்ப்பார்கள். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் 100 மாணவர்கள் அல்லது மாணவியர்களைச் சேர்ப்பதற்கு ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*





*முற்பகல் 11–05*

*அதிலும் சிறப்பு என்னவென்றால், தேவைப்பட்டால் அதைவிட அதிகமாக 10 சதவிகிதம் மாணவர், மாணவியர்களைக் கூடுதலாக சேர்த்துக்கொள்ளலாம் என்றும் ஆணையிட்டு, மிகப் பெரிய வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி, ஆற்காடு தொகுதி, வாழப்பந்தல் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு மட்டும் கேட்டுள்ளார்கள். குறிப்பிட்ட பள்ளிகளுக்கு, குறிப்பிட்ட கல்லூரிகளுக்கு என்று பிரத்தயேகமாக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் விடுதிகள் அமைக்கப்படுவதில்லை. மேலும், வாழப்பந்தல் அரசினர் மேல்நிலைப் பள்ளியினை விரிவாக்கும்பட்சத்தில் அங்கு மாணவர், மாணவியர்கள் மிகக் குறைந்த அளவிலேயே தங்கும் வாய்ப்பு உள்ளதால், அங்கு விடுதி அமைக்கும் அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.*

**திரு. ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்கள் மனதில் நிற்பவர் யார்?" என்கின்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடலில் உள்ள வைர வரிகளுக்கேற்ப நாட்டு மக்களுக்காக நல்லதோர் ஆட்சி தந்து, எண்ணற்றச் சாதனைகளை மக்களுக்காகச் செய்து, நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும், வாழ்ந்து உலகமே வியக்கும்வண்ணம் ஓராண்டில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்திக்காட்டியிருக்கின்ற, நாங்கள் தினந்தோறும் வழிபடுகின்ற எங்கள் குலதெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமர்ந்திருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் ஆண்டில் நூறாண்டு சாதனைகளைப் படைத்து, சரித்திரங்களைப் படைத்த மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், ஆற்காடு தொகுதி, வாழப்பந்தல் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 1,800 மாணவர், மாணவியர்கள் படிக்கிறார்கள். அவர்கள் தினந்தோறும் பள்ளிக்குச் சென்று வீடு திரும்பும்போது இரவு 8–00 மணி ஆகிறது. கிராமப்புறங்களில்

போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினாலும், மாணவர்கள் பள்ளிக்குச் சென்று வீடு திரும்ப இரவு 8–00 மணி ஆகின்ற காரணத்தினாலும், வாழப்பந்தலில் விடுதி அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு மாண்புமிகு அம்மா அவர்களிடம் அந்த மனு வைக்கப்பட்டுள்ளது. தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வாழப்பந்தலில் வரும் நிதியாண்டில் அந்த விடுதியை மாணவ, மாணவியர்களுக்கு அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழப்பந்தல் அரசினர் மேல்நிலைப் பள்ளி, நான் கடைசியாக பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றிய பள்ளியாகும். அங்குள்ள மாணவ, மாணவியர்கள் குறிப்பிட்ட 4 கிலோ மீட்டர் அல்லது 5 கிலோ மீட்டர் தூரத்திலிருந்துதான் அந்தப் பள்ளிக்கு வந்து செல்கிறார்கள். இருந்தாலும், அவசியம் ஏற்படும்பட்சத்தில் உறுப்பினரின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

### (அ) தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 விழுக்காடு இருக்கைகளை அரசே நிரப்பி பயிற்சிக் கட்டணத்தைச் செலுத்துவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று பேரவை விதி 110–ன்கீழ் நான்கு அறிக்கைகளை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத்தில் ஒரு நாடு சிறந்து விளங்க வேண்டுமெனில், ஏட்டுக் கல்வியுடன் தொழில் கல்வியும் வளர்ச்சி பெற வேண்டியது இன்றியமையாதது ஆகும். இதன் அடிப்படையில், இளைய சமுதாயத்தினர் தொழில் கல்வியில் வளர்ச்சி பெற தேவையான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருவதன் காரணமாக, தொழில்நுட்பத் தகுதி பெற்றுள்ள மாணவ, மாணவியரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 62 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்மூலம், சுமார் 21,000 மாணவ, மாணவியருக்குக் கட்டணம் எதுவும் இன்றி பயிற்சி அளிக்கப்படுகிறது. தகுதி பெற்ற அனைத்து மாணவ, மாணவியருக்கும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்மூலம் பயிற்சி அளிக்க முடியாத சூழ்நிலை உள்ளது.

அதே சமயத்தில், தமிழ்நாட்டில் உள்ள 627 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள்மூலம் 60,320 மாணவ, மாணவியருக்குப் பயிற்சி அளிக்க முடியும். ஊரகப் பகுதிகளில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 20,000/– ரூபாய் முதல் 25,000/– ரூபாய் வரையிலும், நகரப் பகுதிகளில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 25,000/– ரூபாய் முதல் 30,000/– ரூபாய் வரையிலும் பயிற்சிக் கட்டணமாக வசூலிக்கின்றன. இந்தப் பயிற்சிக் கட்டணத்தை ஏழ்மை நிலையில் உள்ள படித்த இளைஞர்களால் கட்ட முடியாததால், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 விழுக்காட்டிற்கு மேல் இடங்கள் நிரப்பப்படாமல் காலியாகவே உள்ளன.

தொழில் சார்ந்த திறன் பயிற்சி மற்றும் அறிவுசார் திறன் பயிற்சி பெற்ற மனித வளத்தை உருவாக்குவது, தமிழ்நாட்டின் தொலைநோக்குத் திட்டம் 2023–ன் வெற்றிக்கு ஆதாரமாக அமையும். வரும் 11 ஆண்டுகளில், 2 கோடி நபர்களை வேலைவாய்ப்புக்கு ஏற்ற பயிற்சி மற்றும் திறன் பெற்ற பணியாளர்களாக உருவாக்குவது தொலைநோக்குத் திட்டம் 2023–ன் வளர்ச்சி யுத்திகளில் ஒன்றாகும்.

முற்பகல் 11–10

இந்தச் சூழ்நிலையில், வேலைவாய்ப்புக்கேற்ற பயிற்சித் திறனை தகுதி படைத்த மாணவ, மாணவியர் அனைவருக்கும் அளித்திடும்வண்ணம், அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தகுதியுள்ள

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 மே 14

தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 விழுக்காடு இருக்கைகளை, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பின்பற்றப்படும் மாணவர் சேர்க்கை முறையைப் பின்பற்றி, மாவட்டந்தோறும் கலந்தாய்வு நடத்தி, அரசே நிரப்பும்வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் திறமை இருந்தும், வசதியின்மை காரணமாக தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர இயலாத மாணவ, மாணவியர் பெரிதும் பயன் அடைவர். தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் இம்மாணவ, மாணவியர் வேலைவாய்ப்பைப் பெறும் வகையில் ஒரு வருட மற்றும் இரண்டு வருடப் படிப்புகளில் பயிற்சி அளிக்கப்படும். அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ, மாணவியரைப் போலவே, இத்திட்டத்தின் மூலம் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயிலும் மாணவ, மாணவியரிடமிருந்து பயிற்சிக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படமாட்டாது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இம்மாணவ, மாணவியர் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்குச் செலுத்த வேண்டிய பயிற்சிக் கட்டணத்தை அரசே செலுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி ஊரகப் பகுதிகளில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு மாணாக்கர் ஒருவருக்கு 10,000 ரூபாய் வீதமும், நகர்ப் பகுதிகளில் உள்ள தனியார் பயிற்சி நிலையங்களுக்கு மாணாக்கர் ஒருவருக்கு 12,000 ரூபாய் வீதமும் பயிற்சிக் கட்டணம் அரசால் செலுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்தின்மூலம் முதலாம் ஆண்டில் சுமார் 18,000 மாணவ, மாணவியரும், பின்னர் வரும் ஆண்டுகளில் 30,000 மாணவ, மாணவியரும் வேலைவாய்ப்புக்கு ஏற்ற திறன் பயிற்சி பெறுவார்கள். இதற்கென 2012–2013 ஆம் ஆண்டில் 14 கோடியே 85 இலட்சம் ரூபாயும், 2013–2014 ஆம் ஆண்டில் 26 கோடியே 40 இலட்சம் ரூபாயும், 2014–2015 ஆம் ஆண்டு முதல் ஆண்டொன்றுக்கு 33 கோடி ரூபாயும் அரசுக்கு செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்மூலம், தனியார் துறையில் இளைஞர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு கிடைத்து, அவர்களது பொருளாதார நிலை உயர்வதுடன், நாட்டின் தொழில் உற்பத்தித் திறனும் அதிகரிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2012 மே 14]

## (ஆ) அங்கன்வாடி மையங்களில் சமையல் எரிவாயு வசதி, மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நவீன தையல் இயந்திரங்கள் வழங்குவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் பசியால் வாடி நலமற்றவர்களாக மாறுவதைத் தடுக்கும் பணியிலும், அவர்களிடையே காணப்படும் ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்கும் பணியிலும் அங்கன்வாடி மையங்கள் ஈடுபட்டு வருகின்றன.

இந்த அங்கன்வாடி மையங்களில், இணை உணவு, முட்டை, சூடான மதிய உணவு ஆகியவற்றுடன் முன்பருவக் கல்வியும் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்றன. மேலும், இந்த மையங்களில் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்கள் ஆகியோருக்கு இணை உணவும், முதியோர்களுக்கு மதிய உணவும் அளிக்கப்படுகிறது. தற்போது, தமிழகம் முழுவதிலும் உள்ள இந்த அங்கன்வாடி மையங்கள்மூலம் 31 இலட்சம் பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அங்கன்வாடி மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், மின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், மின் விசிறி மற்றும் மின் விளக்கு ஆகியவற்றைப் பொருத்தவும் நான் சென்ற ஆண்டு ஆணையிட்டேன்.

தற்போது தமிழ்நாட்டில் உள்ள 54,439 அங்கன்வாடி மையங்களில், 16,645 அங்கன்வாடி மையங்களில், சமைக்கும் நேரத்தை மிச்சப்படுத்தும் வகையிலும், மாசற்ற சுற்றுச்சூழலை உருவாக்கும் வகையிலும் 'புகையில்லா சமையலறைகள்' அமைக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 37,794 அங்கன்வாடி மையங்களில், 5,000 அங்கன்வாடி மையங்களில், இந்த ஆண்டில், அதாவது 2012–2013 ஆம் ஆண்டில், 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில், எரிவாயு அடுப்பு, எரிவாயு இணைப்பு மற்றும் அழுத்தக் கலன், அதாவது, பிரஷர் குக்கர் ஆகிய உபகரணங்கள் வழங்கப்பட்டு, புகையில்லா சூழ்நிலையை உருவாக்கக்கூடிய நவீனமயமாக்கும் பணி மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 மே 14

முற்பகல் 11–15

மேலும், இந்த மையங்களுக்கு அதிகளவில் குழந்தைகள் ஊட்டச்சத்து உணவைப் பெறுவதற்காகவும், 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் பள்ளிசாரா முன்பருவக் கல்வி பெறுவதற்காகவும் வருகை புரிவதை ஊக்குவிக்கும் பொருட்டு, 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இரண்டு வண்ண உடைகள் இந்த ஆண்டு முதல் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முன்னோடித் திட்டம் முதற்கட்டமாக, சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள 2,01,032 குழந்தைகள் பயனடையும் வகையில், 4 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதேபோன்று, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயனடையும் பள்ளிக் குழந்தைகளுக்காக வழங்கப்பட்டு வந்த, இரண்டு இணை சீருடைகளை நான்கு இணை சீருடைகளாக இந்த ஆண்டு முதல் உயர்த்தி வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களால் இந்தப் பணியை குறித்த காலத்தில் முடிக்க முடியாது என்பதைக் கருத்தில்கொண்டும், இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள மகளிர் அதிக ஊதியம் பெறவேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டும், மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் 54,000 நவீன தையல் இயந்திரங்களை 54 கோடி ரூபாய் செலவில் வழங்க வழிவகை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தொகை மத்திய கூட்டுறவு வங்கிகள்மூலம் கடனாக வழங்கப்படும் என்பதையும், இந்தத் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் கடனுதவி பெறத்தக்க வகையில் 10 விழுக்காடு அளவிற்கு ஆதார நிதியை அரசு வழங்கும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்மூலம், தையல் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் தைக்கும் திறன் மூன்று மடங்காக உயர்வதால் இதர நிறுவனங்களிடமிருந்து தைக்கும் வேலைவாய்ப்பினை இவர்கள் பெற்று, அதிக வருவாய் பெற வழி ஏற்படும். மேலும், மாணவ, மாணவியருக்கு குறித்த காலத்தில் சீருடை வழங்க வழிவகை ஏற்படுவதுடன், சீருடைகளின் தையல் தரம் மேம்பட்டதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2012 மே 14]

## (இ) தொழில் முதலீட்டை ஈர்க்க ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்நுட்பத் தகுதியுடன் கூடிய சிறப்பான மனித வளத்தைக் கொண்டுள்ள தமிழ்நாட்டில், அதிகளவு தொழில் முனைவோரை ஈர்க்கும் வகையில், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளை, தொலைநோக்குப் பார்வையுடன் எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதத்தைவிட தமிழகத்தின் வளர்ச்சி விகிதம் 20 விழுக்காடு அதிகமாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் தொலைநோக்குத் திட்டம் 2023 தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், தொழில் துறையில் நேரடி முதலீட்டை ஈர்ப்பதில் ஒரு முன்னணி மாநிலமாகவும், ஆசியாவிலேயே முதலீட்டுக்கு உகந்த முதல் 3 இடங்களில் ஒன்றாகவும் தமிழ்நாட்டை உருவாக்கவேண்டும் என்பதும் தொலைநோக்குத் திட்டத்தில் அடங்கியுள்ள குறிக்கோள் ஆகும்.

இத்தகைய வளர்ச்சியை நாம் அடையவேண்டுமென்றால் அதற்குத் தேவையான எரிசக்தி கிடைப்பதை உறுதிசெய்வது அவசியம் என்பதால், கடந்த 10–5–2012 அன்று GAIL, India நிறுவனத்துடன் மிகப் பெரும் எரிவாயு ஒப்பந்தம் ஒன்றினைத் தமிழக அரசின் டிட்கோ நிறுவனம் எனது முன்னிலையில் கையெழுத்திட்ட விவரத்தை நான் ஏற்கெனவே இந்த அவையில் 11–5–2012 அன்று அறிவித்தேன்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் விதமாக, இன்று என் முன்னிலையில் 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன என்ற செய்தியை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1. ஒரகடத்தில் டெய்ம்லர் இந்தியா கமர்ஷியல் வெஹிகிள்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் (Daimler India Commercial Vehicles Private Limited) தொழிற்சாலையை 18–4–2012 அன்று நான் திறந்து வைத்ததை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். 2008 ஆம் ஆண்டு கடந்த ஆட்சியின்போது டெய்ம்லர் நிறுவனம் 3,000 கோடி ரூபாய் முதலீடு செய்ய ஒப்பந்தம் கையெழுத்திட்டது.

ஆனால், அந்நிறுவனம் 2010 ஆம் ஆண்டில் தனது முதலீட்டினை 2,000 கோடி ரூபாயாகக் குறைத்துக்கொண்டது.

முற்பகல் 11–20

எனது தலைமையிலான அரசால் எடுக்கப்பட்ட பல முன்னோடி நடவடிக்கைகளின் காரணமாக டெய்ம்லர் நிறுவனம் 2,000 கோடி ரூபாயாகக் குறைத்த தனது முதலீட்டினை இருமடங்காக்கி 4,000 கோடி ரூபாயாக முதலீடு செய்ய தற்போது முன்வந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான ஒப்பந்தம் இன்று கையெழுத்திடப்பட்டது. இதன்மூலம் 3,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு உருவாகும்.

2. ஜப்பான் நாட்டின் உலகப் புகழ்பெற்ற யமஹா நிறுவனம் மோட்டார் சைக்கிள்கள், மின்னணு பொருட்கள், இசைக் கருவிகள், படகுகளுக்கான மோட்டார் என்ஜின்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் நிறுவனமாகும். தற்போது, இந்தியா யமஹா மோட்டார் லிமிடெட் நிறுவனம் (India Yamaha Motor Limited), காஞ்சிபுரம் மாவட்டம், வல்லம் வடகால் சிப்காட் தொழிற்பூங்காவில் 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் 125 ஏக்கர் பரப்பளவில் அதிநவீன மோட்டார் சைக்கிள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (மேசையைத் தட்டும் ஒலி) இன்று காலை கையெழுத்தானது. இதன்மூலம் 3,000 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 20,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. அசோக் லேலண்ட்–நிசான் மோட்டார் கம்பெனி லிமிடெட் நிறுவனத்துடன் (Ashok Leyland–Nissan Motor Company Limited) முந்தைய அரசு 8–9–2008 அன்று இலகுரக வாகனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்காக, 4,150 கோடி ரூபாய் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டது. ஆனால், இந்நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தின்படி வழங்க வேண்டிய நிலம், 21–2–2011 அன்று, அதாவது சுமார் இரண்டரை ஆண்டுகள் கழித்துதான் முந்தைய அரசால் வழங்கப்பட்டது. மேலும், அந்நிறுவனத்தின் சில நிருவாகக் கோரிக்கைகள் முறையாகப் பரிசீலித்து முடிவெடுக்கப்படாததால், இந்தத் திட்டம் தொடங்கப்படாமலேயே இருந்தது. முடங்கிக் கிடந்த இத்திட்டத்திற்கு எனது அரசு மீண்டும் புத்துயிரூட்டி, புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று இன்று கையெழுத்திடப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒசூர், பிள்ளைப்பாக்கம், எண்ணூர்,





வெள்ளிவாயல்சாவடி மற்றும் ஒரகடம் ஆகிய பகுதிகளில் அமையவுள்ள இத்திட்டத்தின்மூலம் 3,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. புகழ்பெற்ற ராயல் என்ஃபீல்ட் மோட்டார் சைக்கிள்களைத் தயாரிக்கும் எய்ஷர் மோட்டார் நிறுவனம் (Eicher Motors Limited) புதிய தொழிற்சாலை ஒன்றினை ஒரகடத்தில் நிறுவ முன்வந்துள்ளது. இதற்காக, ஒரகடம் சிப்காட் தொழிற்பூங்காவில் 50 ஏக்கர் நிலத்தை எனது அரசு வழங்கியுள்ளது. அங்கு 350 கோடி ரூபாய் முதலீடு செய்ய இன்று அந்நிறுவனம் தமிழ்நாடு அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் 300 புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

5. இதேபோன்று, ஆர்.பி. கோயங்கா குழுமத்தின் நிறுவனமான ஃபிலிப்ஸ் கார்பன் பிளாக் லிமிடெட் நிறுவனம் (Philips Carbon Black Limited), டயர் தயாரிப்பதற்குத் தேவையான கார்பன் பிளாக் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை 350 கோடி ரூபாய் முதலீட்டில் திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்க்கண்டிகை சிப்காட் தொழிற்பூங்காவில் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இன்று கையொப்பமிட்டது. இத்தொழிற்சாலையில் 230 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று ஏற்படுத்தப்பட்ட இந்த ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களின்மூலம் தமிழகத்திற்கு புதியதாக வரக்கூடிய முதலீடு குறைந்தபட்சம் 5,700 கோடி ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) புதிதாக உருவாகும் வேலைவாய்ப்புகள் 9,530 ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும், பல தொழில் முதலீட்டு முன்மொழிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதையும், அவற்றுக்கான ஒப்புதல் விரைவில் வழங்கப்பட்டு, அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் விரைவில் கையொப்பமிடப்பட உள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஈ) இராமேஸ்வரம், இந்திய கடலோரக் காவல்படை கப்பல் மோதி மரணமுற்ற மீனவர் குடும்பத்திற்கு நிவாரணம் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பழமை வாய்ந்த தொழில்களில் ஒன்றான மீன்பிடித் தொழில்மூலம் உயர்தர புரதச் சத்துடன் கூடிய

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 மே 14

தரமான உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்வதிலும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும் முக்கியப் பங்கினை தமிழக மீனவர்கள் வகிக்கிறார்கள்.

முற்பகல் 11–25

இப்படிப்பட்ட இன்றியமையாத் தொழிலைச் செய்யும் மீனவர்களின் நலன் காக்கும் வகையில், மீன்பிடி தடைக் காலத்தில் நிவாரணத் தொகை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருகிறது.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தாக்குதல்களை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், இந்நிகழ்வுகளை ஒரு தேசிய பிரச்சினையாகக் கருதி பிரச்சினைக்குத் தீர்வு காணவும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை கடிதம்மூலம் பலமுறை வலியுறுத்தியுள்ளேன்.

இந்தச் சூழ்நிலையில், 10–5–2012 அன்று பாம்பன் கிராமத்தைச் சார்ந்த 5 மீனவர்கள் ஒரு நாட்டுப் படகில் இராமேஸ்வரம் அருகே அரியமான் கடற்கரையிலிருந்து நான்கு கடல் மைல் தொலைவில் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, இரவு 8–45 மணியளவில் இந்திய கடலோரக் காவல் படையின் கப்பலொன்று மீன் பிடிப்பு மேற்கொண்டிருந்த இப்படகின்மீது மோதியதாகத் தெரிகிறது. இதன் காரணமாக மீன்பிடிப் படகு சேதமுற்று கடலில் மூழ்கியது. படகில் இருந்த 5 மீனவர்களில், நான்கு மீனவர்கள் சிறிது தொலைவு நீந்தி வேறு ஒரு வள்ளத்தில் ஏறி கரை சேர்ந்தனர். மற்ற ஒரு மீனவரான திரு. பௌனிராஜ் என்பவரின் மகன் கால்வின் மில்லர் காயமுற்று நீரில் மூழ்கி காணாமல் போய்விட்டார். 12–5–2012 அன்று காலையில் இந்த 19 வயது இளைஞனின் உடல் மண்டபத்திலிருந்து 7 கடல் மைல் தொலைவில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்த நான், அகால மரணமடைந்த மீனவர் கால்வின் மில்லர் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்ததுடன், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாய் நிவாரண உதவியை உடனடியாக அளித்திட உத்தரவிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2012 மே 14] [செல்வி ஜெ ஜெயலலிதா]

எனது உத்தரவின்பேரில், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் புது டெல்லியில் உள்ள இந்தியக் கடலோரக் காவல் படையின் தலைமை இயக்குநரை கடிதம்மூலம் தொடர்புகொண்டு இவ்விபத்தின் உண்மை நிலையினை அறிய விரிவான விசாரணை ஒன்று மேற்கொள்ள வேண்டுமென்றும், மீனவரின் இறப்பிற்குக் காரணமான நபர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மீனவர்களின் நலன் காப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வரும் எனது தலைமையிலான அரசு, இந்நிகழ்வில் பாதிக்கப்பட்ட மீனவரின் குடும்பத்திற்கு நியாயம் கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. தொழிற்பயிற்சி மேம்பாடு, அங்கன்வாடிகள் நவீனமயமாக்கல், புதிய தொழில் முதலீடுகள், மரணமுற்ற மீனவர் குடும்பத்திற்கு நிவாரணம்– முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போற்றுதலுக்குரிய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, தமிழகத்தின் வெகுமக்கள் தங்கள் வாக்குகளால் தேர்ந்தெடுத்து–தேர்தல் முடிவுகள் வந்து இன்று ஓராண்டு நிறைந்து இருக்கிற இந்த நாளிலே–கடந்த வருடம் 13 ஆம் தேதி தேர்தல் முடிவுகள் வந்தது. தேர்தல் முடிவுகள் வந்து இன்று ஓராண்டு முடிவுற்று இருக்கிற இந்த நாளிலே, ஒவ்வொரு நாளும் இந்த மன்றத்திற்கு வருகிறபோது, மாற்றம் தந்த இந்த மக்களுக்கு ஏற்றம் தரவேண்டும் என்கிற அந்த மகத்தான உணர்வோடு (மேசையைத் தட்டும் ஒலி) ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிற ஏராளமான ஏழை மக்களுக்கு தாராளமாக தமிழக அரசு ஏதேனும் செய்ய வேண்டும் என்கிற அந்த பெரும் நோக்கோடு என்ன செய்யலாம் என்று உள்ளத்தால் திட்டமிட்டு, உணர்வுகளால் வடிவமைத்து, விரைந்த செயல்களால் அதற்கு ஒரு சட்டமாக்குகிற வகையிலே இந்தச் சட்டமன்றப் பேரவையிலே ‘பசிக்குத் தவிக்கிற ஒருவன் பனம் பழம் கிடைக்காதா’ என்று ஏங்குகிறபோது தங்கத்

தாம்பாளத்திலே முக்கனிகளையும் கொண்டு வந்து தந்தால் அவன் எப்படி திக்குமுக்காடிப் போவானோ, அதுபோல் இன்றைக்கு கொத்துக் கொத்தாக நலத் திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிற தமிழக முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றாகி, இரண்டாகி, மூன்றாகி, நான்காகி, பனம் பழம் கிடைக்காதா என்று ஏங்கியவனுக்கு பல பழங்களையும் தங்கத் தாம்பாளத்தில் வைத்துக் கொடுக்கிற தங்கத் தாரகையாக நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குக் கொத்துக் கொத்தாக நலத் திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறார்.

தொழில் கல்வி, ஒரு காலத்திலே கிராமத்திலே சொல்வார்கள் 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்று'. அதைப்போல ஏட்டுப் படிப்பு வாழ்க்கைக்கு உதவுமா, தொழிலுக்கு உதவுமா என்று ஏங்கித் தவிக்கிற இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, கிராம மக்கள், ஏழையெளிய மக்கள் ஒரு மதிப்பெண் போட்டிச் சந்தையிலே, கல்விச் சந்தை இன்றைக்கு மிகப் பெரிய அளவிலே அறிவார்ந்த போட்டி வளர்ந்து, பெரிய போட்டி ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையிலே நகரத்தோடு போட்டிபோட முடியாத கிராமப்புற மக்கள், ஊரக மக்கள், அவர்கள் 'இன்றைக்கு 10 ஆம் வகுப்புகளோடும், 11 ஆம் வகுப்புகளோடும், 12 ஆம் வகுப்புகளோடும் படிப்பை நிறுத்திவிட வேண்டியதுதானா?' என்ற நிலைமை மாறுகிற வகையிலே, அந்த நிலையிலே இருக்கிற மாணவர்களை ஊக்குவிக்கிற வகையிலே அவர்களுக்காக, தொழிற்கல்வியை ஏற்படுத்துகிற வகையிலே, தனியார் நிறுவனங்களிலே வெற்றிடமாக இருக்கிற இடங்களிலே அந்த மாணவர்கள் பங்கேற்றுப் பயிலுகிற வகையிலே பல்லாயிரக்கணக்கான இடங்களைத் தந்து, அதற்கு ரூபாய் 10,000, 12,000 என உதவியும் தந்து ஏறக்குறைய 3 ஆண்டுக் காலத்திலே ரூபாய் 30 கோடி அளவிலே திட்டமிட்டு இன்றைக்கு ஏழையெளிய மக்களுக்கு, அப்படிப்பட்ட தொழிற்கல்விக்கு வித்திட்டிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–30

அந்த மாணவர்களுக்கு தொழிற்கல்வி வந்தால் மட்டும் போதாது, கிராமப்புறத்திலே பழமொழி ஒன்று சொல்வார்கள், 'படுக்க பாய் தந்தான், விரிக்க இடம் இல்லையே' என்று. ஆனால் இன்றைக்கு, 'பட்டு மெத்தையும் தந்து நான் பளிங்கு மாளிகையும்



தருவேன் நீங்கள் படுத்துறங்குவதற்கு' என்று சொல்கிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு அந்த தொழிற்கல்வி இருந்தால் மட்டும் போதாது, தொழில் வசதி பெற, அவர்கள் வாய்ப்பு பெற தொழிற்சாலைகள் வரவேண்டுமென்கிற பெரும் உணர்வோடு இன்றைக்கு பல்வேறு பன்னாட்டு தொழிற்சாலைகளைப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின்மூலம் தமிழகத்திற்குக் கொண்டு வந்து, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிற வகையிலே வித்திட்டிருக்கிறார்கள்.

அதைப்போலவே 'பிஞ்சுக் குழந்தைகளுக்குகூட நான் இருக்கிறேன் தாயாக, தமிழகத்தின் தர்மத் தாயாக, கலைமகளாக நான் இருக்கிறேன், பிஞ்சுக் குழந்தைகளுக்குக்கூட வண்ணச் சீருடை இரண்டு தருவேன்' என அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'இனி தமிழகத்தின் தாய்மார்களே, உழைக்கும் தாய்மார்களே, நீங்கள் பெற்றுப்போட்டால் போதும் பேணிக் காப்பதற்கு, அவர்களை தலைசிறந்த சான்றோர்களாக ஆக்குவதற்கு, தமிழகத்தின் தாய் நான் இருக்கிறேன்' என்கிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்குக்கூட இன்றைக்கு இரண்டு வண்ணச் சீருடை தந்ததோடு, அங்கன்வாடியிலே இன்றைக்கு 5 கோடி ரூபாய் அளவிலே அவர்களுக்காகத் திட்டங்களைத் தந்து, அந்தத் திட்டத்திற்குமேலே, தையல் சங்கங்கள், இருக்கிறதே, கூட்டுறவுச் சங்கங்கள். அந்தத் தையல் கூட்டுறவுச் சங்கங்களும், அதோடு அடியொட்டி வாழ்வு பெறுவதற்கு, வாழ்வாதார வளர்ச்சி கிடைப்பதற்கு இன்றைக்கு வித்திட்டிருக்கிறார்கள்.

அதற்குமேலே இறந்துபோன ஒரு மீனவருக்கு 5 இலட்சம் ரூபாய் தாயுள்ளத்தோடு கொடுத்து தமிழகத்திற்கு, இன்றைக்கு விடிவெள்ளியாக இருக்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழர்களுடைய வாழ்வு, வளம், வளர்ச்சி என்பதுதான் தனது வாழ்க்கை என்று அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றிக் கொண்டிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அம்மா அவர்களின் சீர்மிகு சிறப்பை வாழ்த்தி, வரவேற்று, பாராட்டி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்கல்வி பயிலும் மாணவச் செல்வங்கள் 627 தனியார் தொழில்நுட்பப் பயிற்சி மையங்களிலே பயில கிராமப்புற மாணவர்களுக்கு ரூ. 10,000—மும் நகர்ப்புற மாணவர்களுக்கு ரூ.12,000—முமாக அவர்களுக்கு அந்தக் கட்டணத் தொகையையும் அரசே கட்டி, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலே இருக்கிற வசதிவாய்ப்பைப் போன்று தனியார் தொழிற்கல்வி பயிற்சி மையங்களிலே அந்தக் கிராமப்புற மாணவர்களும், ஏழையெளிய நகர்ப்புற மாணவர்களும் அந்தப் பயிற்சியை தடையில்லாமல் பெற வேண்டும் என்பதற்காக, நிரப்பப்படாமல் காலியாக உள்ள 50 விழுக்காடு காலி இடத்தையும், நிரப்பி ஆயிரக்கணக்கான கிராமப்புற, நகர்ப்புற ஏழையெளிய மாணவர்கள், தொழில் மையங்களிலே பயிற்சி பெற வாய்ப்புள்ள, தகுதியுள்ள மாணவச் செல்வங்களுக்கு அரசே அந்தக் கட்டணத்தைச் சுமார் 26 கோடி ரூபாயைத் தந்து அந்த பயிற்சி மையங்களிலே மாணவர்கள் பயிற்சி பெற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று ஆணை பிறப்பித்திருப்பது வரவேற்கத்தக்கது.

குழந்தைகளினுடைய ஊட்டச்சத்து மையங்கள், அங்கன்வாடிகளை மேம்படுத்துவதற்காக ஏற்கெனவே பல திட்டங்களை கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பீட்டிலே தந்துதவிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த அரும்புக் குழந்தைகள் புகையாலே பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காகவும் புகையில்லாத சமையல் துறையை உருவாக்க கேஸ்சிலிண்டர் போன்றவற்றைத் தந்து உதவ முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது.

அதுபோலவே, முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்குகூட, வண்ணச் சீருடையைத் தந்து உதவி இருப்பது, மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கத்திற்கு 54,000 தையல் இயந்திரங்களைத் தந்ததோடு மட்டுமல்லாமல் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் வாயிலாக, தையல் பயிற்சி பெற்ற அந்த தையலாளர்கள், அதாவது டெய்லர்களுக்கு வேலைவாய்ப்பையும் தந்து, அந்த பள்ளிக் குழந்தைகளுக்கு குறித்த நேரத்தில் சீருடைகள் வந்து சேர வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று கோடிக்கணக்கிலே நிதி உதவி தந்திருப்பது பாராட்டுக்குரியது.



அதுபோன்று 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் வாயிலாக ஏறத்தாழ 5,700 கோடி ரூபாயை முதலீடாகப் பெற்று 9,330 பேருக்கு வேலைவாய்ப்பை புதிதாக உருவாக்கித் தந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி பாராட்டுகிறேன்.

*முற்பகல் 11–35*

மீனவர்கள் நலன் காப்பதிலே வாரம் ஒரு முறை அல்லது தினம், தினம் மீனவர்கள் கொத்துக் கொத்தாக செத்து மடிந்தபோதுகூட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருணாநிதி அரசு அதைத் தட்டிக் கேட்பதற்கு முடியாத சூழ்நிலையிலே இருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு, மில்லர் என்கின்ற ஒரு மீனவர் கடலிலே மரணம் அடைந்தார் என்ற செய்தி கேட்டு, அவருக்கு 5 இலட்சம் ரூபாயை அள்ளித் தந்ததோடு மட்டுமல்லாமல், ஒரே ஒரு தமிழ் மீனவன் இறந்தால்கூட, அவர் எப்படி இறந்தார், அதற்கு நீதி வேண்டும், அதற்கு நியாயம் வேண்டும், அதற்கான விளக்கம் வேண்டும் என்று கேட்டு (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே ஒரு மீனவன் கடலிலே உயிர் நீத்தால்கூட, நீதிப்படி, சட்டப்படி எனக்கு அந்த மரணத்திற்குக் காரணம் தெரிந்தாக வேண்டும் என்று நம்முடைய முதல்வர் அம்மா அவர்கள் மத்திய அரசினுடைய சம்பந்தப்பட்ட துறையிடத்திலே விளக்கம் கேட்டு கடிதம் தந்திருப்பதையெல்லாம் பாராட்டி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 7 கோடிக்கு மேற்பட்டு இருக்கின்ற ஒட்டுமொத்தத் தமிழர்களுடைய நலன் காக்க, கோடிக்கணக்கான ரூபாய்களை துறைதோறும் அள்ளித் தந்து இன்று இந்த 110—விதியின்கீழ் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி பாராட்டி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று 110—வது விதியின்கீழ் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கக்கூடிய பல்வேறு அறிவிப்புகளை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக முதற்கண் வரவேற்கின்றேன். தமிழகத்தில் இருக்கக்கூடிய 627 தனியார் தொழிற்பயிற்சி

நிலையங்களில் பல்லாண்டு காலமாக ஏறக்குறைய 50 சதவிகிதத்திற்கு மேம்பட்ட இடங்கள் காலியாக இருந்தன. அந்தத் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆண்டுக்கு 20 ஆயிரம் ரூபாய்கூட கட்ட முடியாத காரணத்தினாலே, எண்ணற்ற கிராமப்புற மாணவர்கள் அதிலே சேர முடியாத ஒரு அவல நிலை இருந்ததையும் கணக்கிலேகொண்டு, தொலைநோக்குத் திட்டம் 2023—ஐ செயல்படுத்துகின்ற வகையிலே தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைவருமே ஏதாவது ஒரு திறனிலே அவர்கள் மேம்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையிலே இப்போது முதற்கட்டமாக அந்தத் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலே 50 சதவிகித இடங்களை அரசு நிரப்பவும், அவர்களுக்கு உண்டான அந்தக் கட்டணங்களை முதற்கட்டமாக ரூ.18 கோடி, அடுத்த ஆண்டு ரூ.30 கோடி, தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் ரூ.33 கோடி ரூபாயை வழங்கி, தமிழகத்திலே இனிமேல் திறமையற்றவர்களே எதிலும் இருக்கமாட்டார்கள், எந்தத் தொழிலுக்கும் தேவையான தொழில்நுட்ப வல்லுநர்களையும் அளிக்க முடியும் என்ற அடிப்படையிலே இந்தத் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலே அந்தக் கட்டணத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நான் புதிய தமிழகம் கட்சியின் சார்பாகப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, அங்கன்வாடிகளைப் பொறுத்தமட்டிலும், இப்போது கர்ப்பிணிகள், பெண்கள், முதியோர் ஆகியோர் தங்களுடைய ஊட்டச்சத்திற்காக அங்கே உணவு அருந்துகிறார்கள். அதை மேம்படுத்துகின்ற வகையிலேயும், அதேபோல சத்துணவுத் திட்டத்தின்கீழ் இதுவரையிலும் வழங்கப்பட்டு வந்திருக்கின்ற 2 உடைகளை, 4 சீருடைகளாக மாற்றி, அந்த மாணவர்களுக்கு இனிமேல் அந்தச் சீருடைகள் எந்தக் காரணத்தைக்கொண்டும் காலதாமதம் இல்லாமல் தரமாகவும், அதே சமயத்தில் இது சுய உதவிக் குழுக்களுக்கு பயனளிக்கக் கூடிய வகையிலேயும், இருக்க வேண்டுமென்பதற்காக 54 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தையல் இயந்திரங்களை வாங்குவதற்கு அதாவது, சுயஉதவிக் குழுக்கள் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதற்கு இப்போது 10 சதம் ஆதார நிதியையும் அதேபோல வங்கிகள் மூலமாகக் கடன் பெறுவதற்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளை நான் பாராட்டுகிறேன்.



அதேபோல, இன்றும், நேற்றும் ஏறக்குறைய 5 தொழில் நிறுவனங்களில் அதாவது, யமஹா, அசோக் லேலண்ட்—நிசான், டெய்ம்லர், ராயல் என்ஃபீல்ட் மற்றும் கோயங்கா போன்ற நிறுவனங்களிலே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கடந்த ஆட்சியிலே நிராகரிக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட திட்டங்கள் அனைத்திற்கும் புத்துணர்வு அளித்து, பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய அந்தத் திட்டங்களை இப்போது அறிவித்திருக்கக்கூடிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல கடந்த காலங்களிலே மீனவர்களைப் பொறுத்தமட்டிலும் ஏதோ கேட்பார்களற்றவர்களாகவே ஏறக்குறைய 20 ஆண்டுக்காலமாக 400—க்கும் மேற்பட்ட மீனவர்கள் தமிழகத்தினுடைய கடற்கரையிலே கொல்லப்பட்டார்கள். ஆனால் அப்போது ஒரு வழக்குப் பதிவு செய்வதற்கே பல போராட்டங்கள் நடைபெற்றன. இப்போது எந்தவிதமான ஆர்ப்பாட்டம், போராட்டம், உண்ணாவிரதம் இல்லாமலேயே, இது போன்ற ஒரு விபத்தில் இறந்திருக்கின்றார் என்று கேள்விபட்டவுடனேயே தேடிப் பிடித்து, அந்தக் குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் நஷ்டஈடு வழங்கியும், அது விபத்துதானா அல்லது வேறு ஏதாவது வகையில் ஏற்பட்டதா என்பதைக் கண்டுபிடிப்பதற்கும் தலைமைச் செயலாளர் மூலமாகக் கடிதம் எழுதச் சொல்லியும், அக்கறை செலுத்துகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் புதிய தமிழகம் கட்சியின் சார்பில் மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11—40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பதவிக்கு வந்த பிறகு வாழ்வின் விளிம்பில் அன்றாடம் செத்து பிழைத்துக் கொண்டிருக்கக்கூடிய மீனவர்களுடைய நலனைப் பேணிக் காப்பதிலே மிகக் கவனமாக, சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அதன் தொடர்ச்சியாக இராமநாதபுரம் தொகுதியிலே பாம்பனைச் சேர்ந்த மீனவர்கள் நாட்டுப் படகில் கடலிலே சென்றிருந்தபோது, கடலோரக் காவல் படையினுடைய அதிவிரைவு படகு ஒன்று ஒளியில்லாமல் வந்து அந்தப் படகின்மீது மோதியதால், அந்த

நாட்டுப் படகு தாழ்ந்து, அதிலிருந்த +2 தேர்வை எழுதி, தேர்வு முடிவிற்காகக் காத்துக் கொண்டிருந்த பாம்பனைச் சேர்ந்த கால்வின் மில்லர் என்ற மாணவர் உயிரிழந்திருக்கின்றார். உடனடியாக அதைப் பற்றிய செய்திகளெல்லாம் வந்தவண்ணம் இருந்தது. நானும் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு தகவல்களையெல்லாம் கொடுத்துக் கொண்டிருந்த நேரத்தில், இந்தச் சம்பவம் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்தவுடனேயே எந்தத் தயக்கமுமில்லாமல் தமிழக முதலமைச்சர் அவர்கள் 5 இலட்சம் ரூபாயை அந்த மாணவனின் குடும்பத்திற்கு உடனடியாக அறிவித்ததற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மீனவ சமுதாயத்தின் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும், மனித நேய மக்கள் கட்சியின் சார்பாகவும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றையதினம் அதிகாலையிலேயே மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுடன் சேர்ந்து நாங்கள் அந்தக் குடும்பத்தினரைச் சந்தித்து 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினோம். அந்தத் தாக்குதலை நடத்திய கடலோரக் காவல் படையைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட வீரர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அந்த மக்களுடைய உணர்வாக இருந்தது. அந்த உணர்வையும் இந்த அரசு நன்கு புரிந்து, தலைமைச் செயலாளர் மூலமாக உரிய நடவடிக்கை எடுப்பதற்காக கடிதம் எழுதியதோடு மட்டுமல்லாமல், தமிழக சட்டமன்றப் பேரவையிலேயே அதை அறிவித்ததற்காகவும், நிச்சயமாக இந்த அரசு, தவறு செய்த அந்தக் கடலோரக் காவல் படையினரைச் சட்டத்திற்கு முன்னால் நிறுத்தி தண்டிக்கும் என்ற நம்பிக்கை எங்கள் அனைவருக்கும் வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகவும் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனித நேய மக்கள் கட்சி சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்று ஐ.டி.ஐ. என்று சொல்லப்படுகின்ற தொழிற்பயிற்சி நிலையங்களில், 627 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 விழுக்காடு இடங்கள் காலியாக இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. தொழில் துறையிலே தமிழகம் முன்னேற வேண்டுமென்ற நோக்கத்தோடு செயல்படுகின்ற இந்த அரசு, ஒரு புதிய முயற்சியாக, இதுவரை எந்த அரசும் செய்யாத ஒரு நிலையிலே, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இருப்பதுபோல, தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலே 50 விழுக்காடு இடங்கள்



மாணவர்களுக்கு, கட்டணமே இல்லாமல் கொடுக்கப்படும் என்றும், அந்தக் கட்டணத்தை அரசாங்கமே மானியமாக அந்தத் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு வழங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்றும் அறிவித்திருப்பது நிச்சயாக அந்தத் தொழிற்பயிற்சி நிறுவனங்களை நடத்தக் கூடியவர்களுக்கு மட்டுமல்லாமல், மாணவர்களுக்கும் இது ஒரு சிறப்பான அறிவிப்பாக இருக்கும்.

அதோடு நிற்காமல், இந்த ஐ.டி.ஐ.—களில் படித்து முடித்து வரக்கூடியவர்களுக்கு வேலைவாய்ப்பு தரவேண்டும் என்பதன் தொடர்ச்சியாக இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருப்பதன்மூலம் அந்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு வழி வகுத்ததற்காகவும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக எனது நெஞ்சார்ந்த, மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அங்கன்வாடிகளில் புகையில்லா சமையல் கூடங்களை அமைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைக்காகவும், முதல் 5 வயதுவரை வரக்கூடிய பிள்ளைகளுக்கு 2 வண்ண ஆடைகளையும், அதேபோல் மதிய சத்துணவுத் திட்டத்தில் பயனடையக்கூடிய பிள்ளைகளுக்கு 4 வண்ண ஆடைகளையும் அறிவித்ததோடு மட்டுமல்லாமல், ஒரு மிகப் பெரிய சிறப்பான அறிவிப்பாக பெண்களுக்கு மிகப் பெரிய பொருளாதார ஏற்றத்தைத் தரக்கூடிய வகையிலே மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 54,000 தையல் இயந்திரங்களும் கொடுக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பான ஆடைகள் இந்த மாணவர்களுக்கு, கிடைப்பதற்கு வழிவகுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய உளமார்ந்த நன்றியை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாகத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி.

முற்பகல் 11—45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காலத்திலே படித்துவிட்டு எல்லோருமே வேலைக்குப் போகிறார்கள். அப்படி வேலைக்குப் போகின்றபொழுது குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக எங்காவது hostel—ல் பணம் கட்டி

விட்டுவிட்டுப் போய்விடுவார்கள். ஆனால், ஏழையெளியவர்கள், விவசாயக் கூலி வேலைக்குப் போகிறவர்கள் குழந்தைகளை எங்கே விட்டுவிட்டுப் போவது என்று தவிக்கின்ற காலத்திலே, அங்கன்வாடிகளில் வைத்து அந்தக் குழந்தைகளுக்கு உணவளித்து, அதற்குப் பிறகு உடையும் கொடுத்து, அவர்கள் சுகாதாரம் இல்லாமல் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக, அந்த இடத்தைச் சுகாதாரமாக, எரிவாயு வசதியுடன் அந்தச் சமையலறையை தயார் செய்து, ஏற்கெனவே 16 ஆயிரம் சமையலறைகளைத் தயார் செய்திருக்கிறார்கள். இப்போது 5,000 சிலிண்டர்கள் வைத்து சுத்தமான உணவைச் சாப்பிட வேண்டும்; பணக்காரர்கள் எப்படிச் சாப்பிடுகிறார்களோ, அதேமாதிரி அந்த ஏழையெளிய, கூலித் தொழிலாளர்களின் பிள்ளைகள் சாப்பிட வேண்டும் என்கிற ஒரு பெரிய வாய்ப்பை இன்றைக்கு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். உண்மையாகவே மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. அதற்கு 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, 3 கோடியே 20 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்.

அதேபோல பார்த்தீர்களென்றால், ஒன்றாம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு படிக்க வேண்டும். படித்து முடித்த பிறகு ஏற்கெனவே 10 ஆம் வகுப்பு படித்தவர்கள், 11 ஆம் வகுப்பு படித்தவர்கள், 12 ஆம் வகுப்பு படித்தவர்களுக்கெல்லாம் 15 ஆயிரம் ரூபாய் கொடுத்து, அப்படியே மேல் படிப்பு படிக்கக் கொண்டுபோய் சேர்த்துவிட்டார்கள். அங்கு சேர்த்தபிறகு Laptop கொடுத்தார்கள், சைக்கிள் கொடுத்தார்கள், எல்லாமே கொடுத்தார்கள். அதற்குப் பிறகு தொழிற்கல்வி படிக்கப் போனார்கள். தொழிற்கல்வி படித்தபின்பு வேலை இல்லாமல் இருப்பார்களே, வேலை இல்லாமல் அலைந்துகொண்டிருப்பார்கள் என்பதற்காக, 5 கம்பெனிகளில் 5 புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு, 9,530 பேருக்கு வேலை. அதாவது மறைமுகமாக 2 இலட்சம் பேர் வேலை செய்வார்கள். அந்தத் தொழிற்கல்வி படித்துவிட்டு 9,530 பேர் வேலைக்குப் போகிறார்கள். அதாவது, மற்ற மாநிலத்துக்காரர்கள் பார்ப்பார்கள், இப்படி ஒன்று தமிழ்நாட்டில் நடக்கிறதா என்று திரும்பிப் பார்க்கிற அளவுக்கு இன்றைக்கு ஒரு பெரிய திட்டத்தை (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) பிறந்த குழந்தை முதல், ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை, மேல் படிப்பு படித்து, டிகிரிக்குப் போய், இப்போது வேலைக்கும் சேர்த்து விடுகிற அளவுக்கு பெரிய திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.



அதுமட்டுமல்லாமல், இது மீனவர்களைப் பாதுகாக்கின்ற அரசு. எனக்கு முன்னாலே நமது இராமநாதபுரம் எம்.எல்.ஏ. பேசினார். நேற்றுகூட அமைச்சரும் நானும் போய்விட்டு வந்தோம் என்று சொன்னார், இங்கு மட்டுமல்ல, எந்த இடத்திலும், Two Wheeler–ல் போய் விழுந்து இறந்தால்கூட உடனடியாக அரசு அதிகாரிகள் அங்கே இருக்கிறார்கள். மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டால், புயலில் பாதிக்கப்பட்டாலே—எங்களுடைய தொகுதியிலே புயல் காற்றிலே ஒருவர் இறந்துபோய் விட்டார் என்று உங்களிடத்திலே மனு கொடுத்தேன். மறுநாள் காலையிலே அங்கே தாசில்தார் போய் நிவாரண நிதியைக் கொடுத்துவிட்டார். அதாவது எந்த கிராமம் அல்லது எந்த பட்டிதொட்டியில் நடந்தால்கூட உடனடியாக இன்றைக்கு ஒரு சர்வீஸ், அதாவது, யாருமே செய்ய முடியாத சர்வீசை (மேசையைத் தட்டும் ஒலி) மிகச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டு நாட்களில் ஓராண்டு நிறைவு விழா வரப்போகிறது. அதற்கு அம்மா அவர்களுக்கு எவ்வளவு சொன்னாலும்–பாலூட்டும் அன்பிலே அன்னை நீங்கள்; குழந்தைகளுக்குப் பால் ஊட்டும் அன்பிலே அன்னை நீங்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) பழகும் உறவிலே பிள்ளை நீங்கள்; கருணை மனதிலே கங்கை நீங்கள்; கல்லாருக்கும், கற்றவருக்கும் தெய்வம் நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) யாரும் வணங்காதவர்கள் கூட உங்களை கையெடுத்துக் கும்பிடுகிற சிரமும் நீங்கள்; உங்களை வலம் வந்தாலே நலம் நாடும், எல்லோரும் நன்றாக இருப்போம் என்கிற அளவிலே, இன்றைக்கு ஒரு அழகான திட்டத்தை அறிவித்திருக்கின்ற அம்மா அவர்களுக்கு எங்களுடைய சமத்துவ மக்கள் கட்சி சார்பாகவும், எங்கள் தலைவர் சார்பாகவும் நன்றி கூறி அமருகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறமை இருந்தும், வசதி இல்லாத மாணவ, மாணவிகளை ஆதரிக்கும் அடிப்படையில், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 சதவிகித இடங்களை பயிற்சிக் கட்டணம் இல்லாமல் ஏழை மாணவ, மாணவிகள் பயிற்சி பெற ஏதுவாக ஒதுக்கி அதற்காக அரசே தன்னுடைய நிதியிலிருந்து ரூ.33 கோடி வரை ஆண்டுதோறும் செலவினத்தை ஏற்று, அமல்படுத்தும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அதற்கு என் நன்றியையும், தமிழக காங்கிரசின் சார்பில் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கன்வாடிகளில் எல்லா உட்கட்டமைப்பு வசதிகள், மின் வசதிகள் இவற்றையெல்லாம் உருவாக்கிய இந்த அரசு, கிட்டத்தட்ட 16,645 அங்கன்வாடி மையங்களில் மாசற்ற சமையலறைகளை சென்ற ஆண்டில் உருவாக்கி, இந்த ஆண்டு 5,000 மாசற்ற சமையலறைகளை நவீன முறையில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. மேலும், இரண்டு முதல் ஐந்து வயது உள்ள பள்ளிசாரா முன்பருவக் கல்வி படிக்கும் குழந்தைகளுக்கு இரண்டு உடைகளை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். முதற்கட்டமாக இத்திட்டம் ரூ.4.3 கோடி செலவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். தையல் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் நவீன தையல் இயந்திரங்கள் வாங்க மத்தியச் கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கடனுதவி பெறுவதற்கு ஏதுவாக அவர்கள் செலுத்த வேண்டிய 10 சதவிகித ஆதார நிதியையும் அரசே செலுத்தவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்திருக்கிறார்கள்.

முற்பகல் 11—50

தொழில் துறையில், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் உள் நாட்டு நிறுவனங்களுடன் 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை உருவாக்கி தமிழகத்திற்கு ரூ.5,700 கோடி முதலீட்டைக் கொண்டு வந்துள்ளார்கள். இதனால், 9,530 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்க ஆவன செய்துள்ளார்கள். வருங்காலங்களில் மேலும் இந்த முதலீடுகளைத் தமிழகத்திற்கு ஈர்ப்பதற்கான புதிய திட்டங்களை வகுக்கவிருக்கிறார்கள்.

மேலும், மீன்பிடி அல்லாத காலங்களில் உதவித் தொகைகளை வழங்கிவரும் தமிழக முதல்வர் அவர்கள், இராமேஸ்வரத்தில் இறந்த மீனவர் கால்வின் மில்லர் அவர்களின் குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் நிவாரண நிதியும் வழங்கி, இந்த விபத்து குறித்து மத்திய அரசிடம், மத்திய கடலோரக் காவல் படையினரிடம் விசாரணை செய்ய வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். அதையும் நான் வரவேற்கிறேன். தமிழக காங்கிரஸ் கட்சியின் சார்பிலும், தமிழக காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பிலும் நான் இந்த அனைத்து திட்டங்களையும் வரவேற்று அமைகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒரு பழமொழி உண்டு. “ஒரே கல்லில் இரண்டு மாங்காய்” என்று. ஆனால், தமிழக முதல்வர் ஓர் 110-வது விதியின்கீழ் ஓர் அறிவிப்பில் 4 திட்டங்களை அறிவித்து, சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பாரதியார் ஒரு பாடலில் சொல்வார், ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ என்று. அந்தக் கல்வியில் சிறந்த தமிழ்நாட்டை உருவாக்குகிற விதமாக பள்ளிக் கல்வி, உயர் கல்வி என்று எல்லாக் கல்வித் துறைகளுக்கும் கூடுதலான நிதிகளை ஒதுக்கீடு செய்து, மாணவர்கள் அங்கே திறமையாக கல்வி கற்க, எந்தவிதமான மனக் கவலையும் இல்லாமல் பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளை கல்வி கற்க வைக்கும் விதமாகப் பல்வேறு சலுகைகளை, திட்டங்களை இன்றைக்கு பள்ளிக் கல்வியிலும், உயர் கல்வியிலும் அறிவித்து அரிய வாய்ப்புகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், கல்வியில் ஏழையெளிய மாணவர்களுக்கு, நடுத்தர மாணவர்களுக்கு மிக முக்கியமானது தொழிற்கல்வி. அந்த அடிப்படையில், 62 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்மூலம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மாணவ, மாணவியர்களுக்கு தொழிற்கல்வி வழங்குவதைப்போல, 627 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் ஏற்கெனவே காலியாக இருக்கக்கூடிய 50 விழுக்காடு இடங்களைப் பூர்த்தி செய்து, மாணவ, மாணவியர்களும், அந்த நிறுவனங்களும் பயன்பெறத்தக்க வகையில் ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ.12 ஆயிரம் வரை கல்விக் கட்டணத்தை அரசே வழங்கி, மாணவர்களுடைய எதிர்காலத்தை (மேசையைத் தட்டும் ஒலி) மிகச் சிறப்பாக அவர்களுடைய மனித வள மேம்பாட்டை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தற்காக இந்த அரசை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

அதைப்போல, இன்றைக்கு அங்கன்வாடி குழந்தைகளுக்கு 2 வண்ணச் சீருடைகள், இந்த ஆண்டே 5 ஆயிரம் மையங்களுக்கு புகையில்லா அடுப்பு வழங்குவதற்கான நிதியொதுக்கீடு, அதோடுமட்டுமல்ல சமூகத்தில் இன்றைக்கு நலிவுற்ற பிரிவாக இருக்கக்கூடிய மகளிர், பொருளாதாரத்தில் மேம்பட்டால்தான் எல்லாவிதமான உரிமைகளும் அவர்களுக்குக் கிடைக்கும் என்ற அடிப்படையில், மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலமாக அந்தச் சீருடைகளை தைக்கும் வாய்ப்பை வழங்கி, அவர்களுக்கு வருமானம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் நவீன தையல் இயந்திரங்கள் வாங்கத்

தேவைப்படும் 54 கோடி ரூபாய் கடனுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய 10 சதவீத பங்குத் தொகையான 5.4 இலட்சம் கோடி ரூபாயை அரசே கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்ததற்காக இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். அதைப்போல, 5 தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை சிறப்பாகப் போட்டிருக்கிறார்கள். அதற்கும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, சமீபத்தில் பாம்பனிலே ஏற்பட்ட விபத்தில் இந்திய கடலோரக் காவல் படை, நாட்டுப் படகின்மீது மோதி 4 மீனவர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். கால்வின் மில்லர் என்ற பிளஸ் 2 படிக்கக்கூடிய மாணவன் விடுமுறையிலே மீன் பிடிக்கச் சென்று, உயிரிழந்து இருக்கிறான். அந்த உயிரிழந்த மாணவன் குடும்பத்திற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே இரங்கலைத் தெரிவிக்கிற அதேநேரத்தில், உடனடியாக தமிழக அரசின் சார்பில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.5 இலட்சம் நிவாரண நிதியைக் கொடுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 11–55

அதேசமயத்தில், நமது நாட்டில் ஒரு பழமொழி உண்டு, "குதிரை கீழே குப்புறத் தள்ளுவதோடு இல்லாமல் குழியைப் பறித்த கதையாக" என்று. ஏற்கெனவே இராமேஸ்வரம் மீனவர்கள் சிங்களக் கடற் படையின் அட்டூழியத்தால் தாக்கப்பட்டு, 500–க்கும் மேற்பட்ட மீனவர்கள் தொடர்ந்து கொல்லப்பட்டிருக்கிறார்கள்; உடைமைகளை இழந்திருக்கிறார்கள். அதற்கு நீதி கேட்டு, போராடிக் கொண்டிருக்கிற இந்த வேளையில், இங்கே இருக்கக்கூடிய மத்திய கடலோரக் காவல் படைமூலமும் இப்படிப்பட்ட ஒரு விபத்து நடந்திருக்கிறது. ஆனால் அந்தக் கப்பலில் சென்ற கடலோரக் காவல் படையினர் உடனடியாக மீனவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களைக் காப்பாற்றுவதற்குப் பதிலாக, கண்டும் காணாமல் விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள். இப்படிப்பட்ட மோசமான ஒரு நடவடிக்கை நீடித்திருக்கிறது. எனவே, நமது தமிழக முதல்வர் அவர்கள் 'மத்திய அரசாக இருந்தாலும் நான் விடமாட்டேன், தமிழக மீனவர்களைப் பாதுகாப்பதே என்னுடைய கடமை. அவர்களுடைய வாழ்வதாரத்திற்கு, பொருளாதார முன்னேற்றத்திற்கு மட்டுமல்ல, அவர்களுடைய உடைமைக்கும், உயிருக்கும்கூட தமிழக அரசுதான் பொறுப்பு, அது மத்திய அரசாக இருந்தாலும், விடாமல்



அவர்களுக்காக நான் நீதி கேட்பேன்' என்ற அடிப்படையில் (மேசையைத் தட்டும் ஒலி) நமது தலைமைச் செயலாளர் மூலமாக கடிதத்தை அனுப்பி விசாரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிற நடவடிக்கையை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கடலிலே, கடலோரக் காவல் படையினரால் கொல்லப்பட்ட மீனவ இளைஞர் கால்வின்மில்லருக்கு உடனடியாக நிவாரணம் அறிவித்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிக முக்கியமான பிரச்சினை–கொச்சி துறைமுகத்திற்கு அருகிலே இத்தாலிய கப்பலில் உள்ளவர்கள் எப்படி மீனவர்களைச் சுட்டுக் கொன்றனரோ, கிட்டத்தட்ட அதைப்போன்று–நான் கொலை என்று சொல்லவில்லை–ஆனால் இப்படி ஒரு சம்பவம் நடந்த பிறகு பாதிக்கப்பட்டவருக்கு உடனடியாக சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்யாவிட்டால், அது இடித்ததைவிடக் கொடுமையான குற்றம். Hit and run என்பது சாலையிலே நடக்கக்கூடிய விபத்திலே இருக்கிற ஒரு கடுமையான ஷரத்து ஆகும். இதுவும் கிட்டத்தட்ட கடலில் இடித்துவிட்டு ஓடிய கதை. ஆகவே அவர்கள் உடனே தலையிட்டிருந்தால் அவரைக் காப்பாற்றியிருக்கவும் முடியும். இப்பொழுது நம்முடைய அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் கடிதம் மூலமாக எழுதியிருப்பது நல்ல நடவடிக்கை. அதோடு அந்தக் குடும்பத்தின் வழியாகவும் நாம் வழக்குகள் போட்டால், அரசு இயன்ற உதவிகளைச் செய்வதன் வழியாக அவர்களுக்கு இன்னும் கூடுதலாக நிவாரணம் கிடைக்கும். அரசு அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து, நம்முடைய I.T.I.–62 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. 627 தனியார் பயிற்சி நிலையங்கள் உள்ளன. இது கிட்டத்தட்ட அரசு பயிற்சி நிலையங்களைவிட 10 மடங்கு அதிகமாக இருக்கிறது. 50 சதவிகித இடங்கள் அந்தப் பயிற்சி நிலையங்களில் காலியாகவும் இருக்கின்றன. இதனைக் கருத்தில்கொண்டு, நம்முடைய இளைஞர்களுக்கு employability–வேலை செய்யும் திறனை அதிகப்படுத்துவது அவசியம் என்கின்ற உணர்வோடும், அந்த ஏழைக் குடும்பங்களைக் காப்பாற்றவேண்டும் என்கின்ற உணர்வோடும்,

அவர்களுக்குக் கட்டணம் இல்லாமல் தனியார் பயிற்சி நிலையங்களிலே கல்விக்கான ஏற்பாட்டை செய்திருப்பது, பயனற்றுக் கிடக்கிற ஒரு வசதியை நம்முடைய ஏழைக் குடும்பங்கள் பயன்படுத்துகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருப்பது என்பது, ஒரு சிறப்பான ஏற்பாடாக செய்யப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அது நம்முடைய ஏழைக் குழந்தைகளுக்குப் பலன் அளிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கன்வாடியிலே இருக்கிற பணியாளர்களும் சரி, அங்கன்வாடி மையத்திற்குக் குழந்தைகளை அனுப்புகிறவர்களும் சரி, இதிலே மாற்றம் தேவை என்றிருந்த அந்த எண்ணத்தைப் போக்கத்தக்க வகையிலே, அவர்களுக்கு இருந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றத்தக்க வகையிலே இப்பொழுது 5,000 மையங்களிலே புகையில்லா அடுப்புகளைக் கொடுத்து, படிப்படியாக இவையெல்லாம் நிறைவேற்றப்படும் என்ற ஒரு மிகச் சிறந்த அறிவிப்பை இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். முன்பருவக் கல்விக்காக அங்கன்வாடிக்கு வருகிற குழந்தைகளுக்கு– இப்பொழுது Pre K.G. என்பது ஒரு பெரிய பிரச்சினை. அங்கே குழந்தைகள் ஈர்க்கப்படவேண்டும். அப்படி ஈர்க்கப்படுவதை மனதில்கொண்டு, சீருடைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு செய்திருக்கிறார்கள். சீருடையைத் தைப்பதற்கு தையல் கூட்டுறவுச் சங்கங்களைப் பயன்படுத்துவதை–ஏற்கெனவே அவர்கள்தான் தைத்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்களைப் பயன்படுத்துவது என்பது, ஒரு சிறப்பான திட்டம் ஆகும். தனிப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள்தான் அச்சங்கங்களிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அச்சங்கங்களை அவர்களுடைய வாழ்வாதாரத்தின் மையமாக வைத்துக்கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் மற்றவரோடு போட்டியிட்டு தங்களுடைய தொழிலை நடத்துவதற்கு ஏதுவாக 54,000 சிறப்பான நவீன தையல் இயந்திரங்களை வழங்குவதற்கான ஏற்பாட்டையும் நமது அரசு செய்திருக்கிறது. இதற்காகவும், என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் குறிப்பாக, கிராமப்புறங்களில்



பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களின் வாழ்வாதாரத்தில் ஒளியேற்றும் வகையிலும், நலிந்து கொண்டிருந்த தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துவதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன்.

அங்கன்வாடிகளை நவீனப்படுத்தும் முயற்சிகளையும், அதுபோல தொழில் நிறுவனங்களின் மூலமாக 5,700 கோடி ரூபாய் தமிழகத்திற்கு முதலீடு கொண்டு வந்திருப்பதையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன். இதுவரை தமிழகத்தில் 500–க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் கொன்று குவிக்கப்பட்ட நேர்வுகளில் கடந்த காலங்களில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமலிருந்த சூழ்நிலையில், இன்றைக்கு இராமேஸ்வரம் மீனவரின் படுகொலையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின்மூலம் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மீனவர்களும் இந்தியக் குடியுரிமை பெற்றவர்கள்தான் என்பதை மத்திய அரசுக்கு உணர்த்துகின்ற வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் தமிழக மீனவர்களை ஒட்டுமொத்தமாகக் காப்பதற்கும் இதுபோன்ற நிலை இனி தொடராமல் இருப்பதற்கும் எடுக்கப்பட்டிருக்கின்ற இந்த நடவடிக்கையைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

நண்பகல் 12–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே; அவர் நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே'– இது புரட்சித் தலைவரின் புரட்சிப் பாடல் வரிகளில் ஒன்று.

நம்முடைய நாட்டை நல்ல பாதையில் அழைத்துச் செல்வது ஒரு தாயின் கையிலே என்கிற வார்த்தைக்கு அடையாளமாக, நம்முடைய அன்னை புரட்சித் தலைவி அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, சமூக நலத் துறைக்கென்று மூன்று அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். மூன்று அறிவிப்புகளுமே முத்தான அறிவிப்புகளாக எங்களின் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள்.

5,000 அங்கன்வாடி மையங்களுக்கு, நவீன எரிவாயு அடுப்பு, இரண்டு வயது முதல் ஐந்து வயதுவரை இரண்டு வண்ண உடைகள் வழங்குவதற்கும் மற்றும் 54 கோடி ரூபாய் செலவில் தையல் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு நவீன தையல் இயந்திரங்கள் வழங்குவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அன்பு கொண்டோர் நினைத்தாலே அருள் வழங்கும் திவ்ய க்ஷேத்திரம், தமிழே தன் மூச்சாய், தமிழர் நலமே தன் சிந்தனையாய், தமிழர் நலன் காக்க ஓய்வின்றி உழைத்துவரும் ஒப்பற்ற முதலமைச்சர், கரிக் கட்டியைக்கூட வைரக் கல்லாக்கும் வித்தகம் தெரிந்த விந்தனையாளர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம், தமிழகத்தில் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நாள் என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு மாதங்களுக்கு முன்பாகத்தான் நிதிநிலை அறிக்கையில், Fortune 500 முதலீட்டாளர்கள் உட்பட்ட, முதலீடுகளை 20,000 கோடி ரூபாய் அளவிற்கு, ஆறு மாதக் காலத்தில் கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருந்தார்கள். அதை இப்போது நிறைவேற்றுகின்ற வகையில், இன்றையதினம், தமிழகம் இந்தியாவில் முதல் மாநிலமாக உருவாவதற்கும், முதலீட்டாளர்களுக்கு ஏற்ற மாநிலமாக ஆசியாவிலேயே மூன்றாவது மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்குகின்ற வகையில், இன்றையதினம், போட்டிருக்கின்ற அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என்பது, தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், ஒரே நாளில் ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அது இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் காலம் மட்டும்தான் என்பதை, இது பொன்னான நாள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் வாயிலாக, 5,700 கோடி ரூபாய் முதலீடும், 9,530 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், மறைமுகமாகப் பல்லாயிரக்கணக்கான பேருக்கு வேலைவாய்ப்பும், அதுமட்டுமல்லாமல், இதன் வாயிலாக, சிறு, குறு தொழில்களும் வளர்ச்சியடைகின்ற வகையில், இந்தப் பொன்னான



நாளிலே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தமிழக மக்களின் சார்பாகவும், தொழில் முதலீட்டாளர்களின் சார்பாகவும், சிறு தொழில் முதலீட்டாளர்களின் சார்பாகவும், தமிழ் மக்களுடைய, 1½ கோடி தமிழ்த் தொண்டர்களின் சார்பாகவும் அம்மா அவர்கள் இதுபோன்ற பல்வேறு திட்டங்களைக் கொண்டுவருவதற்கு நீடூழி வாழ்க, வாழ்க என்று சொல்லி, பொற்பாதங்களைப் பணிந்து அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கடலோரக் காவல் படைப் படகு மோதலில் நாட்டுப் படகு பாதிக்கப்பட்டு, அதன்காரணமாக, இறக்க நேரிட்ட இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் நகரைச் சார்ந்த கால்வின் மில்லர் குடும்பத்திற்கு ரூபாய் ஐந்து இலட்சம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கிய, தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு இராமநாதபுரம் மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, தமிழக அரசின் சார்பில் பாதிப்பைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படுமென்ற, மீனவ மக்களின் கோரிக்கையை ஏற்று செயல்படுகின்ற, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மாவட்ட மீனவர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறையென்று வைக்கப் படும்"

என்ற தெய்வப் புலவர் வள்ளுவனின் குறளுக்கிணங்க, மக்கள் அரசை நாடி வருவதற்கு முன்பாகவே, மக்களின் குறைகள் மற்றும் கோரிக்கைகளைக் கண்டறிந்து, உடனுக்குடன் நிறைவேற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் எதிர்பார்க்காத வகையில்

திட்டங்கள் மற்றும் நிவாரண உதவிகளை அளித்து வருகிற அரசு, இந்தியாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு ஒன்றுதான் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு கூறிட முடியும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அந்த வகையிலே, கடந்த, 10—5—2012 அன்று இந்திய கடலோரப் பாதுகாப்புப் படையின் ரோந்துப் படகு நாட்டுப் படகுமீது மோதியது. அதில் இறந்த கால்வின் மில்லர் அவர்களின் குடும்பத்திற்கு, இறந்தவர் உடல் கரை சேருவதற்கு முன்பாகவே, நிவாரண உதவியாக ரூபாய் ஐந்து இலட்சம் வழங்கி, *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றிய மாண்புமிகு அம்மா அவர்களின் பாத மலர்களில் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

*பிற்பகல் 12—05*

"ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்" *(மேசையைத் தட்டும் ஒலி)* என்ற மக்கள் திலகத்தின் பாடலில் வரும் வைர வரிகளுக்கேற்ப, கால்வின் மில்லர் இறப்புக்குக் காரணமாயிருந்த இந்திய கடலோரப் பாதுகாப்புப் படையினர்மீது உரிய நடவடிக்கை எடுக்க, சட்டப்படி அனைத்து நடவடிக்கையும் எடுத்து, என்றும் மீனவர்களின் நலன் காக்கும் அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதை உலகுக்கு உணர்த்திக் காட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீன் வளத் துறை சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைப் பணிவோடு தெரிவித்து அமர்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடைக்கலம் தந்த புறாவிற்கு தன் தசையை அரிந்து தந்தவன் சிபி; படரத் துடித்த முல்லைக்கு தான் பயணித்த தேரைப் பரிசாய்த் தந்தவன் பாரி; குளிரில் நடுங்கிய மயிலுக்கு தன் போர்வையைத் தந்தவன் பேகன். இப்படி, கடையேழு வள்ளல்களைத் தந்த தமிழகம், தீயவரைச் சுட்டெரிக்கும், நல்லவரைக் காக்கும், நம் காவியத் தாய் அம்மாவையும் தந்தது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மிகவும் நிதி நெருக்கடியான சூழ்நிலையில் பொறுப்பேற்ற மாண்புமிகு அம்மா அவர்கள், "மனமிருந்தால் பறவைக் கூட்டில் மான்கள் வாழலாம்; வழியிருந்தால் கடுகுக்குள்ளே மலையைக் காணலாம்; துணிந்துவிட்டால் தலையில் எந்தச் சுமையும் தாங்கலாம்" *(மேசையைத் தட்டும் ஒலி)* என்ற கண்ணதாசனின்



வரிகளுக்கு உயிரோட்டம் தந்து, சரித்திரத்திற்கே நிலையான புகழைத் தந்து விளங்குகின்றார். *(மேசையைத் தட்டும் ஒலி)*

வறுமை சூழ்ந்த கன்னிப் பெண்ணின் கழுத்தில் ஏறும் தாலிக்குத் தங்கம் தந்தவர் நம் அம்மா; *(மேசையைத் தட்டும் ஒலி)* கடலை நம்பிக் காலம் தள்ளும் மீனவரின் வறுமை போக்க உதவித் தொகையை உயர்த்தியவர் நம் அம்மா; *(மேசையைத் தட்டும் ஒலி)* பள்ளி மாணவர் ஊக்கம் பெறவே, ஊக்கத் தொகை தந்தவர் நம் அம்மா. *(மேசையைத் தட்டும் ஒலி)*

நமது நாட்டின் மக்கள்தொகையில் 23 விழுக்காடு இளைஞர்கள்தான். இன்னும் சில ஆண்டுகளில் நமது நாட்டின் மொத்த மனித வளத்தின் மூன்றில் ஒரு பங்கு இளைஞர்களாக இருப்பார்கள் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த அரிய செல்வங்களாம் மாணவர்களை, இளைஞர்களை சரியாக வழிநடத்துவதும், செம்மைப்படுத்துவதும், சீர்மைப்படுத்தி அவர்தம் வருங்காலத்தையும், நாட்டின் வருங்காலத்தையும் மேம்படுத்துவதும் நம் அனைவரின் கடமையாகும்.

ஏட்டுக் கல்வியுடன் தொழில் கல்வியும் வளர்ச்சி பெற, வேலைவாய்ப்புக்கேற்ற பயிற்சித் திறனை அளிக்க, தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயிலும் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில், சிறப்பான அறிவிப்பு ஒன்றினை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் செய்துள்ளார்கள்.

ஏழைக் குடும்பங்களின் குடும்ப வருவாயைப் பெருக்க, கட்டாயம் வேலைக்குச் செல்ல வேண்டிய நிலையில் பெண்கள் இருப்பதாலும், கூட்டுக் குடும்ப முறை சிதைந்து வருவதாலும், வேலைக்குச் செல்லும் ஏழைப் பெண்கள் தாம் பணிக்குச் செல்லும்போது தங்கள் குழந்தைகளைக் கவனித்துக்கொள்ள உதவி தேவைப்படுபவர்களாக உள்ள நிலையில்—"பிள்ளையைப் பெற்றுவிட்டால் போதுமா, பேணி வளர்க்க வேண்டாமா?" என்று ஒரு திரைப்படப் பாடல் வரும்— "அளவோடு பிள்ளையைப் பெற்றுவிட்டால் போதும், பேணி வளர்க்க நான் இருக்கிறேன்" என்று அம்மா அவர்கள் இன்றைக்கு அங்கன்வாடி மையங்களை மேம்படுத்த அறிவிப்பு செய்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அங்கன்வாடி மையங்களின்மூலம் குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்கள் ஆகியோருக்கு இணை உணவும், முதியோர்களுக்கு மதிய உணவும் வழங்கப்பட்டு

வருகிறது. இப்படிப்பட்ட அங்கன்வாடி மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், ரூ.3 கோடி மதிப்பீட்டில் புகையில்லா சமையலறைகள்; சென்னை, வேலூர், திருச்சி, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் இந்த மையங்களுக்கு வரும் குழந்தைகளுக்கு ரூ.4 கோடி செலவில் சீருடைகள்; மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.54 கோடி செலவில் தையல் இயந்திரங்கள் வாங்கி வழங்கவும் ஆணையிட்டவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய தொழில்களை ஈர்க்கும் வகையில், பல சாதகமான சூழ்நிலைகளை தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது. நவீன தொழில்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மனித ஆற்றலை நிரம்பப் பெற்றுள்ள மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது. ஆண்டொன்றுக்கு சுமார் 2.25 இலட்சம் பொறியியல் பட்டதாரிகளையும், 1.71 இலட்சம் பயிற்சிபெற்ற பல்தொழில்நுட்ப மாணவர்களையும் உருவாக்கி, முதல்நிலை அடைந்துள்ள மாநிலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அயராத நடவடிக்கைகளினால் தமிழகம் விளங்குவதால், இங்கு அறிவுசார் தொழில்கள் அமைவதற்கும், அறிவுசார் சேவைகளை வழங்குவதற்கும் அதிக வாய்ப்புகளை உருவாக்கித் தந்தவர் நம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–10

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் வலுவான, சாதகமான சூழல் நிலவுவதால், முதலீட்டாளர்கள் தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு உகந்த மாநிலமாகத் தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள். 3,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கும்வகையில் 4,000 கோடி ரூபாய் முதலீட்டிற்கு ஒப்பந்தம்; சுமார் 23,000 பேர் பணிபெறும் வகையில் 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் 125 ஏக்கர் பரப்பளவில் மோட்டார் சைக்கிள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவுவதற்கான ஒப்பந்தம்; 3,000 பேர் பயனடையும் வகையில் ஓசூர், பிள்ளைப்பாக்கம், எண்ணூர், ஒரகடம் ஆகிய பகுதிகளில் 4,150 கோடி ரூபாய் முதலீட்டில் புதிய தொழிற்சாலைக்கான ஒப்பந்தம்; 300 கோடி ரூபாய் எய்ஷர் மோட்டார் நிறுவனம் முதலீடு செய்ய ஒப்பந்தம்; ஃபிலிப்ஸ் கார்பன் பிளாக் லிமிடெட் நிறுவனத்தோடு ஒப்பந்தம் என மொத்தம் 5,700 கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலைகள் அமைய



ஒப்பந்தங்களை நம் அம்மா அவர்கள் செய்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

“தரை மேல் பிறக்க வைத்தான்
எங்களைத் தண்ணீரில் பிழைக்க வைத்தான்”

என கடலுக்கு தினம், தினம் சென்று திரும்பும் மீனவர் வீட்டில், அவர்கள் என்று திரும்புகிறாரோ அன்றுதான் அடுப்பு எரியும். அதுவரையில் மீனவப் பெண்களின் கண்களில் வரும் கண்ணீர்தான், கடலின் உப்பிற்குக் காரணமோ என்கின்ற அளவிற்கு, கவலையோடு இருக்கும் மீனவர் சமுதாயம். இந்நிலையில் இயற்கைத் தாக்குதலோடு, செயற்கைத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நிதி உதவி செய்து பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பத்திற்கு நிவாரணமும், நியாயமும் கிடைக்க ஏற்பாடு செய்து, அறிவிப்பு செய்தவர் நம் முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வைரம் நெருப்பில் கரியாகும்;
முத்து உரியும்;
பவளம் உடையும்;
வெள்ளியும் மங்கும்;
ஆனால் அழியாதது, அழகானது,
அசலானது, அபூர்வமானது
தங்கம் ஒன்றுதான்.

எனவே தான், அதன் மதிப்பு தினம், தினம் உயருகிறது.

உலக வல்லரசின் உயர்ந்த பல்கலைக்கழகமும் நம் முதலமைச்சர் அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அம்மா அவர்களுக்கு ‘தங்கத் தாரகை’ என பட்டம் சூட்டியதோ? (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்றைக்கு அன்னையர் தினம்
தமிழர்களுக்கு நாளெல்லாம் சுப தினம்
அம்மா அவர்கள் தனிப் பிறவியாக,
எங்கள் தங்கமாக,
மீனவ நண்பனாக,
இன்று போல் என்றும் வாழ்க!
இன்று போல் என்றும் வாழ்க!

கன்றின் குரலும், கன்னித் தமிழும்
சொல்லும் வார்த்தை அம்மா, அம்மா!
(மேசையைத் தட்டும் ஒலி)
கருணை தேடி அலையும் உயிர்கள்
உருகும் வார்த்தை அம்மா, அம்மா!
(மேசையைத் தட்டும் ஒலி)
எந்த மனதில் பாசம் உண்டோ
அந்த மனமே அம்மா அம்மா!
(மேசையைத் தட்டும் ஒலி)
இன்பக் கனவை அள்ளித் தரவே
இறைவன் தாயை தந்தானம்மா.
(மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு முத்தான அறிவிப்புகளை வெளியிட்ட நம் முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மீண்டும் என் நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) பதிவு (தமிழ்நாடு திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவு.* மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு.* மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

## (இ) தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*





# 5. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும், வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

## (அ) கோரிக்கை எண் 54 – வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

## (ஆ) கோரிக்கை எண் 31 – தகவல் தொழில்நுட்பவியல் துறை

------

## (அ) கோரிக்கை எண் 54 – வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012–2013 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை). மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.206,68,49,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 54, திரு. வி.சி. சந்திரகுமார், இருக்கையில் இல்லை.*

*வெட்டுத் தீர்மானம் எண் 3133, திரு. சி.எச். சேகர்.*

**திரு. சி.எச். சேகர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*“வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1527, திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 590, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1487, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3010, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 634, திரு. வெ. பொன்னுப்பாண்டி.



**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வன விலங்குகளால் உயிரிழந்தவர்களுக்கு உடன் இழப்பீடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1781, திரு. எம். ஆறுமுகம்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதிவாசி குழந்தைகளின் பட்டயப் படிப்பு, பட்டப் படிப்பிற்கான அனைத்து செலவுகளையும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1371, திரு. எஸ்.ஆர். பார்த்திபன்.

**திரு. எஸ். ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டூர் தொகுதி, கொளத்தூர் பகுதியில் யானைக் கூட்டங்கள் விவசாய நிலங்களை நாசப்படுத்துவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1897, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஏற்காடு அடிவாரத்தில் உள்ள குறும்பப்பட்டி வன உயிரியல் பூங்காவை விரிவுபடுத்தி சேலம் மாநகர மக்களுக்கு உதவிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 1973, திரு. ர.ம. பாபு முருகவேல்.*

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதியில் வனங்களைப் பாதுகாக்க, வனங்களைச் சுற்றிவர வனத் துறைக் காவலர்களுக்கு அதிநவீன ஜீப்புகள் மற்றும் கடத்தலைத் தடுக்க ஆணி அடித்த சட்டங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 2073, திரு. அ. சவுந்தரராசன்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லா குன்றுகளிலும் பொருத்தமான hybrid மரங்களை, குத்துச் செடிகளை வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 2121, டாக்டர் க. கிருஷ்ணசாமி.*



**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா, பி.பி.டி.சி. நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள வன இலாக்காவிற்குச் சொந்தமான 8,374 ஏக்கர் நிலத்தை மீட்டெடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 2257, திரு. அ. அஸ்லம் பாஷா.*

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆம்பூர் தொகுதியில் உள்ள காடுகளை அடிக்கடி தீயிட்டுக் கொளுத்துவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 2339, திருமதி எஸ். விஜயதரணி.*

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் சமூகக் காடுகள் பரப்பளவை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 2512, திருமதி ர. சுபா.*

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட தலைவாசல் ஒன்றியம், எலந்தப்பாரி மலைக் கிராமத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2589, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கன்னியாகுமரி மாவட்டத்தில் இயற்கைச் சீற்றங்களைத் தடுக்க கடற்கரை கிராமங்களில் காற்றாடி மரம் நடுவதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2621, திரு. எல். வெங்கடேசன்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருக்கோவிலூர் தொகுதிக்குட்பட்ட முகையூர் ஒன்றியத்தைச் சார்ந்த கிராமங்கள் அடுக்கம், தண்டரை, வேளாகுளம், கண்டாச்சிபுரம் ஆகிய கிராமங்களில் காட்டுப் பன்றிகளால் ஏற்படும் விவசாய சேதங்களைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2813, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “காடுகளில் விழுந்துகிடக்கும் பயனற்ற மரங்களை ஏலம்மூலம் விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3215, திரு. க. பாண்டியராஜன்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “விதிகளைத் தளர்த்தி பொது மக்கள் அனைவருக்கும் துறையின்மூலம் வழங்கும் இலவச மரக் கன்றுகள் தாராளமாகக் கிடைக்க ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,68,49,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

## (ஆ) கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 31– தகவல் தொழில்நுட்பவியல் துறை. மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.25,18,71,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 31, திரு. வி.சி. சந்திரகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 837, திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1095, திரு. சி. மைக்கேல் ராயப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 199, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 496, திரு. எம். ஆறுமுகம்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1020, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1129, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 218, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டைச் சார்ந்த தமிழக பொறியியல் கல்லூரிகள் மூலமாக தேர்ச்சி பெற்ற பொறியாளர்களைக் கொண்டு தகவல் தொழில்நுட்ப கம்பெனிகளை நிறுவவும், இத்துறையை மேம்படுத்தவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 523, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகராட்சியின் அருகில் துவங்கப்பட்ட 'டைடல் பார்க்' பணி விரைவில் முடிக்கப்பட வேண்டியதன்

அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/– மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 564, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 599, திரு. எஸ்.ஆர். பார்த்திபன்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலத்தில் அமைக்கப்பட்டுவரும் 'டைடல் பார்க்' பூங்காவினை விரைவில் செயல்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/– மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 607, திரு. எல். வெங்கடேசன். (குறுக்கீடு) நீங்கள் இருப்பதாகத்தானே சொன்னேன், இல்லையென்று சொல்லவில்லையே?

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு கேபிள் டி.வி.யில் தனியார் ஆப்பரேட்டர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அலைவரிசைகள் ஒதுக்கீடு குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 615, திரு. ப. சம்பத்குமார்.



**திரு. ப. சம்பத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டத்தில் 'டைடல் பார்க்' துவக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/– மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 655, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 669, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகம் பேர் பொறியியல் கல்லூரியில் படித்தும் வேலை இல்லாமல் இருப்பதால், கிள்ளியூர் தொகுதியில் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 693, திரு. ப. பார்த்தசாரதி. (குறுக்கீடு) உட்காருங்கள், உங்கள் இடத்தில். அங்கேயும், இங்கேயும் சுற்றிக்கொண்டிருக்காதீர்கள்.

**திரு. ப. பார்த்தசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “விருகம்பாக்கம் தொகுதியிலுள்ள அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் மடிக் கணினி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/– மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 721, திருமதி ர. சுபா.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி தாலுகாவில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு இலவசக் கணினிப் பயிற்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/– மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 797, திரு. சி.எச். சேகர்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கும்மிடிப்பூண்டி தொகுதியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைப்பதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/– மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 838, திரு. அ. அஸ்லம் பாஷா.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “வளர்ந்துவரும் தொழில்நுட்பத்திற்கேற்ப கணினிகளில் Key Board எழுத்துகள் தமிழிலும் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/– மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 840, திருமதி எஸ். விஜயதரணி.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி மார்த்தாண்டத்தில் ELCOSEZ என்ற சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/– மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 843, திரு. ம. கலை அரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1171, திரு. அ. சவுந்தரராசன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தகவல் தொழில் நுட்பத் துறையில் இரவு பணியாற்றும் பெண் ஊழியர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. அ. சவுந்தரராசன்] [2012 மே 14

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/– மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1416, திரு. ர.ம. பாபு முருகவேல்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,18,71,000/– மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 225 முதல் 273 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது



2012 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று தங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம். இன்றைக்கு இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர், தே.மு.தி.க. உறுப்பினர் மாண்புமிகு திருமதி ர. சுபா அவர்கள்.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் 2012–2013 ஆம் ஆண்டு வனம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த, நாங்கள் வணங்குகின்ற மனிதருள் மாணிக்கம், மாண்புமிகு புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களை வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவின் தென்கோடியில் அமைந்துள்ள இயற்கை வளம் நிறைந்த மாநிலம் தமிழ்நாடாகும். இந்த மாநிலமானது, கிழக்கு மற்றும் தென்கிழக்கு திசைகளில் கடல் சூழ்ந்து அமைந்துள்ளது. இந்த மாநிலம் கோண்டுவானா காலத்திலேயே உருவானது. மேற்குத் தொடர்ச்சி மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள், கன்னியாகுமரி தொடங்கி கிருஷ்ணகிரி மாவட்டம் வரை மேற்குத் தொடர்ச்சி மலை தமிழ்நாட்டின் மேற்கு எல்லையாக அமைந்துள்ளது. கிழக்குத் தொடர்ச்சி மலையானது, சேர்வராயன்மலை, கொல்லிமலை,

@ 275 முதல் 302 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது

பச்சைமலை, கல்வராயன்மலை மற்றும் ஜவ்வாது மலை போன்ற மலைகள் பரவியுள்ள நாமக்கல், சேலம், விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் தருமபுரி மாவட்டங்களில் அமைந்துள்ளது.

பிற்பகல் 12–20

மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் அடர்காடுகளினால், அப்பகுதியில் உற்பத்தியாகும் நீரூற்று மற்றும் அருவிகளினால், பல்வேறு சிற்றாறுகள் உற்பத்தி ஆகின்றன. அவற்றின் நீர் வளத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டின் விவசாயம் உள்ளது. கடந்த 60 ஆண்டுகளில் மேற்குத் தொடர்ச்சி மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் இயற்கையாகக் காணப்பட்ட காடுகள் அழிக்கப்பட்டு, தைல மரங்கள், சில்வர் ஓக் மரங்கள் போன்றவைகளும், காபி, தேயிலை போன்ற தோட்டப் பயிர்களும், சுற்றுலாத் தேவைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட நவீன வசதிகளும், இந்த மலைத்தொடர்களின் வன வளத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

இதனால் இந்தப் பகுதிகளில் இயற்கையாகக் காணப்பட்ட நீரூற்றுகள், அருவிகள் மற்றும் சிற்றாறுகள் நிரந்தரமாக மறைந்து விட்டன. மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் பசுமைச் சூழலைப் பேணிக் காக்க வேண்டியது நமது கடமையாகும். அதனைப் பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும். அவ்வாறு பாதுகாக்கும் முயற்சிகள் ஊக்குவிக்கப்படும்பட்சத்தில், இந்த மலைத் தொடர்களில் நீரூற்றுகளும், சிற்றாறுகளும் மீண்டும் உயிர்பெற்று, வளமான விவசாயத்திற்கு ஊக்கம் அளிக்கும். இதன்மூலம், தேவையான நீர் தங்குதடையின்றி வருடம் முழுவதும் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். அதுமட்டுமல்லாமல், தற்போதைய அத்தியாவசியத் தேவையான மின்சார உற்பத்தி, நீர் மின் நிலையங்களின்மூலம் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். சிற்றாறுகள் ஜீவனுடன் வருடம் முழுவதும் ஓடும்பட்சத்தில், பாசன நீர்த் தேவைக்காக அண்டை மாநிலங்களை நாம் சார்ந்திருக்கக்கூடிய நிலை முற்றிலும் நீங்கிவிடும்.

தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதி என்ற வகையில், 8 சரணாலயங்களும், 12 பறவைகள் சரணாலயங்களும், 5 தேசியக் காப்பகங்களும், 3 புலிகள் சரணாலயங்களும், 4 யானைகள் காப்பகங்களும் மற்றும் 3 உயிர்கோளக் காப்பகங்களும்



அமைந்துள்ளன. இவை தமிழ்நாட்டின் மொத்தப் பரப்பளவில் தோராயமாக 4.75 சதவிகித பரப்பைக் கொண்டுள்ளன. காப்புக் காடுகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக உள்ள கண்காணிப்புப் பிரிவுகள், பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளைக் கண்காணிப்பதற்காக உள்ள பிரிவைவிட, பல அளவீடுகள் வேறுபட்டு உள்ளன.

வருவாய்த் துறை மற்றும் இதர நில உரிமை பொறுப்புள்ள துறைகளிடமிருந்து, பொது நிலங்கள் யாவும் பொது மக்களின் பல்வேறு தேவைக்காகவும், விவசாயத் தேவைக்காகவும் பயன்படுத்தப்பட்டுவரும் நிலையில், வன நிலங்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை உள்ளது. மேலும், வனங்களைப் பாதுகாக்க, அதிகப்படியான வனப் பணியாளர்களை நியமனம் செய்யவேண்டும். அத்துடன் ஏற்கெனவே எல்லா நிலைகளிலும் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் வனப் பகுதிகளில் பாதுகாப்பினை மேம்படுத்த, வனத் துறையின் களப் பணியாளர்கள் விரைந்து கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள உதவிடும் வகையில், வனவர் அளவிலான கள அலுவலர்களுக்கு இரு சக்கர வாகனங்களை அரசாங்கம் வழங்கவும், அனைத்துப் பணிகளில் உள்ள சரகர்களுக்கும் 4 சக்கர வாகனங்கள் வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன் ஒவ்வொரு மாவட்ட வன அலுவலரின் கீழும், காவல் துறையில் உள்ளது போல, சிறப்புப் படைகளை, காவல் படைகளை Reserve Force போன்று ஒரு சிறப்பு வனப் பாதுகாப்புப் படை இயங்கிடும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். பெரும்பாலான பழங்குடியினர் கிராமங்களுக்குச் சாலை வசதி இல்லை. அந்தக் கிராமங்களுக்கு, வன உரிமைச் சட்டத்தின்கீழ் சாலை வசதி எற்படுத்தித் தர நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தப் பணியினை வன எல்லைக்குள் வனத் துறையைச் சார்ந்த வனப் பொறியியல் பிரிவு மட்டுமே மேற்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வழித்தடங்களில் உள்ள சாலைகளைச் செப்பனிடுவதற்கு அரசு அனுமதி

அளிக்கின்றது. கடந்த நிதியாண்டில்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசினால், 145 கிலோ மீட்டர் அளவிற்குச் சாலை செப்பனிடப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்தப் பகுதியில் அந்தச் சாலைப் பணி மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினால், மத்திய அரசிடம் விண்ணப்பித்து, அதற்கான அனுமதியைப் பெற்று, சாலை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதன் தலைமையிடம் திருச்சியில் செயல்படுகிறது. இதனால் வனச் சாலை அமைக்கும் பணியில் பெரிதும் தாமதம் ஏற்படுகிறது. எனவே, வன எல்லைக்குள் வனச் சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ள சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலரின் அனுமதி வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படும்பட்சத்தில் பழங்குடி மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை எளிதில் பூர்த்தி செய்யலாம்.

பிற்பகல் 12–25

தமிழகத்தைப் பொறுத்தவரை, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் யானை, புலி, சிறுத்தை போன்ற பெரு வன உயரினங்களால் பொதுமக்களுக்கும், விவசாயத்திற்கும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. தற்போது, கோடை வெயில் சுட்டெரிக்கத் தொடங்கியுள்ளதால், மலைப் பகுதிக் காடுகளில் தீ விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. இதனால் ஏற்படும் இழப்புகளைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழக அரசு வனத் துறையின்மூலம் எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன விலங்குகளால் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, யானை தடுப்பு அகழி போன்ற இடர் களைவுப் பணிகளுக்கு 2011–2012 ஆம் ஆண்டில் 11.7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. வன விலங்குகள் மனிதர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு வராமல் தடுக்கும் வகையில் வனப் பகுதியில் போதிய தீவனப் பயிர்களை வளர்க்க, 2011–2012 ஆம் ஆண்டில் 20.87 கோடி



ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது; இழப்பீடுகளை வழங்குவதில் தாமதம் ஏற்படாமல் இருக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 2.5 கோடி ரூபாய் சுழல் நிதி உருவாக்கியுள்ளது. அதேபோன்று, 2012–2013 ஆம் ஆண்டில் 10 கோடி ரூபாய் செலவில் இதற்கான பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆணையிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளின் சாலையோரம் இருந்த மரங்கள் வெட்டப்பட்டுவிட்டன. இதனால் நிழலின்றி பயணிகள் மற்றும் பொதுமக்கள் தவிக்கின்றனர். வெட்டப்பட்ட மரங்களுக்குப் பதில் மீண்டும் அதே இடத்தில் மரம் நட தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகளை அகலப்படுத்துகிறபோது சாலை ஓரங்களில் உள்ள மரங்கள் வெட்டப்படுகின்றன. இதையெல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உணர்ந்து, 2011–2012 ஆம் ஆண்டில், நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் 60,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. 2012–2013 ஆம் ஆண்டில் 1,00,000 மரக்கன்றுகள் நடப்பட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு நன்றி. சேலம்–விழுப்புரம் மாவட்ட எல்லையில், கல்வராயன் மலையில் உள்ள வனப் பகுதியில் முயல், மான், காட்டுப் பன்றி, நரி, கரடி, காட்டெருமை உள்ளிட்ட விலங்குகள் வாழ்கின்றன. ஆனால், இந்தக்

காட்டுப் பகுதியில் யானைகள் கிடையாது. இந்த மலைத் தொடரில் கருமந்துறை உள்ளிட்ட மலைக் கிராமங்கள் உள்ளன.

தற்பொழுது, திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலைப் பகுதியிலிருந்து வழி தவறி வந்த காட்டு யானைக் கூட்டம் கருமந்துறையை ஒட்டியுள்ள சேராப்பட்டு என்ற கிராமத்துக்குள் புகுந்து அங்கிருந்த ஒரு வீட்டின் வெளியே அடுக்கி வைக்கப்பட்டிருந்த 15 நெல் மூட்டைகளைத் தூக்கி எறிந்து நாசப்படுத்தின. அப்போது வீட்டிற்குள் யாரும் இல்லாததால் அதிர்ஷ்டவசமாக உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.

ஏற்கெனவே, இந்த யானைகள் விழுப்புரம் மாவட்ட வனப் பகுதியை ஒட்டிய கிராமத்திற்குள் நுழைந்தபோது ஒருவரை மிதித்துக் கொன்று விட்டன. அதேபோல், திருவண்ணாமலை மாவட்ட வனப் பகுதியில் சுற்றித் திரிந்தபோது இரண்டு பேரை தூக்கி எறிந்து கொன்றுவிட்டதாக வனத் துறையினர் தெரிவித்துள்ளனர். பத்து நாட்களாக அந்த யானைகள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வனத் துறையினர் போராடி வருகின்றனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலத்திலிருந்து வழி தவறி தமிழகத்திற்குள்ளே நுழைந்த அந்தக் காட்டு யானையால் அந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. அது, தன்னுடைய குட்டி இறந்ததன் காரணமாக ஏற்பட்ட ஆவேசத்தினால் அந்த நிகழ்வினைச் செய்துள்ளதாகத் தெரிய வருகிறது. வனத் துறையானது காவல் துறை, வேட்டைத் தடுப்புக் காவலர்கள் மற்றும் பழங்குடியின மக்களின் உதவியுடன் அந்த யானைகளை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. அதேபோல, அதனால், பாதிப்பு ஏற்படுகின்ற மக்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி உடனுக்குடன் அதற்கான நிவாரண நிதி ஒதுக்கிக் கொடுக்கப்படுகிறது என்பதையும், அந்த யானைகளை மிக விரைவில் அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.



**திருமதி ர. சுபா:** இதனால், அப்பகுதியிலுள்ள மக்கள் பீதி கலந்த பயத்துடனும், அதிர்ச்சியுடனும், இரவு நேரங்களில் தூக்கமின்றி, நிம்மதியில்லாமல் இருக்கின்றார்கள். மேலும் பாப்பநாயக்கன்பட்டி ஊராட்சியிலுள்ள மூலப்பாடி கிராமத்தில் நேற்று முன்தினம் ஏழு யானைகள் ஒரு ஏக்கர் கரும்புத் தோட்டத்தை முற்றிலுமாக அழித்து விட்டன. நேற்று இரவு அதே பகுதியில், மாமரத்தை அழித்து ஒடித்து விட்டன. எனவே, காட்டு யானைகளைக் கட்டுப்படுத்தவும், மனித உயிர்களைப் பாதுகாக்கவும், உடனடியாக வனத் துறையின்மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, வனத் துறை மூலமும், காவல் துறையினருடைய உதவிகளின் மூலமும், அந்த யானைகளுடைய வருகையை, பொதுமக்களை எச்சரிக்கும் பொருட்டு, தண்டோரா போட்டு கூறியுள்ளார்கள். அதேபோல், வனத் துறை ஊழியர்கள் பட்டாசுகளை வெடித்து அந்த யானைகளை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். வெகு விரைவில் அந்த யானைகளை அப்புறப்படுத்தும் பணி நிறைவுபெறும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள். (குறுக்கீடு) இரண்டு உறுப்பினர்கள் இன்று பேசிவிட்டார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் உங்கள் கட்சியின் சார்பில் இன்று இரண்டு உறுப்பினர்களுக்கு பேச வாய்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வோர் உறுப்பினருக்கும் பத்து நிமிடங்கள் என்ற அடிப்படையில்தான் இரண்டு உறுப்பினர்களுக்கு 20 நிமிடங்கள் பேச வாய்ப்பு அளிக்கப்பட்டது. (குறுக்கீடு) ஓர் உறுப்பினர் மட்டும் பேசினால், இருபது நிமிடங்கள் கொடுக்கப்படும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் உங்கள் நேரத்தை குறைத்து விடலாமா? மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள். (குறுக்கீடு) மைக் கொடுங்கள். (குறுக்கீடு) லைன் வந்து விட்டது.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதியில் ஆக்கிரமிப்புகள் அதிகமாக உள்ளன. வனப்

பகுதியை ஒட்டியுள்ள விவசாயிகள் அந்த வனப் பகுதியை ஆக்கிரமித்து வருகின்றனர். அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். பச்சைமலை, இலந்தவாரி, முட்டல், பூமரத்துப்பட்டி ஆகிய இடங்களில் வசிக்கும் மலைவாழ் பகுதி மாணவ, மாணவிகளுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க அதிகாரிகள் அலைக்கழிக்கின்றனர். மேலும், வேப்படிபாலக்காடு, மண்மலை பகுதிகளில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை மீட்பதற்கு, அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. தமிழகத்தில், தலைமைச் செயலாளரை தலைவராகக்கொண்டு, ஓர் உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டு, இக்குழுவானது ஆறு மாதங்களுக்கொருமுறை கூடி, தமிழகத்திலே வனத் துறையின் இடங்களை, ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை மீட்பது சம்பந்தமாக அந்தக் கூட்டம் நடைபெறுகின்றது. அதன் அடிப்படையில், இன்றைக்கு தமிழகத்திலேயே பல்வேறு பகுதிகளில் அந்த ஆக்கிரமிப்புகள் கட்டுப்படுத்தப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, சாதிச் சான்றிதழ் வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார். விதிமுறைகளுக்குட்பட்டு எந்தெந்தப் பகுதியில், சாதிச் சான்றிதாழ் வழங்கப்படாமல் இருக்கிறது என்று எடுத்துச் சொன்னால், அதனை அரசு உடடினயாக பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதனை எழுதிக் கொடுத்து விடுகிறேன். அதேபோல் பச்சைமலை, இலந்தவாரி, முட்டல், பூமரத்துப்பட்டி ஆகிய இடங்களில் வசிக்கும் மலைவாழ் பகுதி மாணவ, மாணவிகளுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க அதிகாரிகள் அலைக்கழிக்கின்றனர். மேலும், வேப்படிபாலக்காடு, மண்மலை பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு கடந்த 40 ஆண்டுகளுக்கு மேல் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை. எனவே, அப்பகுதி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்! என அரசுத் திட்டங்கள் அறிவித்தாலும், வனப் பகுதியில் வெட்டப்பட்ட மரங்களால் மழைப் பொழிவு மிகவும் குறைந்துள்ளது. எனவே, வனப் பகுதியில் மரங்களை வளர்ப்பதற்கு தமிழக அரசு வனத் துறையின்மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி மரங்களெல்லாம் வெட்டி எடுக்கப்பட்டது கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி அமைந்த பிறகு 64 இலட்சம் மரக் கன்றுகள் நடப்பட்டு, இந்தியாவிலேயே எந்த மாநிலங்களிலும் இல்லாத வகையில் ஒரு சாதனையாக இத்திட்டம் நடைபெற்று வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் 687 கோடி ரூபாய் திட்டத்தில் ஐந்து ஆண்டுகளில் பத்து கோடி மரங்களை நடுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் பகுதி மக்கள் வசிக்கும் பகுதியில் உள்ள அரசுப் பள்ளி மற்றும் விடுதிகளில் ஆசிரியர்கள் முறையாகத் தங்கி

பணிபுரிவதில்லை. இதனால் மாணவர்களின் எதிர்காலம் பாதிப்புக்குள்ளாகி உள்ளது. குறிப்பாக பச்சைமலை பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இருந்தும் அடிக்கடி பணிக்கு வராமல் விடுப்பு எடுத்துக்கொள்கிறார்கள். இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் பாதிப்பு அடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அட்டவணையிடப்பட்ட பழங்குடியினர் 6 இலட்சத்து 51 ஆயிரம் பேர் உள்ளனர். அவர்களில் சுமார் 1 இலட்சத்து 4 ஆயிரம் பேர் சேலம் மாவட்டத்தில் உள்ளனர். காப்புக் காடுகளுக்கு நடுவே உள்ள பழங்குடியினர் கிராமங்களில் செயல்படும் அனைத்து மேம்பாட்டுப் பணிகளும் அந்தந்தத் துறையின்மூலம் செயல்படுவதைத் தவிர்த்து, அனைத்தையும் வனத் துறையின்மூலம் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மருத்துவத் துறை, கல்வித் துறை, ஊரக வளர்ச்சித் துறை போன்ற துறைகளில் பெரும்பாலான செயல்பாடுகள் நகரங்களைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், சாலை வசதிகள் உள்ள பகுதிகளில் மட்டுமே அதிக அளவில் மேற்கொள்ளப்படுகின்றன. பழங்குடியின கிராமங்களுக்கு சரியான சாலை வசதி, தங்கும் வசதி இல்லாமல் இருப்பதால், இதுபோன்ற துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் இப்பகுதிகளில் ஆர்வத்துடன் பணிபுரிவதில்லை. எனவே, எப்போதும் வனப் பகுதிக்குள்ளேயே அன்றாடம் கிராம மக்களை சந்தித்துக் கொண்டிருக்கும் வனத் துறையினரிடம் ஒப்படைத்தால் இப்பணிகள் மேலும் வேகத்துடனும், சிறப்புடனும் நடைபெறும். உதாரணத்திற்கு ஜவ்வாது மலையில் பள்ளிகள் வனத் துறையால் நடத்தப்படுகிறது. இதுபோல் இதர ஊரக வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டுப் பணிகள் வனத் துறையின் மூலமே மேற்கொள்ளப்படும்பட்சத்தில், அந்தந்தத் துறைகளின்மூலம் மாவட்ட. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு நிறைய நேரம் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு) பரவாயில்லை, தொகுதிப் பிரச்சினையை பேரவைச் செயலகத்தில் எழுதிக் கொடுத்துவிடுங்கள், அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படும்.

**திருமதி ர. சுபா:** தொகுதிப் பிரச்சினைகள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு உட்பட்ட வீரகனூர் பொன்னாளியம்மன் அணைக்கட்டு திட்டத்தை நிறைவேற்றி அப்பகுதி விவசாயிகளின் விவசாயத்தைப் பெருக்கிடவும், குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.



எனது கெங்கவல்லி தொகுதிக்கு உட்பட்ட கடம்பூர் கழுகுமலை நீர்த்தேக்கத்தைச் சுற்றி தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முட்டல், பூமரத்துப்பட்டி மலை கிராமங்களுக்கு சாலை வசதிகள் மற்றும் மழை நீர் கிராமத்திற்குள் நுழைவதைத் தடுக்க தடுப்புச் சுவர் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனது தொகுதிக்கு உட்பட்ட பச்சைமலை கிராமத்திற்குச் செல்வதற்கு சேலம் மாவட்டம், கெங்கவல்லியில் இருந்து தம்மம்பட்டி வழியாக திருச்சி மாவட்டம், துறையூர் வழியாக பச்சைமலை செல்ல சுமார் 75 கிலோ மீட்டர் பாதையைக் கடக்க 3 மணி நேரம் செல்ல வேண்டி இருப்பதால் கால விரயம், மலைவாழ் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது.

எனவே அப்பகுதி மக்களின் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்யவும், தங்கள் தேவைகளை எளிதில் நிறைவேற்றிக் கொள்ளவும் எனது தொகுதிக்கு உட்பட்ட நினங்கரை வழியாக பச்சைமலை செல்ல வனத் துறையின்மூலம் சாலை வசதி அமைத்துக் கொடுத்தால் 20 கிலோ மீட்டர் பயணத் தொலைவில் அரை மணி நேரத்தில் பயணம் செய்து அப்பகுதி மக்களின் தேவைகளை எளிதில் பூர்த்தி செய்ய முடியும். எனவே, இதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, what is your Point of Order? (குறுக்கீடு) என்ன clarification?

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன தலைமைச் செயலாளர் தலைமையிலே அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு என்பது, 2006 ஆம் ஆண்டு வன உரிமைச் சட்டத்தை அமல்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட குழுவாகத்தான் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வன நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார். அந்தக் குழு, பட்டா வழங்குவது சம்பந்தமான விவரங்களைப் பெற்று அரசுக்கு முன்வைத்திருக்கிறதா, அந்தக் குழு எப்போது அமைக்கப்பட்டது என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், வனங்களைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்திக்கான செயலாக்கம் குறித்து மாநில தலைமைச் செயலாளரை தலைவராகக் கொண்ட ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு 6 மாதங்களுக்கு ஒரு முறை கூடி ஆக்கிரமிப்புகள் குறித்து விவாதித்து அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் வருவாய்த் துறை, காவல் துறை, வனத் துறை அலுவலர்கள் கொண்ட மாவட்ட அளவிலான இயக்கக் குழு அமைக்கப்பட்டு, மாதம் ஒருமுறை கூடி, வன நிலங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு விவாதித்து நடவடிக்கை எடுத்து வருகிறது. கடுமையான எதிர்ப்புகளுக்கிடையே வனப் பணியாளர்கள் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதிலும், புதிய ஆக்கிரமிப்புகள் ஏற்படாத வகையிலும் வன நிலத்தைப் பாதுகாத்து வருகின்றனர். ஆக்கிரமிப்புகளை அகற்ற தமிழ்நாடு வனச் சட்டம் 1882 பிரிவு 68 (ஏ)–ன்கீழ் ஆக்கிரமிப்பாளர்களுக்கு அறிவிப்பு வழங்கி, சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை ஏற்படாத வகையில், வருவாய்த் துறை மற்றும் காவல் துறை உதவியுடன் நிலங்களிலேயுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகின்றன. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு Point of Order–ஆ, Point of Clarification–ஆ? *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் காடுகள் சட்டத்தைத் திருத்தி, அதில் தனியார் காடுகளுக்கான விளக்கத்தைத் திருத்தி அமைக்கவும், பட்டா நிலங்கள் மற்றும் sites of buildings–கட்டடங்கள் மற்றும் தேயிலை, இரப்பர், காபி போன்ற பயிர்களைப் பயிர் செய்யும் இந்த நிலங்களுக்கு இவற்றிலிருந்து விதிவிலக்கு அளித்தும், அரசு இந்தச் சட்டத்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருமாறும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 110 ஏக்கர்தான் இதுபோன்ற நிலங்கள் இருப்பதாக வெங்கடகிருஷ்ணன் கமிட்டி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தற்போது 79 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இதற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. இவற்றில்



ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதன்மூலமாக உண்மை நிலையை வெளிக் கொணர்ந்து, அந்தப் பட்டாதாரர்களுக்கு, விவசாயிகளுக்கு ஒரு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

*பிற்பகல் 12–40*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் காடுகளால் பாதிக்கப்படுகின்ற நிலைமை பற்றி மாவட்ட மக்களுடைய பல்வேறு கோரிக்கைகளும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது. அதை ஆய்வு செய்து அதற்கான நடவடிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு நான் ஏற்கெனவே தெளிவாக சொல்லி இருக்கிறேன், What is a Point of Order? What is a Point of Clarification? என்று. Again and again, Point of Order, Point of Clarification என விவாதத்தை deviate செய்ய வேண்டாம். தயவுசெய்து Question hour–ல்தான் Sub–question, அதுவும் மூலக் கேள்வி வரும்போது கேட்கலாமேயொழிய, தொடர்பில்லாமல் இப்போது நீங்கள் கேட்கக் கூடாது. எனவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் இன்றைக்கு பதில் சொல்லிவிட்டார். இனிமேல் வருங்காலத்தில் தயவு செய்து இந்தமாதிரி வழக்கத்தைத் தவிர்த்து விடுங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. க பாலகிருஷ்ணன், Is it a Point of Order or Point of Clarification? *(குறுக்கீடு)* Point of Clarification என்று அதைச் சொல்லிக் கேளுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Clarification என்னவென்று சொன்னால், 2 எக்டேருக்கு மேலே இருக்கிற நிலங்கள்தான் அந்தத் தனியார் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட வேண்டுமென்றும், 2 எக்டேருக்குக் கீழே இருக்கிற நிலங்களை அந்தச் சட்டத்திற்குள்ளே

கொண்டு வரக்கூடாது என்றும் 1949 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழக அரசு இதற்கு முன்னாலே கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்ட அரசாணையின்படி அனைத்து நிலங்களையும் அந்தத் தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குத் தீர்வு கண்டிட தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தைப் பொறுத்தவரை அனைத்து மாவட்டங்களிலும் அந்த 2 எக்டேர் நிலம் வரை, அதற்கு மேல்தான் செயல்படுத்தி இருக்கிறார்கள். ஆனால், நீலகிரி மாவட்டத்தில் மட்டும் முதுமலை சரணாலயத்தை ஒட்டிய 10 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு தான் அந்தச் சிறிய அளவு நிலங்கள்கூட 1991 இல் அந்தச் சட்டத்தின்கீழ் கொண்டு வந்து அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். பல்வேறு கோரிக்கைகள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. விரைவில் அதை ஆய்வு செய்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள். What is your Point of Clarification?

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பிறந்த தினத்தின்போது 64 இலட்சம் மரக் கன்றுகள் நட்டதாக அமைச்சர் அவர்கள் கூறி இருக்கின்றார்கள். மகிழ்ச்சியான செய்தி. அதேநேரத்திலே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 3–9–2007 அன்று தனியார் நிலங்களிலே வளர்க்கப்படுகின்ற மரங்கள் வெட்டிக் கொண்டு செல்வதற்கு இருந்த தடையை முழுவதுமாக நீக்கி விட்டார்கள். அதன்மூலமாக கடந்த 5 ஆண்டுகளிலே ஏறத்தாழ இரண்டரை கோடி நன்கு வளர்ந்த மரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. Timber Transport Act என்ற அந்தச்



சட்டத்தின்மூலமாக அந்தத் தடையை மீண்டும் கொண்டு வந்து வனத் துறைக்கு அதிலே வருவாயும் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. எனவே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தைப் பசுமைப் போர்வையாக ஆக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார்கள். அந்த வகையில் இந்தச் சட்டத்தை மீண்டும் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்து நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

***திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று இந்திய தலைவர்கள் மட்டுமல்ல, உலகத் தலைவர்களும் போற்றுகின்ற அளவிற்கு நல்ல திட்டங்களைத் தந்து, சிறப்பான ஆட்சி புரிந்து கொண்டிருக்கின்ற எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர், (மேசையைத் தட்டும் ஒலி) கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி எனது உரையைத் துவக்குகின்றேன்.

பிற்பகல் 12–45

சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு மகிழ்ச்சியடைகின்றேன். காரணம், இந்தத் துறை பழமையான துறை. பொதுப் பணித் துறை, காவல் துறைக்கு அடுத்ததாக, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மிகவும் பழமை வாய்ந்த துறை. இந்தத் துறை பாதுகாக்கப்பட்டால்தான் மனித இனம் பாதுகாக்கப்படும், வாழ முடியும் என்ற ஒரு நிலை உள்ளது. வளர்ந்து வருகிற மக்கள் தொகையின் பெருக்கம், விஞ்ஞானத்தின் வளர்ச்சி,

தொழிற்சாலையின் வளர்ச்சி உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறது. உலக நாடுகள் எல்லாம் இன்றைக்கு வெப்பமயமாதலைக் கண்டு பயப்படுகின்றன. என்னவென்றால், வெப்பமயமாதலைத் தடுக்க வேண்டுமென்கிற சிந்தனை அனைத்து உலக நாடுகளிலும் இருக்கிறது. அப்படி அந்த வெப்பமயமாதலைத் தடுக்க வேண்டும் என்றால், மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். தொழிற்சாலைகளில் இருந்து வருகின்ற கழிவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் வனங்கள் பாதுகாக்கப்பட்டு, அந்த அழிவில் இருந்து நாம் தப்பிக்க முடியும் என்ற எண்ணம் உலக நாடுகள் அளவில் இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மக்கள் தொகையின் வளர்ச்சியைப் பார்க்கிறபோது 1950–ல் உலக மக்கள் தொகை 225 கோடியாக இருந்தது. ஆனால், 2012–ல் மக்கள் தொகையைப் பார்க்கின்றபோது 700 கோடியைத் தாண்டி இருக்கிறது, மக்கள் தொகையினுடைய வளர்ச்சி. அதேபோல இந்தியாவில் மட்டுமல்ல, உலக அளவில் தொழிற்சாலைகள் விஞ்ஞான ரீதியாக பல மடங்கு பெருகி வருகின்றன. இதையெல்லாம் பார்க்கின்றபோது தொழிற்சாலைகள் மூலமாக, மற்ற வாகனங்கள் மூலமாக நமது காற்று மண்டலத்தைப் பாதிக்கின்ற காரணிகள் நான்கு இருக்கின்றன. 1) Carbon dioxide, 2) chloro flouro carbon 3) Nitrous Oxide and 4) Carbon monoxide

Carbon dioxide என்பது எல்லோருக்கும் தெரியும். அது கரியமில வாயு. தீப்பிடிக்காது. அந்தக் கரியில் கங்கு இருந்துகொண்டேயிருக்கும். அண்ட மண்டலத்தில் இருக்கிற குளிர்ச்சியை தணித்து, வெப்பத்தை உருவாக்கக்கூடிய செயல் இந்த Carbon dioxide–க்கு இருக்கிறது. chloro flouro carbon–க்கு என்ன தீங்கு சக்தி இருக்கிறது என்று சொன்னால், அது எதிலிருந்து வருகிறது என்று சொன்னால் விமானம் (Aeroplane), இன்னொன்று குளிர்சாதன கருவி, A.C. இன்னொன்று குளிர்சாதனப் பெட்டகம், Refrigerator. ஓசோன் மண்டலத்தை பாதிக்கப்பட்ட வைக்கும் விஷ வாயுகள் இந்த மூன்றின் மூலமாக வருகின்றன. மூன்றாவது Nitrous Oxide and Carbon monoxide; இவை எதில் இருந்து வருகின்றன, இவற்றால் என்ன தீமை என்று சொன்னால் அமில மழையை உருவாக்கக்கூடிய தன்மை இந்த இரண்டிற்கும் இருக்கிறது. இது எப்படி வருகிறது என்று சொன்னால் வாகனங்கள் ஓடும்போது பார்த்தால் கார்பன் டைஆக்ஸைடு வெளி வருகிறது. அதே வாகனம்



நிற்கும்போது இன்ஜினை off செய்யாமல் விட்டுவிட்டால் இந்த இரண்டு விளைவுகள் வருகிறது. அதனால்தான் நான் காரில் செல்லும்போது வண்டி நின்றால் சாவியை எடுத்துவிடுவேன், இதுவரைக்கும் எனக்குத் தெரியாது. சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அதேபோல் வாகனம் நிற்கும்போது சாவியை எடுத்துவிட்டால் நாட்டிற்கும் நல்லது, நம் மக்களுக்கும் நல்லது. நிற்கும்போது வண்டி on ஆகியிருந்தால் அமில மழை பெய்யக்கூடிய வாய்ப்பு நாட்டில் இருக்கிறது.

உலக நாடுகள் பயப்படுவது என்னவென்றால், 2 சதவிகித வெப்பம் உயர்ந்தால் மகரந்த சேர்க்கை பாதிக்கப்படும். பூச்சிகள், வண்டுகள் ஒரு தாவரத்திலிருந்து இன்னொரு தாவரத்திற்கு சென்று இயற்கையாக விவசாயத்தை வளர்க்கச் செய்கிறது. 2 சதவிகிதமாக வெப்பம் உயர்ந்தால் மகரந்தச் சேர்க்கை பாதிக்கப்படும். 4 சதவிகிதமாக வெப்பம் உயர்ந்தால், விவசாயிகளின் தோழன் என்று சொல்லக்கூடிய மண்புழு இறக்க நேரிடும். ஆக மொத்தமாக அந்த வெப்ப உயர்வால் விவசாயம் முழுவதுமாக அழியக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதை உணர்ந்துதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வளரும் நாடுகளில் தென் மூலையில் தமிழ்நாட்டின் ஒரு பகுதியில் முதலமைச்சராக இருந்து வனங்களை, வனத்தில் உள்ள மரங்களை – புதிய மரங்களை வளர்க்க வேண்டும் என்று உயர்ந்த சிந்தனையில், எந்த முதலமைச்சரும் செய்திடாத சாதனையாக தனது 64–வது பிறந்த நாளை முன்னிட்டு 64 இலட்சம் மரக் கன்றுகளை (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.29.44 கோடிக்கு நட்டு சிறப்பு செய்த ஒரே முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இது பெரிய சிந்தனை. ஆனால் வெளியில் சொல்லலாம், என்ன பெரிய மரத்தை நட்டுவிட்டீர்கள் என்று, மரம் நட்டால்தான் மனிதன் உயிருடன் இருக்க முடியும். நமக்கு வேண்டிய சுத்தமான Oxygen கிடைக்கும். தொழிற்சாலைமூலமாக கரியமில வாயுக்கள் மண்டலத்தில் இருக்கிறது. அதை உறிஞ்சக்கூடிய தன்மை மரத்திற்கு மட்டும்தான் இருக்கிறது. இயற்கையாக Carbon dioxide, தண்ணீர், சூரிய ஒளி இந்த மூன்றையும் வைத்துதான் மரத்தில் பச்சையம் தயாராகிறது.

பிற்பகல் 12–50

இயற்கையாகவே Carbon dioxide காற்று மண்டலத்தில் இருக்கின்றது. தண்ணீர் வேருக்கு அடியில் இருக்கின்றது. சூரிய ஒளி அதன் உந்துதலின் காரணமாக மரங்களில் பச்சையம்

தயாரிக்கப்படுகிறது. இந்த மரங்களில் பச்சையம் தயாரிப்பதற்கு பதிலாக, உலக நாடுகளில் இருக்கின்ற ஆராய்ச்சியாளர்கள் செயற்கை முறையில் பச்சையம் தயாரிக்க ஏற்பாடு செய்தார்கள். அந்த வாய்ப்பு கைவிடப்பட்டது. முடியவில்லை. மரங்கள் வளர்த்தால் மட்டுமே பச்சையம் தயாரிக்க முடியும். ஆக்ஸிஜனை வெளியிடக்கூடிய சக்தி மரங்களுக்கு மட்டும்தான் இருக்கிறது. Carbon dioxide உறிஞ்சக்கூடிய சக்தி மரங்களுக்கு மட்டும்தான் என்ற செய்தி அறிந்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 64 இலட்சம் மரக்கன்றுகளை நட்டு சிறப்பு செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல், வெப்பமயமாதலைத் தடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு 14.62 கோடி ரூபாய் செலவில் 14.62 இலட்சம் குடிசைகளில் உள்ள குண்டு பல்புகளை அகற்றி அவற்றுக்குப் பதில் சி.எப்.எல். பல்புகளை இலவசமாக வழங்கி சாதனையை புரிந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) உலக நாடுகளில் தற்போது குண்டு பல்பை தடை செய்திருக்கிறார்கள். இந்தியாவில் எந்த அரசும் முன்வரவில்லை. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதனைப் புரிந்துகொண்டு, குண்டு பல்புகளை அகற்றி சி.எப்.எல். பல்புகளை வழங்கி ஒரு சாதனை படைத்திருக்கிறார்கள்..

இந்த சி.எப்.எல். பல்பினை போடுவதனால் நமக்கு என்ன சிறப்பு என்று சொன்னால், ஒன்று, வெப்பத்தைக் குறைக்கும், இரண்டாவது மின்சாரம் சேமிப்பாகும், எவ்வளவு என்றால், 45 மெகாவாட் மின்சாரம் சேமிக்கக்கூடிய திட்டத்தை உருவாக்கித் தந்தது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, 686 கோடி ரூபாய் செலவில் ஜப்பான் நாட்டு உதவியுடன் வனங்களையும், வனத்தில் உள்ள மரங்களைக் காப்பாற்றத் திட்டம், ரூ.20.87 கோடி செலவில் வனப் பகுதியில் பயிர்கள் நட்டு, வன விலங்குகளை காப்பாற்றத் திட்டம், யானைகள் விவசாயத்தை பாதிக்காமல் இருக்க அகழிகள் வெட்டுவதற்கு ரூ.10 கோடி செலவில் திட்டம், யானை மிதித்து இறந்தால், கடந்த கால ஆட்சியில் ஒரு இலட்சம் ரூபாய் நிதி என்று இருந்ததை தற்போது மூன்று இலட்சம் ரூபாயாக உயர்த்திக்கொடுத்த ஒரே அரசு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலந்தொட்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலந்தொட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற 6



எழுத்து 6 முறை ஆட்சியில் இருந்திருக்கிறது. ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு சாதனையை படைத்துத்தான் ஆட்சியை விட்டு இறங்கியிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் இருக்கும்போது 3 முறை இந்த மன்றத்திற்கு கருணாநிதியால் வரமுடியவில்லை. தொடர்ந்து முதலமைச்சராக இருந்த பெருமை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை மட்டுமே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) பல திட்டங்களைக் கொடுத்தார்கள். சத்துணவுத் திட்டம், இலவச வேஷ்டி சேலை வழங்கும் திட்டம்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டங்களைப் பொறுத்தவரையில், தொட்டில் குழந்தைத் திட்டம், அன்னை தெரசாவால் பாராட்டப்பட்ட திட்டம். மழை நீர் சேகரிப்புத் திட்டம், காவிரி நடுவர் ஆணையம் பெற்ற திட்டம், மகளிர் காவல் நிலையம், பெண்கள் கமாண்டோ படை, கடலோரக் காவல் படை போன்றவற்றை அமைத்தது புரட்சிகரமான திட்டங்கள் 20 கிலோ விலையில்லா அரிசி, மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி, மாணவர்களுக்கு மடிக்கணினி அனைத்தும் இலவசம், ஆடு, மாடு இலவசம், பசுமை வீடுகள் என்று அ.இ.அ.தி.மு.க. 6 எழுத்து ஆட்சி சிறப்பாக இருந்தது. தி.மு.க. ஆட்சியைப் பார்த்தால் மிகவும் மோசமாகத்தான் இருந்திருக்கின்றது என்று சொல்லவேண்டும். தி.மு.க. ஆட்சியை நான் பாரட்டுவேன். எந்த ஆட்சியைப் பாராட்டுவேன் என்று சொன்னால், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது ஆண்ட தி.மு.க. ஆட்சியை நான் பாராட்டுவேன். அதற்குப் பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவிற்குப் பிறகு திருக்குவளை மு. கருணாநிதி என்ற தி.மு.க. தன் குடும்பத்தில் சிக்கிய தி.மு.க.–வை பாராட்ட நான் முன்வரப்போவதில்லை. அவருடைய ஆட்சியைப் பற்றி பத்திரிகையில் ஒரு article வந்தது. அதை நான் படிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைக் கொஞ்சம் உன்னிப்பாக பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** படித்துவிட்டு, கொஞ்சம் சீக்கிரமாக உரையை முடியுங்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** ** தி.மு.க. என்ற மூன்று எழுத்தினுடைய விளைவுகள், உறவு என்ற மூன்று எழுத்தில் சிக்கி,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆட்சி என்ற மூன்று எழுத்தில் ஏறி, ஊழல் என்ற மூன்று எழுத்தில் விழுந்து, பணம் என்ற மூன்று எழுத்தை வாரிக் குவித்து, ஜெயில் என்ற மூன்று எழுத்தில் தங்கி, கம்பி என்ற மூன்று எழுத்தை எண்ணி, (மேசையைத் தட்டும் ஒலி) bail என்ற மூன்று எழுத்திற்காக ஏங்கி, டெல்லி என்ற மூன்று எழுத்தில் தங்கி, சோனியா என்ற மூன்று எழுத்தைச் சந்தித்து, கருணை என்ற மூன்று எழுத்தில் மனு போட்டு, தி.மு.க. என்ற மூன்று எழுத்து இன்று குஷ்பு என்ற மூன்று எழுத்தை நம்பியிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைவிட அழிவு என்ற பாதையில் தி.மு.க. இருக்கின்றது.

பிற்பகல் 12–55

சுற்றுச்சூழல் வனத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் சுற்றுச்சூழல் துறைக்கென்று ஒரு அமைச்சரை நியமித்த ஒரே அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில், இன்றுகூட 110-வது விதியின்கீழ் 4 சிறப்பான திட்டங்களைக் கொடுத்தார்கள். அதில், தொழிற்சாலைகளுக்கு உட்பட்ட திட்டங்களும் இருக்கின்றன. அதேசமயத்தில், அங்கன்வாடியில் சமையல் செய்யும்போது சுற்றுச்சூழல் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக புகையில்லா அடுப்பு வழங்கி சாதனை படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பிளாஸ்டிக்கினால் நம் நாட்டிற்கு கேடு இருப்பதை உணர்ந்து 2003–2004–லேயே பிளாஸ்டிக் கலந்த தார்ச் சாலை போட்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பித்தார்கள். இப்போது 2012–2013 ஆம் ஆண்டிலே 100 கோடி ரூபாய் செலவிலே அந்தத் தார்ச் சாலை திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டிருப்பதன் காரணமாக இன்றைக்கு பிளாஸ்டிக் ஒழிக்கப்படுகின்ற நிலையை உருவாக்கித் தந்தவர் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மணியடிக்கப்பெற்றது) பொறுங்கள் துணைத் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள். நான் சீக்கிரம் உரையை முடியுங்கள் என்று சொன்னபோது உறுப்பினர் அவர்கள் ** என்று சொன்னார். அந்த வார்த்தை அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** நல்லது, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து, தகவல் தொழில்நுட்பம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2010–2011 இல் ரூபாய் 42,100 கோடியாக இருந்த நமது மாநிலத்தின் மென்பொருள் ஏற்றுமதி, 2011–2012 இல் ரூபாய் 48,000 கோடியாக உயரும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதேபோல், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைப்பேன் என்ற வாக்குறுதியையும் தந்திருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பாராட்டு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரைப்படத்தில் நடித்தால், கட்சியைத் துவங்கினால், ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்று சில பேர் தப்பான கணக்கு போட்டுக்கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். நான் பேசுவதை முழுவதுமாகக் கேட்டுவிட்டு, பிறகு பதில் சொல்லுங்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள், திரைப்படத் துறையில் நடித்து, தனக்கென ஒரு பாணி அமைத்து மக்களிடத்தில் ஏகபோக ஆதரவைப் பெற்றவர்கள். ** சாதாரண விஷயம் அல்ல ஆட்சிக்கு வருவது. நடிகர் ஒருவர் ஆட்சிக்கு வரக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்தவர் மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அவரால்தான் ஆட்சியைப் பிடிக்க முடிந்தது. **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** ** (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முடிவிற்கு வரவேண்டுமல்லவா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடிவிற்கு வாருங்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** ** நான் சொல்வது, (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன். அடுத்து நீங்கள் பேசுகிறீர்கள் அல்லவா? ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** ** (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்த பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்கார்ந்து கொண்டே பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) உட்கார்ந்து கொண்டு பேசவேண்டாம். நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்.

*பிற்பகல் 1–00*

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழகத்தினுடைய அரசியல் வரலாற்றை இங்கே கோடிட்டுக் காட்டினார்கள். மேலும், துறையின் வாயிலாக இருக்கின்ற செய்திகளையும் சொல்ல இருக்கிறார்கள். அதனால் அவர் அதைத் தொடர்ந்து சொல்வார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைதியாகக் கேட்கவேண்டுமென்று மாண்புமிகு துணைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** நான் முழுவதும் சப்ஜெக்ட் பற்றிதான் பேசியிருக்கிறேன். (குறுக்கீடு) வனத் துறையில் என்னென்ன பாதிப்பு இருக்கிறது என்ற சப்ஜெக்ட் இருக்கிறது. தகவல் தொழில்நுட்பத் துறையில் என்னென்ன நன்மைகள் இருக்கின்றன என்று பேசியிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், இன்றைக்கு இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** அதேபோல வன ஊழியர்களுக்கு தற்பொழுது (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தொகுதி கோரிக்கைகள் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆண்டிப்பட்டியில் திட்பரவு, மேகமலை தும்மக்குண்டு ஊராட்சிகளில் வனப் பகுதியில் 100 ஆண்டுகளாக பயிர் செய்து வரும் மக்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முழுமைபெறாத கிழவன்கோவில் சாலையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமர்ந்து கொண்டு பேசாதீர்கள், please. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள். (குறுக்கீடு) திரு. இரா. அண்ணாதுரை, உட்காருங்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். வனம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை மானியக் கோரிக்கையின் விவாதத்தில் பங்கேற்பதற்கு வாய்ப்புத் தந்ததற்காக (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், தயவு செய்து உட்காருங்கள், வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் பேசி முடித்துவிட்டு அடுத்த உறுப்பினரையும் கூப்பிட்டு விட்டீர்கள். அந்த உறுப்பினர் தொடர்ந்து பேசட்டும். ஏனென்றால் அவர்களுடைய கட்சி உறுப்பினர்தான் அவர். அவர் இயக்கத்தைச் சேர்ந்தவர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். அவரை தயவு செய்து பேசுவதற்கு அனுமதி அளிக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், நீங்கள் உரையாற்றுங்கள். (குறுக்கீடு) உங்களுடைய குறுக்கீடு எதைப் பற்றியது? Point of Order–ஆ இல்லை clarification–ஆ? எதையொட்டி நீங்கள் பேசப்போகிறீர்கள்? உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கவேல். (குறுக்கீடு)

முடிந்துவிட்டது, விடுங்கள். (குறுக்கீடுகள்) திரு. தங்கவேல், தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார். (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். Please பின்வரிசையிலிருந்து யாரும் பேசவேண்டாம். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தந்திருக்கிறேன் இல்லையா? அவர் பேசட்டும், இல்லையென்றால் அவர் உட்காரட்டும், நீங்கள் பேசுங்கள். நீங்கள்தானே இப்போது பேசினீர்கள்?

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மணி 1–04 ஆகிறது. இரண்டு மணிக்கு சபையை முடிக்கவேண்டும். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் பேசுவதற்கு நீங்கள் வாய்ப்பளித்திருக்கின்றீர்கள். மாண்புமிகு இரண்டு உறுப்பினர்கள்தான் பேசியிருக்கிறார்கள். அதுவும் திருமதி ர. சுபா அவர்கள் பேசுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்களுடைய நேரத்தையும் சேர்த்து எடுத்துக்கொண்டு பேசிமுடித்துவிட்டார். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள் தேவையில்லாத விவாதத்தை இங்கே மீண்டும் துவக்கியிருக்கிறார். அதனால் அவர் பேச ஆரம்பித்த அந்த விவாதத்தை சபைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டு, விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிற்பகல் 1–05

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தாங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கவேல் அவர்களைப் பேச அழைத்துவிட்டீர்கள். அதற்கிடையில், அவருடைய இயக்கத்தைச் சார்ந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர் கேள்வி கேட்க எழுந்தபோது, நான் தங்களிடத்தில் ஒரு பணிவான வேண்டுகோளை வைத்தேன். அவர் இயக்கத்தைச் சேர்ந்தவரே பேச வருகிறார், அவருக்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்டேன். அதற்கு நீங்கள் அனுமதி கொடுத்தீர்கள். இடையில் மற்றொருவரையும் நீங்கள் அழைத்ததன் காரணமாக, இடையில் வந்தவர்களின் அனைத்து பேச்சுகளையும் தயவு செய்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டு, தொடர்ந்து திரு. தங்கவேல் அவர்களை பேச அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார், please sit down. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கோரியபடி, திரு. சந்திரகுமார், நீங்கள் குறிப்பிட்டு சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை அமைதியான முறையில், நல்ல முறையில், சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும் 2 நாட்கள்தான் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) அமைதியாகக் கேளுங்கள். ஆக்கபூர்வமான கருத்துகளை எதிர்க்கட்சியில் இருக்கின்ற உறுப்பினர்கள் எந்த கேள்விக் கேட்டாலும் இங்கே இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அழகாக பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இடையிலே—அவை சற்று மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்று சொன்னால்—சில நேரத்தில் மகிழ்ச்சியாக சில கருத்துகளைச் சொல்லிவிடுவார்கள். அதையெல்லாம் பெரிதுபடுத்திக் கொண்டு–(குறுக்கீடுகள்) தயவு செய்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்களைப் பேச அனுமதியளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. பார்த்தசாரதி, உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர் இருக்கைக்குச் செல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள், ஏன் முன்புறம் வந்தீர்கள்? நீங்கள், உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கவேல் அவர்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. வி.சி. சந்திரகுமார். (குறுக்கீடுகள்) நான் என்னுடைய அறையிலிருந்து கேட்டேன். (குறுக்கீடுகள்) நான் என்னுடைய அறையிலிருந்தே கேட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள் சொன்னது, இந்த மாதிரி நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் கட்சி ஆரம்பித்ததைச் சொன்னார். ** அதில், வேறொன்றும் மாறுபட்ட கருத்து இல்லை. அதை ஏன் ஒரு விவாதப் பொருளாக்குகிறீர்கள்? அதோடு விடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கவேல் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே. தங்கவேல்:** பழங்குடியின மக்களின் கோரிக்கைக்குச் செவிமடுத்து (குறுக்கீடுகள்)

**திரு. வி.சி. சந்திரகுமார்:** அவர் சொன்ன கருத்துகளை நீங்கள் நீக்கி விடுங்கள். என்னுடைய கருத்தையும் நீக்குங்கள் என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதில் நீக்குகிற அளவிற்கு என்ன இருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் என்னைப் பார்த்து பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், என்னைப் பார்த்து பேசுங்கள். Please sit down. (குறுக்கீடுகள்) என்னைப் பார்த்து பேசச் சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சந்திரகுமார், தயவு செய்து உங்கள் கட்சியைச்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரையும் அமைதிப்படுத்தி உட்காரச் செய்யுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்களை என்னைப் பார்த்து பேசச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) என்னைப் பார்த்து பேசச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், என்னைப் பார்த்து பேசுங்கள்; தயவு செய்து நீங்கள் அங்கே பார்த்துப் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) நேருக்கு நேராகப் பார்த்து பேசுவதைத் தவிர்த்து விடுங்கள், please. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சந்திரகுமார், ஒரு நிமிடம் உட்காருங்கள். தயவு செய்து உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். நான் என்னுடைய அறையில் இருந்து இந்த சபை நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். அவர், நான் ஏற்கெனவே சொன்ன அந்தக் கருத்தைத்தான் சொன்னாரே தவிர, எதையும் அவர் ஒரு மாறுபட்ட கருத்தில் சொல்லவில்லை. ஆனால் அந்தக் கருத்துக்கு கொஞ்சமும் சம்பந்தமில்லாமல் நீங்கள்தான் சொன்னீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்னது அதற்குத் தொடர்பே இல்லாதது. அதனால்தான் நான் அதை நீக்கினேன். Unparliamentary word ஆகவோ அல்லது வேறு ஏதோ மாறுபட்ட கருத்தாகவோ இருந்தால் என்னால் அதை நீக்க முடியும். அவர் ஒரு கட்சி ஆரம்பித்ததைப் பற்றி சொல்லும்போது, அது உண்மைதானே? 1972 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் கட்சி ஆரம்பித்தது உண்மைதானே? (குறுக்கீடுகள்) அதை நான் எப்படி நீக்க முடியும்? (குறுக்கீடுகள்) திரு. சந்திரகுமார், நீங்கள் எழுந்து குறிப்பாக எந்த வார்த்தையை நீக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

பிற்பகல் 1–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) அது பல முறை சொல்லப்பட்டிருக்கிறது. அது சம்பந்தம் இல்லாதது. ஒரு தலைவர் கட்சி ஆரம்பித்தார் என்று நீங்கள் சொன்னது சரி. ஆனால், அதற்கு அடுத்து சொன்ன வார்த்தை சிறிதும் தொடர்பில்லாததுதான். ** என்ற வார்த்தைகூட அவைக் குறிப்பில் இருக்காது. தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து உட்காருங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள். (குறுக்கீடுகள்) ஒன்றும் சொல்லவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். வனம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் பங்கேற்க வாய்ப்பளித்ததற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழங்குடியின மக்களின் கோரிக்கைக்கு செவிமடுத்து அரசு வன உரிமைச் சட்டம், 2006 பற்றி கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளதை வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன விளக்கம் சொல்கிறீர்கள்? ** (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள் என்ன பேசியிருக்கிறார் என்பதை, அவை நடவடிக்கைக் குறிப்பை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாங்கிப் பார்த்து, அதற்குப் பின்னால் தீர்ப்பு வழங்குவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களின் வாழ்நிலையை மேம்படுத்திட வன உரிமைச் சட்டம் 2006–ஐ அமலாக்குவது அவசியம். இந்தச் சட்டத்தின்படி பழங்குடியின மக்களின் பயன்பாட்டில் உள்ள நிலங்களுக்கு 4 எக்டேருக்கு மிகாமல் பட்டா பெறலாம். மரங்களைத் தவிர்த்து, மூங்கில், தேன், நெல்லிக்காய், புளி போன்ற காடுவிளை பொருட்களை விற்கலாம். உயிரினக் காப்பு வனம் அல்லது பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியிலும்கூட பழங்குடியின மக்கள் வாழ வழி செய்வதுடன், எக்காரணத்தைக் கொண்டும் காடுகளை விட்டு அவர்களை வெளியேற்ற முடியாத வண்ணம் பாதுகாக்கிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவை நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்துவிட்டு, என்னுடைய தீர்ப்பை வழங்குகின்ற வரையில் பத்திரிகைத் துறையைச் சார்ந்தவர்கள் அதை வெளியிடவேண்டாம் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை இந்த ஆண்டிலேயே அமலாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். பழங்குடியின மக்கள்மீது வனத் துறையினுடைய ஆதிக்கம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் மற்றும் வனவாழ் மக்களின், வன உரிமைகள் அங்கீகரிப்புச் சட்டம் 2006 ஆம் ஆண்டு மத்திய அரசால் இயற்றப்பட்டு, வனப் பகுதியில் வாழும் பழங்குடியின மக்கள் தொடர்ந்து மூன்று தலைமுறையாக, 75 ஆண்டுகள் வனப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு 4 எக்டேருக்கு மிகைப்படாமல் அவர்கள் பயன்படுத்திக்கொள்ளும் வன நிலங்களில் அவர்களுக்கு உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் அந்தப் பழங்குடியின மக்களிடமிருந்து பல்வேறு மனுக்கள், அதாவது மொத்தம் 21,781 மனுக்கள் பெறப்பட்டு, இப்பொழுது 3,723 மனுக்களுக்கு பட்டா வழங்கத் தயார் நிலையில் இருக்கின்றது. 2008 ஆம் ஆண்டிலே உயர் நீதிமன்றத்திலே இது சம்பந்தமாக ஒரு வழக்கு நிலுவையில் உள்ளதால், அந்த வழக்கை அரசு விரைந்து முடித்து அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியின மக்கள்மீது வனத் துறை ஆதிக்கம் செலுத்துவது தொடர் கதையாக இருக்கிறது. உதாரணமாக சேலம், கல்வராயன் மலையில் ஆடு மேய்த்த குற்றத்திற்காக பழங்குடியினர்மீது வழக்கு பதியப்பட்டு உள்ளது. உழுவதற்குச் சென்ற டிராக்டருக்கு ஒரு இலட்சம் ரூபாய் தண்டம் வசூலிக்கப்பட்டுள்ளது. இதுபோன்று மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

பிற்பகல் 1–15

மலைவாழ் மக்களுக்கு உரிமைகள் கிடைக்கச் செய்திட அரசு உறுதி எடுக்க வேண்டும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள் சொன்ன, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கட்சியை ஆரம்பித்தார் என்ற வாசகம் மட்டும் இருக்கலாம். அதற்குப் பின்னால் அவர் சொன்ன வார்த்தைகளையும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொன்ன வார்த்தைகளையும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குவதற்கு பரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் கருத்தின்படி முதல் அந்தக் கருத்து மட்டும், புரட்சித் தலைவர் கழகத்தை ஆரம்பித்தார் என்ற அந்தக் கருத்து மட்டும் இருக்கும். அதன் தொடர்ச்சியாக வந்த கருத்துகளாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் சொன்னது, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் சொன்னது ஆகிய இரண்டும் அவைக்குறிப்பில் இருக்காது. அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதிகளிலே கால்நடை மேய்ச்சலுக்கு வசூலிக்கப்பட்டு வந்த கட்டணம் 2000 ஆம் ஆண்டிலிருந்து செம்மறி ஆடுகளுக்கு விலக்களிக்கப்பட்டது. பின்னர் 2008–2009 ஆம் ஆண்டு முதல் மாடுகளுக்கும் மேய்ச்சல் அனுமதிக் கட்டணம் முழுவதுமாக விலக்களிக்கப்பட்டு, தற்போது கட்டணம் ஏதும் இல்லாமல் அனுமதிச் சீட்டுகள் வழங்கும் முறை தொடர்ந்து இருந்து வருகிறது.

வனச் சரணாலயப் பகுதிகளைப் பொறுத்தமட்டில், கால்நடை மேய்ச்சலுக்கு வன உயிரினச் சட்டத்தின்படி அனுமதி இல்லை. வனப் பகுதியில் புதிதாக அமைக்கப்படும் தோட்டங்களுக்கு 5 ஆண்டுகள் வரை கால்நடை மேய்ச்சல் அனுமதிக்கப்படுவதில்லை. அதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட கிராம வனக் குழுவின் அனுமதியுடன் வனப் பகுதியின் தாங்கு திறனைப் பொறுத்து கால்நடை மேய்ச்சல் அனுமதிக்கப்படுகிறது.



மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கால்நடை மேய்ச்சல் சம்பந்தமாக பொய் வழக்கு போடுவதாக கூறுகின்றார். அப்படி ஏதாவது ஒரு பகுதியில் பொய்யான வழக்குகள் பதிவு செய்வதை ஆதாரங்களுடன் மாவட்ட வன அலுவலரிடம் தெரிவித்தால் அரசு அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு அமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி. மலைவாழ் மக்களுக்கு உரிமைகள் கிடைக்கச் செய்திட அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி 19 ஆண்டு காலப் போராட்டத்தின் விளைவாக வாச்சாத்தி வழக்கில் நீதி நிலைநாட்டப்பட்டதை நாம் அறிவோம். இனி தமிழகத்தில் அப்படியொரு சம்பவம் நடக்காமல் தடுக்கப்பட வேண்டும். செட்டில்மெண்டில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு உள்ளாட்சிகளில் வாக்குரிமை வழங்க வேண்டும். அவர்களுக்கு வாக்குரிமை இல்லாததால் அடிப்படை வசதிகள் பெறுவதிலும், வறட்சிக் காலங்களில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பணியாற்றவும் வாய்ப்பு மறுக்கப்படுகிறது.

மலைக் கிராமங்களுக்கு வழங்கப்படும் சோலார் மின் விளக்குகள் மற்றும் மின் பொருட்கள் அடிக்கடி பழுதாகி விடுகின்றன. எனவே, தரமான மின் சாதனங்கள் வழங்க வேண்டும். அருவிகளிலிருந்து குடிநீர் வசதி செய்து தரப்பட வேண்டும். வன விலங்குகள் வெளியேறுவதைத் தடுப்பதன்மூலம் விவசாயத்திற்கு ஏற்படுகிற பாதிப்புகளைக் குறைக்க வேண்டும். யானைத் தடுப்பு அகழிகள் வெட்டுவதைப்போல, வன விலங்குகளுக்கு காட்டிலே உணவுப் பொருட்களை உத்தரவாதப்படுத்தவும், தண்ணீர்த் தொட்டிகள் அமைத்திடவும் நிதியொதுக்கீடு தொடர வேண்டும். விவசாய நிலங்களுக்கு அருகே வசிக்கும் மான்கள், மயில்களைப் பிடித்து அடர்த்தியான வனப் பகுதிக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த வன விலங்குகள் காட்டிலிருந்து வெளியே வராமல் இருக்கவும், அவற்றிற்கான தீவனங்களைப் பயிரிடுவதற்காகவும், அதேபோல யானைத் தடுப்பு

அகழிகள் அமைப்பதற்காகவும் கடந்த 2011–2012 ஆம் ஆண்டுகளிலே 20.87 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்தார்கள். அதேபோல 2012–2013 ஆம் ஆண்டிலும் 10 கோடி ரூபாய்க்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டு அந்த பணிகளும் நடைபெறவிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றி. பெரியகுளம், கொடைக்கானலினுடைய அடிவாரப் பகுதிகளில் காட்டு மாடுகளும், காட்டுப் பன்றிகளும் மா போன்ற தோட்டங்களில் புகுந்து சேதங்களை ஏற்படுத்துகின்றன. அதனால் விவசாயம் மிகப் பெரிய அளவுக்கு பாதிக்கப்படுகிறது. அங்கு அகழிகள் வெட்டுவதோ அல்லது வேறு தடுப்பு நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்பட வேண்டும். அதேபோல் விழுப்புரம், உளுந்தூர்பேட்டை வனச் சரகத்திற்கு உட்பட்ட, கிருஷ்ணாபுரம் காப்புக் காடுகளிலும் மான், காட்டுப் பன்றி போன்ற விலங்குகளினால் விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்படுகிறது. விவசாயப் பாதிப்பிற்கு பயிர் இன்சூரன்ஸ் இல்லை என்று சொல்லப்படுகிறது. அடுத்து வனப் பகுதி வீடுகள் பாதுகாக்கப்பட வேண்டும். காட்டுப் பன்றிகளால் ஆண்டுக்கு ரூ.1,000 கோடி அளவிற்கு விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. அசாம் மாநிலத்தில் செய்யப்பட்டுள்ளதுபோல அவற்றை வன விலங்குப் பட்டியலிலிருந்து அகற்றி, அதன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளை நிலங்களில் காட்டுப் பன்றிகளின் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு வருவதையும், அதற்காக பொதுமக்களிடமிருந்து எதிர்ப்பு அதிகரித்துக்கொண்டு வருவதையும் கருத்தில்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டுப் பன்றிகளின் தொல்லையைக் கட்டுப்படுத்தும் விதமாக அரசு வனத் துறை அலுவலர்கள் மற்றும் இதர வல்லுநர்களைக் கொண்ட ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்து, அந்தக் குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில் காட்டுப் பன்றிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 1–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் யானைகள் வழித்தடம் அமைப்பதால் சுமார் 7 ஆயிரம் ஏக்கர் பரப்பில், 5 ஊராட்சிகள் ஏராளமான மலைவாழ் கிராமங்களின் மக்கள் வெளியேற்றப்படும் அபாயம் உள்ளது. முதற்கட்டமாக 515 ஏக்கர் பரப்பிலுள்ள நிலங்களை வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வாழ்வாதாரத்தை பாதிக்கும் முடிவுகளை, கிராம சபைக் கூட்டங்களில் விவாதித்து, கருத்தறிந்த பின்னரே அரசு ஏற்றிருக்க வேண்டும். ஆனால், மாவட்ட நிர்வாகத்தினர் குறுகிய நேரமே கருத்தறியும் கூட்டங்களை நடத்தியுள்ளனர். அரசு சாரா நிறுவனங்களின் அறிக்கைகளை வைத்து முடிவுக்கு வந்துள்ளனர்.

இப்பிரச்சினையில் கடந்த தி.மு.க. அரசு மக்களுக்கு எதிரான நிலை எடுத்து, மக்களை வெளியேற்றிட வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தில் முறையீட்டுக்குச் சென்றுள்ளது. இந்த அரசு, மேற்கண்ட நடவடிக்கையை வாபஸ் பெற வேண்டும். காலம் காலமாக வன விலங்குகளோடு வாழ்ந்துவரும் மக்களையே அவற்றிற்கு எதிரியாகச் சித்தரிக்கும் பார்வை தவறானது. அம்மக்களை சொந்த மண்ணிலேயே வசிக்க அனுமதிக்க வேண்டும். அதேசமயம் வனப் பகுதியில் புதிதாக எழுந்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கும், ரெசார்ட்டுகளை முறைப்படுத்தவும் அரசு சுயேச்சையான ஆய்வை நடத்துவதுடன், மக்களின் கருத்தறிந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வனத் துறையில், வனக் காவலர்களுக்கு இணையாக முழுநேரம் பணிபுரியும் தோட்டக் காவலர்களுக்கு ரூ.2,500 + ரூ.500 = ரூ.3,000 என்ற அளவில் ஊதியம் உள்ளது. வனக் காவலர்களுக்கு இணையான ஊதியம் இவர்களுக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவர்களுக்கு பணி ஓய்வுக்குப் பிறகு (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேட்டைத் தடுப்புக் காவலர்களைப் பொறுத்தவரையில், கடந்த காலத்தில், 2,500 ரூபாய் முதல் 3,000 ரூபாய் வரை சம்பளம் பெற்றுக்கொண்டுவந்தார்கள். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைவருக்கும் ஒரே சீரான சம்பளம் வழங்க வேண்டும் என்று ரூ.4,000 என கடந்த நிதியாண்டிலே உயர்த்தி வழங்கியுள்ளார்கள். அதேபோல், 10 ஆண்டுகள் அவர்கள் தொடர்ச்சியாக வேலை பார்த்தால், அரசு அவர்களை படிப்படியாக நிரந்தர ஊழியர்களாக மாற்றிக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களுடைய பணி ஓய்வுக்குப் பிறகு, அரசுச் சலுகைகள் வழங்குவது இல்லை. இவர்களுடைய பணி ஓய்வுக்குப் பிறகு, ஓய்வூதியம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம் அமல்படுத்துகிறபோது விவசாயிகள் தங்களுடைய நிலங்களை விற்கவும் வாங்கவும் முடியாமல் அவதிக்குள்ளாகிறார்கள். இவர்களுக்கு விலக்களிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரிய அளவில் பிரச்சினை உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் காடுகளைப்பற்றி ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு கோரிக்கைகள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு வரப்பெற்றுள்ளன. அது சம்பந்தமாக அரசு ஆய்வு செய்து விரைவிலே அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.



**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பத்தின் பிரம்மாண்ட வளர்ச்சியைப் பார்க்கிறோம். இந்த வளர்ச்சியை முறையாகப் பயன்படுத்தி, படித்த இளைஞர்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்ற அரசின் எண்ணம் வரவேற்புக்குரியது. இத்துறையில், ஏற்றுமதி சார்ந்த தொழில் வாய்ப்புகள், முதலீடுகளை ஈர்ப்பதைப்போல, உள்நாட்டுச் சந்தை முயற்சிகளையும் ஊக்கப்படுத்திட வேண்டும்.

பள்ளி முதல் கல்லூரி வரை பயிலும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு மடிக் கணினி இலவசமாக வழங்கப்படுகிறது. மாணவர்களின் தொழில்நுட்ப அறிவைப் பெருக்கிடவும், குறிப்பாக தகவல் தொழில்நுட்பத் துறையில் திறமையான மாணவர்களை உருவாக்கிடவும், இத்திட்டம் அடியுரமாக அமைந்திடும். மாணவர்களை சமூகத்திற்குப் பயனுள்ள வகையில் திட்டமிட்டு வளர்த்தெடுக்க வேண்டும். இளைஞர்களுக்குரிய சமூகப் பாதுகாப்புடன் கூடிய ஜனநாயகச் சூழலில் வேலைவாய்ப்புகள் அமைந்திட வேண்டும். இந்த அடிப்படையில், அரசின் தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை கடந்த ஆண்டே வெளியிடப்படுமென அரசு தெரிவித்தது. இந்த ஆண்டிலும் கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசு தனது தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையை விரைந்து வெளியிட வேண்டும்.

தமிழகத்தின் எதிர்கால வளர்ச்சியைப் பயன்படுத்திக்கொள்ள பல பெரும் நிறுவனங்களும் போட்டிபோடுகின்றன. குறிப்பாக, கல்வித் துறையில் கால் பதிக்க அவர்கள் விரும்புகிறார்கள். மைக்ரோசாஃப்ட் நிறுவனம் இன்னும் பல நிறுவனங்களும் தமிழகத்தைத் தேடி வரக்கூடும். ஆனால் அவர்களின் அடிப்படையான இலாப நோக்கமே சந்தையைக் கைப்பற்றுவதாகத்தான் இருக்கின்றன. இதுபோன்ற நிறுவனங்கள் கல்வித் துறையிலும், பிற துறைகளிலும் அனுமதிப்பது மாணவர்களின் கட்டமைக்கும் திறனை பாதித்து, வளர்ச்சியை மட்டுப்படுத்துவதுடன், தகவல் திருட்டுக்கு வாய்ப்பளிக்கும் ஆபத்து இருக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கவேல், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய குறுக்கீடுகள், அளவில்லாத குறுக்கீடுகள் வந்துவிட்டன. நிறுவன வளத் திட்ட மென்பொருளை, லினெக்ஸ் தொழில்நுட்பத்தில் உருவாக்கிப் பயன்படுத்துவது வரவேற்கத் தகுந்த முயற்சியாகும். உலகில் அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் மைக்ரோசாஃப்ட் போன்ற நிறுவனங்களின் மென்பொருட்களைப் பயன்படுத்துவதில்லை. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமென்று இங்கே பேசிக் கொண்டிருக்கின்றார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கிராமப்புற இளைஞர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கிட, கிராமப்புறங்களில் ஊரக வணிக வெளிப்பணி மையங்களை அமைப்பதற்கு ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களை ஈர்ப்பதற்காக ஏற்கெனவே உள்ள ஊரக வணிக வெளிப்பணிக் கொள்கையை மேம்படுத்தி, மறுவடிவமைத்து மேம்படுத்தப்பட்ட ஊரக வணிக வெளிப்பணிக் கொள்கை தயாரிக்கப்பட்டு, இக்கொள்கையின் மூலதனம் மற்றும் பயிற்சி மையங்கள் வழங்குவதற்கு வகைசெய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் கிராமப்புறங்களில் படித்த இளைஞர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வேலைவாய்ப்புகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசால் பெருமளவில் உருவாக்கப்படும் என்பதை இப்பேரவையின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாறாக செலவு குறைந்ததும், பாதுகாப்பானதும், தனக்கு ஏற்றபடி திருத்திக்கொள்ள முடிந்தவையுமான லினெக்ஸ் போன்ற சுதந்திர மென்பொருட்களைப் பயன்படுத்துகிறார்கள். இலவச மடிக் கணினிகளிலும், பிற அரசுத் துறை கணினிப் பயன்பாடுகளிலும்,



குறிப்பாக கல்வித் துறையிலும் சுதந்திர மென்பொருட்களைப் பயன்படுத்த வேண்டும். இதனால் நமது மாணவர்களின் சிந்தனைத் திறன் மேம்படும். விவசாயம், மருத்துவம், கல்வி போன்ற பல துறைகளுக்கு தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதற்கு பல மென்பொருட்களை நமது மாணவர்களைக் கொண்டே உருவாக்கிட முடியும். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள். (குறுக்கீடு) திரு. தங்கவேல், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. கே. தங்கவேல்:** பயன்படுத்தப்படாத கணினிகள் அதிகரிப்பு மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட விரைவான மாற்றம் காரணமாக மின்னணுக் குப்பைகள் வெகுவாக அதிகரித்திருக்கின்றன. அவை பாதரசம், காரீயம் போன்ற உலோகங்கள் மற்றும் நச்சுத்தன்மை கொண்ட பாகங்களைக் கொண்டுள்ளன. இவை சுற்றுச்சூழலுக்கு ஊறு விளைவிக்கின்றன. மின்னணுக் குப்பைகளைக் கையாளும் தொழில்நுட்பத்தை வளர்த்திட வேண்டும். வன்பொருள் உற்பத்தியை ஊக்கப்படுத்தும் அதே சமயத்தில் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பில் கவனம் செலுத்த வேண்டும்.

கேபிள் தொலைக்காட்சியை அரசுடைமையாக்கியதுடன், டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் விரிவாக்கிடும் முயற்சிகள் வரவேற்புக்குரியதாகும். மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் உள்ளூர் தொலைக்காட்சிகளில் உரிய முறையில் அனுமதி பெற்று ஒப்பந்தக் கட்டணம் செலுத்தி இயக்கப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். நியாயமான கட்டணம் வசூலிக்கப்படுவதை உத்தரவாதப்படுத்த வேண்டும். கேபிள் ஆப்பரேட்டர்களுக்காக நல வாரியம் ஏற்படுத்திட வேண்டும் எனவும் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் எனது தொகுதியினுடைய கோரிக்கைகளை. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டிஜிட்டல் மூலமான கேபிள் தொலைக்காட்சியை உருவாக்கிட வேண்டும்

என்பதைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் தற்போது தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் 31 மாவட்டங்களில் சென்னை நீங்கலாக அதன் கேபிள் டி.வி. சேவைகளை வழங்கி வருகிறது. சென்னை மாநகரில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் அதன் சேவை விரைவில் தொடங்கப்படும் என 2012–2013 ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்டத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சென்னையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் கேபிள் டி.வி. சேவை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*பிற்பகல் 1–30*

இந்திய அரசு இயற்றியுள்ள கேபிள் டி.வி. திருத்தச் சட்டம் 11–ன்படி சென்னை உள்ளிட்ட 4 பெரிய நகரங்களில் 30–6–2011–க்குள்ளும், தமிழகம் முழுவதும் 31–12–2014–க்குள்ளும் ஒளிபரப்பு டிஜிட்டல் மயமாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் இந்திய அரசு தெரிவித்துள்ள காலக்கெடு மிகவும் குறைவாக இருப்பதாலும், டிஜிட்டல் முறையில் கேபிள் டி.வி. சேவையை வழங்குவதற்காக செய்ய வேண்டிய பணிகள் அதிகமான அளவில் இருப்பதாலும், சென்னை மாநகர டிஜிட்டல் முறையில் கேபிள் டி.வி. வழங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக் கெடுவினை மேலும் 6 மாதங்களுக்கு, அதாவது 31–12–2012 வரை நீட்டிக்கக் கோரி மத்திய அரசிடம் வேண்டுகோள் வைக்கப்படவுள்ளது. சென்னை மாநகரில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி. நிறுவனம் வாயிலாக டிஜிட்டல் முறையில் கேபிள் டி.வி. சேவையை வழங்கிட, டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறை, கட்டுப்பாடு மற்றும் சந்தாதாரர்கள் மேலாண்மை, செட் டாப் பாக்ஸ் ஆகிய உபகரணங்கள் அவசியமாகின்றன. இதற்கான டெண்டர் கோரப்பட்டு, மேற்கண்ட உபகரணங்களை வாங்கி நிறுவி, சென்னையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் கேபிள் டி.வி. சேவை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலால் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்பதை இப்பேரவையின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபால்சாமி அவர்கள். (குறுக்கீடு) திரு. டில்லி பாபு, நேரமில்லை. தயவுசெய்து உட்காருங்கள். வேறு ஒரு சந்தர்ப்பத்தில்



பார்த்துக்கொள்ளலாம், (குறுக்கீடு) திரு. கோபால்சாமி, உட்காருங்கள். திரு. தங்கவேல், தயவு செய்து நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. கே. தங்கவேல்:** இத்துடன் எனது தொகுதியினுடைய கோரிக்கைகளைக் கொடுத்து விடுகிறேன். அவற்றை அவைக்குறிப்பில் இணைத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிப் பிரச்சினைகளைப் பொறுத்தவரை, ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் ஏற்படுத்திட வேண்டும். திருப்பூர், கோதபாளையம் பகுதியில் உள்ள மான்களைப் பிடித்து காரமடை வனப் பகுதியில் விட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருப்பூரை ஒட்டிய மலைப் பகுதிகளில் காட்டுப் பகுதி விவசாயத்தை மேம்படுத்த வாய்க்கால் பராமரிப்பு செய்வதுடன் மா, ஆரஞ்சு, கொய்யா, மாதுளை, ஆப்பிள் மரங்களைப் பயிர் செய்ய பயிற்சியும், முதலீட்டு உதவியும் செய்தால் மலைவாழ் மக்களின் பொருளாதாரம் மேம்படும். இஞ்சி, பூண்டு, கருணைக் கிழங்கு, ஜாதிக்காய், கண்வலிக் கிழங்கு ஆகிய மூலிகைப் பொருள் விவசாயத்தையும் ஊக்குவிக்கலாம்.

உடுமலை வனப் பகுதி குளிர் பிரதேசமாகும். வால்பாறை பகுதிகளில் வழங்கப்படுவதுபோல அங்கும் 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடத்தல்காரர்களை எளிதில் பிடிக்க வசதியாக குருமலை–அட்டகட்டி வரையிலும், குருமலை–கருஞ்சோலை வழியாக திருமூர்த்தி மலை பங்களா மேடு வரையிலும் சாலை அமைத்திட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு, வாய்ப்புக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.

***திரு. க. கோபால்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு, அறிவு, துணிவு என்னும் தாரக மந்திரத்தை தன்னுள் அடக்கி, நேர்கொண்ட பார்வையாலும், நிமிர்ந்த நன்னடையாலும், யாருக்கும் அஞ்சாத நெறியாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அல்லும் பகலும் காத்து, அன்னையாக தானிருந்து, அருந்தமிழ்நாட்டைக் காப்பவரே!

தமிழ்நாட்டைத் தரணியிலே தலைநாடாய் ஆக்குவதற்கு இமைமூடா பணி செய்யும் இந்தியப் பெருந்தலைவியே! வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டப் பேரவையினை கடைச் சந்தையாக்கி, களங்கம் கற்பித்த எத்தர்களும், பித்தர்களும் கதறி ஓடிட, புதுக்கோட்டையிலே புகழ் மாலை சூடக் காத்திருக்கும் தாயே! இனி செங்கோட்டையும் உங்களுக்கு வெகு தொலைவில் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அறமும், தமிழும் உங்களோடு இருக்க, ஆலய தெய்வங்களும் உடனிருக்க எந்நாளும் எப்போதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் உங்களோடு இருக்க, 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று உணர்ந்து வாழும் ஒரே தலைவி நீங்கள் மட்டும்தான் அம்மா!

நித்தம் நித்தம் விதி 110–ன்கீழ் அறிவிப்புகளை வெளியிட்டு மக்கள் நெஞ்சங்களைக் குளிரச் செய்யும் எங்கள் மனித தெய்வமே! பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் ஆகியோர் அலங்கரித்த இந்தச் சட்டப் பேரவையினை தாங்கள் மீண்டும் அலங்கரித்து, கழகத்தினுடைய அடிமட்ட எளிய தொண்டனாகிய என்னையும் இம்மாமன்றத்தில் தகுதிப்படுத்தி, அரசியல் முகவரியை எனக்குத் தந்து, வனத் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த எங்களுடைய குல தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நானும் எனது குடும்பமும் வாழ்நாள் முழுவதும் நன்றிக்கடன் பட்டிருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி எனது உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாடு அதை நாடு, அதை நாடாவிட்டால் ஏது வீடு' என்று பொன்மனச் செம்மல் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பாடியதுபோல, தற்போது "காடு அதை நாடு, அதை நாடாவிட்டால் ஏது வாழ்வு" என்று சொல்லும் அளவிற்கு வனங்கள் மற்றும் இயற்கைச் சூழலினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அதனுடைய பரப்பை மேலும் அதிகரிக்க முழு முயற்சி எடுத்து வருகின்றது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறைக்கு அதிக அளவு நிதியொதுக்கீடு செய்யவில்லை. மாறாக, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், வனத் துறைக்கு



முக்கியத்துவத்தை அளித்து, இதற்கென ஒரு தனி மானியக் கோரிக்கை உருவாக்கப்பட்டு, வனத் துறைக்கு மட்டும் சுமார் 400 கோடி ரூபாய் அளவுக்கு நிதியொதுக்கீடு செய்துள்ளார்கள்.

பிற்பகல் 1–35

2011 ஆம் ஆண்டின் வன நில அளவை அறிக்கையின்படி 287 சதுர கிலோ மீட்டர் அளவுக்கு வனங்களினுடைய பரப்பளவு அதிகரித்துள்ளது. ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட வனமானது, நிலத்திற்கு அடியிலே 50 ஆயிரம் முதல் 2 இலட்சம் கன மீட்டர்வரை தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ளக்கூடிய ஆற்றல்மிக்கதாகத் திகழ்கின்றது. இதனைக் கருத்தில் கொண்டே மாண்புமிகு அம்மா அவர்கள், மழை நீர் சேகரிப்பிற்கும், நிலத்தடி நீர் மேம்பாட்டிற்கும் உயர் முக்கியத்துவத்தை அளித்து, நமது தமிழகத்தினுடைய மொத்தப் பரப்பளவில் 33 விழுக்காடு அளவுக்கு வனப் பரப்பைக் கொண்ட மாநிலம் என்ற நிலையை எட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு எடுத்து வருகின்றது.

'நீரின்றி அமையாது உலகு' என்பதை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள், கடந்த 2001–2006 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்திலே, உலகமே வியந்து போற்றிய உன்னதமான திட்டமான 'மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை' செயல்படுத்தி, அதன்மூலம் தமிழகத்தினுடைய நிலத்தடி நீர் மட்டம் உயர வழிவகை ஏற்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களினுடைய இந்த அரிய திட்டத்தினை அனைத்து மாநில அரசுகளுமே பின்பற்றி செயல்படுத்தி வருகின்றன.

நமது தமிழகத்தைப் பொறுத்தவரை, இயற்கைச் சூழல் மேம்பாட்டிற்கும், பல்லுயிர் இனப்பரவலுக்கும் மேற்குத் தொடர்ச்சி மலை ஒரு சிறந்த இடமாக அமைந்துள்ளது. எங்களது ராஜபாளையம் பகுதியிலும் சரி, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் சரி, பல்வேறு வன உயிரினங்கள் மற்றும் மூலிகைப் பொருட்கள், விலை உயர்ந்த தேக்கு, தோதகத்தி மரங்களும் செழித்து வளர்ந்து வருகின்றன.

மனிதனின் தொழில் முன்னேற்றத்தாலும், இதர நடவடிக்கைகளாலும் வெளியேற்றப்படும் கரியமில வாயுவை உட்கொண்டு, நமக்கு மிகவும் அவசியமான பிராண வாயுவை

வெளியிட்டுவரும் வனங்கள், நமது புவியினுடைய துப்புரவுத் தொழிற்சாலைகளாக உள்ளன என்றால் அது மிகையாகாது. இதனை உணர்ந்துதான், எல்லோருக்கும் முன்னோடியான ஒரு திட்டமான 'காடு வளர்ப்புத் திட்டம்' என்ற ஒரு மகத்தான திட்டத்தை 1994 ஆம் ஆண்டே மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்தினார்கள். அதன்மூலமாக, தரம் குன்றிய காடுகளின் தரத்தை மேம்படுத்தி, வனப் பரப்பை அதிகப்படுத்தவும், வனத்திற்கு அருகே இருக்கின்ற கிராம மக்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களினுடைய தற்போதைய ஆட்சியில் மட்டுமல்லாது, முந்தைய ஆட்சிக் காலங்களிலும், வனப் பரப்பைப் பெருக்குவதிலும், காடுகளை வளர்ப்பதிலும் மிகுந்த அக்கறை காட்டி இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழ்ந்தார்கள். இதன் காரணமாக மத்திய அரசினுடைய "இந்திரா பிரியதர்ஷினி விருது" உள்ளிட்ட பல விருதுகளைத் தமிழகம் பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, உரையை சீக்கிரம் நிறைவு செய்யுங்கள்.

**திரு. க. கோபால்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் உரையை ஆரம்பித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, நீங்கள் பேச ஆரம்பித்து ஏழு நிமிடத்திற்கு மேல் ஆகிவிட்டது.

**திரு. க. கோபால்சாமி:** வனங்கள் மழையை உருவாக்கப் பயன்படுவதுடன், புவி வெப்பமயமாதலைக் குறைக்கவும் உதவுகின்றன என்பதனை உணர்ந்து, மரங்கள் அழிவதைத் தடுப்பதற்குத் தேவையான பல்வேறு சட்டங்களை 1991–1996, 2001–2006 என்று முதல் இரண்டு ஆட்சிக் காலங்களிலே மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்தினார்கள். அதிலே முக்கியமானதாகச் சொல்ல வேண்டுமென்றால், 1994 ஆம் ஆண்டு கொண்டு வந்த 'ரோஸ் உட் பாதுகாப்புச் சட்டம்', 1995 ஆம் ஆண்டு கொண்டு வந்த 'தமிழ்நாடு மலைத் தல மரங்கள் பாதுகாப்புச் சட்டம்' இப்படி பல சட்டங்களை முன்னுதாரணமாகச் சொல்லலாம்.



அதேபோல, மரங்கள் வளர்ப்பதிலே 2001–2006 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்திலே இந்தியாவிலேயே தமிழகம் இரண்டாவது மாநிலமாக இருந்தது. ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியினுடைய அலட்சியப் போக்கின் காரணமாக தமிழகம் மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டு, தற்போது மாண்புமிகு அம்மா அவர்கள் இதை முன்னேற்றி முதல் இடத்திற்கு உயர்த்துவதற்கு வழிவகை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே பணிந்து சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

ராஜபாளையம் தொகுதியில் புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்றும், ராஜபாளையம் நகராட்சிப் பகுதிகளுக்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்றும், ராஜபாளையம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைத்துத் தர வேண்டுமென்றும், ராஜபாளையம் பகுதியில் அரசு பொறியியல் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, கலைக் கல்லூரி நிறுவ வேண்டுமென்றும், ராஜபாளையம்—சத்திரப்பட்டி ரோட்டில் இரயில்வே மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமென்றும், ராஜபாளையம் புதிய பஸ் நிலையம் முதல் தென்காசி ரோட்டை இணைக்கும் இணைப்புச் சாலை அமைத்துத் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்து உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள். சுருக்கமாகவும், வேகமாகவும் பேசி முடியுங்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனம், தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்க வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தினுடைய மொத்தப் பரப்பளவு 1 இலட்சத்து 30 ஆயிரத்து 58 சதுர கிலோ மீட்டர். அதில், வனப் பரப்பளவானது 23 ஆயிரத்து 625 சதுர கிலோ மீட்டராகும். கடந்த இரண்டு ஆண்டுகளில் 257

சதுர கிலோ மீட்டர் வனப் பரப்பளவு அதிகரித்திருப்பதாக Forest Survey of India–வினுடைய விவரங்கள் தெரிவிக்கின்றன. வனங்களைக் காக்க வேண்டுமென்ற கோஷம் நாடு முழுவதும், ஏன் உலகம் முழுவதும் முழக்கமாக உள்ளது.

பிற்பகல் 1–40

வனங்களைப் பாதுகாத்தல், வன விலங்குகளை வேட்டையாடுதலைத் தடுத்தல், தீத்தடுப்புப் பணி, வனப் பரப்பை அதிகரித்தல் போன்ற அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற வனத் துறையிலே வன ஊழியர்கள் பற்றாக்குறை இருக்கிறது. மொத்தம் 5,500 வன ஊழியர்கள்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 1,000 ஹெக்டேருக்கு ஒரு வனக் காப்பாளர், ஒரு வனக் காவலர், 3,000 ஹெக்டேருக்கு ஒரு வனவர் என்றிருக்கிறது. ஆகவே வனத் துறையிலே கூடுதலாக ஊழியர்களை நியமனம் செய்ய வேண்டும். வனத் துறையிலே 10 சதவிகிதம் பேருக்குக்கூட துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் இல்லையெனத் தெரிய வருகிறது. வனக் குற்றங்கள் மற்றும் வன விலங்குகளை வேட்டையாடுவதைத் தடுக்கவேண்டுமென்றால் வனத் துறைக்குப் போதுமான நவீன ஆயுதங்களை வழங்கவேண்டும். அதுபோல, Forest Schedule Rate ஆக ஒரு நாளைக்கு 126 ரூபாய்தான் ஒரு ஆண் நபருக்கு வழங்கப்படுகிறது. ஆகவே, தரமான திட்டப் பணிகளான குழி வெட்டுதல், பிளான்டேஷன் போன்ற பணிகளைச் செய்யவேண்டுமென்றால் வன விகிதப் படியை உயர்த்தி வழங்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையின்மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தகுந்த தினக்கூலி வழங்குவது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரால் வனத் துறைப் பணிகளுக்கென தனியாக ஊதிய நிர்ணயம் தொடர்பாக கருத்துரு பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவாக அந்த 'ரேட்' இறுதி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.



**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. வன விலங்குகளால் ஏற்படும் உயிர்ச் சேதத்திற்கு நிவாரணம் ரூ.1 இலட்சம் என்பதை ரூ.3 இலட்சமாகவும், பயிர்ச் சேதத்திற்கு நிவாரணம் 1 ஹெக்டேருக்கு ரூ.15,000 என்பதை ரூ.25,000 ஆகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி வழங்கியிருப்பது வன விலங்குகளால் பாதிக்கப்படுகின்ற விவசாயிகள் மன நிறைவைப் பெறும் அளவிலே உள்ளது. ஆனால் அந்த நிவாரணம் பெறுவதற்கு காலதாமதம் ஆகிறது. கர்நாடகா போன்ற மாநிலங்களில் உடனடியாக 'ஸ்பாட்' நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே காலதாமதம் இல்லாமல் உயிர்ச் சேதத்திற்கும், பயிர்ச் சேதத்திற்கும் நிவாரணம் வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கவேண்டுமென்ற எண்ணத்தோடுதான் அதற்கென்று தனியாக ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது ஒரு இடத்தில் அவ்வாறு தவறு நடந்திருந்தால், அது குறித்து வனத் துறைக்குத் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு நிவாரணம் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறு நடந்ததாகச் சொல்லவில்லை. காலதாமதம் ஏற்படுகிறது. காலதாமதம் இல்லாமல் இந்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

அதுபோல, வன உரிமைச் சட்டம் 2006 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, தமிழகம் தவிர இந்தியா முழுவதிலும் அனைத்து மாநிலங்களிலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது உயர் நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். உயர் நீதிமன்றத்தில் வழக்கு என்ன

சொல்கிறது என்று சொன்னால், தேசிய உயிர் காப்பகப் பகுதியில் மட்டும்தான் வன உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது என்றிருக்கிறது. ஆகவே, மற்ற இடங்களில் கடந்த 2,3 தலைமுறைகளாக சாகுபடி செய்கின்ற நிலங்களுக்குப் பட்டா வழங்கப்படவேண்டும். அதுபோல வன உரிமை வழங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல கால்நடைகளை மேய்க்க கடந்த கால ஆட்சியிலே தடை விதிக்கப்பட்டிருந்தது. கால்நடைகளை மேய்த்தால் 4,000 ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டிருந்தது. அது இப்பொழுதும் நீடித்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே உரிகம் வனச் சரகம் பகுதியிலும், திருப்பத்தூர் ஜவ்வாது மலைப் பகுதியிலும் இன்றைக்கும் ஆடுகள் மேய்த்தால் ரூ.300 தண்டம் விதிக்கப்படுகிறது. ஆகவே அந்தத் தடையை நீக்கி ஆடு, மாடுகளை கிராமப்புற மக்கள் மேய்ப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளவேண்டும்.

அதுபோல, 2003 ஆம் ஆண்டு பழங்குடியின மக்களுடைய சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால்தான் மகசூல் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் கடந்த தி.மு.க. ஆட்சியிலே அந்த மகசூல் சட்டத்தின்கீழ் புளி, நெல்லி போன்ற சிறு மகசூல்களை வனத் துறையினரும் இடைத் தரகர்களும் கூட்டு சேர்ந்து கொள்ளையடித்தார்கள். ஓரிரு இடங்களில் அதிகளவில் இன்னும் அந்தத் தவறுகளை அதிகாரிகள் செய்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தளி தொகுதிக்கு உட்பட்ட உரிகம் வனச் சரகப் பகுதியிலே வனக் குழுக்களுக்கு வழங்கப்படாமல் இடைத் தரகர்களுக்கு வழங்கப்பட்டது. அத்ததைய வனத் துறை அதிகாரிகள்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுடைய மேம்பாட்டுக்காகவும், மலையைச் சார்ந்து வாழ்கின்ற மக்களுடைய மேம்பாட்டுக்காகவும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2003 ஆம் ஆண்டு அந்தச் சட்டத்தை இயற்றினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற இடத்தில் ஏதாவது



தவறு செய்யப்பட்டிருந்தால் நிச்சயமாக துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுப் பன்றி வன விலங்குப் பட்டியலிலிருந்து நீக்கப்படுவதற்கு மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யவேண்டும். இல்லையென்றால் அந்தக் காட்டுப் பன்றிகளைச் சுடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கவேடுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் வீரப்பன் தேடுதல் வேட்டையின்போது அதிரடிப் படையினரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–45

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** அசாம் மற்றும் கேரளா போன்ற மாநிலங்களில் எல்லாம் காட்டுப் பன்றிகளுக்கு வனவிலங்குப் பட்டியலிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கூறினார்கள். இது சம்பந்தமாக மாண்புமிகு அம்மா அவர்களிடம் பல்வேறு கருத்துருக்கள் வரப்பெற்றுள்ளன. எனவே அதற்காக ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில், அந்தக் காட்டுப் பன்றிகளுடைய தொல்லையைக் குறைப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** நான் கேட்பது, விவசாயிகளுடைய விளை நிலங்களுக்கு காட்டுப் பன்றிகள் வந்தால் அதைச் சுடுவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

வீரப்பன் தேடுதல் வேட்டையின்போது, அதிரடிப் படையினரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சதாசிவம் கமிஷன் அறிவுரையின்படி

அரசால் நிவாரணம் வழங்கப்பட்டது. அதிலே விடுபட்டவர்கள் விண்ணப்பித்தும்கூட, நிவாரணம் இன்னும் வழங்கப்படவில்லை. அந்த நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

வாச்சாத்தியில் வனத் துறையினரின், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்ப்பு வழங்கி ஏழு மாதங்களாகியும், தமிழக அரசு இதுவரை நஷ்ட ஈடு வழங்கவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு இன்றைக்கு, குடியிருப்புகளில் யானைகள் புகாதவாறு அகழிகள் வெட்டினாலும்--யானைகள் மனிதனைவிட அறிவு மிக்கவை. குறிப்பாக, சோலார் மின்வேலியின்மீது மரங்களைப் போட்டுவிடுகின்றன. அதுமட்டுமல்ல, இந்தக் குழிகள் மழை நேரத்தில் தூர் வாரப்படுவதை மீறியும் யானைகள் வந்துவிடுகின்றன.

குறிப்பாக, என்னுடைய தொகுதியில் தினந்தோறும் யானைகளைப் பார்க்க முடியும். நேற்றுகூட, 20 யானைகள் என்னுடைய தளி தொகுதியிலே தேன்கனிக்கோட்டை அருகே உள்ள ஸ்ரீநிவாசபுரத்தில், விவசாயிகளுடைய பயிர்களையெல்லாம் சேதப்படுத்தியுள்ளன. ஆகவே, மைசூர் வனப் பகுதியில், குறிப்பாக, சோலார் மின்வேலிகள் மற்றும் அகழிகளுக்குப் பதிலாக 4 அடி அகலத்திற்கு, 7 அடி உயரத்திற்கு கருங்கல் சுவர் கட்டப்பட்டுள்ளது. இது நிரந்தரமானத் தீர்வு. ஆகவே, கூடுதல் செலவானாலும் அகழிகள் மற்றும் சோலார் மின்வேலிகளுக்குப் பதிலாக கருங்கல் சுவரைக் கட்ட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த நிதியாண்டிலே அந்த யானைத் தடுப்புகள் போன்ற பணிகளுக்காக 11.7 கோடி ரூபாய் நிதியொதுக்கி, அதற்குண்டான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதேபோல், இந்த நிதியாண்டில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 10 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு



உறுப்பினர் அவர்கள், யானைகள் புகா அகழிகள் வெட்டும்போது, இரண்டு பக்கமும் கருங்கல்லால் கட்டி, அதை நிரந்தர யானை புகா வெளியாக அமைக்க வேண்டுமென்று ஆலோசனை கூறியுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று, அரசினுடைய நிதிநிலைக்கேற்ப அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில், காட்டு யானைகள், குடியிருப்புகளுக்கு வருவதும், மனிதர்களைத் தாக்குவதும் அதிகரித்திருக்கின்றது. காட்டு யானைகளுக்கு ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்தும் விதமாக, வளர்க்கிற யானைகளை வைத்து, ஏதாவது புதிய பயிற்சி கொடுத்து, வரவிடாமல் தடுப்பதற்கு அரசிடம் திட்டம் இருக்கிறதா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 'நல்ல நேரம்' சினிமாவில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வளர்த்த யானை, காட்டு யானைகளைத் திருத்தியதாக படம் இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, கும்கி யானைகள்மூலம் இந்த யானைகளை வெளியே விரட்டுகிற அந்தப் பழக்கம் இன்றைக்கும் நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பழகிய யானைகளை வைத்துக்கொண்டு காட்டு யானைகளைத் திருத்திவிட முடியும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். வனப் பகுதியில் ஒருசில இடங்களில் நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர் தூரத்தில் காட்டு யானைகள்

இருக்கின்றன. இதில் எந்த இடத்திற்கு பழக்கிய யானைகளைக் கொண்டு போய், வைத்துக்கொண்டு வருகின்ற யானைகளைக் கண்டுபிடிக்க முடியும்? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொதுவுடைமை இயக்கத்தைச் சேர்ந்தவர், சொன்னால் உங்களுக்குக் கோபம் வந்துவிடும். கேட்கின்ற கேள்விகளில்கூட சாத்தியக்கூறுகள் இருக்க வேண்டும். சாத்தியக்கூறுகள் இல்லாத கேள்விகளைக் கேட்கின்றபோது அதற்கு நம்மால் ஏதுவான பதில் சொல்வதற்குரிய வாய்ப்பில்லாமல் போய்விடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யானையைக் கூட்டிக்கொண்டு போகிற வாய்ப்பை மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்களிடமே கொடுத்துவிடலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிராமம் என்றால் அந்தக் கிராமத்திற்கு குடிநீர் வசதி, மின்சார வசதி மற்றும் சாலை வசதிபோன்ற வசதிகளை குடியுரிமைச் சட்டத்தின்கீழ் ஒரு அரசு செய்ய வேண்டும். ஆனால், கைப் பம்பு போட வேண்டுமென்றால்கூட, மலைக் கிராமங்களிலே வனத் துறையினுடைய அனுமதியைப் பெற வேண்டுமென்று தட்டிக் கழிக்கப்படுகிறது.

பிற்பகல் 1–50

கடந்த தி.மு.க. ஆட்சியிலே, பழங்குடியினர் துணை திட்டத்தின்கீழ் அவர்களுடைய சமூக நலப் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதிகூட திருப்பியனுப்பட்டது. என்னுடைய தளி தொகுதியிலே இரண்டு சாலைகளுக்காக 8 கோடி ரூபாய் பாரத் நிர்மாண் யோஜனாவின் பகுதி I திட்டத்திலே அனுமதித்தும், அந்த நிதி திருப்பியனுப்பப்பட்டுள்ளது. இன்றைக்குத் தமிழகத்திலே பல நூற்றுக்கணக்கான கிராமங்கள் மின்சாரம் எட்டிப் பார்க்காத கிராமங்களாக இருக்கின்றன.

பல நூற்றுக்கணக்கான கிராமங்கள் சாலை வசதியே இல்லாமல் இருக்கின்றன. வனப் பகுதியிலுள்ள கிராமங்களில் மின் கம்பம் நட வேண்டுமென்றால்கூட, மத்திய அரசின் அனுமதி பெற வேண்டுமென்று திருப்பி அனுப்பப்படுகிறது. ஆனால், மத்திய அரசோ 'வேதாந்தா', 'போஸ்கோ' போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கு வனங்களில் பல ஆயிரம் ஏக்கர் நிலங்களை புல்டோசர், பொக்லைன் இயந்திரங்களைக்கொண்டு குடைந்து



கனிமங்களைச் சுரண்ட அனுமதிக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட, மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் இந்தச் சட்டமன்றத்திலே பேசும்போது சாலை வசதி செய்து தர வேண்டுமென்று கேட்கும்போது, வனச் சட்டம், 1980–ஐக் காரணம் காட்டி, மத்திய அரசின் அனுமதி பெற வேண்டுமென்று தட்டிக் கழிக்காமல், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடமிருந்து, மாவட்ட வனத் துறை அதிகாரிகளிடமிருந்து உரிய கருத்துருக்களைப் பெற்று, அந்தக் கிராமங்களுக்குச் சாலை வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதிக்குள்ளே சாலை அமைக்க வேண்டுமானால், அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் மட்டும்தான் இப்பொழுது சாலைகள் அமைக்க முடியும். புதிதாக ஓர் இடத்தில் சாலை அமைக்க வேண்டுமானால், மத்திய வனச் சட்டத்தின்படி மத்திய அரசினுடைய அனுமதி பெறவேண்டும். இப்பொழுது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரை, அனைத்துப் பகுதி மக்களுக்கும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் கிடைக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். அந்த வகையில், எந்தப் பகுதியில் சாலை அமைப்பதற்கு, எந்தத் துறை முன்வருகின்றதோ, அது உரிய முறையில் விண்ணப்பிக்குமானால், உடனடியாக மத்திய அரசின் அனுமதியைப் பெற்று அங்கு சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 15, 20 ஆண்டுகளாக ஜீப்பு ஓட்டுநர்களாகப் பணிபுரிந்துவரும் 40 ஓட்டுநர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

காவல் துறையினருக்கு உணவுப்பொருட்கள் மானிய விலையில் வழங்குவதைப்போல, வனத் துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும்.

காவலர்களுக்குக் குடியிருப்புகள் வழங்கப்படுவதைப்போல, வனத் துறையினருக்கும் குடியிருப்புகள் வழங்கப்பட வேண்டும்.

Risk Allowance அதாவது இடர்ப்படியானது ரூ.60 என்பது 2012–ல் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சியில் ரூ.270 ஆக உயர்த்தப்பட்டது. விடுபட்டவர்களுக்கும் அது வழங்கப்பட வேண்டும்.

அதைப்போல, வேட்டைத் தடுப்புக் காவலர்கள் ரூ.3,000–க்குத்தான் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களுக்குப் பணி நிரந்தரம் மற்றும் ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதியாண்டிலே வேட்டைத் தடுப்புக் காவலர்கள் அனைவருக்கும் ரூ.4,000 என்ற வீதத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கி, அரசாணை வெளியிடப்பட்டு, ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல, 2005 ஆம் ஆண்டு காவல் துறைப் பணியாளர்களுக்கு இணையாக வனத் துறைப் பணியாளர்களுக்கும் ரேஷன் மூலமாக மளிகைப் பொருட்கள் வழங்குவதற்கு உத்தரவிடப்பட்டு, அது இப்பொழுது நடைமுறையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) திரு. இராமச்சந்திரன், நேரம் இல்லை. தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகெங்கும் உள்ள தமிழர்கள் பயன்பெறும் வகையிலே Digital Library அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 27–9–2005 அன்று சட்டமன்றத்தில் அறிவித்து, அரசாணை எண் 219, நாள் 22–11–2005 அன்று ஸ்ரீவைகுண்டத்திலே தினத்தந்தி நிறுவனர் சி.ப. ஆதித்தனாருடைய நினைவிடம் அரசுடமையாக்கப்பட்டு, அதற்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த Digital Library எப்பொழுது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.



இன்றைக்கு, கணினித் துறையிலே மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ள நம்முடைய முதல்வர் அவர்கள், மீன் வளத் துறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, கடந்த தி.மு.க. ஆட்சியிலே ஆதிக்கம் செலுத்திய துறைகளிலே கேபிள் டி.வி. துறையும் ஒன்று. இன்றைக்கு அரசுடைமையாக்கப்பட்டு, குறைந்த செலவில் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுவதை நாங்கள் வரவேற்கிறோம். அதைப்போல, தமிழ்நாடு அரசு Cable T.V. Corporation, Digital ஒளிபரப்பை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அரசு கேபிள் டி.வி. தொழில்நுட்பப் பணியாளர்கள் இரண்டு மாவட்டங்களுக்கு ஒருவர் மட்டுமே இருக்கிறார்கள். அதை விடுத்து, தாலுகா, நகராட்சி மற்றும் பஞ்சாயத்து உள்ளிட்ட பகுதிகளிலும் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கேபிள் டி.வி. குறித்து அமைச்சர் அவர்கள் விரிவாகச் சொல்லிவிட்டார்கள். தயவு செய்து உட்காருங்கள். நன்றி சொல்லி உட்காருங்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு கொடுத்த வாய்ப்புக்கு எனது பணிவான வணக்கத்தையும், நன்றியையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய முக்கியமான பிரச்சினை 1949 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ்நாடு தனியார் காடு பாதுகாப்புச் சட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் பயிர் செய்யக்கூடிய விவசாயிகளின் சுமார் 29,000 ஏக்கர் நிலம் இன்று பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது. சுமார் 3 இலட்சம் விவசாயிகள் அவர்களுடைய அதிகாரத்தை இழந்து, நிலங்களை விற்கவோ, வாங்கவோ, முதிர்ந்த மரங்களை அப்புறப்படுத்தவோ, புதிய மரங்களை நடவோ முடியாத அவல நிலையில் உள்ளார்கள்.

*பிற்பகல் 1–55*

இந்தப் பிரச்சினை சம்பந்தமாக தமிழக அரசு 15–4–1982 அன்று அரசாணை எண் 453–ன்மூலம் 6 நபர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்தது. நான்கு I.F.S., அதிகாரிகளையும், இரண்டு விவசாயிகளையும் உறுப்பினர்களாகக் கொண்ட அந்தக் குழு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பட்டா நிலத்தில் இரப்பர் பயிர் செய்யும் தோட்டங்களை, தனியார் சட்டத்திலிருந்து விடுவிக்க வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. மேலும், 7–7–2012–ல் அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தைப் பொறுத்தவரை, தமிழகத்திலே ஒரு சில மாவட்டங்களில் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே கன்னியாகுமரி மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவோம். 1949 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தச் சட்டம் 1979 ஆம் ஆண்டுதான் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. பொதுவாக, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை 7,810 ஹெக்டேர் பரப்பளவில் 920 இனங்கள் அந்த வகையில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. இதில் பிரிவு 3–ன்படி மாவட்டக் குழுவின் அனுமதியின்றி நிலத்தை விற்கவோ, அடமானம் வைக்கவோ நில உரிமையாளர்களுக்கு உரிமையில்லை. இந்தச் சட்டமானது தமிழகத்தில் 1979–லே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டாலும், அனைத்துப் பகுதி மக்களும் அந்த நிலங்களை விற்பதற்கும், வாங்குவதற்கும் எந்த அரசும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த, பத்திரப் பதிவுத் துறை அமைச்சராக இருந்த திரு. சுரேஷ்ராஜன் அவர்களால் அன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டு, அந்தச் சட்டத்தைக் கிளறிவிட்டு அவர்கள் வேடிக்கை பார்த்தார்கள். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பல்வேறு கோரிக்கைகள் இந்தத் தனியார் காடுகள் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் கொடுத்ததன் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு இது குறித்து ஆய்வு செய்து ஒரு நல்ல அறிக்கை விரைவில் அளிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்புக்குரிய சகோதரர், அமைச்சர் ** அவர்களுடைய வார்த்தைகளுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால் எனது சொந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் அவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.ஜி. பிரின்ஸ், வெளியிலே பேசுவதைப்போன்று பேசக்கூடாது. இந்த அவைக்கு என்று ஒரு மரபு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் என்றுதான் குறிப்பிட வேண்டுமேயொழிய, பெயரைச் சொல்லி அழைக்கக்கூடாது. எனவே, அவருடைய பெயரை நீங்கள் சொன்னது அவைக் குறிப்பில் இருக்காது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் என்று இருக்கும். திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சியிலே மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்கூட இந்தப் பிரச்சினையை அவையில் எழுப்பியிருக்கிறார்கள் என்பதை நான் அவையில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். 7–7–2011 அன்று அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவரும் இரப்பர் பயிரிடப்படும் பட்டா நிலங்களுக்குத் தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்தார். இரப்பர் போர்டும், மத்திய வன அமைச்சகமும் இரப்பர் பயிரிடப்படும் பட்டா நிலங்களைத் தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விலக்கப் பரிந்துரை செய்துள்ளன. 90 சதவிகிதம் இரப்பர் விவசாயம் செய்யப்படும் கேரளா மாநிலத்தில் இந்தச் சட்டம் திணிக்கப்படவில்லை.

Further, the law of the land says that, "not withstanding anything contained in sub–section (1) or sub–section (2), the State Government may exempt any forest or class of trees therein from all or any of the provisions of this section" என்று சொல்லப்பட்டதைப் பார்க்கும்போது, இந்தச் சட்டத்திலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கக்கூடிய முழு அதிகாரமும் மாநில அரசுக்கு இருக்கிறது என்பதைப் பதிவு செய்து, தயவுசெய்து காலம் தாழ்த்தாமல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, சாதகமான நடவடிக்கை எடுக்க பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அரசு இரப்பர் கழகத்தைப் பொறுத்தவரையிலே, இன்றைய பொருளாதார நிலையில் கூலி வேலை செய்து வரும் சாதாரண கூலித் தொழிலாளிக்குக்கூட 500 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. இரப்பருக்கு அதிக விலை உள்ளதால், இரப்பர் கூலித் தொழிலாளர்களுக்கு தினம் 450 ரூபாய் வீதம் கூலி என்று கணக்கீட்டு, மாதம் ஒன்றுக்கு ரூ. 13,500 கடந்த 2010 டிசம்பர் முதல் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் ஆராய்ச்சி மையம் அமைக்க மத்திய அரசின் இரப்பர் வாரியம் முன்வந்துள்ளது. ஆனால், தமிழக அரசு முன்வந்து, 100 ஏக்கர் நிலம் வனத் துறைமூலம் கொடுக்கப்பட்டால் நிச்சயமாக அந்த ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கன்னியாகுமரி மாவட்டத்திலே இரப்பர் ஆராய்ச்சி மையம் தொடங்குவதற்கு அரசாணை வெளியிட்டால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக அதற்கான இடத்தை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிரின்ஸ், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உங்களுக்கு favour ஆகத்தான் சொல்லியிருக்கிறார். இரப்பர் மாதிரி உங்கள் பேச்சை இழுக்காதீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக இந்தப் பிரச்சினைக்கு நல்ல முடிவு கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இரப்பர் போல முக்கியமான ஒரு பிரச்சினை.

இரப்பர் கழகத்திலே பணி செய்யக்கூடிய ** தமிழகத்தின் வளர்ச்சியிலே உலகிலே கோலோச்சி நிற்கக்கூடிய வகையிலே தகவல்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தொழில்நுட்பவியல் துறை இன்னமும் தொடர்ந்து வளரவேண்டும். பல இலட்சம் மக்கள் நம் நாட்டிலும் வெளிநாட்டிலும் பணி செய்து நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு துறையினுடைய ** குற்றஞ்சாட்டினால், அவர் என்ன தவறு செய்தார் என்பதை ஆதாரப்பூர்வமாக நிரூபித்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்புக்குரிய **

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** அதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் எழுத்துமூலம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். நான் சொல்ல வருவது என்னவென்றால், ** இது சம்பந்தமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிரின்ஸ், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். தகவல் தொழில்நுட்பவியல் துறையிலே இந்த தேசம் வளர்ந்திருக்கிறது. அதில் தமிழகம் முன்மாதிரியாக இருக்கிறது. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கல்வியில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சிறப்பு வாய்ந்த மாவட்டமாக இருக்கிறது. இந்த மாவட்டத்தில் 41 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் வேண்டிக்கொள்வது, அங்கே படித்த பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்கு ஒரு தொழில்நுட்பப் பூங்கா அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன். அதுசம்பந்தமாக எங்கள் மாவட்டத்தினுடைய அமைச்சர் அவர்களும் தயாராக இருக்கிறார்கள். நிச்சயமாக ஒரு பகுதியை ஒதுக்கிக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். எனவே, அந்த வாய்ப்பை எங்களுக்குத் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்களின் உரையிலே, ** அது ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டு. எனவே, நீங்கள் என்னுடைய அறைக்கு வந்து, அது சம்பந்தமாக ஏதாவது evidence – documentary evidence அல்லது வேறு ஏதாவது evidence இருந்தால் கொடுங்கள். அதன் பின்பு அதை அவைக் குறிப்பிலே ஏற்றிக்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.

**திரு. ஆ. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனம் மற்றும் சுற்றுச்சூழல், தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேச எனக்கு வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்து, எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, புதிய தமிழகம் கட்சியில் இணைத்து 2006 ஆம் ஆண்டு மதுரையில் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நடைபெற்ற மண்டல மாநாட்டிற்கு மாநாட்டுக் குழுத் தலைவராகவும், 2007 ஆம் ஆண்டு மதுரை வடக்கு மாவட்டச் செயலாளராகவும், 2009 ஆம் ஆண்டு சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளராகப் போட்டியிடும் வாய்ப்பையும், 2010 ஆம் ஆண்டு மதுரை ஒருங்கிணைந்த மாவட்டச் செயலாளராக நியமனம் செய்தும், 2011 ஆம் ஆண்டு நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக என்னை வேட்பாளராக அறிமுகம் செய்து, வெற்றியும் பெறச் செய்த, சமூகநீதிப் போராளி, வெள்ளை அறிக்கை வேந்தர், மாஞ்சோலை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கண்ட மாவீரர், எளியோருக்கும் வலியப் போராடும் புதிய தமிழகம் படைத்த எங்கள் தலைவர், மண்ணுரிமை, மனித உரிமை, வாழ்வுரிமைப் போராளி, டாக்டர் க. கிருஷ்ணசாமி அய்யா அவர்களை வணங்குகிறேன். 13–5–2011 இல் நிலக்கோட்டை தொகுதியில் என்னை வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனது தொகுதியின் நீண்ட நாள் கோரிக்கைகளை இந்தப் பேரவையில் சொல்ல வாய்ப்புக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கூட்டணிக்கு தலைமை தாங்கி, தமிழகத்தில் அரியதோர் மாற்றம் நிகழ்த்திய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், புதிய தமிழகம் கட்சி நிறுவனர் டாக்டர் அய்யா அவர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், திண்டுக்கல் மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்டச் செயலாளர், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ** அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசாமி, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பெயரைச் சொல்லக் கூடாது என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் என்றே சொல்ல வேண்டும்.

பிற்பகல் 2–05

**திரு. ஆ. ராமசாமி:** மின்சாரத் துறை அமைச்சர் என்று சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குக்கிராமங்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்திட 'தாய்' திட்டம், 2023–க்குள் தமிழகத்தை வளர்ந்த மேலைநாடுகளுக்கு இணையாக உயர்த்த தொலைநோக்குத் திட்டத்தோடு, வீடில்லா ஏழைகளுக்கு விலையில்லா பசுமை வீடுகள், 1 கோடியே 70 இலட்சம் பேருக்கு விலையில்லா அரிசி, ஆடுகள், மாடுகள், கிரைண்டர், மிக்ஸி, மின் விசிறி, ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு 4 கிராம் தாலிக்குத் தங்கம், முதியோர்களுக்கு உதவித் தொகையை ரூபாய் 500/–லிருந்து, ரூபாய் ஆயிரமாக உயர்த்தியும், மாணவ, மாணவிகளுக்குச் சீருடைகள், மிதிவண்டி மற்றும் விலையில்லா மடிக் கணினி, கர்ப்பிணிப் பெண்களுக்கு 6,000/– ரூபாயிலிருந்து, 12,000/–ரூபாயாக உயர்த்தியும் வாரி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக்காலங்களில் பெருகிவரும் புல்வெட்டிக் கண்மாய் மறுகால் தண்ணீர், குடகனாற்றில் பாய்ந்து, கரூர் அருகில் காவிரி ஆற்றில் கலப்பதால், அந்த நீராதாரத்தை, நிலக்கோட்டை பச்சமலையான்கோட்டை, ஜம்புதரைக்கோட்டை, கோட்டூர், நிலக்கோட்டை—சிலுக்குவார்பட்டி ஆகிய சுமார் 10 கண்மாய்களுக்குட்பட்ட சுமார் 16,000 ஏக்கர் நிலங்கள் நீர்ப்பாசன வசதி பெறத் தகுதியுடையது. ஆகையால், அந்தக் கால்வாயை அமைத்து, நீராதாரத்தைப் பெருக்கி, அப்பகுதி விவசாயப் பெருமக்களின் பல ஆண்டு காலக் கோரிக்கையை நிறைவேற்றித் தர மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மருதாநதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உபரியாகச் செல்லும் நீரை, உபநதியான வஞ்சிநதியின் குறுக்கே முத்தலாபுரம் அருகில் மதகு அணை கட்டி, நிலக்கோட்டை சீத்தாபுரம் கண்மாய், கொங்கர்குளம், மண்ணவராதி கண்மாய், பாப்பன்குளம், ஆவரம்பட்டி கண்மாய், மட்டப்பாறை கண்மாய் போன்ற சுமார் பத்துக்கும் மேற்பட்ட கண்மாய்களுக்குமேல் நீர்ப்பாசனம் அமைய கால்வாய் அமைத்துத் தர அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலிருந்து பழனி, தாராபுரம், திருப்பூர், கோயம்புத்தூர், பாலக்காடு ஆகிய ஊர்களுக்குச் செல்லும் பேருந்துகள், செம்பட்டி பேருந்து நிலையத்தில் வந்து செல்வதால், அங்கே நெருக்கடி ஏற்படுகிறது. நானும் கடந்த 20 ஆண்டு காலமாகப் பழனிக்குப் பாத யாத்திரை சென்று வருகிறேன். எனவே, அந்தப் பேருந்து நிலையத்தை சற்று விரிவுபடுத்தித் தருமாறு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிலக்கோட்டையிலிருந்து சென்னைக்கு வத்தலகுண்டு வழியாக, அரசு விரைவுப் பேருந்து இயக்கிட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நிலக்கோட்டை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் இளங்கலைப் பட்டப் படிப்பில் கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல் மற்றும் ஆங்கில இலக்கியமும், முதுகலைப் பட்டப் படிப்பில் அனைத்துப் பாடப் பிரிவுகளையும்



தொடங்க நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

நிலக்கோட்டையில் பெண்களுக்குத் தனியாக அரசு மேல்நிலைப் பள்ளி, வரும் கல்வியாண்டில் தொடங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நிலக்கோட்டையில் பட்டியலின மக்களுடைய கல்லூரி மாணவிகளுக்கு விடுதியும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதியும், பட்டிவீரன்பட்டியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதியும், சிலுக்குவார்பட்டியில் பட்டியலின மக்களுக்கு மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதியும் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளர், குடும்பர், காலாடி, பண்ணாடி, மூப்பன், தேவேந்திரகுலத்தான் என்பதை ஒன்றிணைத்து, 'தேவேந்திரகுல வேளாளர்' என்று அரசாணை பிறப்பிக்கவும், தியாகி இமானுவேல் சேகரன் நினைவு தினத்தை அரசு விழாவாக அறிவிக்கவும், மாவீரன் சுந்தரலிங்கத்துக்கு சென்னையில் மணிமண்டபம் அமைத்திட அரசாணை பிறப்பித்திடவும் மாண்புமிகு முதல்வர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 13—5—2011 அன்று தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று, ஆட்சிப் பொறுப்பேற்று ஒரு வருடம் நிறைவு பெற்று, இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நாளான இன்றையதினம், எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என்னை வெற்றி பெறச் செய்த தொகுதி மக்களுக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 2—10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன் அவர்கள். *(குறுக்கீடு)* அந்த மைக் வேலை செய்கிறது. மைக் பட்டனை on பண்ணுங்கள். *(குறுக்கீடு)* இப்பொழுது கேட்கிறது பாருங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன், மைக் பட்டனை சரியாக press பண்ண வேண்டும்.

*__திரு. ஆ.க. அரங்கநாதன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் பணிவான வணக்கம். கொடிகட்டுகிற தொண்டர்களையும், கொடி போட்ட காரில் கோட்டைக்கு வரவழைத்து அழகு பார்க்கும் எங்கள் அன்னையே! அஞ்சாத நெஞ்சமே! அடற்பொற்சிகரமே! வஞ்சமில்லா மனமே! வாழ்வளிக்கும் கற்பகத் தருவே! நெஞ்சையள்ளும் சிலம்பே! நிலைத்து நிற்கும் கோபுரமே! கொள்கையின் குணக் குன்றே! கொடுப்பதில் சிந்தாமணியே! உண்மையின் இருப்பிடமே! ஒளி வீசும் தண்ணிலவே! வேதத்தின் விழுப் பொருளே! வெற்றியின் திருவுருவே! நாதத்தின் சங்கீதமே! நன்மையின் விளைநிலமே! பெண்மையின் இலக்கணமே! பெருமைமிகு பொற்சித்திரமே! பகைவனுக்கு தீப்பிழம்பே! பணிந்தவர்க்கு குளிர் நிலவே! மண்ணுலக தெய்வமே! மாபெரும் மக்கள் சக்தியே! தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* உலகத் தமிழர்களின் காவல் தெய்வமே! ஆசிய கண்டத்தின் அதிசயத் தலைவியே! 7½ கோடி தமிழர்கள் தமிழர் மட்டுமல்லாது, நல்லவர்களின் உள்ளங்களில் எல்லாம் வசிக்கும் இதய தெய்வமே, அம்மா! தமிழகத்தைக் கட்டிக் காக்கும் தாயே!

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய முப்பெரும் தலைவர்களின் சிறப்புகளை ஒருங்கே பெற்ற தலைவியே! எங்கள் அன்னையே! 1980 ஆம் ஆண்டிலிருந்து சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் பார்வையாளர் மாடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த, ஒரு சாதாரண குக்கிராமத்தில், விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, நினைத்தாலே முக்தி தரும் தீபத் திருநகராம் திருவண்ணாமலை மாவட்டத்தில், துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் 10 ஆண்டுகள் கிளைக் கழகச் செயலாளராகவும், 15 ஆண்டுகள் ஒன்றியக் கழகச் செயலாளராகவும், 5 ஆண்டுகள் ஒன்றியக் குழுத் தலைவராகவும் பணியாற்ற வாய்ப்புக் கொடுத்து, 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், புதியதாக வரையறுக்கப்பட்ட கீழ்ப்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளராக என்னை நிறுத்தி, எனக்காக கோடை வெயிலையும் பொருட்படுத்தாமல் திருவண்ணாமலை நகருக்கு வருகை தந்து, வாக்கு சேகரித்து, வெற்றி பெறச் செய்து, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த 14–வது சட்டமன்றப் பேரவையில் இடம் பெறச் செய்து, என்னை இந்த பாரம்பரியமிக்க அவையில் பேச வைத்த அற்புத அன்னையே! நானும், எனது சந்ததியினரும் உங்கள் சன்னிதானத்தில் சேவை செய்து கிடப்பது ஒன்றே பாக்கியமாக எண்ணி எங்கள்



தெய்வமாகிய அம்மாவிற்கு கோடானுகோடி நன்றி மலர்களைப் பொற்பாதங்களில் வைத்து, பணிந்து வணங்குகிறேன் அம்மா! *(மேசையைத் தட்டும் ஒலி)*

நான் வெற்றி பெற அரும்பாடுபாட்ட கழகத்தின் அத்தனை நிர்வாகிகளுக்கும், எனக்கு வாக்களித்த, கன்னித் தொகுதியான கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், அம்மா அவர்களின் ஆட்சி அமைய வாக்களித்த அத்துணை நல்ல உள்ளங்களுக்கும் எனது பணிவான நன்றியினை வணங்கித் தெரிவித்துக்கொண்டு, எனது கன்னிப் பேச்சைத் துவக்குகிறேன்.

அம்மா! நீங்கள் ஆட்சிக்கு வந்ததும் தமிழக மக்களுக்கு மட்டுமல்ல, உலகில் உள்ள தமிழர்களுக்கெல்லாம் ஒரு உற்சாகப் பெருக்கு. காரணம் உங்கள் தலைமையில் தமிழகம் எப்பொழுதும் பொற்காலமாகத் திகழ்ந்திருக்கிறது. வருங்காலத்திலும் தமிழகம் மற்ற மாநிலங்களைவிட முதன்மை மாநிலமாகத் திகழும் எனப் பிரகடனப்படுத்தி, அந்த இலட்சிய நோக்கை எட்ட ஓய்வில்லாமல் உழைத்துக் கொண்டிருக்கும் உங்களை தமிழ்ச் சமுதாயத்தின் சந்ததிகள் நன்றியுடன் வணங்குவார்கள் அம்மா!

கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. கற்காலத்தைவிட மோசமான பாதையில் தடம் மாறி தமிழகம் போனதை மக்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மக்களால் தாங்கிக் கொள்ள முடியாமல் போனதால்தான், தி.மு.க.வால் தாங்கிக் கொள்ள முடியாத அடியை தேர்தல்மூலம் மக்கள் தந்திருக்கின்றார்கள்.

2011–ல் தேர்தலுக்குப் பின்னால் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு கட்சி இருக்காது என்று இறுமாப்போடு பேசினார் அழகிரி. அம்மா, இன்றைக்கு அந்த அழகிரி எங்கே இருக்கிறார் என்றே தெரியவில்லை. எப்பேர்ப்பட்ட இயக்கத்தைப் பார்த்து, அதுவும், புரட்சித் தலைவி எங்கள் அம்மா அவர்களின் தலைமையில் இயங்குகிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு கங்கை; அது ஒருபோதும் வற்றாது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அக்னிப் பூ, அதை யாராலும் கசக்கி விட முடியாது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆடிக்காற்றல்ல, ஐப்பசிக்காற்று, எதையும் சந்திக்கத் தயார் என்று நடந்த அந்த குருக்ஷேத்திரப் போரில் தோற்றது தி.மு.க. ஜெயித்தவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

கருணாநிதி 'தான் செய்த சாதனையேபோதும், நாங்கள் ஆட்சிக்கு வந்து விடுவோம்', என்று இறுமாப்போடு பேசினார். எது சாதனை? 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் 1,76,000 கோடி ரூபாய் கொள்ளையடித்தது சாதனையா? இலவச டிவி. தருகிறேன் என்று சொல்லி கேபிள் இணைப்புமூலம் பல ஆயிரம் கோடி ரூபாய் கொள்ளையடித்தது சாதனையா? மணல் கடத்தியதன்மூலம் பல ஆயிரம் கோடி கொள்ளையடித்தது சாதனையா? ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ்மூலம், காப்பீட்டுத் திட்டத்தில் கொள்ளையடித்தது சாதனையா? விலைவாசி விண்ணை முட்டியதே அது சாதனையா? ரேஷன் அரிசியை லாரியிலும், கன்டெய்னர்களிலும் வெளி மாநிலங்களுக்குக் கடத்தி கொள்ளையடித்தீர்களே அது சாதனையா? எது சாதனை? வேதனையை மட்டும்தான் தமிழக மக்கள் அனுபவித்தார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா, நீங்கள் ஆட்சிக்கு வந்ததும் எப்படி உலக அதிசயங்கள் ஏழு, மலைகள் ஏழு, நதிகள் ஏழோ, அதைப்போல அம்மா நீங்கள் முதலில் இட்ட ஆணைகளும் ஏழு.

இலங்கையில் தமிழ்ச் சமுதாயத்தையே வேரோடு அழிக்கத் துணிந்து, இலட்சக்கணக்கானவர்களைக் கொன்ற கொடுங்கோலன் ராஜபக்சேவை போர்க் குற்றவாளி என அறிவித்து, இலங்கைக்குப் பொருளாதாரத் தடையை விதிக்க வேண்டுமென்று சட்டமன்றத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தைத் துணிச்சலோடு நிறைவேற்றி அனுப்பினீர்கள் அம்மா!

வெள்ளை மனம் படைத்த உங்களை, வெள்ளை மாளிகையிலிருந்து வந்த அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் திருமதி ஹிலாரி கிளிண்டன் அவர்களே நேரில் வந்து சந்தித்து, கை குலுக்கி பாராட்டிவிட்டுச் சென்றதோடு, உங்கள் கோரிக்கையை ஏற்று, இலங்கைமீது அமெரிக்கத் பொருளாதாராத் தடை விதித்ததே உங்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி அல்லவா!

அன்று நீங்கள் கொண்டு வந்த தொட்டில் குழந்தை திட்டத்தைப் பாராட்டி அன்னை தெரசா அவர்களே, நேரில் வந்து உங்களைப் பாராட்டி விட்டுச் சென்றாரே, மனிதநேய மிக்க தலைவி நீங்கள் அல்லவா! அதைப்போல அன்று நீங்கள் கொண்டு வந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தைப் பின்பற்றி பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் திருமதி பெனாசீர் புட்டோ அவர்களே, பாகிஸ்தானில்



மகளிர் காவல் நிலையத்தை உருவாக்கி உங்களைப் பாராட்டிப் பேசினார்களே, அது அம்மா அவர்களுக்குக் கிடைத்த வெற்றியல்லவா!

தாயே! நாடாளுமன்றத்தில் நீங்கள் பேசிய கன்னிப்பேச்சைக் கேட்டு, அன்றைக்கிருந்த பாரத பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களே, "My dear Child—என் அன்பான குழந்தையே" என்று உங்களைப் பாராட்டிப் பேசினார்களே, அன்றே தமிழகத்தின் பெருமையை டில்லி செங்கோட்டையில் பதிய வைத்தவர் தாங்கள் தானே! எத்தனைத் திட்டங்கள் அம்மா!

தகவல் தொழில்நுட்பம். 2011–2012 ஆம் ஆண்டில் ரூ.42,000 கோடியாக இருந்த நமது மாநிலத்தின் மென்பொருள் ஏற்றுமதி 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.48,000 கோடியாக உயரும் என அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த வேகமான வளர்ச்சியை நிலைக்கச் செய்வதோடு, இதுவரை வளர்ச்சி பெறாத வன்பொருள் உற்பத்தி போன்ற துறைகளில் வளர்ச்சியை ஏற்படுத்துவதே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எதிர்கொண்டுள்ள முக்கிய சவாலாகும்.

சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், ஓசூர் ஆகிய இடங்களில் எல்காட் நிறுவனம், எல்கோசெஸ் என்ற சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைத்துள்ளது.

திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் எல்கோசெஸ் பகுதி காலியாகவுள்ள இடங்களிலும், புதிய சிறப்புப் பொருளாதார மண்டலங்களைத் தொடங்க முன்வரும் தொழில் முனைவோரை ஈர்க்க அம்மாவின் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. மேலும், இத்தகைய இடங்களில் சிறு மற்றும் நடுத்தர தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கென. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன், ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை நன்றி சொல்லி முடித்து விடுங்கள்.

**திரு. ஆ.க. அரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா நீங்கள் வாழும் காலத்தில், நாங்கள் வாழ்கிறோம் என்பதைவிட, நீங்கள் தமிழகத்தை ஆண்ட நேரத்திலும், நாட்டு மக்களின் உள்ளங்களில் ஆண்டுகொண்டிருக்கின்ற காலத்திலும்,

நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதுதான் நாங்கள் பெற்ற பெரும் பேறு! தமிழகம் உங்களைப் பாராட்டி, போற்றுகிறது தாயே! "பூவோடு சேர்ந்த நாராக" நாங்களும் மணக்கிறோம். நன்றி சொல்ல வார்த்தையின்றி தவிக்கிறேன் தாயே! அம்மா, நீங்கள் தொட்டது துலங்கும், கைராசிக்காரர், உங்கள் கருணைக் கண் பட்டால் மண்ணும் பொன்னாகும். பொற்காலம் படைத்த தங்கள் மலரடி தொடருவதே எங்கள் நன்றிக் கடனாகும். சொல்லால் சொல்வதைவிட நன்றிக் கடனை செயலால் செய்து காட்டுவோம் அம்மா! நன்றியோடு வணங்குகிறேன் தாயே! என் தொகுதிப் பிரச்சினைகளை மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே பணிவோடு வணங்கி, சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்த சுமார் 7 இலட்சம் மக்கள் தொகை கொண்ட திருவண்ணாமலை வட்டத்தைப் பிரித்துத் கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைத்துத்தர மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சி, வேட்டவலம் பேரூராட்சி, மங்கலம், ஆகிய ஊர்களிலும் இயங்கிவரும் சார் பதிவாளர் அலுவலகங்கள் தற்போது 100 ஆண்டுகளுக்கும் மேலாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இவற்றுக்குச் சொந்த கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆவண செய்யுமாறு பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட மங்கலம், நாயுடுமங்கலம் ஆகிய பகுதிகளுக்கு நெல் கொள்முதல் நிலையங்கள் அரசின் மூலமாக அமைத்துத் தர மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் சாத்தனூர் அணை குடிநீரை திருவண்ணாமலையிலிருந்து வடஆண்டாப்பட்டு, கிளியம்பட்டு, சாணானந்தல், நூக்காம்பாடி, ராந்தம், மேல்பாலானந்தல், மங்கலம்புதூர், மங்கலம், கருமாரப்பட்டி, கொத்தந்தவாடி, எரும்பூண்டி, வேடந்தவாடி, பூதமங்கலம், ஆர்ப்பாக்கம், கமலபுத்தூர் இந்த ஊர்களுக்குக் குடிநீர் வழங்கி மக்களின் தாகம் தீர்க்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.



கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஒன்றியம், பூதமங்கலம் ஊராட்சி, ஆனந்தல் கிராமத்தில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். மன்சூராபாத், வேடந்தவாடி, பூதமங்கலம், ஆர்ப்பாக்கம் ஊராட்சிகளில் 25,000 மக்கள் பயன்பெறுகிற வகையில் மேற்படி ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மங்கலம் ஊராட்சியில் அரசு மேல்நிலைப் பள்ளியில் தற்போது சுமார் 2,000 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். எனவே, மகளிருக்கென தனியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைத்துத்தர மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் எந்தவிதமான தொழிற்சாலைகளோ, கல்லூரிகளோ கிடையாது. கீழ்பெண்ணாத்தூரில் வேளாண்மை கல்லூரி ஒன்று அமைத்துத் தர கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களிடம் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட கீழ்க்கண்ட கிராமங்களுக்கு புதிய வழித்தடங்கள் உருவாக்கி பேருந்துகள் இயக்க ஆவண செய்ய வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்:

வேட்டவலம் முதல் மங்கலம் வரை (வழி) சாணிப்பூண்டி, கொளத்தூர், கரிக்கிளாம்பட்டி, கீழ்பெண்ணாத்தூர், சிறுநாத்தூர், நாரியமங்கலம், கழிகுளம், கானலபாடி.

ஆனந்தல் முதல் பழனி கோயில் வரை (வழி) மங்கலம், கானலபாடி, சோமாசிபாடி, கீழ்பெண்ணாத்தூர், கொளத்தூர், தல்லாக்குளம், தண்டரை, வெறையூர், திருக்கோவிலூர், மடப்பட்டு, பண்ருட்டி, திருச்சி, திண்டுக்கல்.

திருவண்ணாமலை முதல் மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி கோயில் வரை (வழி) சாணானந்தல், வி. நம்மியந்தல், கானலபாடி, ஐங்குணம், கூட்ரோடு, கழிக்குளம், ரெட்டியார்பாளையம், கருமராப்பட்டி, மங்கலம், அவலூர்பேட்டை.

வெறையூர் முதல் மன்சூராபாத் வரை (வழி) தண்டரை, ரயில் நிலையம், நா.கெங்கம்பட்டு.

வெறையூர் முதல் மன்சுராபாத் வரை (வழி) தண்டரை, ரயில் நிலையம், நா.கெங்கம்பட்டு, நாடழகானந்தல், காட்டுமலையனூர், சிங்கவரம், கெங்கனந்தல், சோ.காட்டுகுளம், சிறுநாத்தூர், நாரியமங்களம், கா.குளத்துப்பட்டி, வழுதலங்குளம், மேக்களூர், அவலூர்பேட்டை.

பெருமனம் முதல் திருவண்ணாமலை வரை (வழி) தேவனூர், ஆர்துராப்பட்டு, வன்னியநகரம், வெறையூர், திருவண்ணாமலை.

ஆவூர் முதல் திருக்கோவிலூர் வரை (வழி) இராஜந்தாங்கல், கீழ்கரிப்பூர், இசுக்கழி, அண்டம்பள்ளம், ஆனானந்தல், மதுராம்பட்டு, ஆதிச்சனூர், இரயில் நிலையம், வீரபாடிநாயனூர், தேவனூர், அரங்கநல்லூர், கூட்ரோடு.

கலசப்பாக்கம் முதல் கீழ்பெண்ணாத்தூர் வரை (வழி) சாலையனூர், லாடவரம், கார்க்குணம், ஆர்ப்பாக்கம், பொய்யானந்தல், பூதமங்கலம், அவலூர்பேட்டை, மேக்களூர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள். திரு. க. பாண்டியராஜன் சுருக்கமாக உரையை முடித்தால் நல்லது. (குறுக்கீடு) குறுக்கீடு வராமல் அவரை உரையாற்றச் சொல்லுங்கள்

பிற்பகல் 2—20

**திரு. க. பாண்டியராஜன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சி அதிகாரம் ஏதுமில்லாமல், 60 இலவசக் கணினி மையங்கள் மூலமாக ஒரு இலட்சம் இளைஞர்களின் வாழ்வில் அறிவொளி ஏற்றிய எங்கள் வழிகாட்டி கேப்டன் அவர்களை நெஞ்சில் நிறுத்தி, தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கையில் என் கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பரிணாம வளர்ச்சியின் தத்துவத்தை உலகத்திற்குச் சொன்ன சார்லஸ் டார்வின் அவர்கள், 'உலகில் உள்ள உயிரினங்களில் நிலைத்து நின்று பல்கிப் பெருகும் உயிரினங்கள் எவையென்றால், அனைத்திலும் வலிமை படைத்தவை அல்ல, அனைத்திலும் அறிவு படைத்தவையும் அல்ல, வெளியில் நிகழும் மாற்றங்களை உணர்ந்து தன்னைத்தானே மாற்றும் திறன் பெற்ற உயிரினங்களே நிலைத்து நின்று வளரும்' என்றார். எல்லைக்கோடுகள் ஒவ்வொன்றும் மாற்றி எழுதப்படும் துறை தகவல் தொழில்நுட்பவியல் துறை. அர்த்தங்கள் ஒவ்வொன்றும் மாற்றி உணரப்படும் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை. இந்தத் துறையில் தமிழகம் முதலிடம் பெற 10 கருத்துகளை 6 நிமிடங்களில் எடுத்துரைத்து அமைகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் சத்தமாகப் பேசுங்கள். (குறுக்கீடு) சாப்பிட்டு விட்டுத்தானே வந்தீர்கள். சத்தமாகப் பேசுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுமைப் படைப்பு (Innovation) தொழில் முனைப்பு (Entrepreneurship) என்ற இரண்டு மையப் புள்ளிகளில் எனது 10 கருத்துகளை எடுத்துரைக்க நினைக்கிறேன்.

I.T. துறை பிறந்து கடந்த 25 வருடங்களில் ஒவ்வொரு வருடமும் தமிழகத்தின் வளர்ச்சி விகிதம், I.T. exports வளர்ச்சி விகிதம், இந்தியாவின் வளர்ச்சி விகிதத்தைவிட அதிகமாக இருந்திருக்கிறது. 2005—ல் அ.தி.மு.க. ஆட்சியின்போது 5,200 கோடி ரூபாயாக இருந்த I.T. துறை 13,526 கோடி ரூபாயாக உயர்ந்தது. வளர்ச்சி விகிதம் 29 சதவிகிதம், ஒரு வருடத்திற்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகச் சொல்ல வேண்டாம். 2001—ல் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பொறுப்பேற்பதற்கு முன்பு அப்போது. . .

**திரு. க. பாண்டியராஜன்**: அதிலிருந்துதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 3,993 கோடி ரூபாய். பிறகு, 2006 ஆம் ஆண்டு. . .

**திரு. க. பாண்டியராஜன்**: 13,584 கோடி ரூபாய்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 14,000 கோடி ரூபாய்.

**திரு. க. பாண்டியராஜன்:** அப்படியே வைத்துக்கொள்ளுங்கள். 14,000 கோடி ரூபாய். வருடத்திற்கு வளர்ந்தது 29 சதவிகிதம். 2006—2011, தி.மு.க. ஆட்சியில் இது 42,100 கோடி ரூபாயாக உயர்ந்தது; வளர்ச்சி விகிதம் வருடத்திற்கு 26 சதவிகிதம். இந்த வருடம் இந்தியாவின் I.T. exports வளர்ச்சி விகிதம் 16 சதவிகிதம். தமிழ்நாடு வளர்ந்ததோ 14 சதவிகிதம். முதல் முறையாக 25 வருடங்களில் இந்தியாவின் வளர்ச்சியைவிட தமிழக வளர்ச்சி குறைந்திருக்கிறது. ஒரு சதவிகிதம் வளர்ச்சி விகிதம் உயர்ந்தால் சுமார் 5,200 புது நேரடி வேலைவாய்ப்புகள் உருவாகும் இந்தத் துறையில். 20 சதவிகிதத்திற்குக் குறையாமல் நம் வளர்ச்சி விகிதம் இருக்க இயலும் இந்தத் துறையில். அதற்கு நாம் இந்தத் துறைக்கு ஒதுக்கும் நிதியை நான்கு மடங்காக உயர்த்த வேண்டும். 25 கோடி ரூபாய் என்பது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த ஆண்டு ஒரு சதவிகிதம்கூட கூடவில்லை என்று இங்கே தவறான கருத்தைச் சொல்கிறார். (குறுக்கீடு) குறைந்திருக்கிறது என்று சொல்கிறார். 2011–2012 ஆம் ஆண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்றவுடன், அமெரிக்கா, ஐரோப்பாவைவிட, மந்த நிலை இருந்தும்கூட, 48,000 மென்பொருளை ஏற்றுமதி செய்து, இன்றைக்கு அபாரமான வளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 48,000 கோடி ரூபாய்.

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:** 48,000 கோடி ரூபாய்க்கு மென்பொருளை ஏற்றுமதி செய்து அம்மா அவர்கள் இன்று அபாரமான சாதனை புரிந்திருக்கிறார்கள் என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்**: உங்கள் கருத்துக்கு நன்றி. 20 சதவிகிதத்திற்குக் குறையாமல் நமது வளர்ச்சி விகிதம் இருக்க இயலும். அதற்கு நாம் இந்தத் துறைக்கு ஒதுக்கும் நிதியை 4 மடங்காக உயர்த்த வேண்டும். 25 கோடி ரூபாய் என்பது நம்முடைய பட்ஜெட்டில் 0.02 சதவிகிதம் மட்டுமே. தமிழகத்தின் பொருளாதாரத்தில் 9 சதவிகிதம் பங்கு உள்ள துறை இந்தத் துறை. தமிழகத்தின் ஏற்றுமதியில் 13 சதவிகிதம் பங்களிக்கும் துறைக்கு பட்ஜெட்டில் ஒரு சதவிகிதம் ஒதுக்கினாலே 1,200 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும். இது நிகழ்ந்தால்தான் 3–வது நிலையில், கர்நாடகா, N.C.R.–க்குப் பின்னால் 3 ஆம் நிலையில் உள்ள நாம் முதல் இடத்தை அடைய முடியும். ஒரு குறிக்கோளுடன் செயல்பட வேண்டும் என்று Vision 2023–ல் சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்த 4 வருடங்களில் இந்தத் துறையில் ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கு



மேல் நாம் வருமானம் ஈட்ட முடியும் என்று நான் நம்புகிறேன். அதற்கு 17 சதவிகிதம் வளர வேண்டும், ஒவ்வொரு வருடத்திலும். இன்று இருக்கும் சதவிகிதத்தை வளர்ப்பதற்கு சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். முதல் கருத்து, இன்டர்நெட் கண்டுபிடிக்கப்பட்டது கல்லூரியில். அமெரிக்காவில் இன்று இயங்கும் தொழில் நிறுவனங்களில் 12 சதவிகிதம் கல்லூரிகளில் உருவாகும் தொழில் நிறுவனங்கள். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளிலும், தொழில் முனைப்பினை வளர்க்க Incubation Centres–தொழில் முனைப்பு வளர்ச்சி மையங்கள் உருவாக்கப்பட வேண்டும். U.G.C.–ல் தரும் 15 இலட்சம் ரூபாயுடன் தமிழக அரசாங்கத்தின் Innovation Fund, மாண்புமிகு முதலமைச்சர் announce செய்த Innovation Fund–லிருந்து 15 இலட்சம் ரூபாய் கொடுத்து, தனியார் பங்களிப்புடன் இந்த மையங்கள் உருவாக்கப்படலாம். தமிழகத்தில் 100 கோடி ரூபாய்க்கு மேல் turn over இருக்கும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–25

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Incubation Centre பொறியியல் கல்லூரிகளில் தொடங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். ஏற்கெனவே உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையில், அறிவிப்பில் வெளியிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க பல்கலைக்கழகங்களுக்கும் சமூகத்திற்குமிடையே இணைவை ஏற்படுத்தும்வகையில் கல்லூரிகளில் தொழில்நுட்பம் அடைகாப்பு மற்றும் பகிர்ந்தளிக்கும் மையங்கள் உருவாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இம்மையங்கள் தொழில் முனையும் திறனை, தொழில்நுட்பத்தை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், கல்லூரிகளுக்கு அருகில் உள்ள கிராமங்களில் அந்த அறிவைப் பரப்பச் செய்யவும், மேலும், மண் பரிசோதனைக் கூடங்கள், கணினி மையங்கள், நீர் மேலாண்மை, விவசாயக் கருவி பராமரித்தல் மற்றும் சரிபார்த்தல் போன்ற நுட்பங்களை ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பித்து, அதன் நுட்பங்களைக் கிராமங்களுக்குக் கொண்டு செல்வதற்கு வழிவகை செய்யப்படும். ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் சமூகம் பயன்பெறும் வகையில் இம்மையங்களில் ஆராய்ச்சி

வழிமுறைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் பேணிக் காக்கப்படும். மேலும், இம்மையங்கள்மூலம் கல்லூரி கிராமத் தொழில்நுட்ப சங்கங்கள் அமைக்கப்படும் என்று உயர் கல்வித் துறையினுடைய மானியக் கோரிக்கையில் அறிவிப்பில் அறிவித்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பங்களிப்புடன் தமிழகத்தில் 100 கோடிக்கும் மேல் turnover உள்ள 600 நிறுவனங்களை ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு தொழில் நிறுவனத்தின் மென்பொருள். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது வளர்ச்சி விகிதம் ஒரு சதவிகிதம் தமிழகத்திலே குறைந்துவிட்டதென்று சொன்னார்கள். இன்னும் அதற்குத் தேவையான நிதியை நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்க வேண்டுமென்று சொன்னார்கள். முதலீட்டைப் பொறுத்தவரை நிதிநிலையிலே நிதி ஒதுக்குவதில்லை. முதலீட்டாளர்கள் வர வேண்டுமென்பதுதான், உங்களுக்கு நன்றாகத் தெரியும். தகவல் தொழில்நுட்பவியல் துறையைப் பொறுத்தவரை இப்போது கோயம்புத்தூரிலே இடம் இருக்கின்றது. சென்னையிலே இடம் இருக்கின்றது. யார் வந்தாலும் உடனடியாகத் துவங்குவதற்கு அனுமதி தர மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், the basic thing is, welfare scheme–க்கு முதலில் budgetary provision கொடுப்பார்கள். இது, Investment aspect; அதன்பின் முதலீட்டுக்கு தொழில் முனைவோர் வரும்போது அரசு, Infrastructure போன்ற மற்ற facilities கொடுக்கும். பிறகு investment develop ஆகும். இன்றைக்குக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5,700 கோடி ரூபாய் investment பற்றி



அறிவித்தார்கள்–நீங்கள் investment aspect–ல்தான் இதைப் பார்க்கவேண்டுமேயொழிய, இதிலே போய் budgetary provision–ஐ பார்க்கக்கூடாது.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருநகரங்களை மையப்படுத்தி வளர்வது தகவல் தொழில்நுட்பவியல் துறை. 6 மாதங்களுக்கு முன்னால் நடைபெற்ற CII Connect நிகழ்ச்சியில் முதலீட்டாளர்கள் முன்னால் சென்னையை "இந்தியாவின் San Jose" ஆக வளர்த்தெடுப்போம் என்று சூளுரைத்தார் மாண்புமிகு முதல்வர்– I.T. Expressway முடியுமென்று நம்புகிறோம். I.T. Expressway இன்னும் வேகமாக முழுமை பெற வேண்டும். * விரிவுபடுத்த வேண்டும். Private Company security ஏற்பாடு செய்ய வேண்டிய நிலை மாற்றி அமைக்கப்பட வேண்டும். Sidelines, pathways, open ditches . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், எங்கு ** இருக்கிறது? I.T. Expressway–யை ரூ.160 கோடியில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் அந்தத் திட்டத்தையே கொண்டு வந்தார்கள். அப்போது I.T. Minister நான். எல்லாமே அப்போது எடுத்ததுதான். அதற்குப் பிறகு எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை. அதில் நீங்களும் பிரயாணம் செய்யலாம். நானும் பிரயாணம் செய்யலாம் தைரியமாக. அந்த வழியில்தான் வாகனங்கள் போய்க்கொண்டிருக்கின்றன. என்ன ** இருக்கிறது? சொல்லுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** Sidelines, pathways, open ditches இதெல்லாம் வந்து இன்னும் 5 வருடங்களாக எந்தப் பராமரிப்பும் இல்லாத நிலையில் அந்த இடம் இன்னும் முழுமை பெறாமல் இருக்கிறது. அதற்கு Toll கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நிறுவனங்கள் பலரும் கேட்கும் விஷயம்தான் இது. அதை எடுத்துச் சொல்கிறேன். நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்யுங்கள். "San Jose" ஆக மாற்ற வேண்டுமென்ற கனவு நல்ல கனவு. இந்தியாவினுடைய "San Jose" ஆக சென்னையை மாற்ற வேண்டுமென்பது நல்ல கனவு. Knowledge Corridor அறிவித்தது போன அ.தி.மு.க. ஆட்சியில்தான். இதனை முழுமை பெறச் செய்ய வேண்டுமென்பது எங்களின் கோரிக்கை. அதற்கடுத்து, Tier 2, Tier 3. . . (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது விரிவுபடுத்த வேண்டுமென்று சொல்ல வேண்டும். அவர் ** இருக்கின்றது என்று சொன்னார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் கருத்துப்படி அதை விரிவுபடுத்த வேண்டுமென்ற அடிப்படையிலே கருத்து மாற்றப்படுகிறது.

**திரு. க. பாண்டியராஜன்:** அடுத்து, தகவல் தொழில்நுட்பவியல் துறையை Essential Services Act–க்குக்கீழ் கொண்டு வர வேண்டுமென்ற கோரிக்கை இன்று தொழில் துறையிலிருந்து வந்திருக்கின்றது. தகவல் தொழில்நுட்பவியல் துறையை Shops and Establishments Act–லிருந்து எடுத்துக் கொண்டு வர வேண்டுமென்ற கருத்துரு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையிலிருந்து ஏற்கெனவே Employment and Entrepreneurship Department–ல் எடுத்திருக்கிறார்கள். இதை இன்னும் வேகப்படுத்த வேண்டும். ** இன்றைக்கு இவ்வளவு சம்பாதித்துக் கொண்டிருக்கிற தகவல் தொழில்நுட்பவியல் துறையைக் கொண்டுவருவது நன்றாக இருக்காது. இன்ஸ்பெக்டர் ராஜ்யத்திலிருந்து துறையை விடுவிக்க இது உதவும் என்று நம்புகிறோம்.

பிற்பகல் 2–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I.T. field–ஐ ** மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றார் என்று சொன்னால், அது I.T. field–ஐ கேவலப்படுத்துவது போல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற மாதிரி ** இரண்டாவது அதற்கு என்று ஒரு தனிக் கொள்கை வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தொழில் கொள்கையை விரைவில் வெளியிடப்போகிறார்கள், அப்போது நீங்கள் பார்த்துக்கொள்ளலாம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பாண்டியராஜன், உங்கள் பேச்சிலே முரண்பாடு இருப்பதை நீங்களே ஒத்துக்கொள்கிறீர்கள். முதலில் investment அதிகமாக வரவேண்டும். Budget provision கொடுக்க வேண்டும்; I.T. develop ஆக வேண்டும் என்று சொன்னீர்கள். ஆனால், I.T. துறை Shops and Establishments Act–ல் வரவேண்டும் (குறுக்கீடு) ஏனென்றால், I.T. நிறுவனங்கள் வளர்ச்சியின் அடிப்படையிலே இன்றைக்கு இளைஞர்களுக்கு வேலை அதிகமாகக் கிடைக்கின்ற ஒரு சூழ்நிலை உள்ளது. அதற்கு மாறுபட்ட கருத்தை நான் அனுமதிக்க முடியாது. எனவே, அது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

**திரு. க. பாண்டியராஜன்:** சரி, சி.கே. பிரகலாத் போன்ற பல அறிஞர்கள் சொன்னபடி நம் தமிழகத்தின் உற்பத்தித் துறையில் போட்டித் திறனை மேம்படுத்த I.T. Manufacturing corridor தகவல் தொழில்நுட்பம், உற்பத்தித் தொழில் குழுமம் அமைக்க அரசு ஆதரவு தரவேண்டும். தொழில்கூடங்கள் எல்லாமே Geography–ஐ சார்ந்து இருக்கிறது. 50 தொழிற்கூடங்கள் clusters உருவாக்கி இருக்கிறோம். இதை புதுமையான கருத்தாக சி.கே. பிரகலாத் அவர்கள் வைத்தார்கள். நமது முதல்வர் அவர்களும் இந்தக் கருத்தை இன்றைக்குக் கேள்விப்பட்டு, செயல்படுத்துகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், பட்ஜெட்டில் நான் எதுவும் பார்க்கவில்லை. என்ன கருத்து என்றால் இருக்கிற manufacturing industries–க்கு எல்லாம் வெளிநாட்டில் இருந்து softwares வந்திருக்கிறது. நம் software company எல்லாம் வெளிநாட்டில் இருக்கிற உற்பத்தி நிறுவனங்களுக்கு—Automotive துறையை எடுத்துக்கொண்டால் அங்கிருந்து products வந்துகொண்டிருக்கின்றன. இதை மாற்றி இங்கேயே ஒரு I.T. Manufacturing Corridor உருவாக்க வேண்டும் என்பது ஒரு கருத்து. துறையைச் சார்ந்தவர்கள் இதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும் என்று கருதுகிறேன். இங்கே ஏற்கெனவே அதைப் போன்ற தயாரிப்பு நிறுவனங்கள் இருக்கின்றன என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். அதுமட்டுமல்ல, உற்பத்தித் துறையைப் பொறுத்தவரையில் தமிழகம்தான் 30–லிருந்து 35 சதவிகிதம் வரை முன்னிலையில்

இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். இன்னும் இரண்டு அமைச்சர்களின் பதிலுரை இருக்கிறது.

**திரு. க. பாண்டியராஜன்:** Domestic demand–ஐ அதிகப்படுத்துவதற்காக e–governance–ல் இன்னும் கொஞ்சம் investment வேண்டும். பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அது துறை சார்ந்த பட்ஜெட்டில் வருகிறது என்று நினைக்கிறேன். பட்ஜெட்டில் எதுவும் இல்லை. Domestic demand மிக முக்கியமான விஷயம். 48,000 கோடி ரூபாய்க்கு நாம் export செய்கிறோம். ஆனால் Domestic–ல் நாம் செய்வது ரூ.3,000 கோடிக்குக் கீழேதான் இருக்கிறது. இதை மாற்ற வேண்டும். I.T. sub–policies–ஐ பொறுத்தவரைக்கும் ஏழு செக்டார்களில் நாம் இந்தியாவில் தலைமைத்துவத்தை அடைய முடியும் என்று நினைக்கிறேன்.

Analytics, Animation and GFX, போன்ற இந்த மாதிரி 7 துறைகளில் தமிழகம் தலைமை தாங்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. அந்தத் துறைகளுக்கு அந்த sub–policies–ஐயும், சேர்த்து announce செய்ய வேண்டும்; 2002–ல் announce செய்த policy–ல் இருந்த மாதிரி இப்பொழுது நாம் 2012–ல் Policy announce செய்யும்போது அதிலும் அது வரவேண்டும். World class institutions. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டியராஜன், உங்களுடைய யோசனைகளை மாண்புமிகு தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சரிடத்தில் எழுதிக் கொடுத்து விடுங்கள், நடவடிக்கை எடுப்பார்கள். அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) Is it a Point of Order or Point of clarification? (குறுக்கீடு) ஒரு நிமிடம், திரு. சவுந்தரராசன் நீங்கள் உட்காருங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** I.T. Research Park, I.C.T. Acadamy–ஐ world class institution ஆக Vision–2023–ல் சொல்லியிருப்பதை கவனத்தில் எடுத்துக்கொள்வார்களென்று நினைக்கிறேன். Internet speed, tier 2, tier 3, tier 4 நகரங்களில் அதிகப்படுத்த வேண்டும். Unicode–ஐ சார்ந்த பொது வடிவம் தமிழ் இணையத்தில் கொண்டு வரவேண்டும். அது போக, Hardware–ல் strength கொண்டு வருவதற்கு State Electronics Commission உருவாக்கிக் கொண்டுவர வேண்டும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் இந்தத் துறையின் சார்பாக எந்த வகையிலே இந்த அரசு செயல்படுகிறது?. இந்தச் செயல்பாட்டிற்கு உள்ளே சென்றுதான் அவர் கருத்தைச் சொல்ல வேண்டும். அவர் சொந்த யோசனையை இங்கே சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்று சொன்னால், இந்த அரசுக்கு இதைவிட அறிவார்ந்த வல்லுநர்கள் அரசுக்கு ஆலோசனை சொல்லி–அதற்குமேலாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் துறையிலே பாண்டியத்துவம் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையிலேதான் இங்கே திட்டம் தீட்டப்பட்டு–நிதிநிலை அறிக்கையில் இப்போது விவாதிக்கப்படுகிறது. எடுத்ததிலிருந்து அமர்கின்றவரையில் ஆலோசனையாகவே இருந்தால் அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? தயவுசெய்து அதைச் சற்று மாற்றிக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாண்டியராஜன், உரையை முடியுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** Space allotment–ல் SMEs–க்கு 25% discount கேட்டிருக்கிறார்கள். 10 சதவிகிதம்கூட I.T. Park–ல் occupancy இல்லை. சிறு, குறு I.T. நிறுவனங்களுடைய கோரிக்கையை ஏற்று 25 சதவிகிதம் discount கொடுத்தால் (மணியடிக்கப்பெற்றது) I.T. Park முழுமையாகும். தமிழகம் முதலிடத்தில் வருவதற்கு நல்ல policies வரவேண்டும். அந்த policies வருவதை எதிர்நோக்கியிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன், நன்றி. வணக்கம்.

பிற்பகல் 2–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைநோக்குத் திட்டம் 2023–ஐப் பற்றி அதிலே I.T. Field–லே இதனைச் செய்யவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலோசனை சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள் ஆலோசனை சொல்வதற்கு முன்பே, இன்று காலை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அந்த 2023 தொலைநோக்குத் திட்டத்தை நோக்கி, கிட்டத்தட்ட சொன்னதை நிறைவேற்றும் அரசாக மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு இருக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக 5,700/- கோடி ரூபாய் முதலீட்டைக் கொண்டுவந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல், I.T. Field–க்கும் கொண்டு வருவார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களது பதிலுரை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன் அவர்கள் பேசுகின்றபோது, I.T. தொழிற்சாலைகள் Shops and Establishments Act–க்குள்ளே இருக்கக்கூடாது என்று சொன்னார். சட்டத்தின் ஆட்சி இருக்கின்ற இடத்திலே, எந்தவொரு நிறுவனமும், எந்தவொரு நபரும் சட்டத்திற்குட்பட்டுத்தான் இருக்க முடியும். Shops and Establishments Act இருக்கக்கூடாது என்று சொன்னால், வேறு எந்தச் சட்டத்தின்கீழ் அது இருக்க வேண்டும் என்று அவர் கருதுகிறார் என்ற தகவல் எனக்கு வேண்டும். இரண்டாவது, இப்போதே I.T.–யில் Self Certification என்ற வகையில் ஏராளமான தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன. Self Certification–ஐ அவர் வலியுறுத்துகிறார். அதையும் மீண்டும் வலியுறுத்துகிறாரா? அது எந்த அளவிற்கு அந்தத் தொழிலுக்கு உதவப்போகின்றது என்பதையும் சொல்ல வேண்டும். அதுபோல், இன்ஸ்பெக்டர் ராஜ் என்பதும் இருக்கக்கூடாது என்றும் அவர் சொல்கிறார். இன்ஸ்பெக்டர் ராஜ் இல்லையென்றால், enforcement இல்லையென்றால், சட்டத்தை எப்படி அமல்படுத்துவது என்பது என்னுடைய சந்தேகம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோதும், மற்ற மானியக் கோரிக்கையில் பேசுகின்றபோதெல்லாம் இந்தச்



சட்டத்தின்படி இதைக் கட்டுப்படுத்தவேண்டும், இந்தச் சட்டத்தின்படி இதைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று சொல்கிறார். ஆனால், இந்த I.T. Park–ஐப் பற்றி பேசுகின்றபோது, அவர் சார்ந்த தொழில் என்பதால், அவர் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால், எந்தச் சட்டமும் அவர் செய்கின்ற அந்தத் தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்ற நோக்கத்தில் பேசுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள். (குறுக்கீடு) நான் வாய்ப்புத் தருகிறேன், திரு. பாண்டியராஜன்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன் அவர்கள் கூறும்போது Essential Commodities Act–ல் கொண்டுவரலாம் என்று ஒரு suggestion சொன்னார்கள். (குறுக்கீடு) அது Essential Services Act–ல் வருமேயானால், நிச்சயமாக தொழிலாளர்கள் அனுபவிக்கக்கூடிய உரிமையை அவர்கள் முழுமையாக இழந்துவிடுவார்கள். ஆகையால், அதுபோன்ற Act இல்லாமல் வேறுவிதமான தொழில்ரீதியான, அந்தத் தொழிலாளர்களுக்குச் சாதகமாக உள்ள Industries Act–ல் அதைக் கொண்டுவர வழிவகை செய்ய வேண்டும். இனிவரும் புதுத்தொழில் கொள்கையில் அவ்வாறு அமைந்திருக்குமேயானால் அது அந்தத் தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த இரண்டு சட்டங்களைப் பற்றி பேசினேன். Shops and Establishments Act–லிருந்து I.T. துறையை மாற்றிக் கொண்டுவருவதற்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டியராஜன், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள். நீங்கள் I.T. கம்பெனி வைத்திருப்பதால் Rules and Regulations Act பற்றி எல்லாம் மற்ற Industries–க்கு பேசாமல், I.T. Industries–க்கு மட்டும் பேசுகிறீர்கள் என்பதுதான் அவரது குற்றச்சாட்டு. அதற்கு என்ன பதில், அதைச் சொல்லுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் பதில் சொல்கிறேன். இந்தக் கோரிக்கை இந்தியா முழுவதும் இருக்கின்றது. பல மாநிலங்களில் இந்தக் கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கின்றது. இந்த இன்ஸ்பெக்டர் ராஜ் என்பது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுற்றி வளைத்துப் பேசாமல், நேரடியாகவே வாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I.T. தொழிலில் மட்டும் இந்தக் கோரிக்கை இல்லை. முதலாளிகள் கேட்கவில்லை. எல்லாத் தொழிற்சாலைகளிலுமே அந்தத் தொழில் அதிபர்கள் எங்களுக்கு இந்த இந்தச் சட்டத்திலிருந்து எல்லாம் விதிவிலக்குக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஏதோ புதுமையாக I.T. Park தொழிற்சாலைகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் கேட்பதுபோல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார். மீண்டும் சொல்கிறேன், அவர் அதைச் சார்ந்த தொழிலைச் செய்துகொண்டிருப்பதால், அந்த முதலாளிகளுக்கு ஆதரவாக இங்கே பேசிக்கொண்டிருக்கிறார். இதை அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதைத் தெரிவிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன். உங்கள் கருத்தைப் பதிவு செய்யுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் உயிர் நாடியாக இருக்கக்கூடிய ஒரு தொழில் துறைக்காக நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நேரடியாக நீங்கள் பதில் சொல்லவேண்டும். அதைவிட்டுவிட்டு நீங்கள் சுற்றி வளைக்க வேண்டாம். நேரடியான பதில் இருந்தால் அது ஏற்றுக்கொள்ளப்படும். மற்றபடி அந்த ELCOSEZ மற்றது எல்லாம் அவைக் குறிப்பில் இருக்காது. நேரடியான பதில் உண்டா?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தே.மு.தி.க.வைப் பொறுத்தவரையில் எந்தவொரு பெருநிறுவனங்களுக்காகவும் நாங்கள் பேசவில்லை. நாங்கள் பேசியது, 3½ இலட்சம் பேர் வேலை செய்கின்ற ஒரு துறை. ஒரு வருடத்திற்கு 25,000 பேர் புதிதாக பொறியியல் கல்லூரிகளிலிருந்து வருகின்றவர்களுக்கு வேலை கொடுக்கின்ற துறை. அந்தத் துறை நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகப் பேசுகிறோம்.

பிற்பகல் 2–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்து அப்படி இருக்கும். Please sit down. (குறுக்கீடு) திரு. ஆறுமுகம், உங்களுக்கு என்ன? Point of clarification கேட்கிறீர்களா?

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I.T. field–ல் வேலைசெய்யக் கூடியவர்களுக்கு, பணிவரன்முறைகள், வேலை நேரம், இன்னும் இருக்கக்கூடிய ஓய்வு நேரமே இல்லை என்கின்ற ஒரு குற்றச்சாட்டு. தொழிற்சங்கம் தொடங்குவதற்கே அவர்களுக்கு நெருக்கடிகள் கொடுக்கப்பட்டுவரக்கூடிய இந்தச் சூழ்நிலையில் Shops and Establishments Act–ஐயும் எடுத்துவிடவேண்டும், அதேபோல Essential Services Act–ற்குள் கொண்டுவரவேண்டுமென்று சொன்னால் அவர்கள் வேலைநிறுத்தம் செய்வதற்கான உரிமையைப் பறிப்பதற்கான நடவடிக்கையாகவே தோன்றும். மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் பாண்டியராஜன் அவர்கள் அப்படிச் சொல்கிறார்களா, அவர்களுக்கு எந்த உரிமையும் வேண்டாமா என்று அவர்களிடத்திலே விளக்கம் கேட்க விழைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளியில் கேட்டுக்கொள்ளுங்கள். மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களது பதிலுரை.

***மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதர் குல மாணிக்கமாய் தமிழ் மக்களுக்கு ஒளிதந்த தாயே, இல்லை என வந்தவர்க்கு வறுமையைப் போக்கி, விலையில்லா அரிசி வழங்கிய அன்னபூரணி அம்மாவே, உயர் கல்வி படிக்கும் மாணவருக்கு உன்னதமான மடிக் கணினி, திருமணம் செய்யும் படித்த மகளிருக்கு தங்கத் தாலி வழங்கிய அன்னையே, ஏழையெளியோர் நல்வாழ்வு பெற ஆடு, மாடுகள் அளித்த அன்னையே, விவசாயப் பெருமக்களுக்கு உழவர் பாதுகாப்புத்

திட்டத்தை அளித்த தாயே, பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு விலையில்லா சீருடை, புத்தகம், சைக்கிள், வைப்புத்தொகை என வாரி வழங்கிய தர்மத் தாயே, மூவேந்தர், முத்தமிழ், முக்கனி என இவைகள் புகழ்பெற்றாலும் அம்மா உங்கள் முத்தான ஆட்சிக்கு ஈடில்லை தாயே!

தூங்கிக் கிடக்கும் பலகோடி தமிழரின் வாழ்வு மலர ஓயாது சிந்திக்கும் தர்மத் தாயே, சாதனைகள் புரிந்திடவும், சோதனைகள் வென்றிடவும், அம்மா உங்களை வென்றிட ஒருவரும் பிறந்ததில்லை தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் மருத்துவக் காப்பீடு அளித்த லோகமாதாவே, தங்கள் நல்லாட்சி வரலாறு படைத்திடும், ஏழைகளின் கண்ணீர் துடைத்திடும், எங்கள் அன்பு தெய்வமே!

தாயின் பாசம் கேட்கும் சேயாகவும், மழைநீரின் வரவை எதிர்நோக்கும் நிலமாகவும், தமிழ் மக்களின் துயர் தீர்க்கும் காவல் தெய்வமே அம்மா, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து என் உரையைத் துவங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணிக்க மகுடமாய் வீற்றிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சிரம் தாழ்த்தி இரு கரம் கூப்பி பாதம் பணிந்து வணங்குகிறேன், அம்மா.

“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்”

எந்தச் செயலைச் செய்வதற்கு யார் தகுதி என்று நன்கு ஆராய்ந்து, அந்தச் செயலை அவரிடத்திலேயே ஒப்படைத்தால் நினைத்த செயல் கைகூடும் என்ற வள்ளுவரின் வார்த்தைபோல தமிழ்நாட்டு மக்கள் தங்கள் வாழ்வு மலர, நன்கு சிந்தித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை தமிழ்நாட்டு முதலமைச்சராக்கி, மக்களுக்காக பணியாற்ற தமிழ்நாட்டை ஒப்படைத்திருக்கிறார்கள் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதியில், முக்கூர் கிராமத்தில், சாதாரண விவசாயக் குடும்பத்தில் மகனாகப் பிறந்த நான், கழக ஆரம்ப காலத்தில் இருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்



கழக உறுப்பினராகச் சேர்ந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் விசுவாசமிக்க உண்மைத் தொண்டனாக ‘அம்மா’ அவர்களின் தலைமையின்கீழ், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்துள்ளேன். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் என்னை வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பளித்தும், மேலும், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பளித்ததோடு, சுட்டெரிக்கும் வெயிலையும் பாராமல் வாக்குகள் சேகரித்து, ஏறத்தாழ 27,000 வாக்குகள் வித்தியாசத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாசியால் வெற்றி பெறச் செய்து, தற்போது தமிழக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சராகவும் என்னைப் பணியாற்ற வாய்ப்பளித்து, மேலை நாடுகளுக்கு நிகராக தமிழகத்தைத் தகவல் தொழில்நுட்பத் துறையில் பல முன்னேற்றங்களுக்கு வழிவகுத்திருக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் கோடானுகோடி நன்றி மலர்களை என் குடும்பத்தோடு காணிக்கையாக்கி தங்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன் அம்மா.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மாவின் ஆணையை ஏற்று என்னை வரலாற்றுச் சிறப்புமிக்க இச்சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய செய்யாறு தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘அரசைத் தேடி மக்கள்’ என்ற நிலையை மாற்றி ‘மக்களைத் தேடி அரசு’ என்ற நிலையை உருவாக்குவதே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசின் முக்கிய குறிக்கோளாகும். (மேசையைத் தட்டும் ஒலி) ‘வாடிக்கையாளருக்கு நாம் செய்யும் சேவையை சலுகையாகக் கருதாமல் அதற்கு மாறாக நாம் அவர்களுக்கு சேவை செய்ய ஒரு வாய்ப்பினை அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள் எனக் கருதவேண்டும் என்ற அண்ணல் மகாத்மா காந்தியடிகளின் பொன்மொழியை கருத்தில்கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி,

மக்களை மையமாகக்கொண்டு செயல்பட்டு வருகிறது என்பதை இம்மாமன்றத்தில் பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு தமிழகத்திலுள்ள அடித்தட்டு மக்களின் நலனையும் கருத்தில்கொண்டு, இதற்கென தகவல் தொழில்நுட்பத்தை ஒரு முக்கிய கருவியாகப் பயன்படுத்தி, அதன்மூலம் மக்களுக்கான எல்லா சேவைகளையும், அவர்கள் தம் இருப்பிடத்திற்கு அருகிலேயே, விரைவாகவும், திறம்படவும், நேர்த்தியாகவும், நம்பிக்கையுடனும் வழங்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அதிசயங்கள் ஏழு. அதுபோல மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக பதவியேற்ற ஒரு மணி நேரத்தில் கையெழுத்திட்டு நடைமுறைப்படுத்திய முத்தான திட்டங்கள் ஏழு. அதேபோன்று தகவல் தொழில்நுட்பத் துறையில் முக்கிய குறிக்கோளும் ஏழு என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. மிக விரைவாக, குடிமக்களுக்கு அரசின் தகவல்கள் மற்றும் பரிமாற்றங்கள் ஆகியவற்றை இணையம் வாயிலாக அவற்றின் இருப்பிடத்திலேயே வழங்குவதற்கும்,

2. கிராம மற்றும் நகர மக்களிடையே தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் உள்ள இடைவெளியை நிரப்புவதற்கும்,

3. தமிழ்நாட்டை தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான மின்-ஆளுமையில் சிறந்த மாநிலமாக மாற்றுவதற்கும்,

4. தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியைக் கணிசமான அளவுக்கு உயர்த்துவதற்கும்,

5. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும், கம்பிவடத் தொலைக்காட்சி சேவைகளை விரைவாகவும், நியாயமான விலையில் வழங்குவதற்கும்,



6. கணினித் தமிழை உயர்நிலைக்கு எடுத்துச்செல்வதற்கும்,

7. குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தினை தகவல் தொழில்நுட்பத்தின்மூலம் மேம்படுத்துவதற்கும், தகவல் தொழில்நுட்பவியல் துறை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையின்கீழ் செயல்படும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பத் துறைமூலம் அரசுக்கும், பொதுமக்களுக்கும் இடையேயான, தொடர்புகள் மாவட்ட நிருவாகம்மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தொடர்புகளை மேம்படுத்துவதற்காகவும், மாவட்ட அளவில் பல்வேறு துறை சார்ந்த சேவைகளைத் தடையின்றி பொதுமக்களுக்கு வழங்குவதற்காகவும், சாதாரண குடிமகன் அனைத்துத் தகவல்களையும் பெற ஏதுவாக தொலைநோக்கு அணுகுமுறையோடு திட்டங்களை அளித்து வருபவர்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் மாவட்டத் திட்டம் முன்னோடியாக கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் அதனைத் தொடர்ந்து அரியலூர், பெரம்பலூர், கோயம்புத்தூர், திருவாரூர் மற்றும் நீலகிரி ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தினை மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இம்மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின்கீழ் சிறப்பு நோக்கு துறைகளாக வணிக வரி, பதிவுத் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, வேளாண்மைத் துறை, கூட்டுறவுத் துறை, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, காவல் துறை, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, போக்குவரத்துத் துறை, கருவூலக் கணக்குத் துறை, கல்வித் துறை, தொழில் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் வருவாய்த் துறை உள்ளிட்ட 14 துறைகள்

தேர்ந்தெடுக்கப்பட்டு, இத்துறைகளில் பல்வேறு சேவைகளை, மின் ஆளுமைத் திட்டத்தின் வாயிலாக மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதாரணமாக, வேலைவாய்ப்புத் துறையில் வேலைவாய்ப்பு முன்பதிவிற்கு, பள்ளிக் கல்வி முடிந்த பின், மாணவர்கள் கூட்டம் கூட்டமாக வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சென்று, மணிக்கணக்கில் காத்திருந்து, வரிசையில் நின்று பதிவு செய்யும் கடந்த கால அவல நிலையை மாற்றி, மாணவர்கள் தாங்கள் பயிலும் பள்ளிகளிலிருந்தே வேலைவாய்ப்புகான பதிவுகளைப் பதிவு செய்ய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்மூலமாக கடந்த ஆண்டில் மட்டும் 12 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளார்கள் என்பதை இம்மான்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் ஆளுமையின்மூலம், அரசின் அனைத்து சேவைகளையும் மக்களின் இருப்பிடத்திற்குக் கொண்டு சேர்ப்பதே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அரசின் சீரிய நோக்கமாகும்.

இந்த நோக்கத்தினை வெற்றிகரமாகச் செயல்படுத்திட முனையும், அரசுத் துறைகளுக்கு ஊக்கமும், உரிய அங்கீகாரமும் அளித்திடும் வகையிலும், வளர்ந்து வருகின்ற இளைய சமுதாயத்தினர், மாணவர்கள் மற்றும் மின் ஆளுமை ஆர்வலர்களுக்கு இடையே மின் ஆளுமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையிலும் ‘மின் ஆளுமைக்கான முதலமைச்சரின் உயரிய விருதுகள்’ ஆண்டுதோறும் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது இதனை நிறைவேற்றிடும் வகையில் இது தொடர்பாக ஆணைகள் வெளியிடப்பட்டு, இவ்விருது ஆண்டுதோறும் வழங்கப்பட உள்ளது.

ஒவ்வொரு விருதுதாரருக்கும் அந்தந்தப் பிரிவுகளின்கீழ், பரிசுத் தொகையாக தலா ரூபாய் 2,00,000/– மற்றும் ரூபாய் 15,000/– மதிப்பிலான கோப்பையும் வழங்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் செயல்திறனை மேலும் உயர்த்திட உதவிடும் மின் ஆளுமையை, அனைத்துத் துறைகளிலும் செயல்படுத்திடும் வகையில், ஒரு வழிகாட்டி அணுகுமுறை மற்றும் தொலைநோக்குடன்கூடிய, பொதுவான கொள்கை அவசியம் என்று உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒரு விரிவான மின் ஆளுமைக் கொள்கையை விரைவில் வெளியிட உள்ளார்கள் என்பதை இப்பேரவையின் வாயிலாக இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தின் வளர்ச்சிக்கு அதன் உட்கட்டமைப்பு என்பது மிகவும் அவசியம் என்பதை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் முத்தான பல திட்டங்களை தினந்தோறும் அறிவித்து வருகின்றார்கள்.

தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைப் பொறுத்தவரை, தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலை அமைப்பு, மத்திய மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் ரூ.181.69 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது.

அரசின் நிருவாக நிகழ்வுகளை மேற்கொள்ள 1,500–க்கும் மேற்பட்ட அரசு அலுவலகங்கள், தம்மிடையே தொடர்புகொள்ளும் வகையில், தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலை அமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளது என்பதை இப்பேரவையின் வாயிலாக இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் தமிழ்நாடு மாநில தரவு மையம், 1–8–2011 அன்று வெற்றிகரமாக தனது முதற்கட்டப் பணிகளைத் தொடங்கியது. நம் நாட்டில் தரவு மையங்களை வெற்றிகரமாக நிறுவிய சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

இயற்கைச் சீற்றங்கள் மற்றும் மனித ரீதியானப் பேரிடர்கள் ஏற்படும்போது உண்டாகும் தரவு இழப்பைத் தவிர்க்கவும், அரசு தரவுகளைப் பாதுகாத்து வைத்திடவும், தமிழகத்தில் பேரிடர் தகவல் மீட்பு மையம் ஒன்று அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இப்பேரவையின் வாயிலாக இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலால் தமிழக அரசின் தகவல்களையும், சேவைகளையும் எந்நேரமும், எந்த இடத்திலும் பெறுவதற்கான ஓர் ஒற்றைச் சாளர அணுகு மையமாக மாநில சேவை இணையதளம் உருவாக்கப்பட்டு வருகிறது.

இதன்மூலமாக, பொதுமக்கள் மின்படிவங்கள் வாயிலாக அனைத்து சேவைகளையும் இணையம் மூலமாகப் பெறமுடியும். இந்த மேம்படுத்தப்பட்ட மாநில சேவை இணையதளம் விரைவில் செயலாக்கம் பெறும் என்பதை இப்பேரவையின் வாயிலாக இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்குத் தேவையான தகவல்களைத் தெரிவிக்கவும், மக்களுடனான தொடர்புகளை மேம்படுத்தவும், பல்வேறு அரசுத் துறைகளைச் சார்ந்த சேவைகளை ஒரே இடத்தில் குடிமக்களுக்கு வழங்கவும், 6 கோடி ரூபாய் செலவில் மக்கள் தொடர்பு மையம் ஒன்றினை அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 5–1–2012 அன்று ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்பதை இப்பேரவையின் வாயிலாக இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு முழுவதற்கும் பொதுவான ஒரு தொலைபேசி எண்மூலம் இம்மையத்தினைத் தொடர்பு கொண்டு, அனைத்து விவரங்களையும் பொதுமக்கள் எளிதில் பெற்றுக்கொள்ளலாம். இம்மையத்தினை சென்னையில் நிறுவ ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இப்பேரவையின் வாயிலாக இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் சிறப்பான உட்கட்டமைப்பு வசதிகள், அறிவியல், சமூக மற்றும் மனிதவள ஆதாரங்களைப் பெற்றுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வை மற்றும் சீரிய தலைமையின்கீழ் தமிழகம்,



மீண்டும் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்களின் முதலீட்டுக்கு உகந்த இடமாக உருவாகியுள்ளது என்பதையும் இம்மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டின் இரண்டாம் நிலை நகரங்களில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உலகளவில் பிரசித்திப்படுத்தி, முதலீடுகளை ஈர்க்கும்பொருட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்பூங்காக்களுக்கு ‘எல்கோசெஸ்’ என்று பெயர் சூட்டி ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்தில் பேரவைத் தலைவர் வாயிலாக பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் எட்டு இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

அவை, சென்னையில் உள்ள சோழிங்கநல்லூரில் மொத்தம் 377.08 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைந்துள்ளது. இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 3 பன்னாட்டு நிறுவனங்கள் சுமார் 28,000 தொழிலாளர்களுடன் இயங்கி வருகின்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், வரும் ஆண்டுகளில் இந்நிறுவனங்களின் மூலமாக சுமார் ரூ.4,000 கோடி முதலீட்டில் மென்பொருள் படித்த 1 இலட்சம் நபர்களுக்கு நேர்முக வேலைவாய்ப்பும், 2 இலட்சம் நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உருவாகும் என மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு எதிர்பார்க்கிறது என்பதை இம்மாமன்றத்தில் பேரவைத் தலைவர் வாயிலாக பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் உள்ள விளாங்குறிச்சியில் மொத்தம் 62 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைந்துள்ளது.

இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 2 பன்னாட்டு நிறுவனங்களுக்கு சுமார் 19 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்நிறுவனங்கள்மூலம் சுமார் ரூ.1,200 கோடி முதலீட்டில் தொழில்நுட்பம் பயின்ற 30,000 நபர்களுக்கு நேர்முக வேலைவாய்ப்பும், 60,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உருவாகும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு எதிர்பார்க்கிறது என்பதை இம்மாமன்றத்தில் பேரவைத் தலைவர் வாயிலாகப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் உள்ள இலந்தைகுளம் கிராமத்தில் மொத்தம் 28.91 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைந்துள்ளது. இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 2 நிறுவனங்களுக்கு 6.75 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் ரூ.400 கோடி முதலீட்டில் படித்த நபர்கள் 5,000 பேருக்கு நேர்முக வேலைவாய்ப்பும், 10,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் வரும் ஆண்டுகளில் உருவாகும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு எதிர்பார்க்கிறது என்பதை இம்மாமன்றத்தில் பேரவைத் தலைவர் வாயிலாகப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் உள்ள வடபழஞ்சியில் மொத்தம் 245.17 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைந்துள்ளது. இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 2 நிறுவனங்களுக்கு சுமார் 7 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாட்சியில் இந்நிறுவனங்கள்மூலம் ரூ.800 கோடி முதலீட்டில் படித்த நபர்கள் 20,000 பேர்களுக்கு நேர்முக வேலைவாய்ப்பும், 40,000 பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் வரும் ஆண்டுகளில் உருவாகும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு எதிர்பார்க்கிறது என்பதை இம்மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் உள்ள நவல்பட்டில் மொத்தம் 147.61 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைந்துள்ளது. இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 7 நிறுவனங்களுக்கு சுமார் 26 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்நிறுவனங்கள்மூலம் சுமார் ரூ.800 கோடி முதலீட்டில் படித்த நபர்கள் 20,000 பேர்களுக்கு நேர்முக வேலைவாய்ப்பும், 40,000 பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதை இம்மாமன்றத்தில் பேரவைத் தலைவர் வாயிலாகப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் உள்ள கங்கைகொண்டான் கிராமத்தில், மொத்தம் 500 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைந்துள்ளது. இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 3 நிறுவனங்களுக்கு சுமார் 127 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இத்தகவல் தொழில்நுட்பப் பூங்காமூலம் சுமார் ரூ.1,000 கோடி முதலீட்டில் படித்த நபர்கள் 25,000 பேர்களுக்கு நேர்முக வேலைவாய்ப்பும், 50,000 பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் வரும் ஆண்டுகளில் உருவாகும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசால் எதிர்பார்க்கப்படுகிறது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் உள்ள ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில் மொத்தம் 164.26 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைந்துள்ளது. இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 4 நிறுவனங்களுக்கு சுமார் 11.50 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காமூலம் சுமார் ரூபாய் 200 கோடி முதலீட்டில் படித்த நபர்கள் 3,000 பேர்களுக்கு நேர்முக வேலைவாய்ப்பும், 6,000 பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் வரும் ஆண்டுகளில் உருவாகும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில் எதிர்பார்க்கப்படுகிறது என்பதை இம்மாமன்றத்தில் பேரவைத் தலைவர் வாயிலாகப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஒசூர்—விஸ்வநாதபுரம் கிராமத்தில், மொத்தம் 175 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைந்துள்ளது. இச்சிறப்பு பொருளாதார மண்டலத்தில் 3 நிறுவனங்களுக்கு சுமார் 11.50 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காமூலம் ரூபாய் 1,000 கோடி முதலீட்டில் படித்த நபர்கள் 20,000 பேர்களுக்கு நேர்முக வேலைவாய்ப்பும் 40,000 பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் வரும் ஆண்டுகளில் உருவாகும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில் எதிர்பார்க்கப்படுகிறது என்பதை இம்மாமன்றத்தில் பேரவைத் தலைவர் வாயிலாகப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட 8 தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களின்மூலம் மொத்தம் 14 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் படித்த நபர்கள் 2 இலட்சத்து 23 ஆயிரம் பேர்களுக்கு நேர்முக வேலைவாய்ப்பும், 4 இலட்சத்து 46 ஆயிரம் நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் வரும் ஆண்டுகளில் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதை இம்மாமன்றத்தில் பேரவைத் தலைவர் வாயிலாகப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்களைக் கவரும் வகையில் புதிய தகவல் தொடர்பு



தொழில்நுட்பக் கொள்கை ஒன்றும், ஊரக வணிக வெளிப்பணி மையங்களை அமைக்க ஆர்வமுள்ள தொழில்முனைவோரை ஈர்க்கும்பொருட்டு மேம்படுத்தப்பட்ட ஊரக வெளிப்பணிக் கொள்கை ஒன்றும் வெளியிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் திட்டமிட்டுள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்தில் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மென்பொருள் ஏற்றுமதி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில் 2011–2012 ஆம் ஆண்டு 48,000 கோடி ரூபாய் என்ற அளவில் உயர்ந்துள்ளது. மேலும், இது 2012–2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுத்துவரும் சீரிய நடவடிக்கைகளால் 60,000 கோடி ரூபாயாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

உலக அளவில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நிலவிய பொருளாதார மந்த நிலையிலும்கூட இத்தகைய சிறப்பான வளர்ச்சியைத் தமிழகம் எட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய மகத்தான சாதனையை படைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை உலகமே பாராட்டுகிறது என்பதை இம்மாமன்றத்தில் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை வளர்ச்சி பெறாத வன்பொருள் உற்பத்தித் துறையில்கூட வளர்ச்சி ஏற்படுத்துவதே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் நோக்கமாகும்.

இது தொடர்பாக ஒரு வல்லுநர் குழு அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இக்குழு தமிழகத்தில் வன்பொருள் துறையின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை மதிப்பீடு செய்யவும், முதலீடுகளை எவ்வாறு ஈர்ப்பது என்பதற்கும், பரிந்துரைகளை அரசுக்கு அளிக்கும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த

நிறுவனங்களில் பணிபுரிந்து வருகின்றனர். இதில் சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் 'எல்கோசெஸ்' பூங்காக்களில் மட்டும் சுமார் 25,000 பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வேலைவாய்ப்பை உருவாக்கும் எண்ணத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நடப்பாண்டில் 30,000 பேர் கூடுதலாக வேலைவாய்ப்பினைப் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் வாக்குறுதிகள் குறித்து, சில பேர் சொல்வார்கள். ஆனால் செய்யமாட்டார்கள். சொன்னதைச் செய்த ஒரே தலைவி, இந்தியாவிலேயே நம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) முடியாததையும் முடித்துக் காட்டக்கூடிய வல்லமை படைத்த உன்னதத் தலைவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் மட்டும்தான் என்பதை இம்மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், விலையில்லா தரமான அரிசி வழங்கியதுபோல, விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி வழங்கியது போல, ஏழை எளியோர்களுக்கு, ஆடு, மாடுகள் வழங்கியதுபோல, ஏழை எளியோர் பயன்பெறும் பல்வேறு நலத் திட்டங்களை வாரி வாரி வழங்கியதுபோல, அனைத்து மக்களும் பயனடையும் வகையில், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. என்ற ஒரு சேவையை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2006 ஆம் ஆண்டிலே தமிழக மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் கேபிள் டி.வி. சேவைகளை அரசே வழங்குவது என முடிவெடுத்து செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதை இப்பேரவையின் வாயிலாக இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 2001–2006 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில், 2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை தொடரில் கம்பிவடத் தொலைக்காட்சி நிருவாகத்தைக் கையகப்படுத்தி, அந்த நிறுவனங்களை, அரசு ஆளுமைக்கு உட்பட்ட நிறுவனங்களாக செயல்பட மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்க சட்டமுன்வடிவு எண் 6/2006, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 27–1–2006 ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்டு, அப்பொழுதே மேதகு ஆளுநர் அவர்களின் இசைவிற்காக அனுப்பப்பட்டது என்பதை இப்பேரவையின் வாயிலாக இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பொழுது மத்திய அரசில் அங்கம் வகித்த கருணாநிதி, நாட்டின் நலனுக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும், ஆளுநரை சந்திக்காத அவர், பதறிப்போய் ஓடி குடும்பத் தொலைக்காட்சியை காப்பாற்றுவதற்காக ஆளுநரை சந்தித்து முறையிட்டது நாடறிந்த உண்மையாகும்.

பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பு, மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி வந்தவுடன் மேற்படி சட்டமுன்வடிவு அப்போதைய ஆட்சியாளர்களால் திரும்பப்பெறப்பட்டது. மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் முதல்வராக பதவி வகித்த கருணாநிதிக்கும், கேபிள் டி.வி. நடத்திய அவருடைய பேரன் தயாநிதி மாறனுக்கும் குடும்பச் சண்டை ஏற்பட்டதன் காரணமாக, மீண்டும் அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற தமிழக அரசு நிறுவனம் 4–10–2007 அன்று துவங்கப்பட்டது.

மேலும், குறைந்த விலையில் சிறந்த கேபிள் டி.வி. சேவையைப் பொதுமக்களுக்கு வழங்குவோம் என்று அறிவித்தார்கள். ஆனால், மீண்டும் அவரது குடும்பச் சண்டை தீர்ந்து, சமாதானம் அடைந்ததால், அரசு கேபிள் டி.வி. நிறுவனம், பல்வேறு காரணங்களினால் செயல்படாமல் முடக்கி வைக்கப்பட்டு, செயலிழந்த நிலையில் இருந்தது. சந்தாதாரர்களின் எண்ணிக்கையும் மார்ச் 2011 ஆம் ஆண்டில் 436 என மிக மிகக் குறைந்த அளவிலேயே இருந்தது. மேலும் மார்ச் 31, 2010 ஆம் ஆண்டுக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை எண் 4 (வணிகம்) பத்தி எண் 4.3–ல், அரசு கேபிள் டி.வி. நிறுவனம் ரூ.28.28 கோடி பெறுமானமுள்ள அடிப்படைச் சொத்தை வீணாக்கியதுடன், 2010 ஆம் ஆண்டு அக்டோபர் வரையிலான 3 ஆண்டுகளின் வணிகச்

செயல்பாட்டில் ரூ.8.11 கோடி ரொக்க இழப்பை அடைந்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைனாரிட்டி தி.மு.க. அரசில் ஒரே குடும்பத்திற்கு கேபிள் டி.வி. மூலமாக சுமார் 2 கோடி சந்தாதாரர்களிடமிருந்து ரூ.150 முதல் ரூ.250 வரை வசூல் செய்து, மாதம் ஒன்றிற்கு ரூ.500 கோடி வரை சுருட்டியதைத் தடுக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், குறைந்த விலையில் சிறந்த கேபிள் டி.வி. சேவையை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் மீண்டும் 2011–ல் ஆட்சி அமைத்தவுடன், அரசு கேபிள் டி.வி. நிறுவனம் புத்துயிர் ஊட்டப்பட்டு, அதற்கு முன்பணமாக ரூ.3 கோடி நிதியுதவியும் வழங்கப்பட்டது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், இந்நிறுவனத்தின் பெயர் "தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் லிமிடெட்" என மாற்றம் செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 2–9–2011 அன்று சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் இந்நிறுவனத்தின் கேபிள் டி.வி. சேவையைத் தொடங்கிவைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் புத்துயிரூட்டப்பட்ட தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் கேபிள் சேவை, கேபிள் ஆப்பரேட்டர்களிடமும், பொதுமக்களிடமும் சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நிறுவனத்தின் கேபிள் டி.வி. சேவையினைப் பெறுவதற்கு 30,194 ஆப்பரேட்டர்கள் மற்றும் 1.12 கோடி சந்தாதாரர்களின் இணைப்புகளைப் பதிவு செய்துள்ளனர். இதன் வாயிலாக பல்லாயிரக்கணக்கான கடைநிலை கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்களின் வேலைவாய்ப்பு பாதிக்காதவண்ணம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தில் மொத்தம் 95 தொழில்நுட்பப் பணியாளர்கள் தற்போது பணியாற்றி வருகின்றனர். மேலும், 31 மாவட்டங்களிலும் வட்டாட்சியர்கள் நியமிக்கப்பட்டு நிறுவனத்தின் வசூல் பணிகள், இணைப்பு அதிகரித்தல், தரமான சிக்னலைப் பொதுமக்களுக்கு வழங்குதல், ரூ.70 மட்டுமே சந்தாவாக வசூலிப்பதை உறுதி செய்தல், உள்ளூர் சேனல்கள் ஒளிபரப்பை முறைப்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் ஆரம்பித்த 2–9–2011 முதல் 30–4–2012 வரை கேபிள் ஆப்பரேட்டர்கள் மற்றும் உள்ளூர் சேனல்கள்மூலம் பெறப்பட்ட முன்பணத் தொகையாக 33 கோடியே 24 இலட்சத்து 24 ஆயிரத்து 425 ரூபாய் மற்றும், மாத சந்தாவாக 35 கோடியே 29 இலட்சத்து 24 ஆயிரத்து 8 ரூபாய் எனவும், ஆக மொத்தம் 68 கோடியே 53 இலட்சத்து 48 ஆயிரத்து 433 ரூபாய்வரை வருவாய் ஈட்டியுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் பேரவைத் தலைவர் வாயிலாகப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 30–4–2012 வரையில் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 49,53,670 ஆக உயர்ந்துள்ளது. மேலும், சந்தாதாரர்களின் எண்ணிக்கையை இந்த ஆண்டிற்குள் ஒரு கோடிக்கு மேலாக உயர்த்துவது என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இம்மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2–9–2011 அன்று தனது சேவையினை இலவசச் சேனல்களுடன் தொடங்கிய இந்நிறுவனம், தற்பொழுது இலவசச் சேனல்கள், கட்டணச் சேனல்கள் மற்றும் உள்ளூர் சேனல்களுடன் சேர்த்து மொத்தம் 100 சேனல்கள் வரை பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம், சேவையினைத் தொடங்குவதற்குமுன் பொதுமக்கள் கேபிள் டி.வி. சேவையைப் பெற மாதம் ஒன்றுக்கு

ரூ.150 முதல் ரூ.250 வரை கேபிள் டி.வி. கட்டணமாகச் செலுத்தி வந்தனர். ஊரை அடித்து உலையில் போட்ட ஊழல்வாதிகளின் முகமூடிகளைக் கிழித்தெறிந்து, மக்களின் பணம் மக்களுக்கே சேர்ந்திட திடமான நடவடிக்கை எடுத்தவர்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் என்பதை இம்மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30–8–2011 அன்று சட்டமன்றத்தில் அறிவித்ததற்கிணங்க தற்போது இந்நிறுவனத்தின்மூலம் ரூ.70 என்ற மிக மிகக் குறைந்த கட்டணத்தில் பொதுமக்கள் கேபிள் சேவையைப் பெற்று வருகின்றனர் என்பதை இம்மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனால் பொதுமக்களுக்கு மாதத்திற்கு ரூ.80 முதல் ரூ.180 வரை மீதமாகின்றது. மேலும், கேபிள் டி.வி. தொழிலில் குறிப்பிட்ட சிலர் மட்டுமே கோடிக்கணக்கில் இலாபம் அடைந்துவந்த நிலை மாறி, பொதுமக்களின் பணம் மாதம் ஒன்றிற்கு ஏறக்குறைய ரூ.300 கோடி மீதமாகி அவர்களிடமே சேமிப்பாக உள்ளது. இதனால், பொதுமக்களிடம் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. சேவைக்கு மாபெரும் வரவேற்பு உள்ளது என்பதை இம்மாமன்றத்தில் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. சிக்னலை ஒளிபரப்பும் சில கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள், அனுமதியின்றி சில நிறுவனங்களின் கட்டணச் சேனல்களை ஒளிபரப்பும் ஆப்பரேட்டர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு காவல் துறையின் திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவிற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு யாரேனும் திருட்டுத்தனமாக, அனுமதியின்றி கேபிள் டி.வி. ஒளிபரப்பினால் அவர்கள் யாராக இருப்பினும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில் சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இம்மாமன்றத்தில் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 3–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் புத்துயிர் ஊட்டப்பட்ட தமிழக அரசு கேபிள் நிறுவனத்தின் செயல்பாடுகள் இந்தியாவிலேயே முதல் இடத்திலும் உலகளவில் 8–வது இடத்திலும் உள்ளது என்பதை இம்மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலமாக சென்னைக்கும் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் சேவைகளை விரைவுபடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தத்தில் அனைத்து அரசுத் துறைகளையும் மின்-ஆளுமையின்கீழ் கொண்டு வந்து தகவல் தொழில்நுட்பவியல் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதே மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் தலைமையிலான தமிழக அரசின் குறிக்கோளாகும். அதற்கு தகவல் தொழில்நுட்பவியல் துறை அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று கூறி, இந்த நல்வாய்ப்பினை நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, 2012–2013 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஒப்புதலோடு இம்மாமன்றத்தில் வெளியிடுகின்றேன்.

1. **அனிமேஷன் மற்றும் கேமிங் துறையை வளர்த்தல்** (Promotion of Animation and Gaming Industry)

பொழுதுபோக்குத் துறையில் அனிமேஷன் பிரிவு நன்கு வளர்ந்து வருகிறது. மல்டிமீடியா மற்றும் பொழுதுபோக்குத் துறையில் தமிழ்நாடு முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்த அனிமேஷன் மற்றும் கணினிவழி விளையாட்டுத் துறையை நமது மாநிலத்தில் வளர்ப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி

இத்துறை சார்ந்த வல்லுநர்களை உள்ளடக்கிய ஒரு குழு அமைக்கப்படும். இக்குழு இந்த அனிமேஷன் மற்றும் கணினிவழி விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கான திட்ட வரைபடத்தினைப் பரிந்துரை செய்யும்.

**2. அரசு ஊழியர்களுக்கு கணினிவழிப் பாடங்கள் (**E–Learning Content for Government Employees)

அரசு ஊழியர்களுக்குக் கணினி தொடர்பான அடிப்படைப் பயிற்சி மற்றும் அலுவலக கணினிமயமாக்கல் குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி கணினிக் கல்வி தொடர்பான பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு அவை தமிழ்நாடு தரவு மையத்தின்மூலம் இணையத்தில் வழங்கப்படும். இப்பாடங்களை அரசு ஊழியர்கள் படித்து அவர்களது கணினித் திறனை வளர்த்துக்கொள்ள இயலும்.

**3. துறைகளின் பயன்பாடுகளை மறு வடிவமைத்தல்** (Redesigning of the Departmental applications)

அரசுத் துறைகள் தங்கள் பயன்பாடுகளை மின் ஆளுமைச் சேவைகள்மூலம் செயல்படுத்தி வருகின்றன. அப்பயன்பாடுகள் பல்வேறு இயக்குதளங்கள் மற்றும் தொழில்நுட்பங்களைக் கொண்டு உருவாக்கப்படுகின்றன. நமது மாநிலம் அனைத்து சேவைகளையும் ஒருங்கிணைத்து வழங்க உத்தேசித்துள்ளதால் அரசுத் துறைகளின் பயன்பாடுகளை மறு வடிவமைத்திட வேண்டியுள்ளது. ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் சேவைகள் வழங்கிட ஏதுவாக பல்வேறு துறைகளின் பயன்பாடுகள் படிப்படியாக திறந்த தர நிலைக்கு இணக்கம் கொண்டதாக உருவாக்கப்படும்.

**4. இணைய நெறிமுறை பதிப்பு–6 – திறன் மேம்படுத்துதல்** (Capacity building for Internet Protocol Version–6)

பெருமளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இணைய நெறிமுறைகளினால் இணையதளம் இன்று கோடிக்கணக்கான மக்களுக்குப் பயன்பட்டு வருகிறது. தற்போதுள்ள இணைய நெறிமுறை சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட இணைய நெறிமுறை பதிப்பு–4, (IPv4) ஆகும். தகவல்



தொழில்நுட்பத்தின் வேகமான வளர்ச்சியினால், இணைய நெறிமுறை பதிப்பு 4 (IPv4)–ன் இணைய முகவரிகள் விரைவில் முடிந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. IPv4–லிருந்து IPv6–க்கான மாற்றமானது இணைய முகவரிகளுக்கான தட்டுப்பாட்டினை நீக்கி எண்ணிலடங்கா இணைய முகவரிகளை உருவாக்கக்கூடிய திறன் வாய்ந்ததாக இருக்கும்.

எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி இணைய நெறிமுறை பதிவு–6 (IPv6) பயன்பாட்டுக்கு அனைத்து துறைகளும் மாறிடத் தேவையான பயிற்சி அரசுத் துறைகளுக்கு வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்துள்ளார்கள். அவற்றுக்குப் போதுமான விளக்கங்களை என் பதிலுரையில் தெரிவித்திருப்பதாகக் கருதுகிறேன். இருப்பினும், விடுபட்டுப்போன வெட்டுத் தீர்மானங்கள்மீதும் துறையினருடன் ஆய்வு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கூடுமானவரையில் அவற்றை நிறைவேற்றுவேன் என்று கூறி, வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்த உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொணடு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

*பிற்பகல் 3–20*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் உத்தமத் தலைவி, இந்தியத் திருநாட்டினுடைய எதிர்காலம், உலகத் தமிழர்களுடைய ஒப்பற்ற தலைவி, தமிழக மக்களுடைய காவல் தெய்வம், 100 ஆண்டுகளில் செய்திடும் மக்கள் நலத் திட்டங்களை ஒரே ஆண்டிலே நிறைவேற்றி, சாதனை படைத்துக் கொண்டிருக்கும் சாதனைத் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுடைய அட்சய பாத்திரமாக விளங்கும் தங்கத் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு

முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தினுடைய அனைத்துத் துறைகளும் இந்தியாவிலேயே முதன்மையாக விளங்கிட வேண்டுமென்று பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொலைநோக்குப் பார்வையோடு வகுத்து, அல்லும் பகலும் அயராது பாடுபடும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகின்றேன். சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளர், மாவட்ட கழகத்தினுடைய செயலாளராக்கி, இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக்கி, இரண்டாவது முறை வனத் துறை மானியக் கோரிக்கைக்கு பதிலுரை வழங்க ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மண்ணுயிர்க்கெல்லாம் அடைக்கலம் தந்து, மாபெரும் இயற்கை சக்தியாக விளங்குவது காடுகள் எனில், கோடானுகோடி தமிழ் மக்களின் இதயத் துடிப்பாய் விளங்கி, மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இருண்டுகிடந்த தமிழகத்தை மீட்டெடுத்து, நாட்டை மட்டுமல்லாமல் காடுகளையும், அதிலுள்ள பல கோடி உயிரினங்களையும் காப்பாற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கோடிக்கணக்கான தமிழர்கள் மட்டுமல்லாமல், காடுகளில் வாழும் கோடிக்கணக்கான உயிரினங்களும் உளமார வாழ்த்துகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

காட்டின் வளங்களைக் கொள்ளையடித்து, விநாயகப் பெருமானின் வடிவமாக இருக்கும் யானைகளைக் கொன்று, தந்தங்களைக் கொள்ளையடித்து, மனித உயிர்களையும் கொன்று குவித்த நவீன உலகின் நரகாசுரன் வீரப்பனை அழித்த மகா சக்தியாக உள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, இயற்கை அன்னையின் படைப்புகளாக விளங்கும் காடுகளும், அதிலுள்ள பல கோடி உயிரினங்களும் என்றென்றும் வாழ்த்துப் பாடிக் கொண்டிருக்கின்றன.

"காடு செழித்தால் நாடு செழிக்கும்" என்பது பழமொழி. ஆனால், கடந்த கருணாநிதி ஆட்சியில் காடும் செழிக்கவில்லை, நாடும் செழிக்கவில்லை, கருணாநிதியின் வீடுதான் செழித்தது. தமிழ்நாட்டு மக்களின் உழைப்பையும், இந்திய மக்களின் உழைப்பையும் ஒரு சேர சுரண்டி, கோடி கோடியாகக் கொள்ளையடித்த கடந்த



மைனாரிட்டி தி.மு.க.–வின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து தமிழகத்தையும், தமிழகத்தில் உள்ள வளங்களையும், தமிழக மக்களையும் காப்பாற்றி, நல்வழியில் ஆட்சி செய்யும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, தமிழக மக்கள் மட்டுமல்லாமல் இந்திய மக்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.

இயற்கை அன்னையின் வளமான காடுகளையும், அதிலுள்ள மரங்கள், உயிரினங்கள் ஆகியவற்றையும் அரும்பாடுபட்டு காத்து மேம்படுத்தும் பணியை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள். ஆனால், கொள்ளையடித்தலையே கொள்கையாகக் கொண்ட மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், காடுகளின் தரமும், பரப்பும் வெகுவாகக் குறைவது நடைபெற்றது. மத்திய அரசின் Forest Survey of India–என்ற ஆய்வில், கருணாநிதியினுடைய ஆட்சியில் தமிழ்நாட்டில் உள்ள வனப் பரப்பு குறைந்துள்ளது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக முதல்வராக 2001 ஆம் ஆண்டில் ஆட்சிக் கட்டிலில் பொறுப்பேற்றபோது, தமிழக வனத்தினுடைய பரப்பளவு 27 இலட்சத்து 53 ஆயிரத்து 600 எக்டேர் என்ற அளவில் இருந்தது. ஆனால், 2001 ஆம் ஆண்டிலிருந்து மாண்புமிகு அம்மா அவர்கள் அரசினுடைய பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களால், தமிழகத்தினுடைய வனம் மற்றும் மரங்களின் பரப்பளவு 2005 ஆம் ஆண்டு 28 இலட்சத்து 66 ஆயிரத்து 500 எக்டேர் என்ற அளவில் உயர்ந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நடந்த அராஜகக் கொள்ளையால் அழிந்த வன வளம், 2009 ஆம் ஆண்டு நடந்த மத்திய அரசினுடைய Forest Survey of India கணக்கின்படி தமிழகத்தினுடைய வனம் மற்றும் மரங்களின் பரப்பளவு 28 இலட்சத்து 30 ஆயிரத்து 600 எக்டேர் என்ற அளவிலே குறைந்தது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழகத்தினுடைய வனங்களுடைய தரம்தாழ்ந்த காடுகளினாலும், காடுகளின் நிலப் பரப்பு குறைந்ததனாலும், காடுகளில் உள்ள நீர் நிலைகள் அழிக்கப்பட்டதன் காரணத்தினாலும், காட்டில் உள்ள யானை போன்ற விலங்குகள்

உணவுக்காகவும், நீருக்காகவும் காட்டைவிட்டு வெளிவரும் அவல நிலைக்குத் தமிழக வன வளத்தை ஆளாக்கிய கருணாநிதியை காட்டிலுள்ள எந்த உயிரினமும் மன்னிக்காது.

*பிற்பகல் 3–25*

பிறந்தவுடன் தொட்டிலாக மரம், நடக்கும்போது நடை வண்டியாக மரம், விளையாடும்போது விளையாட்டுப் பொருளாக மரம், எழுதும்போது பென்சிலாக மரம் தூங்கும்போது கட்டிலாக மரம், இறந்தபின் எரிப்பதற்கும் மரம், என மரத்தை அண்டி வாழும் மனிதன், மரத்தை வளர்க்கவும், பாதுகாக்கவும் மறந்தான். ஆனால், வாழும் வள்ளலாக இருக்கின்ற, அறிவுச் சுரங்கமாக இருக்கின்ற, தொண்டர்களின் உயிர் மூச்சாக இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் மரம் மற்றும் வன வளத்தை மேம்படுத்த பல்வேறு புரட்சிகரமான திட்டங்களைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள். இதன்மூலம் தமிழ்நாட்டினுடைய வன வளம் மேம்படுவதோடு, வனத்தில் வாழும் வன உயிரினங்களும், தங்களின் இயற்கை வாழ்விடமான வனங்களிலேயே, வசிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கித் தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள பதிவு செய்யப்பட்ட வனப் பகுதியினுடைய Eco value நிலத்தினுடைய மதிப்பு அல்லாமல் மத்திய அரசினுடைய அங்கீகரிக்கப்பட்ட குழுவின் மதிப்பின்படி, குறைந்தபட்சம் ரூ.2 இலட்சம் கோடிக்கும் மேலாகும். மேலும் ஒவ்வொரு வருடமும் வனம் மற்றும் வன உயிரினப் பெருக்கம், தொடர்ந்து நடைபெறும் ஓர் உயிர் சுழற்சி முறையாகும்.

இவ்வளவு முக்கியம் வாய்ந்த வனம் மற்றும் வன உயிரினங்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு பல்வேறு திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றவுள்ளார்கள்.

**வனங்களின் சிறப்பு–**

‘கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையாஆம் வேந்தர்க்கு ஒளி’



என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப கொடை, கருணை, நல்லாட்சி, குடிமக்கள் பாதுகாப்பு எனும் நான்கையும் உடையவன் அரசர்க்கெல்லாம் ஒளி காட்டும் விளக்கு போன்றவன் என்றார் வள்ளுவர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வள்ளுவப் பெருந்தகையின் சொல்லுக்கு ஏற்ப அனைத்து பண்புகளையும் ஒருசேர கொண்டு ஆட்சி செய்யும் தமிழகத்தில் நாட்டு மக்களும், மேன்மை அடைவதோடு, வனங்களும் பல வழிகளிலும் மேன்மையை அடைந்து வருகின்றன.

மனித வாழ்வுக்கு ஆதாரமாக விளங்கும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் வனங்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. வளமான மனித வாழ்வின் இயக்கத்திற்கு வனங்கள் உறுதுணையாக உள்ளன. பல்லுயிர்ப் பெருக்கத்தின் புகலிடமாக விளங்கும் காடுகள், எங்கும் பரவியுள்ள வன உயிரினங்கள் உய்விடமாக விளங்குவதுடன், சுற்றுச்சூழல் மேம்பாட்டினையும் உறுதி செய்கின்றன.

சங்க காலத்தில் எழுதப்பட்ட தொன்மைவாய்ந்த, செறிவுள்ள தமிழ் இலக்கியங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள் அக்காலத் தமிழர்கள் இயற்கைமீது கொண்டிருந்த பற்றினையும், ஆர்வத்தையும், அவர்கள் சூழலியலோடு இணைந்து வாழ்ந்து வந்த பாங்கினையும் வெளிப்படுத்துகின்றன. தாம் வாழ்ந்த நிலப்பரப்பினை இயற்கைக் கூறுகளின் அடிப்படையில் பகுத்துணர்ந்து, அதன்படி அவற்றை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணைகளாக வகைப்படுத்தி வாழ்ந்தனர் பழந்தமிழர். இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழகத்தின் மக்கள் தொன்றுதொட்டு வன உயிரினங்களைப் போற்றிப் பாதுகாத்திடும் தன்மையைக் கொண்டிருந்தனர்.

ஒரு நாட்டின் தன்மையையும், நாட்டிற்குத் தேவையான அம்சங்களைப் பற்றியும் விளக்குகையில் வள்ளுவப் பெருந்தகை

‘இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு’

என்று குறிப்பிட்டுள்ளார்.

அதாவது மழை நீர், ஊற்று நீர் ஆகிய இரு வகையான நீர் வளமும், இயற்கைச் செறிவுடைய உயர்ந்த மலையின் வளமும்,

அம்மலையிலிருந்து உருவாகிவரும் ஆறும், பலம் பொருந்திய அரணும் ஒரு சிறந்த நாட்டின் உறுப்புகளாய் அமையும்.

எனவே நாட்டின் சிறப்பை பறைசாற்றும் முக்கிய அம்சங்களாக மலை வளமும், மழை வளமும் முன்னிறுத்தப்பட்டுள்ளது நமக்கு விளங்கும். அத்தகைய மலையும், மலை சார்ந்த இடங்களில் அமைந்துள்ள வன வளமுமே மனித வாழ்விற்கு அடிப்படைத் தேவைகளை வழங்கும் இயற்கை சொத்தாக இருப்பதுடன், பல்லுயிர்களின் புகலிடமாக விளங்கி, சுற்றுச்சூழல் நிலைத் தன்மையை உறுதி செய்யும் அமைப்பாகவும் உள்ளது.

இதனை நன்கு உணர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தின் வன வளம் மற்றும் அதில் வாழும் வன உயிரினங்களைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் திட்டங்களைத் தீட்டியுள்ளார்கள்.

**தமிழ்நாட்டின் வன வளம்**

இந்தியாவிலுள்ள 10 பெரும் உயிர் கோள அமைப்புகளில், தமிழ்நாட்டில் மட்டும் மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலை மற்றும் கடற்கரைத் தொடர் என மூன்று பெரும் அமைப்புகள் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் மொத்தம் 22,877 சதுர கிலோ மீட்டர் பதிவு செய்யப்பட்ட வனப் பகுதிகளாக உள்ளன. இது மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 17.59 விழுக்காடாகும். 2011 ஆம் ஆண்டு இந்திய வன நில அளவை நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி மாநிலத்தின் வனங்கள் மற்றும் மரங்களின் மொத்த பரப்பு 28,343 சதுர கிலோ மீட்டர் உள்ளது எனவும், இது மொத்த நிலப்பரப்பில் 21.79 விழுக்காடு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் ஒன்பது பெரு வகையான காடுகளும், 36 உட்பிரிவு வகைக் காடுகளும் அமைந்திருக்கின்ற காரணத்தினால் தமிழ்த் திருநாடு பல்லுயிரினப் பரவல் செறிந்த மாநிலமாகத் திகழ்கின்றது.

**தேசிய வனக் கொள்கை மற்றும் மாநில வனக் கொள்கை**

தமிழகத்தின் வனக் கொள்கை மற்றும் வனத் துறையின் செயல்பாடுகள் 1988 ஆம் ஆண்டைய தேசிய வனக் கொள்கையைச் சார்ந்து அமைந்துள்ளன. தேசிய வனக் கொள்கையில், காடுகளை மேம்படுத்த பின்பற்றப்பட வேண்டிய மேலாண்மைக் கோட்பாடுகள்



விவரிக்கப்பட்டுள்ளன. தேசிய வனக் கொள்கையில் காடுகளிலிருந்து கிடைக்கும் நேரடிப் பலன்களைக் காட்டிலும் அவற்றிலிருந்து பெறப்படும் சூழலியல் மற்றும் வாழ்வாதார மேம்பாடு சார்ந்த மறைமுகப் பலன்களுக்கே முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. வனங்களை அதன் சமநிலையில் பராமரிப்பதும், நாட்டின் மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பை வனம் மற்றும் வனப் போர்வையின்கீழ் கொண்டுவருவதும் தேசிய வனக் கொள்கையின் முக்கிய குறிக்கோளாக உள்ளது.

பிற்பகல் 3–30

மாநிலத்தின் வனக் கொள்கையானது, சூழல் அமைப்பு மற்றும் மரபியல் வளங்களைப் பாதுகாத்தல், உற்பத்தித் திறனை அதிகரிக்கும் விதத்தில் இயற்கைக் காடுகளைப் பராமரித்தல், நீர்ப்பிடிப்புப் பகுதிகளைச் செழிப்பாக்குதல் மற்றும் மாநிலத்தின் வனம் மற்றும் வனப் பரப்பினை அதிகரித்தல் போன்ற முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் வனச் செல்வங்கள் 1882 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வனச் சட்டம், 1972 ஆம் ஆண்டைய வன விலங்கு பாதுகாப்புச் சட்டம், 1994 ஆம் ஆண்டைய தமிழ்நாடு ரோஸ்வுட் (பாதுகாப்புச்) சட்டம் மற்றும் இதரச் சட்டங்கள், விதிகள் வாயிலாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தனியார் காடுகளைப் பொறுத்தவரையில், மலைத் தலங்களில் உள்ள மரங்கள் வரையறையின்றி வெட்டப்படுவதைத் தடுக்கவும், மலைத் தலங்களின் சிறப்புத் தன்மைகளைப் பாதுகாக்கவும், தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949 மற்றும் தமிழ்நாடு மலைத் தல (மரங்கள் பாதுகாப்புச்) சட்டம், 1955 ஆகியவை தமிழக அரசால் இயற்றப்பட்டன. வன நிலங்களை வனமற்ற பிற பணிகளுக்குப் பயன்படுத்துவதை நடைமுறைப்படுத்துவதற்கு வனப் (பாதுகாப்புச்) சட்டம், 1980 செயல்படுத்தப்படுகின்றது.

**வனப் பாதுகாப்பு**

வனத் துறையால் நிருவகிக்கப்படும் வனங்கள் பீட் மற்றும் பிரிவு எனப் பிரிக்கப்பட்டு வனப் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தடிமரம் மற்றும் வன உயிரின வளங்கள் நிறைந்துள்ள வனப் பகுதிகளில் பெரிய அளவில் வனக் குற்றங்கள் நிகழத்தக்க பகுதிகளில் நிலையான பாதுகாப்பு வழங்கப்பட்டு, வனக் குற்றங்கள்

நிகழாவண்ணம் வன அலுவலர்கள் அடிக்கடி ரோந்துப் பணி ஏற்பாடு செய்கிறார்கள். சீரான வனப் பாதுகாப்பு மற்றும் வன மேலாண்மையினைக் கருத்தில்கொண்டு, அக்குறிக்கோளை அடைய வேண்டுமெனில் ஒவ்வொரு பீட், பிரிவு மற்றும் சரகத்திற்கு எவ்வளவு வனப் பரப்பு இருக்க வேண்டுமென அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

வனப் பாதுகாப்பு மற்றும் நிருவாகத்தைப் பலப்படுத்த, புதிய பீட், பிரிவு மற்றும் சரகங்களின் எண்ணிக்கையைப் படிப்படியாக அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது. இதனைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011–2012 ஆம் ஆண்டில் மாநிலத்தில் மொத்தம் 257 புதிய காவல் பகுதிகள் அமைக்க ஆணையிட்டுள்ளார்கள். இவ்வனக் காவல் பகுதிகளைக் கண்காணிக்கப் புதிதாக 257 வனக் காப்பாளர், 257 வனக் காவலர் பணியிடங்களை உருவாக்கவும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முதற்கட்டமாக 2012–2013 ஆம் ஆண்டில் 60 காவல் பகுதிகள் ஏற்படுத்தப்பட்டு, தொடர்ந்து ஐந்தாண்டுகளில் அனைத்துப் புதிய காவல் பகுதிகளும் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வனப் பாதுகாப்பு மற்றும் வன வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் தரும் வகையில், மாநிலத்தில் உள்ள நான்கு கோட்டங்களை மறு பகிர்வு செய்து, திருவண்ணாமலை வடக்கு, அரியலூர், இராமநாதபுரம் மற்றும் மேகமலை எனும் நான்கு புதிய வன ஆட்சிக் கோட்டங்களை ஏற்படுத்த, 2011–2012 ஆம் ஆண்டில் ஆணையிட்டுள்ளார்கள்.

திருட்டு வேட்டை நிகழ வாய்ப்புள்ள வன உயிரின வளம் மிகுந்த பகுதிகளில், வனக் காவல் பணியாளர்களுடன் பழங்குடியினத்தவரை ஈடுபடுத்தி, வேட்டைத் தடுப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு, திருட்டு வேட்டைக் குற்றங்கள் நிகழாமல் கண்காணிக்கப்படுகிறது. அவ்வாறு, மாநிலம் முழுவதும் அமைந்துள்ள வேட்டைத் தடுப்பு முகாம்களில், தற்காலிகமாகப் பல ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிந்துவரும் வேட்டைத் தடுப்புக்



காவலர்களுக்கு மாதக் கூலியாக ரூபாய் 2,126/– முதல் ரூபாய் 3,500/– வரை கொடுக்கப்பட்டு வந்தது. இவ்வாறு மாறுபாடான மாதக் கூலி வழங்கிவந்த நிலையை ஒழுங்குபடுத்தவும், அவர்தம் கடினமான பணிச்சூழலைக் கருத்தில்கொண்டும், அனைவருக்கும் மாதக் கூலியாக ரூபாய் 4,000/– வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு இன்றைக்கு வழங்கப்படுகின்றது.

2011–2012 ஆம் ஆண்டில் 17,014 ஏக்கர் ஜென்ம நிலங்கள் தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்புச்) சட்டம், 1969, பிரிவு 53–ன்கீழ் வனங்கள் என அறிவிக்கை செய்யப்பட்டு, நீலகிரி மாவட்டம் ஜென்மம் நிலங்கள் நிர்ணய அலுவலரால் வனத் துறைக்கு ஒப்படைக்கின்றவண்ணம், இந்த ஜென்மம் நிலங்கள் ஒழிக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டிற்குப் பிறகு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படியும், உத்தரவின்படியும் ஒரு வரலாற்று முக்கியத்துவமிக்க நிகழ்வாக, இந்த நிலங்கள் 20–2–2012 அன்று, காணொளிக் காட்சிமூலம், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வனத் துறைக்கு ஒப்படைத்து, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரால் 11,204 ஏக்கர் நிலம் 1882 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வனச் சட்டப் பிரிவு 26–ன்கீழ் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்த நிலத்தை காப்புக் காடாக அறிவிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் வழிவகை செய்துள்ளார்கள்.

பிற்பகல் 3–35

வனப் பாதுகாப்பில் ஈடுபடும் கள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு விரைவான தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்தினை உறுதிப்படுத்தும்வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001 முதல் 2006 வரை தமிழகத்தில் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தபோது, 2005 ஆம் ஆண்டில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாதவகையில், ஒரு சரித்திர சாதனையாக அனைத்து வன நிருவாக உயிரின சரணாலயங்களுக்கும் ஒரே நேரத்தில் 225 ஈப்புகளும், கைபேசிகளும் வழங்கி ஆணையிட்டுள்ளார்கள் என்ற தகவலை இந்த நேரத்திலே பேரவையின்முன் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2005 ஆம் ஆண்டு 225 வனக் காப்பாளர்கள் மற்றும் ஓட்டுநர் பணியிடங்களை வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

2005 ஆம் ஆண்டு வனத் துறையில் பணிபுரியும் சரகர்கள் முதல் அனைத்து நிலை ஊழியர்களுக்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மலிவு விலையில் கிடைக்க ஆணை பிறப்பித்துள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வனத் துறை அரசாணை எண் 21, நாள் 23–1–2012–ல் வனம் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாப்பதில் நேரடி பொறுப்பு வகிக்கின்ற சரகர், வனவர், வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர்களுக்கு மாதந்தோறும் வழங்குகின்ற இடர்ப் படி காவல் துறைப் பணியாளர்களுக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும் என்று ஆணை வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**வன உயிரினப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை**

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வன விலங்குகள் பாதுகாப்பில் மிகுந்த அக்கறை கொண்டு, முதுமலை வன விலங்குகள் சரணாலயத்தில் வருடந்தோறும் கோயில்களில் பராமரிக்கப்படும் யானைகளின் புனர்வாழ்விற்காக, முகாம் அமைப்பதற்கு ஆணையிட்டுள்ளார்கள். புனர்வாழ்வு முகாம்களில் கொண்டு வரப்படும் யானைகளின் உடல் நலம், உணவுத் தேவை போன்றவை தனிக் குழுவால் சிறப்புக் கவனத்துடன் பராமரிக்கப்படுகிறது. வனத் துறையின் தொடர் முயற்சியால் வனம் மற்றும் மரப் பரப்பின் அளவும், தரமும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக, யானை, புலி, சிறுத்தை, காட்டெருமை, நீலகிரி வரையாடு, சிங்கவால் குரங்கு போன்ற வன விலங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. உதாரணமாக, தமிழ்நாட்டில் புலிகளினுடைய எண்ணிக்கை அதிகரித்து, 163 ஆக உயர்ந்துள்ளது. வனப் பகுதிகளிலே நிறுவப்பட்ட நிழற்படக் கருவிகள்மூலம் புலிகள் நடமாட்டம், சத்தியமங்கலம் கோட்டத்தில் பெரும்பாலான பகுதிகளிலும், அதையொட்டி அமைந்துள்ள கோவைக் கோட்டத்தின் வனப் பகுதிகளிலும் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதேபோன்று, யானைகளின் எண்ணிக்கை 4,015 ஆகவும், நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை 1,250 ஆகவும், சிங்கவால் குரங்குகளின் எண்ணிக்கை 1,107 ஆகவும் உயர்ந்துள்ளது.

வன உயிரினம் மற்றும் வன ஆதாரங்களைப் பாதுகாப்பதில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழகம் இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இந்தியாவில் அமைந்துள்ள சுமார் 17,672 பூக்கும் தாவர இனங்களுள் தமிழகத்தில் மட்டும் 5,640 இனங்கள் இருப்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் பூக்கும் தாவர இன உயிர்ப் பன்மையில் தமிழகம் தலையாய இடத்தைப் பெறுகிறது. தமிழ்நாட்டில் நன்னீர் மீன் இன வகைகளும், நீர் நிலவாழ் உயிரினங்களும், ஊர்வன வகைகளும், பறவை இனங்களும், உயிர்ப் பன்மையில் சிறந்து விளங்குகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி வன உயிரினப் பாதுகாப்பில் முன்னிலையில் இருக்கும் தமிழகத்திற்கு 2–5–2012 அன்று புது டில்லியில் நடைபெற்ற அகில இந்திய தலைமை வன உயிரினக் காப்பாளர்கள் மற்றும் புலிகள் காப்பக கள இயக்குநர்களின் கூட்டத்தில் பல வகைகளில் வியக்கத்தக்க பணிகள் செய்த புலிகள் காப்பகத்திற்கு பரிசு வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், உள்ளூர் மக்கள் மற்றும் சூழல் மேம்பாட்டுத் துறையில் அதிகப்படியாக ஈடுபாடுகளுடன் இருந்தமைக்காக முதுமலை புலிகள் காப்பகத்திற்கும், மக்களின் வன உயிரினங்களோடு ஒன்றிய வாழ்க்கை முறைக்கும் மற்றும் வெளிமண்டல வனப் பகுதியை நல்ல முறையில் பராமரித்ததற்கும், களக்காடு, முண்டந்துறை, புலிகள் காப்பகத்திற்கும் மத்திய அரசால் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள 39 புலிகள் காப்பகங்களில், தமிழ்நாட்டிலுள்ள இரண்டு புலிகள் காப்பகங்களைத் தேர்வு செய்து பரிசுகள் வழங்கியது மிகப் பெரிய பெருமைக்குரிய சாதனையாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**தமிழகத்தில் பாதுகாக்கப்பட்ட பகுதியின் தொடரமைப்பு**

வன உயிரினப் பாதுகாப்பு மற்றும் பராமரித்தலில் தமிழகம் நிலையான இடத்தை நோக்கிச் செல்கிறது. வன உயிரினங்கள் பல்கிப் பெருகுவதற்கு உகந்த சூழ்நிலையைக் கொண்ட இயற்கைக் காடுகள் வன உயிரினச் சரணாலயங்களாகவும், தேசிய பூங்காக்களாகவும், பறவைகள் உய்விடங்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

மாநிலத்தில் பாதுகாக்கப்பட்ட பகுதி 2010 ஆம் ஆண்டில் 4,578 சதுர கிலோ மீட்டராக இருந்தது. 2011–2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா

அவர்களின் உத்தரவின்படி சத்தியமங்கலம் வனக் கோட்டத்தில் 887 சதுர கிலோ மீட்டர் வனப் பகுதி சரணாலயமாக அறிவிக்கப்பட்டு, இப்போது 5,465 சதுர கிலோ மீட்டர் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அதிகரித்துள்ளது. இது மாநிலத்தின் மொத்த வனப் பரப்பில் 23.90 விழுக்காடாக உள்ளது.

பிற்பகல் 3–40

வன உயிரினப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கு முக்கியத்துவம் தரும்வகையில், 30–க்கும் மேற்பட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. புலிகள் திட்டம், யானைகள் திட்டம், உயிர்கோள காப்பகத் திட்டம், சரணாலயம் மற்றும் தேசிய பூங்கா மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவை இவற்றுள் அடங்கும்.

உயிர்ப்பன்மை பாதுகாப்பிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

**ஈர நிலப் பாதுகாப்பு**

2011–2012 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளூர் மற்றும் வலசை பறவைகளின் புகலிடமாக விளங்கும் சுசீந்திரம்–தேரூர்–மணக்குடி பறவைகள் பாதுகாப்பு அமைப்பை மேம்படுத்துவதற்காக 1 கோடியே 61 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான சிறப்புத் திட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இன்றைக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**பள்ளிக்கரணை சதுப்பு நிலம்**

பள்ளிக்கரணை சதுப்பு நிலமானது ஒரு தனித்தன்மை வாய்ந்த நன்னீர் நிலமாக சென்னைப் பெருநகரப் பகுதிக்குள் அமைந்துள்ளது. 2002 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொலைநோக்குப் பார்வையோடு முதலாவதாக சூழலியல் முக்கியத்துவம் பெற்ற இந்தச் சதுப்பு நிலத்தினைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு ஆணையிட்டார்கள்.

இதனடிப்படையில் பள்ளிக்கரணை ஈர சதுப்பு நிலத்தின் 317 எக்டேர் பரப்பளவு, காப்பு நிலமாக அறிவிக்கப்பட்டு, வனத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ளது.



இச்சதுப்பு நிலம் அதனுடைய சூழலியல் சேவைகளைச் செவ்வனே வழங்கும் விதத்தில், சதுப்பு நிலத்தைப் பாதுகாப்பதற்கென மாநில நிதியின்கீழ் 15 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2015–2016 ஆம் ஆண்டுவரை ஐந்து ஆண்டுகளில் பல்வேறு பணிகளை மேற்கொள்ளவும், வரும் ஆண்டில் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளவும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின்கீழ் உறைவிட மேம்பாடு, சதுப்பு நிலப் பாதுகாப்பு, ஆராய்ச்சி மற்றும் கூர்ந்தாய்வு, விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டங்களின் அம்சங்களைச் செயல்படுத்துவதற்கென பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பாதுகாப்புக் குழுமம் என்ற ஒரு அமைப்பை சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தவும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்.

**ஸ்ரீரங்கத்தில் வண்ணத்துப்பூச்சி பூங்கா அமைத்தல்**

ஸ்ரீரங்கம் மேல் அணைக்கட்டு காப்புக்காடு பகுதியில் 8 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 10 எக்டேர் நிலப் பரப்பில் வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் நட்சத்திர வனம் ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். 2011–2012 ஆம் ஆண்டில் ஒரு கோடியே 62 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு முன்னோடி பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

**மனித–வன உயிரின மோதல்**

வன உயிரினங்கள் பெருக்கம் காரணமாகவும், மனித பெருக்கத்தின் காரணமாகவும் வனங்களை ஒட்டியுள்ள வயல்காடுகளில் விவசாயப் பயிர்கள் பயிரிடுவதன் காரணமாகவும், இயற்கையாக வன விலங்குகள் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயரும் வழிகளில் உள்ள நகர வளர்ச்சியின் காரணமாகவும், வன விலங்குகள் வனப் பகுதியை விட்டு வெளியேறி பயிர்கள் மற்றும் சொத்துகளுக்கு சேதம் விளைவிப்பதுடன், மனித காயம் மற்றும் உயிரிழப்புக்கும் காரணமாகின்றன.

இத்தகைய நிகழ்வுகள் கோயம்புத்தூர், நீலகிரி, திண்டுக்கல், திருநெல்வேலி, வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் அதிகமாக நிகழ்கின்றன.

இந்நிகழ்வுகள் பெரும்பாலும் யானை, சிறுத்தை, காட்டெருமை, காட்டுப்பன்றி ஆகிய விலங்குகளால் நடைபெறுகின்றன. காட்டு விலங்குகளால் மனிதர்கள் சந்திக்கும் இழப்பிற்கு உடனடியாக நிவாரணத் தொகை வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**துயர் துடைப்பு நடவடிக்கைகள்**

யானை போன்ற வன விலங்குகளால் மக்களுக்கு ஏற்படும் துயர் துடைக்கவும், வன விலங்குகளின் வாழ்வாதாரமான காடுகளின் தரத்தை மேம்படுத்தவும், நீர் ஆதாரங்களை மேம்படுத்தவும் 2011–2012 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் 11 கோடியே 70 இலட்சம் ரூபாய் மாநில நிதியிலிருந்து வழங்கி ஆணையிட்டார்கள். அதன் அடிப்படையில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இன்றைக்கு அதன் தொடர்ச்சியாக 2012–2013 ஆம் ஆண்டு வன உயிரினங்களின் வாழ்விடங்களை மேம்படுத்துதல், நீர் ஆதாரங்களை வலுப்படுத்துதல், சூரிய மின்வேலி அமைத்தல், யானைத் தடுப்பு அகழிகள் வெட்டுதல் மற்றும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த 10 கோடி ரூபாயை ஒதுக்கி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வன நிலங்களைப் பொறுத்தவரை, வன விலங்குகளுக்குத் தேவையான தீவனப் பயிர்கள் வளர்த்தல், நீர் ஆதாரப் பணிகள் மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு 20 கோடியே 87 இலட்சம் ரூபாய் ஒப்பளித்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–45

**வன உயிரினங்களால் ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீட்டுத் தொகையை ஏற்படுத்துதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011–2012 ஆம் ஆண்டில், உயிரிழப்பிற்கு நிவாரணத் தொகையாக ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் 3 இலட்சமாகவும், பயிர்ச் சேதத்திற்கு ரூபாய் 15,000/–லிருந்து ரூபாய் 25,000/– ஆகவும் உயர்த்தி வழங்கியுள்ளார்கள்.



அதேபோல், பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு தாமதமின்றி அந்த இழப்பீட்டுத் தொகையினை உடனடியாக வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 2 கோடியே 50 இலட்சம் ரூபாயை வைப்பு நிதியாக இன்றைக்கு வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**வன வளர்ச்சிக்கான திட்டங்கள்**

இயற்கை வனத்தைப் பாதுகாத்தல்; உயிர்ப்பன்மை பாதுகாப்பு; வன உயிரினங்களைப் பேணிப் பாதுகாத்தல்; சூழலியல் மற்றும் மரபியல் வளங்களைப் பாதுகாத்தல்; நீர்வள ஆதாரத்தினை மேம்படுத்துதல்; மாநிலத்தின் வனப் பரப்பளவு மற்றும் மரங்களின் பரப்பினை அதிகப்படுத்துதல்; வனத்தைச் சார்ந்து வாழ்வோரின் வாழ்வாதாரத்தினைப் பாதுகாத்தல் போன்ற நோக்கங்களுடன் தமிழக வன நிருவாகத்தில் பல்வேறு முக்கிய திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைவதற்காக வனப் பகுதிகளில் வெவ்வேறு ஆக்கப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. மாநிலத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின்மூலம் காடுகளின் அடர்த்தியை அதிகப்படுத்தும் நோக்குடன், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை–2, தேசிய காடு வளர்ப்புத் திட்டம்; மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்; மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்படும். வன வேளாண்மைத் திட்டம்; உயிர்ப்பன்மையை மீட்டல்; வனங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநிலத்தின் உயிர்ப்பன்மையைப் பாதுகாக்கவும், வனப் பகுதிகளுக்கு வெளியே மரங்களின் பரப்பை அதிகரிக்கவும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் நிதியுதவியுடன் "தமிழ்நாடு பல்லுயிர் பரவல் பாதுகாப்பு மற்றும் பசுமை" திட்டத்தை 686 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2018–2019 ஆம் ஆண்டு வரை, 8 ஆண்டுகளில் திட்ட மேலாண்மை அமைப்பின்மூலம் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

இத்திட்ட வரைவில், உயிரின உய்விடங்களை மீட்டல்; வனங்களுக்குள் ஊடுருவும் களை, தாவரங்களை அகற்றுதல்; அழியும் நிலையில் இருக்கும் தாவர மற்றும் விலங்கினங்களைப் பாதுகாத்தல்; நீர்ப் பாதுகாப்பு; தட்பவெப்ப நிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கத்தினைக் கண்காணித்தல்; மனித–உயிரின முரண்பாடுகளைத் தவிர்த்தல்; பழங்குடியினர் கிராமங்கள் உட்பட வனங்களை ஒட்டியுள்ள கிராமங்களில் சூழலியல் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல்; சமுதாயம் சார்ந்த சூழல் சுற்றுலா; தனியார் நிலங்களில் மரங்களை வளர்த்தல் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவை முக்கிய நடவடிக்கைகளாக உள்ளன. 2011–2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களால் ரூபாய் 21 கோடியே 97 இலட்சம் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வனங்களுக்கு வெளியே பசுமைப் போர்வையை அதிகப்படுத்துதல்.**

வனங்களுக்கு வெளியே பசுமைப் போர்வையை அதிகரிக்கச் செய்யும்பொருட்டு, தனியார் நிலங்களில் மரங்கள் நடுதல்; ஆற்றுப்படுகை மற்றும் ஆற்றங்கரை ஓரங்களில் தேக்கு மரத் தோட்டம் உற்பத்தி செய்தல்; பொது மக்களுக்கும், நிறுவனங்களுக்கும் இலவச மரக்கன்றுகள் வழங்குதல் போன்ற சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு ஆணையிட்டுள்ளார்கள்.

**தனியார் நிலங்களில் மரம் வளர்த்தல்**

வனங்களுக்கு வெளியே மரங்கள் வளர்ப்பதை ஊக்குவிப்பதற்காக, சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில், தரமிக்க மரக்கன்றுகளை நட்டு வளர்த்து, அதன்மூலம் விவசாயிகளின் வருமானம் பெருகுவதை உறுதி செய்வதுடன், மரம் சார்ந்த தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கூழ் மரங்கள், தீக்குச்சி மரங்கள் மற்றும் மரச்சாமான்கள் செய்ய தடி மரங்கள் ஆகியன வருங்காலத்தில் சீராகக் கிடைக்க இத்திட்டம் வழிவகை செய்கின்றது.

**தேக்கு மரத் தோட்டங்கள் வளர்த்தல்**

காப்புக் காடுகளுக்கு வெளியே மரப் பரப்பினை அதிகரித்து, கால்வாய் மற்றும் ஆற்றுப் படுகைகளில் மண் அரிமானத்தைத் தடுத்து, மாநிலத்தின் தடி மர வளத்தை உருவாக்க பாசனக் கால்வாய் மற்றும் ஆற்றங்கரையோரங்களில் தேக்கு மரத் தோட்டங்கள் எழுப்ப மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.



**மாபெரும் மரம் நடும் திட்டம்**

இயற்கை வனங்களின்மீது பற்று கொண்டு, அவற்றைப் பாதுகாத்து மேம்படுத்த, அளவிலா ஊக்கத்தினை வழங்கிவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பிறந்த நாளையொட்டி, 2011–2012 ஆம் ஆண்டில் ரூபாய் 29 கோடியே 40 இலட்சம் செலவில், 32 மாவட்டங்களில் 64 இலட்சம் மரக்கன்றுகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழ்நாட்டின் பசுமைப் போர்வையை அதிகரிக்க, தமிழகம் முழுவதும் 64 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை, பிப்ரவரி மாதம் 23 ஆம் தேதி சென்னையில், தலைமைச் செயலகத்தின் முன்பாக இருக்கின்ற மாநகராட்சிப் பூங்காவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தங்களுடைய பொற்கரங்களால் ஆல மரக் கன்றினை நட்டு துவக்கி வைத்தார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களால் நடப்பட்ட ஆல மரக்கன்று, கோடைக் காலத்திலும் மிக நல்ல வளர்ச்சியைப் பெற்று, இன்றைக்கு தழைத்தோங்கி வளர்ந்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நிழல் தரும் மர இனங்களான வேம்பு, புங்கன், இலுப்பை, வாகை, செண்பகம், மகிழம், நாகலிங்கம், ஆல், குமிழ், கடம்பம் போன்ற மர வகை நாற்றுகள் சாலையோரங்கள், நிறுவனங்கள் மற்றும் அரசு நிலங்களில் காலியாக உள்ள இடங்களில் நடப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், வறண்ட காலங்களில் மர நாற்றுகளுக்கு நீரூற்றுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. வனக் கழகங்கள், உள்ளாட்சி அமைப்புகள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் நிதியுதவியுடன் சாலையோரங்களில் நடப்பட்டுள்ள மரங்களைப் பாதுகாக்கும்பொருட்டு, இரும்புக் கூண்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், நடவுப் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிற்பகல் 3–50

**கண்மாய்ப் பகுதிகளிலே கருவேல மரங்களை நடுதல்**

கண்மாய்ப் பகுதிகளிலே கருவேல மரத் தோட்டங்களை நட்டு வளர்த்தால், அவை மக்களுக்கு, விறகு, சிறு மரம், தீவனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கும் வருவாயினுடைய பெரும் பகுதி வழங்கப்படுகிறது. மேலும், கண்மாய்த் தோட்டங்கள் பொருளாதார மேம்பாட்டிற்குப் பயன்படுவதுடன், அவை ஆக்கிரமிப்புக்குள்ளாவதையும் தடுக்கப் பயன்படுகின்றன. இதற்கென 5 ஆண்டுகளில் பஞ்சாயத்துக் கண்மாய்களில், 1 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் கருவேல மரத் தோட்டங்களை எழுப்ப மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, 2012–2013 ஆம் ஆண்டில், 4 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில், ரூபாய் 9 கோடியே 80 இலட்சம் நிதியில் தோட்டங்களை எழுப்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆணையிட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மழைவாழ் மக்கள் மேம்பாட்டுப் பணிகள்**

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம், 2011–2012 ஆம் நிதியாண்டில், 16,86,000 ரூபாய் மதிப்பீட்டில், குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. இந்த மேம்பாட்டுத் திட்டத்தில், 4 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நாமக்கல் மாவட்டத்தில், புளியம்பட்டி முதல் வால்குளிப்பட்டி வரை 6.1 கிலோ மீட்டர் வனச் சாலை மேம்பாட்டுப் பணிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும், தமிழ்நாட்டில் பழங்குடியினர் நலனைப் பாதுகாப்பதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒரு சிறப்புத் திட்டத்தை 30 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தயாரித்து, 2012–2013 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ள பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இச்சிறப்புத் திட்டத்தில் தமிழ்நாட்டில் 12 மாவட்டங்களில், மொத்தம் 60 மலைவாழ் கிராமங்களில், கிராமத்திற்கு 10 புதிய வீடுகள் வீதம், மொத்தம் 600 வீடுகள், 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு ஆணையிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)



இத்திட்டத்தின்கீழ் பழங்குடியினர் கிராமங்களில் குடியிருப்பு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், குடிநீர் வசதி ஏற்படுத்துதல், சாலை வசதிகளை மேம்படுத்துதல், சூரிய மின் விளக்குகளை அமைத்துத் தருதல், உலர்களம் கட்டுதல், சமுதாயக் கூடம் கட்டுதல், சிறு வன மகசூல் தரும் மரக்கன்றுகள் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

பழங்குடியினர் அதிகமாக வசிக்கும் வேலூர், திருவண்ணாமலை மற்றும் கோவை மாவட்டங்களில், 2 மேல்நிலைப் பள்ளிகள், ஒரு உயர்நிலைப் பள்ளி, 11 நடுநிலைப் பள்ளிகள், 6 தொடக்கப் பள்ளிகள் உள்ளிட்ட 20 பள்ளிகள் வனத் துறையால் நிருவகிக்கப்படுகின்றன. இந்தப் பள்ளிகளில் மொத்தம் 5,040 மாணவ, மாணவியர் கல்வி கற்கின்றனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், வனத் துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயின்று, 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் முதல் மூன்று இடங்களில் தேர்ச்சி பெறும் மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்க பரிசுத் தொகையை வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

10 ஆம் வகுப்பில் முதல் இடம் பெற்ற ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்குத் தலா ரூபாய் 25 ஆயிரம் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்குத் தலா ரூபாய் 20 ஆயிரம், மூன்றாம் இடம் பெற்ற ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு ரூபாய் 15 ஆயிரம் வழங்கிடவும், அதேபோன்று, 12 ஆம் வகுப்பில் முதல் இடம் பெற்ற ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்குத் தலா ரூபாய் 50 ஆயிரம் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்குத் தலா ரூபாய் 30 ஆயிரம், மூன்றாம் இடம் பெற்ற ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு ரூபாய் 20 ஆயிரம் பரிசாக வழங்கி, மாண்புமிகு அம்மா அவர்கள், மாணவ, மாணவியரை ஊக்கப்படுத்தி வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் எதிர்காலம், தமிழகத்தை ஆட்சி செய்யும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை அறிந்துகொண்ட அமெரிக்காவின் வெளியுறவுத் துறை

அமைச்சர் ஹிலாரி கிளின்டன் அவர்களே, இந்தியச் சுற்றுப்பயணத்தின்போது, சென்னையிலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சந்தித்து, எதிர்கால இந்திய–அமெரிக்க நல்லுறவுக்கு அச்சாரம் போட்டுச் சென்றார்கள்.

தமிழையும், தமிழனையும் வளர்ச்சிப் பாதையில் கொண்டுசென்று, எதிரிகளையும், துரோகிகளையும் பொடிப் பொடியாக்கி, தமிழனின் மகத்தான விடியலுக்கு, ஒவ்வொரு நாளும் அல்லும், பகலும் அயராது உழைக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்களின் வழிகாட்டுதலில் தமிழகம் உலகிலேயே தலைசிறந்த இடமாக மாறிக் கொண்டிருப்பதை இந்த உலகமே வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கிறது. வளர்ந்த விருட்சத்தை நம்பி எப்படி பல்வேறு உயிரினங்கள் வாழ்கின்றனவோ, அதைப்போலவே, மக்களால், மக்களுக்காக, மக்களிலிருந்து உருவான மக்கள் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்தவித பாகுபாடும் பாராமல், அனைத்துத் தரப்பு மக்களும் வளம்பெற, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி, அல்லும், பகலும் அயராது பாடுபடுகிறார்கள்.

*பிற்பகல் 3–55*

தமிழகத்திலுள்ள கோடிக்கணக்கான தொண்டர்களில் ஒருவனாகிய என்னுடைய ஒவ்வொரு சுவாசமும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா, அவர்களின் பொற்பாதங்களுக்கு என்றும் விசுவாசமாக இருக்கும் என்று கூறி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியுடன் 2012–2013 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் குறித்த அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

**1. மனித–உயிரின மோதல்களைக் கட்டுப்படுத்துதல்**

வன உயிரினங்களினால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்கும் பொருட்டு, யானை புகா குழிகள் வெட்டுதல், நீர்த் தேக்கக் குட்டைகள் அமைத்தல், வன விலங்குகளுக்கான தீவனப் பயிர்களைப் பயிர் செய்தல், வேட்டைத் தடுப்புப் பணிகள் மற்றும் ஏனைய பாதுகாப்புப் பணிகளை ஏழு மாவட்டங்களில் மேற்கொள்ள கடந்த ஆண்டு ரூ.32.57 கோடி மாண்புமிகு தமிழக



முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்பணிகளை மேலும் விரிவுபடுத்த, 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து நான்கு ஆண்டுகளுக்கு ரூ.44.13 கோடி மதிப்பீட்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**2. சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் அறிவிக்கை செய்தல்**

சத்தியமங்கலம் வனக்கோட்டம், ஏற்கெனவே 1,41,161 எக்டேர் பரப்பளவில் வன உயிரின சரணாலயமாக ஆகஸ்ட் 2011–ல் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, சரணாலயத்தின் ஒரு பகுதியாக உள்ள புலிகள் வாழ்விடத்தினையும், அதனை ஒட்டியுள்ள பகுதிகளையும் சீரிய முறையில் பாதுகாத்திட சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் 1,40,924 எக்டேர் பரப்பளவில் மாநிலத்தின் நான்காவது புலிகள் காப்பமாக ஏற்படுத்தப்படும்.

**3. வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வன உயிரின ஆராய்ச்சி நிறுவனம் ஏற்படுத்துதல்**

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 2012–2013 ஆம் ஆண்டு ரூ.34.24 கோடி மதிப்பீட்டில் வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வன உயிரின ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்படும். மூன்றாண்டு காலத்தில் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் உதவியுடன் மொத்தமாக ரூ.74.37 கோடி மதிப்பீட்டில் இந்நிறுவனம் மேம்படுத்தப்படும். இந்த ஆராய்ச்சி நிறுவனத்தில் இயற்கைச் சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு மையம், வன உயிரினத் தடய அறிவியல் ஆராய்ச்சிக் கூடம், தாவரங்கள் மற்றும் மாமிசம் உண்ணும் விலங்குகள் பற்றிய பெரிய அளவிலான கள ஆராய்ச்சி மையங்கள் அமைக்கப்பட உள்ளன.

**4. மேம்பட்ட கண்காணிப்பு அனல் நிழற்படக் கருவி நிறுவுதல்**

வனங்களில் உள்ள சில பகுதிகளை, அவற்றின் இயற்கை அமைவிடம் காரணமாகவும், போதிய பணியாளர்கள் இன்மையினாலும் தொடர்ந்து கண்காணிக்க இயலாத நிலை

உள்ளது. இவ்வாறான முக்கியமான உள்ளார்ந்த பகுதிகளைத் தொடர்ந்து கண்காணிப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு மேம்பட்ட அனல் நிழற்படக் கருவிகள் ரூ.8.25 கோடி செலவில் நீலகிரி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், ஆனைமலை புலிகள் காப்பகம், முதுமலை புலிகள் காப்பகம் மற்றும் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் ஆகிய ஐந்து இடங்களில் நிறுவி ஒருங்கிணைந்த கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**5. 2012–2013 ஆம் ஆண்டில் தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம்**

தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தினை ரூ.686 கோடி செலவில் 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து 2018–2019 ஆம் ஆண்டுகளில் செயலாக்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ், 2012–2013 ஆம் ஆண்டு முதல் 2016–2017 ஆம் ஆண்டு வரை ஐந்தாண்டுகளில் அனைத்து மாவட்டங்களிலும் சுமார் 5,000 வருவாய்க் கிராமங்களில் 10 கோடி மரக்கன்றுகள் தனியார் நிலங்களில் நடவு செய்யப்படும். இத்திட்டம், 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.84 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

2012–2013 ஆம் ஆண்டில் 1,000 வருவாய்க் கிராமங்களில் 1 கோடி மரக்கன்றுகள் ரூ.15.16 கோடி செலவில் தரிசு/விவசாய நிலங்களில் நடப்படும். நடப்பாண்டில் 143 அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும். 50 புதிய வாகனங்கள் வாங்கப்படும்.

**6. 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறு உற்பத்தி செய்தல்**

30–12–2011 அன்று 'தானே' புயல் கடலோர மாவட்டங்களான கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைத் தாக்கியதில் வனத் துறையினரால் ஆறு/வாய்க்கால் கரைகளில் எழுப்பப்பட்ட மரத் தோட்டங்கள் மற்றும் கடலோர அரண் தோட்டங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கேற்ப, 2012–2013 ஆம் ஆண்டு முதலான நான்காண்டுகளில் ரூ.21.59 கோடி மதிப்பீட்டில் பாதிக்கப்பட்ட 5,535 எக்டேர் பரப்பில் தேக்கு, சவுக்கு மற்றும்



தைல மர வகைகள் நடவு செய்யப்பட்டு இழப்பினைச் சரிக்கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2012–2013 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.10.90 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

பிற்பகல் 4–00

**7. வனப் பகுதிகளில் மழை நீர் சேகரிப்புத் திட்டம்**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில், மாண்புமிகு அம்மா அவர்கள் உலகம் போற்றுகின்ற உன்னதத் திட்டமான மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைக்கொண்டு வந்து, தமிழகத்தினுடைய நீர்வள ஆதாரத்தைப் பாதுகாத்தார்கள். இன்றைக்கு இந்த ஆட்சியில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, வனம் மற்றும் அவற்றை ஒட்டியுள்ள பகுதிகளில் தடுப்பணைகள், நீர்ப்பிடிப்புக் குளங்கள் மற்றும் நீர்த் தேக்கக் குழிகள் ஆகிய நிரந்தர நீர் தேக்கிடும் கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்வதன்மூலம் மண்ணின் ஈரத்தன்மை பாதுகாக்கப்பட்டு, நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு, மொத்தத்தில் வேளாண் பயிர்கள் பயிரிடுவதற்குத் தேவையான நீர்வளம் மேம்படும். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு, 2012–2013 ஆம் ஆண்டு முதலான இரண்டாண்டுகளில் நபார்டு வங்கி உதவியுடன், ரூ.250 கோடி மதிப்பீட்டில் வனப் பகுதிகளிலும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளிலும் மழை நீர் சேகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற மாபெரும் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். 2012–2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.100 கோடியாகும். நபார்டு வங்கியின் ஒப்புதலுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

**8. 13–வது நிதிக் குழுமம்**

தமிழகத்தின் வனங்களின் மேம்பாட்டிற்கும் வன வளங்களைப் பாதுகாக்கவும், 13–வது நிதிக் குழுமம் ரூ.142.48 கோடி மானியமாக வழங்கிட பரிந்துரை செய்துள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி 2012–2013 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.35.62 கோடி மதிப்பீட்டில் செயலாக்கப்படும்.

**9. பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவினை பலப்படுத்துதல்**

வனப் பாதுகாப்புப் படைகளின் தற்போதைய உள்கட்டமைப்பு வசதிகள் சவால்களை எதிர்கொள்ளப் போதுமானவையாக இல்லை.

இவற்றை பலப்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க வனச் சரக அலுவலர்களுக்கு * ஜீப்புகள், வனவர்கள், வனக் காப்பாளர்கள், வனக் காவலர்கள் ஆகியோருக்கு இரு சக்கர வாகனங்கள், வனப் பாதுகாப்புப் படை பணியாளர்களுக்கு கள உபகரணங்கள் மற்றும் கைபேசிகள் ஆகியவை வழங்கப்படும். 13 இரவுக் காவலர் பணியிடங்கள், 16 உதவி கணினித் திட்டமிடுபவர்/கணினித் திட்டமிடுபவர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இதற்கான மொத்த திட்ட மதிப்பீடு ரூ.3.48 கோடியாகும்.

**10. புதிய வாகனங்கள் வழங்குதல்**

2005 ஆம் ஆண்டில் தமிழகத்தில், வனத் துறை முதல் முறையாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வனச் சரகர்களுக்கு 225 * ஜீப்புகள் வழங்கி இத்துறையின் செயல்பாட்டுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் சிறப்பானதொரு ஆணை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து, இதுபோன்ற வாகனங்கள் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எந்தக் காலக்கட்டத்திலும் வழங்கப்படவில்லை. ஆனால், துறையின் அபிவிருத்தி பணிகள் மற்றும் பாதுகாப்புப் பணிகளை சீரிய முறையில் செயல்படுத்திட, இதுகாறும் வாகனங்கள் வழங்கப்படாத 100 சரகங்களுக்கு 2012–2013 ஆம் ஆண்டில் * ஜீப்பு வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்திற்கான தொடரா செலவினம் ரூ.6.50 கோடியாகும். தொடரும் செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ.3 கோடியாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, தாங்கள் வாசித்தபடி பத்தாவது அறிவிப்பான புதிய வாகனங்கள் வழங்குதல் என்ற அந்தத் தலைப்பில் 2012–2013 ஆம் ஆண்டில் ** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, ** பதிலாக “ஜீப்பு” என்று அதை மாற்றி வாசிக்கவும். (குறுக்கீடு) அவ்வாறு மாற்றிக் கொள்ளலாம். ஜீப்பு என்று இருக்கும்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து அறிவிப்புக்குச் செல்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**11. மரங்கள் பாதுகாப்புச் சட்டம் இயற்றுதல்**

மாநிலத்தில் 33% அளவிற்கு வனப் பகுதிகளை அதிகரிக்கும் இலட்சியத்தினை அடையும் பொருட்டு, மரங்களைப் பாதுகாத்து பசுமை போர்வைத் திட்டத்தைச் செயலாக்கும் நோக்குடன் வனம் அல்லாத சாலைகள் போன்ற அரசு நிலங்களில் உள்ள மரங்களை பாதுகாத்திட உரிய நடவடிக்கை எடுக்க, தமிழ்நாடு மரங்கள் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். அதன்படி மரங்களை வெட்டிக்கொள்ள மற்றும் அதற்கு ஈடாக பத்து மடங்கு புதிய மரங்களை நடுவதை உறுதி செய்ய மரக் குழுமம் ஒன்று அமைக்கப்படும்.

காப்பு நிலமல்லாத இடங்களிலுள்ள மரங்களைப் பாதுகாக்க மரக் காப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**12. தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயமாக்குதல் மற்றும் கட்டுமான வசதிகளை மேம்படுத்துதல்**

தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தில் தமிழக அரசின் முதலீடு தற்போது ரூ.5.96 கோடியாக உள்ளது. இதனை ரூபாய் பத்து கோடியாக உயர்த்திட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். இந்நிதியைக் கொண்டு தேயிலை உற்பத்தியைப் பெருக்க, புதிய இயந்திரங்கள் மற்றும் களத் தளவாடங்கள் வாங்குவது மற்றும் தொழிலாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்தல் போன்றவற்றிற்கு ரூ.4.04 கோடி அளவிற்கான பணிகள் 2012–2013–இல் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர், அதேபோன்று அறிவிப்பு 9–லும் அந்த ** சொற்றொடர் “ஜீப்பு” என்று மாற்றப்படுகின்றது.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி அதை மாற்றிக்கொள்ளலாம். (குறுக்கீடு)

பிற்பகல் 4–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அதையெல்லாம் மாற்றிக்கொள்ளலாம். (குறுக்கீடு) Please, இதிலே விவாதம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேண்டாம். அது correct translation கிடையாது. திரு. சு. குணசேகரன், correct translation–ஐ future–ல் நீங்கள் சொல்லுங்கள். அதை நாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போய், translation correct ஆக இருந்தால் அதை எடுத்துக்கொள்ளலாம். இப்போது ஜீப் என்றுதான் வைத்துக்கொள்ளப்படும். Please sit down.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிப்புகளைத் தொடர்கிறேன்.

**13. தேயிலைத் தூளின் சில்லறை விற்பனையை அதிகரித்தல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு தேயிலைத் தூளின் சில்லறை விற்பனையை அதிகரிக்க மாவட்ட அளவில் முகவர்கள் நியமிக்கப்படுவார்கள். தொலைக்காட்சி, நாளிதழ்கள், சாலையோர விளம்பரப் பலகைகள், துண்டுச் சீட்டுகள் போன்றவற்றின்மூலம் 'டான்டீ' தேயிலையின் தரத்தையும், சுவையையும் வெளிப்படுத்தும் வகையில் விளம்பரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். தேயிலைத் தூள் சில்லறை விற்பனை பாக்கெட்டுகளின் தரம் உயர்த்தப்படுவதுடன் சிப்பம் கட்டும் பிரிவும் விரிவுப்படுத்தப்படும்.

**14. வனவிரிவாக்கப் பிரிவினை உருவாக்குதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க வன விரிவாக்கப் பிரிவினை பலப்படுத்தும்பொருட்டு, வன விரிவாக்க மையங்கள், சென்னையைத் தலைமையிடமாகக்கொண்டு வடக்கு மண்டலம், மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு தென் மண்டலம் மற்றும் சேலத்தைத் தலைமையிடமாகக்கொண்டு மத்திய மண்டலம் என மூன்று பிரிவுகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்படும். மறுபகிர்வு முறையில் மூன்று தலைமை வனப் பாதுகாவலர் பதவிகள் உருவாக்கப்பட்டு, அவர்தம் தலைமையில் இம்மண்டலங்கள் இயங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**15. தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949–ன்கீழ் எழும் நிகழ்வுகளை ஆராய்வது தொடர்பாக உயர்மட்டக் குழு அமைத்தல்**

தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949-ன்கீழ் அறிவிக்கப்பட்ட பகுதிகள் குறித்தும், இந்த நிலங்களில்



வளர்க்கப்பட்ட மரங்களை வெட்டுவதற்கும், விற்பதற்கும், குத்தகைக்கோ, வாடகைக்கோ விடுவதற்கும் அனுமதி பெறவேண்டும். வரையறையின்றி இப்பகுதிகளில் மரம் வளர்த்தல் குறித்து பொதுமக்கள் பல கோரிக்கைகளை விடுத்து வருகின்றனர். எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி இச்சட்டத்தின்கீழ் உள்ள கோரிக்கைகளை முழுமையாக ஆராய்ந்திட வனத் துறையைச் சார்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் இதர சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் கொண்ட குழு அமைத்து விரைவில் தீர்வு காணப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**16. அரசு ரப்பர் கழகத்தின் உற்பத்தியைப் பெருக்குதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டு, 2012–2013 ஆம் ஆண்டில் 355 எக்டேர் பரப்பளவு கொண்ட பழைய குறைந்த உற்பத்தி தரும் ரப்பர் தோட்டங்களை வெட்டி ரப்பர் வாரியத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய உயர்ரக ரப்பர் கன்றுகள் மறு நடவு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆற்றிய பதிலுரையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தக்க பதில் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (அ) கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.280,13,78,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.206,68,49,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஆ) கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.25,18,71,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (15–5–2012) செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–09 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

68. சென்னையிலுள்ள திருவாளர்கள் அரசு மருந்தக டெப்போ நிறுவனத்தால் மத்திய அரசு மருத்துவமனைகளுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட மருந்துகள் மற்றும் மருந்துப் பொருள்கள் தொடர்பான மொத்த வியாபாரத் தொகை குறித்து செலுத்தத்தக்க வரி நிலுவைத் தொகையினை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (டி1) துறையின் 16–11–2011 ஆம் நாளிட்ட 174 ஆம் எண் அரசாணை(2டி)–யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

69. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

70. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

266. மானியக் கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)

*267. வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய செயலாக்க வரவு–செலவுத் திட்டம், 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)*

*268. மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)*

*269. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2012–2013. (தமிழ்)*

-----